# இந்து ஒளி

HINDU OLI தீபம் 22 சுடர் 2




## ‘நீலகண்டம்’

‘அறநெறிக்காவலர்’ அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அஞ்சலி மலர்

ஏவிளம்பி வருடம் பங்குனி – சித்திரை


**March - April - 2018**

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்

Religious Journal of All Ceylon Hindu Congress

## 18-02-2018 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற அமெரிக்க, ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சத்குரு போதிநாத வேலன் சுவாமிகளுக்கான வரவேற்பு வைபவம்.

(மறைந்த மாமன்றத் தலைவர் அமரர் திரு கந்தையா நீலகண்டன் அவர்கள் இறுதியாக ஒழுங்குசெய்த நிகழ்வு)





சத்குரு போதிநாத வேலன் சுவாமிகள் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு வருகைதந்து சிறப்புப் பூசை வழிபாடுகளை நிறைவுசெய்து ஊர்வலமாக புறப்படுகின்றார்






சத்குரு போதிநாத வேலன் சுவாமிகளுக்குப் செல்வன் சதீஸ்கரன் பாதபூசை செய்ததுடன் பிரதித்தலைவர் திரு.மா.தவயோகராஜா, பொதுச்செயலாளர் திரு.வே.கந்தசாமி, உபதலைவர் திரு.சி.தனபாலா ஆகியோர் மலர்மாலை அணிவித்து வரவேற்கின்றனர்.



வெளிநாட்டவருக்கு உத்தரியம் அணிவித்து வரவேற்கும் மாமன்றப் பொருளாளர் திருமதி அ.கயிலாசபிள்ளை அவர்கள்



சத்குரு போதிநாத வேலன் சுவாமிகளிடம் ஆசிபெறும் மாண்புமிகு இரா.சம்பந்தன் (பா.உ., எதிர்க்கட்சித்தலைவர்)



சக்தி இல்ல பிள்ளைகளுடன் இணைந்து கூட்டுப்பிரார்த்தனை வழங்கிய சிவயோகசுவாமி நம்பிக்கை நிதியத்தைச் சேர்ந்த திருமதி எஸ்.கதிர்காமர், திருமதி எஸ். தர்ஷனா.





பம்பலப்பிட்டி, நுண்கலைக்கோயில் மாணவியரின் இசை மற்றும் பரத ஆற்றுகைகள்.





ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமி[illegible]ின் தொடக்க உரை. சத்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் அருளுரை மற்றும் ஆசிவழங்கும் நிகழ்வு.

உ
சிவமயம்
# இந்து ஒளி
தீபம் - 22 சுடர் - 02
ஏவிளம்பி வருடம் பங்குனித் திங்கள் 25ஆம் நாள் (08.04.2018)

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்!

### திருவாசகம்

ஒருவனே போற்றி ஒப்பில்
அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே!

### திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதுஅருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

### திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்கு ஆம்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

நீதி மாதவர் நெஞ்சில் பொலிந்தன
வேதி யாதவர் தம்மை வேதிப்பன
சோதியாய் எழும் சோதியுள் சோதிய
ஆதிமால் அயன் காணா அளவின!

திருச்சிற்றம்பலம்

## அகல் விளக்கு அணைந்துவிட்டது!

பண்ணிய முயற்சியெல்லாம் பயனுற வோங்கும், ஆங்கே
எண்ணிய எண்ணமெல்லாம் எளிதிலே வெற்றி யெய்தும்;
திண்ணிய கருத்தினோடும் சிரித்திடு முகத்தி னோடும்
நண்ணிடும் ஞானபாநு.அதனைநாம் நன்கு போற்றின்!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அணையாத அகல்விளக்கொன்று அணைந்துவிட்டது; இந்து மக்களின் கலங்கரை விளக்கொன்று நூர்ந்துவிட்டது. மலையே வரினும் நிலைகொள்ளும் அஞ்சாநெஞ்சத்து சிங்கம் சாய்ந்துவிட்டது. இந்து மக்களுக்கு இன்னல்வரின் சங்காரம் கொண்டு சஞ்சலம் தீர்க்கும் சரித்திர நாயகன் உறங்கிவிட்டான். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தலைநகர் கொழும்பில் இந்துக்களின் அரணாக விளங்கிய இமயமலை சரிந்துவிட்டது. இனிமேல் இப்படி ஒருவரை எங்கே காண்பது?

அமரர்களை காப்பதற்காக ஆதிசிவன் நீலகண்டனானான். அகில இலங்கையில் அருந்தமிழர் சமயம் காக்க மனிதருள் ஒரு நீலகண்டனை இறைவன் மண்ணுக்கு அனுப்பிவைத்தான். கனதியாக உழைத்த கனவான்-எங்கள் தலைவன் கந்தையா நீலகண்டன் அவர்களின் பிரிவு என்பது அனைவரையும் அழவைத்துவிட்டது. இந்த மனிதனை எப்படி வார்த்தைகளால் வர்ணிக்க முடியும்?

இந்து மாமன்றம் மட்டுமல்ல எத்தனையோ சங்கங்களை இயக்கிய மனிதன். சட்டத்துறையில் சாதனைகள் செய்தவர். எதற்கும் அஞ்சாத இவர் துணிவை இனிமேல் யாரிடம் காண்போம்?

சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

என்ற குறளுக்கு அமைய சோர்வில்லாத செயற்கரும் செய்கையாளனான இத்தீரனை இனி எங்கே தேடுவது?

'இந்து ஒளி' என்னும் இந்தப் பயன்மரம் பிறப்பெடுத்ததே இப்பெருமகனால்தான் என்பது யாவரும் அறிந்ததே. இம் மரம் வளர்ந்ததும், மரத்தில் பூத்துக் குலுங்கிய மலரிலிருந்து வாசனை வீசியதும், அதனை பலர் ஆவலாக நுகர்வதும் நீலகண்டத்துப் பெருமையே. நீலகண்டன் ஐயாவின் கைபடாமல் இன்று இம்மலர் உங்கள் கரங்களுக்கு வருகிறது. வித்தகத் தலைவா! விண்ணிலிருந்து இந்து ஒளியை ஆசீர்வதிப்பீராக!

மறுபக்கம் பார்க்க...

**வாழ்த்து**

கரிமுகன் கழல்கள் வாழ்க கந்தவேள் கருணை வாழ்க
அரியயன் காணொ ணாத அரனடி நீடு வாழ்க
விரிசடைப் பெருமானார் தம் அடியவர் எல்லாம் வாழ்க
பரிதிசூழ் பாடும் விண்ணும் பொலிவுடன் நீடுவாழ்க!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வளர்ச்சியில் அல்லும் பகலும் அனவரதமும் ஓயாது தொண்டாற்றிய உன்னத பெருமகன் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு இந்த இதழை காணிக்கையாக்குகிறோம். கடந்த காலங்களில் இந்து மாமன்றம் வெளியிட்ட அத்தனை நூல்களினதும் வெளியீட்டு முயற்சிகளுக்கும் ஆணிவேராக நின்ற இந்த உத்தமனுக்கு. இச் சிறுநூல் ஒரு சிறிய காணிக்கை. ஆயிரமாயிரம் பக்கங்களில் மாமன்றப் பொன்விழா, வைரவிழா மலர்களை இருமொழிகளிலும் இனிதாகப் படைத்த புலமையாளனுக்கு இந்தச் சிறுமலரைப் படைக்கவேண்டியதாகிவிட்டது. என் செய்வது? விதியை யார்தான் வெல்லுவார்? தன் வாழ்நாளை பலருக்குப் பயனுள்ள நாட்களாகப் பயன்படுத்திய அற்புத சீலனை வணங்குவோம். இந்து மாமன்றமும் இந்து ஒளியும் இந்த மனிதனின் உதிரத்தால் கட்டியெழுப்பப்பட்டன என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்
டெந்நே ரமுஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம்

*- (பட்டணத்துப்பிள்ளையார் பாடல்)*


**இந்து ஒளி** | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

'நீலகண்டம்'
'அறநெறிக்காவலர்' அமரர் கந்தையா நீலகண்டன் அஞ்சலி மலர்

பங்குனி– சித்திரை 2018



ஆசிரியர் குழு : சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்



| | |
|---|---|
| *ஒரு பிரதியின் விலை* | ரூபா 50.00 |
| *வருடாந்தச் சந்தா (உள்நாடு)* | ரூபா 300.00 (தபாற் செலவு தனி) |
| *வருடாந்தச் சந்தா (வெளிநாடு)* | US டொலர் 15 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**தலைமையகம்:** 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) : 0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

**யாழ் பணிமனை :** 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk



*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*



**HINDU OLI** | Publication of HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS

'NEELAKANDAM'
A TRIBUTE TO
'ARANERYK KAVALAR' LATE KANDIAH NEELAKANDAN

March - April 2018



**Editorial Board :** Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. M. Balakailasanatha Sarma
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan



| | |
|---|---|
| Price | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | US $ 15 (Including Postage) |



**ALL CEYLON HINDU CONGRESS**

Head Office: 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
E-Mail : hinducongress@gmail.com

Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk




**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



**ISSN : 2012 - 9645**

உ

சிவமயம்




"அறநெறிக்காவலர்"

## அமரர் கந்தையா நீலகண்டன்

அவர்களுக்கு இவ் அஞ்சலி மலர்

## சமர்ப்பணம்



அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர்
உயர் திரு கந்தையா நீலகண்டன்
அவர்களின் வாழ் நாள்
சேவையினைக் கௌரவித்து
தேகாந்த நிலையில்

# அறநெறிக் காவலர்

என்னும் சிறப்பு விருதினை வழங்குகின்றோம்

30.03.2018

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை
சிவபூமி அறக்கட்டளை, இலங்கை
அகில இலங்கை இந்து மாமன்றம், யாழ் பிராந்திய நிலையம்



# மலரின் இதழ்களாக...


அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் ஆற்றிய பணிகளின் தொகுப்பு 5

பிரார்த்தனைச் செய்திகளும் நினைவுப்பகிர்வுகளும் 21

**பிரார்த்தனைச் செய்தி**

- நல்லை திருஞானசம்பந்த ஆதீனம் - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் 22
- இராமகிருஷ்ண மிஷன் - கொழும்பு - சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ் 23
- பேரூர் ஆதீனம் - கயிலைப்புனிதர் தவத்திரு மருதாசல அடிகள் 24
- ஹவாய் சைவ ஆதீனம், அமெரிக்கா — ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் 25
- தர்மசாஸ்தா குருகுலம், இணுவில் - சிவஸ்ரீ தாணுமஹாதேவ குருக்கள் 26
- இந்து குருமார் அமைப்பு, கொழும்பு - சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள் 27
- Vishva Hindu Parishad - SWAMI VIGYANANAND 28

**நினைவுப்பகிர்வுகள்**

- மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன - இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு 29
- மாண்புமிகு பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க - இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு 30
- மாண்புமிகு இரா.சம்பந்தன், பா.உ., - எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கைப் பாரளுமன்றம் 31
- மாண்புமிகு கே. சி. லோகேஸ்வரன் - ஆளுநர் (மேல் மாகாணம்) 32
- மாண்புமிகு நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் - முதலமைச்சர், வடமாகாணம் 33
- மாண்புமிகு முன்னாள் பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன் 34
- மாண்புமிகு நீதியரசர் எஸ். துரைராஜா - மேன்முறையீட்டு நீதிமன்றம் 36
- கலாநிதி எஸ். சுப்பிரமணியம் செட்டியார் 37
- திரு. மா.தவயோகராஜா 38
- திரு. வே. கந்தசாமி 40
- திருமதி அபிராமி கயிலாசபிள்ளை 42
- கலாநிதி ஆறு.திருமுருகன் 43
- திரு. சின்னத்துரை தனபாலா 45
- திரு. த. மனோகரன் 47
- திரு. ச.த.சி. அருளானந்தன் 49
- வைத்தியகலாநிதி மு.கதிர்காமநாதன் 51
- கலாபூஷணம் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் 53
- மாண்புமிகு சீ.யோகேஸ்வரன்(பா.உ) 55
- இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 56
- இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 57
- வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் 58
- கம்பவாரிதி இ. ஜெயராஜ் 59
- கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் 60
- திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை 62
- இந்து வித்தியாவிருத்திச் சங்கம் 64
- Mr. S.Ramachandran 65
- கொழும்பு மகளிர் இந்து மன்றம் 66
- கொழும்புத் தமிழ்ச் சங்கம் 68




- திரு. தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி 68
- கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி - அதிபர் 71
- கொழும்பு இந்துக் கல்லூரி - பம்பலப்பிட்டி - அதிபர் 72
- நாவலர் நற்பணி மன்றம் 74
- கொழும்பு இந்துக் கல்லூரி - இரத்மலானை - அதிபர் 75
- கொழும்பு விவேகானந்த சபை 76
- சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியம் 77
- நாவலப்பிட்டி இந்து மன்றம் 78
- திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை 79
- ஸ்ரீ சங்கமன் கண்டி பிள்ளையார் ஆலயம் 80
- செந்தூர் முருகன் ஆலயம் 80
- ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் 80
- இரத்மலானை-மொரட்டுவ இந்து மன்றம் 81
- புத்தளம் இந்து மகாசபை 81
- காமதேனு இந்துசமய வளர்ச்சி மன்றம், இந்து இளம்பிறை இறைபணிமன்றம், சமன்பிட்டி இந்து மகளிர் மன்றம் 82
- சட்ட மாணவர் இந்து மகா சபை - இலங்கை சட்டக் கல்லூரி 82
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை 83
- திரு. ஐ.தி.சம்பந்தன் 83
- பிரித்தானிய சைவத்திருக்கோயில்களின் ஒன்றியம் 84
- சைவமுன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா) 84
- திரு. கணேஷ் தெய்வநாயகம் 85
- சிவநெறி அறப்பணி மன்றம் (கல்முனை) 85
- பிரித்தானியாவின் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலயம் 86
- மட்டக்களப்பு மாவட்ட சைவத்திருநெறி மன்றம் 87
- வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் 87
- கல்யாண வேலவர் ஆலய திருப்பணிச்சபை 88
- வத்தளை இந்து மன்றம் 88
- திரு. ஜெ. நிரோஷ்காந்த் 89
- சைவவித்தகர் யோ.கஜேந்திரா 90
- சைவவித்தகர் வெற்றிவேல் சசிகரன் 90
- ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றம் 91
- பேராசிரியர் கலைவாணி இராமநாதன் 92
- இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம். 92
- அட்டன் வலய கல்வி அபிவிருத்தி நற்பணி மன்றம் 93
- திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை 93
- "கலாசூரி" திவ்யா சுஜேன் 95
- திரு. அ கனகசூரியர் 96
- திரு. குணரட்ணம் பார்த்தீபன் 98
- திரு. க.பாலசுந்தரம் 99
- திரு. முருகையா பிரணவன் 100
- யுனி ஆர்ட்ஸ் நிறுவனம் 102


**நினைவுகளின் மீட்டல்... புகைப்படங்களின் தொகுப்பு**



### மாமன்றப் பொதுச்செயலாளராகவும் பின்பு தலைவராகவும் இருந்து

# அமரர் திரு. கந்தையா நீலகண்டன் *அவர்கள்*

## ஆற்றிய பணிகளின் தொகுப்பு

*அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பேராளராக 1970இல் மாமன்றத்துடனான தனது பணிகளை ஆரம்பித்த அமரர், துணைச்செயலாளராக, பொதுச்செயலாளராக, தலைவராக ஆற்றிய பணிகள் பல. அவற்றிலிருந்து எமது சிறிய கைகளுக்குள் அகப்பட்ட சிலவற்றை தொகுத்துத் தருகின்றோம். எமது அங்கத்துவ சங்கங்களும் தமது நினைவுப்பகிர்வுகளில் அமரராற்றிய பணிகளை நினைவேந்தல்களாகப் பகிர்ந்துள்ளனர். எனினும் சில பணிகள் பற்றிய விபரங்கள் விடுபட்டிருந்தால் தயையுடன் பொறுத்தருள்க. ...*

### மண்ணில் நல்லவண்ணம்...

வீரஞ்செறிந்த வடமராட்சி மண்ணின் சைவம் செழித்தோங்கும் கரணவாய்ப்பதியினில் கந்தையா சின்னத்தங்கம் தம்பதியினருக்கு 1947 ஏப்ரல் 16ந் திகதி மகனாக மலேயாவில் (இன்றைய மலேசியா) பிறந்தார் நீலகண்டன் அவர்கள். தனது ஆரம்பக் கல்வியினை கிராமத்துப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியினை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியிலும் உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்துறையில் தனது மேற்படிப்பினைத் தொடர்ந்து 1969ஆம் ஆண்டில் பட்டதாரியாகினார். 1970ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கொழும்பின் பிரபலமான சட்ட நிறுவனமாகத் திகழ்ந்த "முருகேசு சக குலரட்ன" சட்ட நிறுவனத்தில் "துறைசார் உதவியாளர்" (Professional Assistant) ஆகத் தனது பணிகளை ஆரம்பித்தார். அதே ஆண்டில் சட்டத்தரணியாகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

"முருகேசு சக குலரட்ன" சட்ட நிறுவனத்தின் தாபகர் திரு. முருகேசு அவர்களின் இளைய புதல்வியும் சட்டத்தரணியும் தனது தந்தையாரின் சட்ட நிறுவனத்தின் பங்காளருமான செல்வி சசிதேவி அவர்களை 1978ம் ஆண்டு தன் இல்லத்தரசியாக இணைத்துக் கொண்டு தனது வாழ்க்கைப் பயணத்தினை ஆரம்பித்தார். தர்மங்காத்த இல்லறத்தின்பயனாக சரவணன், ஜனனி, பிரணவன் என்ற முத்தான மூன்று பிள்ளைச்செல்வங்களையும் பெற்று மகிழ்ந்தனர். தந்தைவழி தனயர்கள் இருவரும் சட்டத்துறையைத் தேர்ந்து அறங்காத்துப் பணிபுரிந்து வருகின்றமை இங்கு நினைவுகூரத்தக்கது.

### இளைஞனாக எழுத்துத்துறையில்...

நீலகண்டன் அவர்கள் பாடசாலையில் கற்கும் காலத்திலேயே கட்டுரைகளை எழுதியதுடன் குறிப்பாக 1962இல் ஈழநாடு பத்திரிகையின் 'மாணவர்மலர்' பகுதியிலும் கட்டுரைகளை எழுதிவந்தார். பின்பு, இலங்கை சட்டக்கல்லூரியில் பயிலும் காலத்தில் சட்டக்கல்லூரியின் சஞ்சிகைகளில் ஆக்கங்களை எழுதிவந்ததுடன் சட்டக்கல்லூரியின் இந்து மாணவர் மன்றத் தலைவராக இருந்து இந்து சஞ்சிகைகளையும் ஆக்குவதில் பெரும் பங்காற்றினார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் இளைஞர் மன்றம் போன்ற நிகழ்ச்சிகளில் நேரடியாகவும் பிரதிகள் மூலமாகவும் கலந்து கொண்டார்.

தனது துறைசார்ந்த சட்டம் தொடர்பான பல்வேறு கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் சட்ட நூல்கள் என்பவற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வந்துள்ளார் என்பதுடன் பல்வேறு சட்ட வியாக்கியான நூல்களை எழுதிப் பதிப்பித்தும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மாமன்றக் கட்டடத்தின் வளர்ச்சியில்...

1970இல் இலங்கை சட்டக் கல்லூரியில் இந்து மாணவர் மன்றத்தின் தலைவர் என்ற கோதாவிலும், பின்பு சட்டத்தரணியாகிய பின்பு அவரது சொந்த ஊரிலிருந்த தென் கருணையம்பதி இந்து இளைஞர் மன்றப் பேராளர் என்ற வகையிலும் மாமன்ற முகாமைப் பேரவையில் ஒரு பேராளராக அங்கம் வகித்து மாமன்றத்தின் பணிகளுக்குத் தன்னாலான உதவிகளைப்புரிந்தார்.

திரு.சச்சிதானந்தம் அவர்களின் மறைவின் பின்பு, நீலகண்டன் அவர்களின் செயற்திறண் கண்டுணர்ந்த மாமன்றத் தலைவர் திரு.பாலசுப்பிரமணியம் அவர்களும் பிரதிச் செயலாளர் திரு.இராஜபுவனீஸ்வரன் அவர்களும் கொடுத்த வற்புறுத்தலாலும் வழங்கிய துணிச்சலாலும் ஏகமனதாகச் சபை ஏற்றுக்கொண்டதாலும், 28-04-1990ஆம் ஆண்டு மாமன்றத்தின் பொதுச் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். அன்று முதல் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் அன்றைய மாமன்றத் தலைவர் திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு நல்கி மாமன்றத்திற்கென ஓர் கட்டடம் அமைப்பதற்குச் செயலாற்றி வந்தார்.



மீண்டும் மாமன்றக் கட்டடப்பணிகள் முழுமூச்சுடன் ஆரம்பிக்கப்பட்டது. திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் தனது குடும்பத்திலிருந்தே முதற்கட்டப் பணிகளுக்கான நிதியை வழங்க முன்வந்தார். 31-10-1990 அன்று நண்பகலில் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

15-07-1992 அன்று தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் திடீர்மறைவு அனைவரையும் வாட்டிநிற்க, சோர்ந்துவிடாது அன்றைய பிரதித்தலைவர் திரு.வி.கயிலாசபிள்ளை அவர்கள் தலைவராக 02-08-1992 அன்று ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். அதேவேளை திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் மீண்டும் பொதுச்செயலாளராக ஏகமனதாகச் சபையினால் தெரிவுசெய்யப்பட்டார். இருவரும் இணைந்து மாமன்றத்தின் வரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தை அமைத்தார்கள்.

இவ்வாறு கட்டட வேலைகள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் நாட்டின் நிலைமை மோசமடைந்தது. அவ்வேளையில் தமிழ்மக்களுக்காகவும் மாமன்றம் குரல்கொடுக்கத் தவறவில்லை. அப்பணியையும் நீலகண்டன் அவர்கள் மாமன்றத்தின் பொதுச் செயலாளராக அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுக்கு 20-06-1992ஆந் திகதியிட்டு 'அரசியற் தீர்வொன்றினூடாக நாட்டில் சமாதானத்தை மீளமைத்தல்" என்ற தலைப்பில் மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்தார். அமைச்சர்கள் மற்றும் அரசியற்தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுர்கள் என் எவ்வாறெல்லாம் அழுத்தம் பிரயோகிக்கப்படமுடியுமோ, அங்கெல்லாம் தமிழ் மக்களுக்காக மாமன்றத்தின் சார்பில் தன்து இறுதிமூச்சுவரை குரல்கொடுத்தார் - உரிமைகளுக்காக வாதாடினார்.

மாமன்றக் கட்டடத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் 25-04-1993 அன்று சாந்தி. பூசை வழிபாடுகளுடன் கூரைக்கு வளை வைத்து ஆரம்பமானது. நன்கொடை மட்டும் பெற்றுக் கட்டடத்தைப் பூர்த்திசெய்ய முடியாதென்பதை உணர்ந்திருந்ததால், திரு.நீலகண்டன் அவர்கள் 1994ஆம் ஆண்டு சி.ரி.சி ஈகிள் காப்புறுதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருந்த திரு. சந்திரா ஜெயரட்ண அவர்களுடன் பல நாட்கள் பேச்சுவார்த்தை நடாத்தி மாமன்றத்தின் சில மாடிகளைக் குத்தகைக்குக் கொடுப்பதில் வெற்றியும் கண்டார். அதன் பிரதிபலனாக, திரு.நித்தியானந்தன் முருகேசு முகதாவில் இல. 34இல் 28-05-1994ஆந் திகதி முடித்த குத்தகை உறுதியின் பிரகாரம். வாடகை முற்பணமாக ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாவினைப் பெற்றுக்கொண்டனர். இவ்வாறு பெற்றுக்கொண்ட பணமே மாமன்றத்தின் கட்டடப்பணிகளைத் தடையின்றி நிறைவேற்ற உதவியது.

05-02-1995 அன்று காலை 9 மணிமுதல் 10.12 வரையான சுபவேளையில் சாந்திபூசைகள் நடாத்தி கட்டட இறுதிக்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தவேளையில் மாமன்றத்தின் 5வது மாடியில் பிரார்த்தனை மண்டபம், அரங்கு முதலிய அமைப்புக்களும் முன்னெடுக்கப்பட்டன. இவ்வேளையில் பிரார்த்தனை மண்டபத்தில் ஸ்தாபிக்கவென ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளிடம் ஆலோசித்து சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் ஐம்பொன் விக்கிரகமொன்றினை திரு. திருக்குமார் நடேசன் அவர்களை அணுகி நிதியுதவிபெற்று இந்தியாவிலிருந்து தருவித்தனர்.

அனைத்தும் சுபமாக நிறைவேறி 12-05-1996இல் மாமன்றப் புதிய கட்டடம் திறப்புவிழாவினையும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான் பிரார்த்தனை மண்டபம் குடமுழுக்கினையும் கண்டன......இப்பணிகளில் கருத்தூன்றியோர் மனநிறைவும் பெற்றனர்...

## நூல்களை ஆக்குவதில் நுட்பமானவராக...

சட்டத்தரணியாக தனது துறைசார்ந்து சட்டவியாக்கியான நூல்களை வெளியிடுவதில் வல்லவராக திகழ்ந்ததுடன் மட்டும் நின்றுவிடாது, இலங்கைவாழ் இந்து மக்களின் சமய அறிவினை இலகுவான வசனநடைகளுடன் தரமான அரியபழைய கட்டுரைகளைத் தேடித் தேர்ந்தெடுத்து எமது சமயம் சார்ந்த நூல்களைத் தொகுத்து வெளியிடுவதில் மிகுந்த உளவிருப்பத்துடனும், அர்ப்பணிப்புடனும் அக்கறையுடனும் நுட்பமாகச் செயலாற்றியவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

### தலைமையகக் கட்டடப் பூர்த்தி மலர்

மாமன்றத் தலைமையகக் கட்டடத் திறப்புவிழாவினையொட்டி வெளியிடப்பட்ட "கட்டடப்பூர்த்தி சிறப்புமலரி"னைத் தயாரிக்கும் பணியில் நூலாக்கற் குழுவினை ஒன்றிணைத்து அம்மலரைச் சிறப்பான வரலாற்றுத் தகவல்களுடனும், பெறுமதிவாய்ந்த கட்டுரைகளுடனும் வெளியிட்டிருந்தார். அம்மலரில் நீலகண்டன் அவர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வரலாற்றுத் தகவல்களை திரட்டியும், பல ஆண்டுகள் மாமன்றத்தின் பொதுச் செயலாளராகவும் தலைவராகவும் இருந்த திரு.ஆ.சின்னத்தம்பி அவர்களை நேர்கண்டு அவரூடாகவும் சில வரலாற்றுத் தகவல்களைப் பெற்று, "மாமன்ற வரலாறும் அதன் பணிகளும்" என்ற தலைப்பில் வழங்கியிருந்தார். மாமன்றத்தின் விபரங்களைத் தாங்கி வெளிவந்த



முதலாவது மலராகக் கட்டடப்பூர்த்தி சிறப்பிதழ் திகழ்வதுடன், அந்நூலே இன்றும் மாமன்ற வரலாற்று விடயங்களுக்கான ஆதார நூலாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்து ஒளி

மாமன்றத்தின் முக்கியமான பணிகளில் ஒன்றாக 'இந்து ஒளி ஆன்மீக சஞ்சிகையானது 1996ஆம்ஆண்டு கார்த்திகைத்திங்கள் 09ஆம் நாளாகிய கார்த்திகைத் தீபத்திருநாளில் (24-11-1996) முதன்முதலாக வெளியிடப்பட்டது. இந்நூலை ஆக்கும் முக்கியமான பொறுப்பினை நீலகண்டன் அவர்கள் மிகச் செம்மையாக நிறைவேற்றிப் பல ஆன்மீகத் தலைவர்களினதும் பாராட்டினைப் பெற்றார். அம் முதல் மலரிலிருந்தே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கெனவும், மாணவர்களின் ஆளுமையை வளர்த்தெடுக்க இந்து ஒளியை களமாக்க விரும்பி மாணவர் பக்கம் என்னும் உள்ளடக்கங்களையும் தொலைநோக்குடன் ஆரம்பித்துவைத்தார் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள். 2006ஆம் ஆண்டு இந்து ஒளி 10ஆவது ஆண்டுச் சிறப்பிதழ் வெளியிடப்பட்டது.

ஆரம்பத்தில் காலாண்டிதழாக வெளிவந்த இந்து ஒளி இதழானது 2012ம் ஆண்டு திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்றபின்பு அவரின் தொலைநோக்குச் சிந்தனையில் 2013 ஏப்ரல் முதல் இருமாதங்களுக்கொருமுறை என்ற ரீதியில் வெளியிடப்பட்டது.

2016ஆம்ஆண்டு இந்து ஒளி 20ஆவது ஆண்டுச்சிறப்பிதழை மேலும் மெருகூட்டி 224 பக்கங்களுடன் அழகுற வெளிவந்தது. சிறப்பு நேர்காணல்களையும் பல்வேறு இலங்கை மற்றும் தமிழ்நாட்டு அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் உள்ளடக்கி சிறப்பாகத் தொகுத்தமைத்தார். தொகுத்ததுடன் மட்டும் நின்றுவிடாது, அச்சிறப்பிதழைச் சகாய விலையில் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் அதன் விலையை 100ரூபாயாக குறைத்து வழங்கினார் என்பதும் முக்கியமாக நினைவுகூரவேண்டியதாகும்.

அதுமட்டுமின்றி சிவராத்திரியினை முன்னிட்டு திருக்கேதீச்சர சிறப்பிதழ்களாகவும் மற்றும் நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய மகோற்சவம், நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம், மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம் போன்ற சில ஆலயங்களின் மகோற்சவங்கள், மாமன்றத்தின் வழிகாட்டிகளாக விளங்கி மறைந்த வே.பாலசுப்பிரமணியம், வைத்தியகலாநிதி க. வேலாயுதபிள்ளை, திரு. வி.கயிலாசபிள்ளை போன்றோரின் நினைவுச் சிறப்பிதழ்களும் நீலகண்டன் அவர்களால் சிறப்பானமுறையில் தொகுத்து அழகுற பிழையின்றிப் பதிப்பிக்கப்பட்டன. நீலகண்டன் அவர்கள் தனது விடாமுயற்சியாலும் அர்ப்பணிப்பாலும் இந்து ஒளி தொடர்ச்சியாக வெளிவரவும் தனது முழுக் கவனத்தையும் செலுத்திவந்தார்.

## பொன்விழா மலர்

2007ஆம் ஆண்டு மாமன்றத்தின் பொன்விழாவினையொட்டி 895இற்கு மேற்பட்ட பங்கங்களுடன் நூலாக்கற் குழுவின் துணையுடன் மாமன்றத்தின் 50 ஆண்டுகால வரலாற்றையும் பணிகளையும் உள்ளடக்கியும், கருத்தாழமிக்க கட்டுரைகளையும், மாமன்ற நிகழ்வுகளின் நினைவுகளாக நிழற்படங்களுடனும் இரண்டு பாகங்களைக்கொண்ட தொகுதியாக "மாமன்ற பொன்விழாச் சிறப்புமலரை" தயாரித்துச் சமர்ப்பித்தார்.

அத்தோடு நின்றுவிடாது, இலண்டனில் பிரித்தானிய சைவத்திருக்கோயில்களின் ஒன்றியத்தின் ஒழுங்கமைப்பில் 2007 ஜூலை 15ஆந் திகதி நடைபெற்ற மாநாட்டில் அழைப்பின்பேரில் கலந்துகொண்ட திரு கந்தையா நீலகண்டன் அவர்கள் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் "இலங்கைவாழ் இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றியதுடன் மாமன்றப்பணிகள் பற்றியும் எடுத்துரைத்து பொன்விழா மலரையும் அறிமுகம் செய்துவைத்தார். 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ஆந் திகதியன்று சிங்கப்பூர் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலய நிர்வாகத்தினதும் சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கத்தினதும் ஏற்பாட்டில் மாமன்றப் பொன்விழா மலரை திரு.வி.கயிலாசபிள்ளை மற்றும் திரு. மா.தவயோகராஜா ஆகியோர் வெளியிட்டு வைக்க திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் ஏற்புரை வழங்கினார்கள்.

## வைரவிழா மலர்

அடுத்த பெரும் வெளியீடாக மாமன்றத்தின் வைரவிழா மலரைக் குறிப்பிடவேண்டும். 2015ல் வைரவிழாவினை முன்னிட்டு யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் நடாத்தப்பட்ட "இந்து அராய்ச்சி மாநாட்டில்" வளவாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் அரிய பல கட்டுரைகள் வரலாறுகளைத் தாங்கி வைரவிழாச் சிறப்பிதழ் மலர்ந்தது. இச்சிறப்பிதழை, ஆறுதசாப்த மாமன்ற நினைவுகளின் பதிவுகளை நிழற்படப் பக்கங்களையும் உள்ளடக்கி 1000றக்கு மேற்பட்ட பக்கங்களுடன் அமைத்து, இரண்டு பாகங்களாக அழகிய தோற்பெட்டியினுள் வைத்துச் சமர்ப்பித்தார்.

## இந்து மக்களுக்கோர் கையேடு

திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் காலத்தில் அவரது பெருமுயற்சியினால் வெளியான ஏனைய பதிப்புகளின்



வரிசையில் முக்கியமானவையாகக் கருதப்படுபவை "இந்து மக்களுக்கோர் கையேடு" மற்றும் அதன் ஆங்கில மொழிமாற்றுப் பதிப்பான "A Compendium for Hindus" என்பவையாகும். சட்டத்தரணியாக அன்னார் சட்ட வியாக்கியான நூல்களைத் தயாரித்தவேளையில் "ஏன் இந்துக்களுக்கு ஒரு கையேடு இருக்கக்கூடாது?" என்று எண்ணத்தில் தோன்றியதே "இந்து மக்களுக்கோர் கையேடு" ஆகும். கையேட்டின் முதற்பதிப்பு 2001 டிசம்பரில் வெளியிடப்பட்டது. 02-04-2006ல் திருத்திய பதிப்பானது பொன்விழா வெளியீடாக இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற பொன்விழா சிறப்பு மாநாட்டில் வெளியிடப்பட்டு இன்றுவரை பல ஆயிரம் நூல்கள் பல மீள்பதிப்புக்களாக இந்து மக்களிடம் சென்றடைந்துள்ளது. இக்கையேட்டினை விவேகானந்தசபை நாடளாவிய ரீதியில் நடாத்தும் சமயபாடப் பரீட்சைக்கு வழிகாட்டி நூலாக்க வேண்டும் என நீலகண்டன் அவர்கள் எடுத்த தீர்மானத்தை ஏற்றுச் செயற்படுத்தினார் விவேகானந்த சபையின் அன்றைய பொதுச்செயலாளர் திரு.க.இராஜபுவனீஸ்வரன் அவர்கள்.

## நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் அவர்களின் பேருரைகளின் தொகுப்புகள் வெளியீடு

மதிப்புக்குரிய நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் அவர்களின் பேருரைகள் அடங்கிய "இந்து சமய சிந்தனைகள்" மற்றும் அதன் ஆங்கிலப் பிரதியான "**Some Thoughts on Hinduism**" ஆகிய நூல்களை மக்களிடம் கொண்டுசெல்லவிரும்பி வெள்ளவத்தை குமரன் பதிப்பகத்துடன் இணைந்து நீலகண்டன் அவர்கள் வெளியிடத் தீர்மானித்து, 05.05.2013 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெளியீட்டு நிகழ்வொன்றினை ஒழுங்குசெய்து வெளியிட்டு வைத்தார். இவ்விழாவில் நீதியரசர் அவர்களுக்கு மாமன்றத்தின் சார்பில் "சத்தியவித்தகர்" என்ற பட்டமும் திரு.க.நீலகண்டன் அவர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

நீதியரசரின் இவ்விரு நூல்களினையும், 22.06.2013 சனிக்கிழமை யாழ் மாமன்றப் பணிமனையில் நடைபெற்ற தெய்வத்திவருமகளின் நினைவுப்பேருரை நிகழ்வில் தலைமைதாங்கி வெளியிட்டு வைத்தார்.

## Hinduism - What it is and What it is not *by* Mr. P. Soma Palan

திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் திரு.பி.சோம பாலன் அவர்களின் வேண்டுகோளை ஏற்று மாமன்றத்துடன் ஆலயம் வெளியீட்டாரினையும் இணைத்து 29.11.2014 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெளியிடப்பட்டது. வடமாகாண முதலமைச்சர் நீதியரசர், சத்தியவித்தகர் சி.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் திருமதி சாந்தி நாவுக்கரசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்ட நாவலர் விழாவாக அமைந்த இந்த நிகழ்வு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை இந்து வித்தியாவிருத்தி சங்கத்துடன் இணைந்து நடத்தப்பட்டது.

## தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தொடர்பான நூல்கள்.

2008ல் சிவபதமடைந்த, தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது குருபூசைத்தினத்தை முன்னிட்டு சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுடன் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களும் இணைந்து பல்வேறு அறிஞர்களிடமிருந்தும் ஆக்கங்களைப்பெற்றுத் தொகுத்து "தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்" என்ற நூலினை வெளியிட்டார்கள். இந்நூலானது 03-07-2009 அன்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அம்மையாரின் முதலாவது குருபூசை நிகழ்வில் திரு.வி.கயிலாசபிள்ளை அவர்களுடன் திரு.க.நீலகண்டன் அவர்களும் இணைந்து கலந்துகொண்டு வெளியிட்டுவைத்தார்கள். திரு. க. நீலகண்டன் அவர்கள் நூலின் வெளியீட்டுரையையும் நிகழ்தியிருந்தார். கொழும்பில் இந்நூலின் அறிமுக விழாவானது 09-08-2009 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்து சிறப்பாக நடாத்தினார்.

"இலங்கையின் சைவத் தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில், தெய்வத்திருமகள், சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம்" என்ற நூலினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து மெய்யியல்- இந்து நாகரிகத்துறையின் வருகைதரு விரிவுரையாளராக க்கடைமையாற்றிய திரு. தி. செல்வமனோகரன் அவர்கள் 2014ம் ஆண்டு சிவத்தமிழ்ச்செல்வி பற்றிய ஆய்வுநூலாக எழுதினார். அதனை மாமன்ற வைரவிழா வெளியீடாகப் பதிப்பிக்க நீலகண்டன் அவர்கள் முன்வந்ததோடு அந்நூலை 07-03-2015ல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், 20-03-2015 அன்று நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்திலும் வெளியிட்டும் வைத்தார்.



## A Compendium for Hindus

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆங்கில மொழிமூலக் கல்வியைக் கற்றுவரும் எமது எதிர்கால இளஞ்சமுதாயத்தினருக்கு சமய கலாசார அறிவை பேணிக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற நோக்கில் நீலகண்டன் அவர்கள் இந்து மக்களுக்கோர் கையேடு என்ற நூலினை அடிப்படையாக கொண்டு மொழிமாற்றம் செயவதற்காக திருமதி திலகா விஜயரட்ணம் அவர்களைத் தொடர்புகொண்டு பணிகளை ஆரம்பித்தார். அத்தோடு அந்த ஆங்கிலப் புத்தகத்தில் சிவபுராணம், அபிராமி அந்தாதி, கந்தசஷ்டிகவசம், திருப்பொற்சுண்ணம் என்பவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் இடம்பெறச்செய்து ஒரு முழுமையான நூல்வடிவாக்கி மாமன்ற வைரவிழா வெளியீடாக 06-03-2015ல் கொழும்பிலும், 04-04-2015 அன்று அவுஸ்திரேலியாவின் சிட்னி முருகன் ஆலயத்திலும், 19-04-2015 அன்று இலண்டனில், பிரித்தானிய இந்து ஆலயங்களின் ஒன்றிய மாநாட்டிலும் வெளியிட்டார்.

### இந்து நாகரீகம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரத்தில் இந்து நாகரிகத்தினை கற்கும் மாணவர்களிற்கு ஒரு பாடநூல் இல்லாத பிரச்சினையை ஆராய்ந்து பொதுச் செயலாளராக நீலகண்டன் அவர்களின் முன்மொழிவை ஏற்று கல்விக்குழுவின் செயலாளர் திரு.த.மனோகரன் அவர்களின் செயலாற்றுகையில் நாட்டின் பல அறிஞர்களிடமிருந்து பாடத்திட்டத்துக்கமைய ஒன்றிணைக்கப்பட்ட பாடங்களைக் கொண்டு முதன்முதலாக 2007ல் முதற்பதிப்பு வெளியிடப்பட்டது. தொடர்ந்து 2014ம்ஆண்டில் தலைவராக விளங்கிய திரு.க.நீலகண்டன் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் மீண்டும் புதிய பாடத்திட்டத்துக்கமைய சீரமைக்கப்பட்டு மீள்பதிப்புச் செய்யப்பட்டது.

### கையடக்கப்பஞ்சாங்கம்

அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் இரண்டு பஞ்சாங்களையும் அதிலுள்ள முக்கியமான விடயங்களையும் தொகுத்து கையடக்கமாக வெளியிட வேண்டுமென்ற அன்னாரின் எண்ணத்திற்கேற்ப 2016 தை முதல் 2017 பங்குனி ஆண்டு காலப்பகுதிக்குரியதாக 2016 தைப்பொங்கல் தினத்தன்று மாமன்றப் பொங்கல் விழாவில் வெளியிடப்பட்டது. இப்பஞ்சாங்கத்தினை வெளியிடுவதற்கான அனுசரணையைப் பெறும் பொறுப்பை அன்றைய பொதுச்செயலாளர் திரு. முத்தையா கதிர்காமநாதன் அவர்களிடம் வழங்கி அதன் பயனாக நாவலர் நற்பணி மன்றத்தின் நிறுவுனரும் மாமன்ற முகாமைப்பேரவை உறுப்பினருமான திரு. ந. கருணைஆனந்தன் அவர்களிடமிருந்து பூரண அனுசரணையைப் பெற்றார். 2016-17ஐத் தொடர்ந்து 2017-18 மற்றும் 2018-19ம் ஆண்டு காலப்பகுதிகளுக்கான அனுசரணையையும் திரு.ந.கருணை ஆனந்தன் அவர்களிடமே பெற்று சிறப்பானமுறையில் அப்பணியை நிறைவேற்றினார்.

### நலங்கள் அறுபது

'கலாபூஷணம்' கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள், இந்துக்களின் வாழ்வியலுடன் அவர்களை நெறிப்படுத்தும் அறுபதுவிதமான நலங்கள் தொடர்பான நூல் ஒன்றினை எழுதி அதனைப் பதிப்பித்து வெளியிடுவதற்காக திரு.கந்தையா நீலகண்டன் அவர்களைத் தொடர்புகொண்டார். அதன் வரைவுப்பிரதி ஒன்றினைப்பெற்று வாசித்துப்பார்த்து அதனை மாமன்றத்தின் சார்பில் வெளியிட நீலகண்டன் அவர்கள் சம்மதித்தார். அந்நூல் ஜூலை 2016ல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

### ஈழத்து ஆலயங்கள் (பாகம் - 1)

திரு. வை. சோமசேகரன் அவர்கள் தொகுத்த ஈழத்திலுள்ள 364 ஆலயங்கள் மற்றும் அவற்றின் மூர்த்தி-தலம்-தீர்த்தம் பற்றிய தகவல்களடங்கிய ஆவண நூல் மாமன்றத்தின் வைரவிழா வெளியீடாக யாழ் இந்து ஆராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளான 02-08-2015 அன்று நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நீலகண்டன் தலைமையில் வெளியிடப்பட்டது.

நூலாசிரியரின் வேண்டுகோளினை ஏற்று இந்நூலின் மறுவெளியீட்டு நிகழ்வொன்றினை நடாத்தச் சம்மதித்த திரு. நீலகண்டன் அவர்கள் 24-09-2016 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நிகழ்வினை நடாத்தினார். இந்நிகழ்வில் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் நூல் தொடர்பான ஆய்வுரையினை வழங்கினார்.

### தேர் - ஆய்வுச் சஞ்சிகை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் "தேர்" என்னும் ஆய்வுச் சஞ்சிகை ஒன்றினை வெளியிட திரு.கந்தையா நீலகண்டன் முயற்சிசெய்து அதற்காக பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் நா.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோரை ஆலோசனைக் குழுவாகவும், மறைந்த பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் அவர்களையும் தன்னையும் ஆசிரியர்களாகவும் கொண்டு ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தார். எனினும் அவ்வெண்ணம் நிறைவேறுவதில் பல நடைமுறைச்சிக்கல்கள் தோன்றியதால் அத்தேரினை மேற்கொண்டு இழுக்கமுடியாமற்போனது மிகவும் மனவேதனைக்குரியாதாகும்.



இவைதவிர மேலும் பல நூல்கள் அன்னார் மாமன்றப் பொதுச்செலாளராகப் பதவிவகித்த காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றிலும் திரு.க.நீலகண்டன் அவர்களது வகிபங்கு இங்கு நன்றியுடன் நினைவுகூரப்படவேண்டியதே....

- சிவ வழிபாட்டு மலர்
- இலங்கையில் இந்து சமயம் (முதலாம் பாகம்) – பேராசிரியர் சி. பத்மநாதன்
- **Hindu Temples of Sri Lanka – Professor C. Pathmanathan**
- "நந்திக்கொடியின் முக்கியத்துவமும் பெருமைகளும்."
- "சிவஞானபோதச் சிற்றுரை" நூல் வெளியீடு – மட்டுவில் ஆ. நடராசா
- சிவாகமசேகரம் பிரதிட்டாவிதி (1 ஆம் பாகம்), சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி (2 ஆம் பாகம்) அச்சுவேலி குமாரசாமிக்குருக்கள்
- "எல்லோரும் இன்புற்றிருக்க... மனிதநேயப் பணிகள்" + மாமன்றத் தலைவரின் 75வது அகவை நிறைவு வைபவமும்
- "இந்திய மெய்யியற் சிந்தனையில் வேதாந்தம் - சித்தாந்தம் கூறும் கடவுள் கொள்கை சைவ புண்ணியகாலம்" - கலைவாணி இராமநாதன்
- கதிர்காமம் - சித்தர்களும் முனிவர்களும் நடமாடும் புனித பூமி - திரு. என்.கே.எஸ். திருச்செல்வம்

இவைதவிர ஸ்ரீ பாலசர்வேஸ்வரக் குருக்கள் இயற்றிய "இந்துப்பண்பாட்டு மரபில் பிதுரர் வழிபாடு" மற்றும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சைவப்புலவர் சிவஸ்ரீ பா. இந்திரன் குருக்கள் இயற்றிய "மஹோற்சவ கிரியா தத்துவ விளக்கம்" மற்றும் "தத்துவ சிந்தனை மரபில் சைவசித்தாந்தம் கூறும் ஆன்மா" ஆகிய நூல்களுக்கும் மாமன்றத்தின் சார்பாக திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் தனது ஆதரவினை வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகும்.

### பழமையான ஏட்டுச்சுவடிகள் ஈழமண்ணில்

பாரத நாட்டில் பல இடங்களிலும் இருந்த இந்துமக்களின் அருஞ்சொத்துக்களான ஏடுகளை பாண்டிச்சேரி மாநிலத்தில் பிரெஞ்சு அரசாங்கம் நீண்டகாலமாகப் பாதுகாத்து வருவது ஆய்வாளர்கள் பலர் அறிந்த செய்தி. இவ்வரிய சொத்தை இந்து மக்கள் அறிய வேண்டும் என அயராது பாடுபட்டது அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனம். ஹவாய் சைவ ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய போதிநாத வேலன் சுவாமிகளின் ஆசியோடு விலை மதிக்க முடியாத இவ்வரிய ஏடுகளின் பிரதியை நவீன முறையில் வன்தகட்டில் (HARD DRIVE) பதித்து எம்மண்ணுக்கு வணக்கத்திற்குரிய ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் அனுசரணையுடன் கொண்டுவந்து இந்து மாமன்றத்தில் கையளிக்கும் புண்ணிய வைபவம் நந்தன வருடம் மாசி மாதம் 19 ஆம் நாள் (03-03-2013) ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்பட்டது.

## அர்ப்பணிப்புடன் ஆன்மீகப்பணியில்..

28-04-1990ம் ஆண்டுமுதல் ஏறக்குறைய 22 வருடங்கள் பொதுச்செயலாளராகவும், 2012ம் ஆண்டுமுதல் 5 வருடங்களுக்கு மேலாக தலைமைப்பதவியையும் ஏற்று எம்மையெல்லாம் சீரியமுறையில் நல்வழிப்படுத்திய திரு. கந்தையா நீலகண்டன்

அறத்தினூஉ ங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு

(குறள் 32)

என்ற வள்ளுவப் பெருமானின் வார்த்தைக்கு இலக்கணமாகப் பல்வேறு அறப்பணிகளை ஆற்றி, தற்புகழ் விரும்பாத உத்தமராக ஓர் முன்னுதாரணமாக வாழ்ந்து வந்தார்.

### தலைமையகக் கட்டடப்பணியில்

கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையில், அரசினால் நகர அபிவிருத்திச்சபை மூலம் 99 வருட குத்தகையில் தரப்பட்ட 38 பேர்ச் விசாலமான காணியில் அமைக்கப்பட்டுள்ள 6 மாடிகள் (அடித்தளமும், 5 மேல் மாடிகளும்) கொண்ட கட்டடத்தின் 5ம் மாடியில் பிரார்த்தனை மண்டபமும் தலைமையகமும் அமைந்துள்ளது. ஏனைய மாடிகள் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளால் அவிவா (AVIA) காப்புறுதிக் கம்பனிக்கு குத்தகையாகக் கொடுக்கப்பட்ட முதலாவது பத்தாண்டுக் காலப்பகுதி முடிவுபெற்றபின்பு மேலும் 01-05-2005 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. குத்தகை நீடிக்கப்பட்டு மீண்டும் 01-05-2010 முதல் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு மீட்பிக்கப்பட்டது. மீண்டும் 01-05-2015 முதல் அதே நிறுவனத்திற்கு (பெயர் மாற்றம் பெற்று ஏஐஏ (AIA) காப்புறுதி நிறுவனமாக உள்ளது) வாடகைக்குக் கொடுத்து முற்பணம் பெற்றதுமல்லாமல், மாமன்றத்தின் வைரவிழாவையொட்டி ஒரு மில்லியன்



ரூபா ஆதரவு நன்கொடையும் அந்த நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது.

இந்தக் குத்தகை ஒழுங்குகளை திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் முன்னெடுத்து 1995ல் பெற்றுக்கொண்ட முற்பணமே, மாமன்றத்தின் கட்டடப்பணி முழுமையடைய உதவியது என்பதனை இங்கு மீண்டும் நினைவுகூருவதுடன், 20-02-2009 இல் நடைபெற்ற விமானவிபத்து அனர்த்தத்தினால் மாமன்றத் தலைமையகக் கட்டடம் பெரும் சேதத்திற்குள்ளானதெனினும் ஈகிள் காப்புறுதி நிறுவனத்துடன் (தற்பொது ஏஜஏ காப்புறுதி) நீலகண்டன் அவர்கள் தீர்க்கதரிசனமாக செய்துகொண்ட கட்டடக் காப்புறுதியினால் முற்றுமுழுதாக மாமன்றக் கட்டடத்தை காப்புறுதி இழப்பீட்டுப் பணத்திலேயே மறுசீரமைக்க முடிந்தமையையும் நாம் மறந்துவிட முடியாது.

கட்டடத்தை குத்தகைக்கு வழங்கி அதன்மூலம் பெற்ற வருமானத்தினால் கட்டடப்பணிகளை முடித்ததுமட்டுமன்றி வாடகைவருமானத்தின்மூலமாகமிகப்பெரும்அறப்பணிகளை மாமன்றம் ஆற்ற முடிந்தது. மேலும் மாமன்றத்திற்கு வருமானம் வரக்கூடியவகையில் மாமன்றக் கட்டட உச்சியில் மொபிரெல் தொலைத்தொடர்பு நிறுவனம் மற்றும் ஹச்சிசன் தொலைத்தொடர்பு நிறுவனம் ஆகியவற்றுடன் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பதற்கான அனுமதியை வழங்கி அதன்மூலமாக வருடாந்தம் தலா ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட வருமானத்தை மாமன்றம் பெறவும் வழிசமைத்ததுடன் மொபிரெல் நிறுவனத்திடமிருந்து யாழ்.பிராந்திய அலுவலகத்தின் நூலகப் பணிகளுக்கான ரூபா 500,000 நன்கொடையையும் பெற்றுக்கொடுத்தார்.

### யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம்

மாமன்றத்தின் பிராந்திய அலுவலகம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டுமென்ற எண்ணக்கருவினைச் செயற்படுத்தும் விதமாக, நல்லூரில் கோவில் வீதியில் அமைந்திருக்கும் 2.09 நிலப்பரப்பு விஸ்தீரணமான தனது கணவரின் சொந்தமான காணியை திருமதி. விஜயலட்சுமி பேரம்பலம் அவர்களை திரு.கந்தையா நீலகண்டன் தனது தனிப்பட்ட செல்வாக்கின் மூலமாக தொடர்புகொண்டு மாமன்றத்திற்கெனப் பெற்றுக்கொடுத்தார். அப்பிராந்திய அலுவலகக் கட்டடத்திற்கு 18.05.2005 இல் அடிக்கல் நாட்டப்பட்டு, சைவவித்தகர் பயிற்சி, இந்து ஆராய்ச்சி நிலையம் மற்றும் கணனிப் பயிற்சி நிலையம் என்பவற்றைக் கொண்டதாக அக்கட்டடத்தை அமைத்து 2009 ஜனவரி 9ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. இங்கு இயங்கும் இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநராக சைவஞானபானு, செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் முன்மொழியப்பட்டு நியமிக்கப்பட்டார்.

### இரத்மலானை சக்தி இல்லம்

மாமன்றத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களின் கருத்துவித்தாக 1998ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இரத்மலானை சக்தி இல்லம்.

2009 இறுதிக்கட்ட வன்னிப் போரினால் பாதிக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு புனருத்தாரண முகாம்களில் இருந்த 273 பிள்ளைகளை திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் மாமன்றத்தின் சார்பில் அன்றைய அரச உயர்மட்டத்தைத் தொடர்புகொண்டு அவர்களை சக்தி இல்லத்திற்குக் கொண்டுவந்து ஒரு வருட காலத்திற்கும் மேலாக அவர்களை நன்றாகப் பராமரித்து, உணவளித்து, கல்வி கற்க ஒழுங்கு செய்து, தேவையானபோதெல்லாம் அவர்களுக்கான மனஆற்றுப்படுத்தல் கொடுக்கப்பட்டு இன்று சுதந்திரப் பறவைகளாகச் சமூகத்துடன் இணைய வழிவகுத்தார்.

சக்தி இல்லத்தில் உள்ள மாணவர்களின் பிறந்த தினங்களை இரண்டு மாதத்திற்கொருதடவை பெரும் நிகழ்வாக கொண்டாட எப்போதும் விரும்பிய நீலகண்டன் அவர்கள், தவறாது பிறந்ததின விழாக்களை விடுதிகள் குழுத்தலைவி திருமதி அ.கயிலாசபிள்ளை அவர்களுடன் இணைந்து ஒழுங்குசெய்வது மட்டுமல்லாது ஒரு ஆன்மீக அறிஞர்களை அழைத்து மாணவர்களுக்கு சிறிய வழிகாட்டல் உரைகளையும் தவறாது நிகழ்த்தினார். மாணவர்களுக்கான பிறந்ததின விழாவில் அவர்களுக்குச் சிறிய பரிசில்களை வழங்குவதற்கான அனுசரணையைத் தேடிக்கண்டுபிடித்து அதனையும் குறைவின்றி நிறைவேற்றினார்.

### கீரிமலையில் சிவபூமிமடம்

பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றாகவும் வடமாநில மக்களின் புண்ணிய தலமாகவும் சிறப்புப் பெறும் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துக்கு சமீபமாக கண்டகி தீர்த்தக்கரையில் சிவபூமி மடம் ஒன்றினை அமைப்பதற்கானப் பணியினை சிவபூமி ஆரம்பித்தவேளையில் அப்பணிகளில் மாமன்றத்தின் சார்பில் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களும் முழு ஈடுபாட்டுடன் உதவிகள் பலஆற்றியதுடன், பல கொடையாளர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெறவும் உதவிகள் புரிந்தார். புதிய மடமானது 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம்



திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. கீழ்த்தளம் மற்றும் மேல் மாடி கொண்டதான இந்தப் புதிய கட்டடத்தின் தள மண்டபம் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது. கீழ்த்தள மண்டபத்தை மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் திறந்து வைத்தார்கள். மாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடந்த இந்த வைபவத்தின் போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், கீரிமலை நகுலேஸ்வர ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள், மாவிட்டபுரம் முருகன் ஆலய பிரதம குரு மகாராஜஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகள் வழங்கினார்கள்.

## நல்லை ஆதீனத்திற்கான புதிய கட்டடம்

இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமான நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக்கட்டடம் பழமையானதாகவும், வசதி குறைந்த நிலையிலும் இருந்ததால் அதனை மீள்நிர்மாணம் செய்யும் வகையில் புதிய கட்டடத்தை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த திருத்த வேலைகள், கர வருடம் ஐப்பசி 21 ஆம் திகதி (2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி) யன்று நடந்த புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்துடன் ஆரம்பமானது.

புனருத்தாரண வேலைகளின் இரண்டாங்கட்டத்தின் ஆரம்பமாகி 2012ம் ஆண்டுத் தைப்பூசத் தினமான பெப்ருவரி 7ஆம் திகதியன்று நிலைவைக்கும் வைபவமும், இதனைத் தொடர்ந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் அன்றைய பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் ஒழுங்கமைப்பில் பத்திரிகையாளர் சந்திப்பும் நடாத்தப்பட்டது.

தொடர்ந்து இரண்டாம் கட்டடவேலைகள் நடைபெற்று 2013 ஜுன் 23ஆம் திகதி இக்கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. இதற்கான மொத்தச் செலவாகிய 22 மில்லியனில் இந்து மாமன்றம் தனது பங்களிப்பாக ரூ. 2,763,721/= ஐ வழங்கிக் கட்டடத்தை நிறைவு செய்தது.

அதேவேளை ஆதீனத்திற்கென நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை ஒன்று ஆதீன இரண்டாம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைத் தலைவராகக் கொண்டு தாபிக்கப்பட்டதுடன் அச்சபையின் உறுப்பினர்களிலொருவராகவும் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்.

## மன்னாரில் இந்து மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடித்துறை

பேசாலையில் வாழும் 75ற்கு மேற்பட்ட இந்து மீனவக் குடும்பங்கள் எதிர்நோக்கியிருந்த பிரச்சினைகளைத் தீர்க்கும்முகமாக இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையினைத் தொடர்புகொண்டு அவர்களின் நிதி உதவியைப்பெற்று 2 ஏக்கர் விஸ்தீரணமான காணியை இந்து மாமன்றத்தின் பெயரில் கொள்வனவுசெய்து மீன்பிடித்துறை ஒன்றினை அமைத்து அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதிலும் பங்கெடுத்தார்.

## வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் அன்னதான, கலாசார மண்டபம்

மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால் அமைக்கப்பட்ட அன்னதான கலாசார மண்டபம் 2009அக்டோபர் 22 ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த மண்டபத்தைக் கட்டி முடிப்பதற்காக எழுபத்து நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை மாமன்றம் நிதியுதவியாக வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. அன்றைய மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி. கயிலாயபிள்ளை அவர்களுக்கு "இந்து சிரோரத்தினம்" என்ற கௌரவ விருதும், அன்றைய மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு "இந்து சிரோன்மணி" என்ற கௌரவ விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சுனாமி நிவாரணக் கட்டடப் பணி

மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான கிழக்கு மாகாணத்தின் கொக்கட்டிச் சோலையிலுள்ள கதிரொளி இல்லத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த சிறுவர் இல்லக் கட்டடம் 2004 சுனாமி அனர்த்தத்தின்போது வெகுவாகப் பாதிக்கப்பட்டது. கதிரொளி இல்லத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, நீலகண்டன் அவர்களது ஏற்பாட்டில் ஜோர்ஜ் ஸ்ருவெட் கம்பனி லிமிட்டெட் வழங்கிய 1, 000, 000/= ரூபா செலவில் ஒரு கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பல் கட்டடத்துக்கான நிதியுதவிகள்

மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் கட்டட வேலைகளுக்காக, அதன் ஒருபகுதி கட்டடத்துக்கான நிதியுதவி 69, 000/= ரூபாவை மாமன்றம் வழங்கியிருந்தது.



## விவேகானந்த சபைக்கு கட்டடநிதி உதவி

மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான விவேகானந்த சபையினால் மேற்கொள்ளப்பட்ட கட்டட வேலைகளுக்காக 1, 000, 000/= ரூபாவை மாமன்றம் நிதியுதவியாக வழங்கியிருக்கிறது.

## சங்கமன்கண்டி மலைமுருகன் ஆலய கட்டடப் பணி

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் கிராமத்திலிருந்து சுமார் 12 மைல் தூரத்திலும், உகந்தை கிராமத்திலிருந்து 53 மைல் தூரத்திலும் இருக்கும் சங்கமன்கண்டி என்ற கிராமத்தில் மலையடிவாரத்தில் அமைந்துள்ள தொன்மைவாய்ந்த பிள்ளையார் ஆலயத்தின் அருகே அமைந்த மலையின் மேல் முருகன் அடியார்கள் முருகப் பெருமானுக்கு ஆலயம் அமைக்க முற்பட்டவேளையில் பல பிரச்சினைகளும், கஷ்டங்களும் ஏற்பட்டன. எனினும் இம்முயற்சிக்கு இந்து மாமன்றம் ஆதரவும், ஊக்கமும் தந்து ரூபா. 1 000 000/= நிதியுதவியும் செய்து அம்முருகன் ஆலயத்தைக் கட்ட உதவிசெய்து தற்போது அக்குன்றின்மேல் முருகப்பெருமான் திருக்கோயில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

## திருகோணமலை இந்து மயானம்

எமது அங்கத்துவ சங்கமான திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை விடுத்த அவசர வேண்டுகோளைக் கவனத்திலெடுத்து அங்குள்ள இந்து மக்களின் மயானத்தைப் பாதுகாத்துப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அந்த மயானத்துக்கு 390 அடி நீளமான சுற்று மதில் அமைப்பதற்கு நிதியுதவி வழங்க மாமன்றம் தீர்மானித்தது. இதற்குப் பகுதிக் கொடுப்பனவாக ரூபா.500, 000/= 19.11.2012 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையின் நூல் நிலையம் புனரமைப்பு

மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையினால் பராமரிக்கப்படும் நூல் நிலையம் அவசரமாக புனரமைக்க வேண்டியுள்ளதென விடுத்த வேண்டுகோளை மாமன்றம் ஆராய்ந்து அப்புனரமைப்பு வேலைகளுக்காக ரூபா. 500,000/= நிதியுதவி 01.05.2012ஆந் திகதி வழங்கப்பட்டு, புனரமைப்பு வேலைகள் பூரத்திசெய்யப்பட்டது.

## அகதிகளுக்கான வீட்டுத் திட்டம் - தலைமன்னார்

இந்தியாவிலிருந்து தலைமன்னாருக்குத் திரும்பிய அகதிகள் அங்குள்ள தமது முன்னைய இருப்பிடங்களை இழந்து தவித்த நிலையில் தலைமன்னார் ஸ்ரீ தேவி முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபையூடாக ஐந்து குடும்பங்களைத் தெரிவுசெய்து கல்வனைஸ்ட் பைப்புக்கள் மற்றும் தகரங்களைக் கொண்டு ஐந்து தற்காலிக வீடுகளை அமைத்து அவற்றிற்கான ஐந்து கிணறுகள் மற்றும் ஐந்து மலசல கூடங்கள் என்பவற்றையும் அமைத்து அவர்களை உடனடியாகக் குடியேற்ற நடவடிக்கை எடுப்பதென மாமன்ற முகாமைப்பேரவையின் தீர்மானித்திற்கிணங்க தலைமன்னார் ஸ்ரீ தேவி முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தினூடாக மேற்படி நிர்மாண வேலைகளுக்காக ரூபா 678, 950.00 தொகையான நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

## திருக்கேதீச்சர திருத்தலத்தில் மடம்

திருக்கேதீசரத்தில் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட காணிக்கான தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதில் தடங்கல்கள் உள்ள நிலையில், ஆலயத்திற்குப் பின்புறமாக நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற காணியில் ஒரு தளத்தைக் கொண்ட மடம் ஒன்றினை 2.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிப்பதற்காக அமரர் பெரும் முயற்சி எடுத்து ஊரெழுவைச்சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரர் திரு. சண்முகநாதன் அவர்களிடம் பணிகளும் ஒப்படைக்கப்பட்டது. எனினும் சில காரணங்களினால் அத்திட்டம் தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

## சம்பூர் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனரமைப்பு

மூதூர் பிரதேசத்திலுள்ள சம்பூர் கிராமத்திற்கு மீள்குடியேற்றத்திற்காக மக்கள் அனுமதிக்கப்பட்டபோது அந்நிகழ்வில் கலந்து கொண்ட அமரர் திரு கந்தையா நீலகண்டன் அவர்கள் நிகழ்வின் பின் அரச அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில் அப்பிரதேசத்தில் சிதைவடைந்திருந்த மூன்று ஆலயங்களைப் புனரமைக்க உதவும்படி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய ஒரு ஆலயத்தை அரசாங்கமும் மற்றொன்றை இந்து கலாசார திணைக்களமும் மூன்றாவதான ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தை புனரமைப்பதற்கான நிதியுதவியை மாமன்றமும் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. அதன்படி ரூ 1,500,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு அதனை திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபையினூடாக அந்நிதி வழங்கப்பட்டது.



### ஆலையடிவேம்பில் கட்டடம்

ஆலையடிவேம்பு இந்து மன்றத்தின் கட்டட நிர்மாணப்பணிகளுக்காக அவர்களின் கோரிக்கையினை ஏற்றுப் பரிசீலத்து மூன்று கட்டங்களாக 1.4 மில்லியன் ரூபாவினை வழங்கியிருந்தார்.

### திருமுறிகண்டியில் சரவணப்பொய்கை

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் அரசாங்கத்தால் மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட காணியில் சரவணப் பொய்கை என்ற பெயரில் வழிபாட்டிடமும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட பெண்களால் அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவும் வகையில் ஓர் உணவுச் சாலையையும் அமைத்துக் கொடுக்கும் திட்டமொன்றினை வகுத்தார். அதனடிப்படையில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முதற்கட்ட கட்டுமானப்பணிகள் முடிவடைந்துள்ளது.

### ஹட்டன் - கெட்டகலையில் மலையக மக்களுக்காக

நுவரெலியா பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட டிம்புல கோரளைப்பற்றிலுள்ள கொடடகல எனும் இடத்தில் (அ) 37.91 பேர்ச் மற்றும் (ஆ) 36.67 பேர்ச் அளவுள்ள இரு காணித்துண்டுகள் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் நண்பரும் வர்த்தகப்பிரமுகரான திரு.எஸ்.முத்துசாமி என்பவரால் மாமன்றத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இதற்கு எல்லைகள் போடுவதற்காக ஹட்டன் நகரைச் சேர்ந்த வர்த்தகர் திரு.கே.குலேந்திரன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூ 441,546.00 மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு 02-03-2017ல் முற்பணமாக ரூ 100,000.00 திரு.குலேந்திரனுக்குச் செலுத்தப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன.

### ஒட்டுசுட்டானில் மாமன்றப் பணிகளின் விரிவாக்கல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரினால் "காதலியார் சமணங்குளம்" என்னுமிடத்தில் மாமன்றத்திற்கு 01ஏக்கர் முடிக்குரிய காணி பெறப்பட்டது. இக்காணியில் எதிர்காலத்தில் முல்லைத்தீவு மக்களுக்கான சமய சமூகப் பணிகளை விரிவுபடுத்துமுகமாக அக்காணியைப் பயன்படுத்த நீலகண்டன் அவர்கள் உத்தேசித்திருந்தார்.

## அமரரின் ஏனைய பணிகள்...

✠ திருக்கோவில் பிரதேசத்தில் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் முற்றாக அழிவடைந்த திருநாவுக்கரச நாயனார் குருகுலத்தைக் கனடா வாழ் இந்திய வம்சாவழி சங்க தலைவர் திரு.வெங்கட்ராமன் அவர்களை நேரடியாகத் தொடர்புகொண்டு பலமில்லியன் பெறுமதியில் 2005இல் புனரமைத்தார்.

✠ சிவயோகர்சுவாமிகள் நம்பிக்கை நிதியத்தின் வேண்டுகோளுக்கிணங்க கொழும்பில் யோகர்சுவாமிகள் திருவடி நிலையம் அமைப்பதற்காக 2016 ஆகஸ்ட் மாதம் 500,000 ரூபா நன்கொடை வழங்கப்பட்டது.

✠ மட்டக்களப்பு வலயக் கல்விப்பணிமனையில் உள்ள ஆலயப் புனரமைப்புக்காக ரூ. 150,000.00 வழங்கப்பட்டது.

✠ தலைமன்னார் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கும்பாபிஷேக நிகழ்வுக்காக ரூ. 100,000.00 வழங்கப்பட்டது.

✠ மாத்தளை ஸ்ரீ சிந்தாகட்டி மலை முருகன் ஆலயத்திற்கு 400,000.00 பெறுமதியான கண்டாமணி வழங்கப்பட்டது.

✠ கண்டி தெய்யன்வெல ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்கு எழுந்தருளிச்சிலை வழங்கப்பட்து. இதற்கான நிதியுதவி ரூ. 70,000.00 நலன் விரும்பியும், சமூக சேவையாளருமான திரு. டப்சி கனகரத்தினத்தின் அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றது.

✠ கொழும்பு இந்து மகளிர் மன்றத்தினால் நடாத்தப்படும் முதியோர் இல்லத்திற்கு மின்தூக்கி ஒன்றை நிர்மாணிக்க நிதியுதவி வழங்கப்பட்டது.

✠ மன்னார் நகரில் உள்ள ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைப்பதற்காக ரூபா 5,000,000 நிதியுதவி வழங்கப்பட்டது.

✠ யோகபுரம் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய புனரமைப்புக்கு 1,00,000 ரூபா 2017ல் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களிடம் வழங்கப்பட்டது.

✠ பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவனின் வைத்திய செலவுக்காக 150,000 ரூபா வழங்கப்பட்டது.

✠ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கடந்த இரண்டு வருடங்களாக நடாத்தப்பட்டுவரும் சர்வதேச சைவ மாநாட்டில் வெளியிடப்படும் ஆய்வு நூலின் பதிப்பித்தற் செலவுக்கென மாமன்றத்தின் சா்பில் 450,000 ரூபாவினை வழங்கியதோடு இந்து வித்தியாவிருத்திச் சங்கம் ஊடாக 450,000 ரூபாவினை வழங்கவும் ஒழுங்கு செய்து அந் நூலின் மொத்தப் பதிப்புச் செலவினையும் ஏற்றுக் கொண்டார்.

✠ நீண்டகாலமாக மாமன்றத்தின் காவலராகக் கடமைபுரிந்து மாமன்றத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்குத் தனது சரீரத் தொண்டினை வழங்கி வந்த திரு. ஜேம்ஸ் பணியிலிருந்தபோதே மறைந்ததனால் அவரது குடும்பத்தினர்க்கு 80,000 ரூபா வழங்கப்பட்டது.



- கந்தர்மடத்தைச் சோர்ந்த மிதுலா ஜெயச்சந்திரன் அவர்களின் இதயசத்திரசிகிச்சைக்காக 400,000 ரூபா வழங்கப்பட்டது.
- வாழைச்சேனையைச் சேர்ந்த பாஸ்கரன் பிரணவன் எனும் சிறுவனின் இதயசத்திர சிகிச்சைக்கு 518,000 ரூபா வழங்கப்பட்டது.
- சிறைக்கைதிகளுக்கான மனிதாபிமான உதவிகள் விசாரணையின்றி சிறைகளில் வாடும் எமது தமிழ்க் கைதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை மாமன்றம் முன்னின்று செய்து வருகின்றது. கைதிகளின் விடுதலை பற்றியும் சட்ட நடவடிக்கைக்கு உதவும் முகமாகவும் சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்து அதற்கான செலவையும் மாமன்றத்தினூடாகச் செலுத்துவதற்கு முன்வந்ததுடன் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## செப்பனவே ஒழுங்கமைத்த விழாக்களும் நிகழ்வுகளும்...

### சிவயோக சுவாமிகளின் 50வது குருபூசை

சிவயோக சுவாமிகளின் 50வது குருபூசையை மாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் நடத்துவதற்குத் திட்டமிட்டு அதற்கான குழுக்களை அமைத்து தயார்படுத்தினார். அதன் பிரகாரம் 06.04.2014 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றதுடன் யோகர்சுவாமி குருபூசை சிறப்பு இந்து ஒளியும் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 10-04-2014 அன்று நல்லூர் கந்தசுவாமி கோயிலிலிருந்து துர்க்கா மணிமண்டபம் வரை இடம்பெற்ற ஊர்வலத்துடன் சிறப்பு வழிபாடுகளும் அன்னதானமும் நடத்தப்பட்டது.

குருபூசை நிறைவை முன்னிட்டு 07.03.2015ஆம் திகதி சனிக்கிழமை அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் காலை 8.45 மணியளவில் ஆரம்பமாகி "யோகர் சுவாமிகளின் ஆன்மீக நெறிப்படுத்தல்" என்னும் பொருள்பற்றிய சிந்தனைக்களம் உள்ளிட்ட நிகழ்வுகளுடன் நடைபெற்றது.

### மாமன்றத்தின் 60ஆம் ஆண்டு நிறைவு ஆரம்ப நிகழ்வு

அகில இலங்கை இந்து மாமன்றம் ஸ்தாபிக்கப்பட்டு அறுபது வருடங்கள் நிறைவு பெறுவதையொட்டிய வைரவிழா நிகழ்வுகளின் ஆரம்ப வைபவம் 2015 மார்ச் மாதம் 6ஆம் திகதியன்று மாலை பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புப் பூசை வழிபாட்டுடன் நடைபெற்றது. இதன்போது அறுபது வருடங்கள் நிறைவைக் குறிப்பிடும் வகையில் சுமங்கலிகளால் அறுபது குத்து விளக்குகளில் தீபம் ஏற்றிவைக்கும் நிகழ்வு முக்கிய அம்சமாக இடம்பெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் சிறப்பு நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதிதிகள், சமயத் தலைவர்களின் உரைகளைத் தொடர்ந்து தொடர்ந்து மாமன்ற 60ஆம் ஆண்டு நிறைவு சிறப்பிதழாக மலர்ந்துள்ள "இந்து ஒளி" சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மாமன்ற வைரவிழாவினை முன்னிட்டு பாடசாலை மணவர்களுக்கிடையே கட்டுரைப்போட்டி ஒன்றினையும் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் செயற்படுத்தி மாணவர்களின் திறமைகளுக்கு மாமன்றத்தினூடாக களம் அமைத்துக் கொடுத்தார்.

### யாழ். இந்து ஆராய்ச்சி மாநாடு

மாமன்றம் அறுபதாம் ஆண்டு நிறைவின் மற்றுமொரு நிகழ்வாக யாழ் நல்லூரில் 2015 ஜூலை 31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 2 ஆம் திகதி வரை மூன்று நாள் பெருவிழாவாக இந்து ஆராய்ச்சி மாநாட்டினை நடாத்தியது. "ஈழத்து இந்துமதத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கு" என்ற தொனிப்பொருளில் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களினதும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களினதும் இணைந்த முயற்சியினால் மாபெரும் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் (குரு முதல்வர், தருமபுர ஆதீனம், இந்தியா) இந்த மாநாட்டில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டு மூன்று தினங்களும் சிறப்புரைகள் நிகழ்த்தினார்.

சமகால அமர்வுகள் நடக்கும் அரங்குகள் ஈழத்து இந்து சமய வரலாற்றில் மகத்தான சேவையாற்றிய இந்துப் பெரியார்களைக் கௌரவிக்கும் விதத்தில் அவர்களின் பெயர்களில் அமைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடப்படவேண்டியது.

### ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் நடத்திய சிறப்புக் கருத்தரங்கு

க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அவர்களின் சமயவலுவூட்டல் நோக்கில் "இந்து சமய வாழ்க்கை நெறியும், நம்பிக்கைகளும்" என்னும் பொருளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒரு கருத்தரங்கினை அமெரிக்கா ஹவாய் ஆச்சிரமத்தைச் சேர்ந்தவரும் வடஅமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் இளைஞர்களுக்கு இந்து சமய வாழ்க்கைநெறி பற்றிப் போதிப்பவருமான ஆன்மீகச்சுடர்



ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளை தொடர்புகொண்டு ஒழுங்குசெய்தார். அச்சிறப்புக் கருத்தரங்கானது ஜயவருடம் சித்திரைத் திங்கள் 18ஆம் நாள் (01.05.2014) வியாழக்கிழமை மு.ப.9.00 மணிதொடக்கம் பி.ப. 12.30 மணிவரை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

### நாவலர் மாநாடு

மாமன்றத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி தலைவர் அவர்கள், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நாவலர் நினைவு ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கு ஒன்றினை மட்டக்களப்பு, நாவற்குடா சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவன அரங்கில், 2015 டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதியன்று ஒழுங்குசெய்து நடத்தினார்.

மாமன்றத்தின் பணிகளில் ஒன்றான சிவதொண்டர் அணியினை மேம்படுத்தும் நோக்கில், அடுத்தநாள் 6ம் திகதி மட்டகளப்பில் சிவதொண்டர் எழுச்சி மாநாட்டினையும் நடாத்தினார். இந்நிகழ்விற்கு வணக்கத்திற்குரிய சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் (இளையபட்டம் பேரூர் ஆதீனம்), ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (முதல்வர், நல்லை ஆதீனம்), வணக்கத்திற்குரிய சதுர் குஜானந்தஜி மகராஜ் சுவாமிகள் (தலைவர், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன்) ஆகியோர் முன்னிலை வகிக்க தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் பிரதம விருந்தினராக இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் எதிர்கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மாண்புமிகு திரு. இரா. சம்பந்தன் அவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் சிறப்புரையை பேரூர் ஆதீனம் இளையபட்டம் வணக்கத்திற்குரிய சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் நிகழ்த்தினார்.

அதேபோல தொடர்ந்து 2016, 2017ம் ஆண்டுகளிலும் மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து நாவலர் மாநாடு மட்டக்களப்பில் நடாத்தப்பட்டது.

### சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு

மாமன்றத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் நெறிப்படுத்தலில் சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு ஒன்று 2015 பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

முதல்நாள் நிகழ்வில் பெப்ரவரி 5ஆம் திகதியன்று மாலை 6.00மணிமுதல் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகளிலிருந்து வருகை தந்திருந்த பிரமுகர்களுக்கான வரவேற்பும், விருந்துபசாரமும் வழங்கப்பட்டது..

இரண்டாவது நாள் நிகழ்வு 6ஆம் திகதி (06-02-2016) காலை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, காலை 9.00 மணியளவில் சரஸ்வதி மண்டபத்தில் மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் ஆரம்பமானது. கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களது ஆரம்ப உரையுடன் அமைந்த நிகழ்ச்சித் தொகுப்புடன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் ஆதீனம் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் ஆசியுரைகளையும் வழங்கினார்கள். தொடர்ந்து,இந்தியா பேரூர் ஆதீனம் இளையபட்டம் சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் ஆசிப் பேருரையாற்றினார். இந்த நிகழ்வின்போது, மாமன்ற ஆன்மீக வெளியீடான இந்து ஒளி - சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு சிறப்பிதழ் வெளியீடும், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது.

இரண்டாம் நாள் ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து "எமது சமயம் மேலும் வளர......" என்ற பெருந்தலைப்பில், "எமது மண்ணில் ஆன்மீகப் பணிகள் மேலும் வளர......" . "எமது மண்ணில் கல்விப் பணிகள் மேலும் வளர...." "எமது மண்ணில் சமூகப்பணிகள் மேலும் வளர......" என்ற உபதலைப்புக்களிலான சிந்தனைக்களங்கள் நடைபெற்றன.

மாநாட்டின் மூன்றாம் நாள் நிகழ்வு 2016.02.07ஆம் திகதி காலை 9.00 மணியளவில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் ஆசியுரையைத் தொடர்ந்து, "எமது மண்ணில் இந்து மாதர்களின் பங்கு..." "எமது மண்ணில் இந்து இளைஞர்கள் மேம்பட...." என்ற உபதலைப்புக்களிலும் சிந்தனைக்களங்கள் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து அறிஞர்கள் பங்குபற்றிய பார்வையாளர்களுடன் கருத்துப்பகிர்வு மற்றும் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

### கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு நிகழ்வு

இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை இந்து மாமன்றமும், கொழும்பு மகளிர் இந்து மன்றமும் இணைந்து வருடந்தோறும் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவு நிகழ்வினைத் தவறாமல் சிறப்பாக ஒழுங்கமைத்து நாடத்துபவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள்.



வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் இந்நினைவு நிகழ்வில் அனைவரும் பயன்பெறும் வகையில் நினைவுப்பேருரை ஒன்றினையும் ஒழுங்கமைத்து நடாத்திவந்தார் என்பது நினைவிற்கொள்ளத்தக்கது.

## "எமது மண்ணில் மேலும் வளரட்டும் எமது சமயம்" சிறப்புச் சொற்பொழிவு

மாமன்றத்தின் ஏற்பாட்டில் "எமது மண்ணில் மேலும் வளரட்டும் எமது சமயம்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாணவர்கள் பயன்பெறும் வகையில் சிறப்புச் சொற்பொழிவுகள் 2017 ஜனவரி மாதம் 20ம்திகதி முதல் 24ம் திகதி வரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் தலைவர் அவர்களின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டது. இதில் தமிழ்நாட்டு அறிஞரும் தமிழ் இலக்கியத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்ற திரு. வெ. அனந்தகிருஷ்ணன் அவர்கள் வரவழைக்கப்பட்டு "எமது மண்ணில் மேலும் வளரட்டும் எமது சமயம்" எனும் தொனிப்பொருளிலான சிறப்புச் சொற்பொழிவினை தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள்தோறும் வழங்கினார்.

## நீத்தார் நினைவு நிகழ்வு

மாமன்றத்திற்கு வழிகாட்டி மறைந்துவிட்ட பெருந்தகைகளின் நினைவாகவும் எனையோர் அமரர்களாகிவிட்ட தங்களது உறவுகளை நினைவுகூர்ந்து நன்றிக்கடன் செலுத்தி வழிபாடு செய்து அவர்களின் ஆத்மா எமக்கு நல்வழி காட்டும்படிக்கு விசேட பிரார்த்தனை வழிபாடுகள் செய்யும் வகையிலும் வருடந்தோறும் யாழ்ப்பாணம் கீரிமலையில் நீத்தார் நினைவு நிகழ்வினை நாடத்தி வந்தார். இந்நிகழ்வுகளின்பொது மாணவர்களுக்கான கல்வி உதவி மற்றும் வறியோருக்கான வாழ்வாதார உதவிகளையும் வழங்க ஏற்பாடு செய்வது வழமை.

## 40வது ஆண்டு நிறைவில் 40 மணமக்களுக்கு இலவச திருமணத்திட்டம்

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் தனது 40 ஆண்டுப் பூர்த்தியினை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இணைந்து 40 மணமக்களுக்கு இலவச திருமண திட்டம் ஒன்றினை நடாத்தியது. இத்திட்டத்தினை ஏற்று அங்கீகரித்து நடாத்த முன்வந்ததுடன் அதற்கான பணிகளை முன்னெடுத்து, 15-09-2017 வெள்ளிக்கிழமை அன்று பம்பலப்பிட்டி, சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் தெரிவு செய்யப்பட்ட 33 மணமக்களுக்கு மிகுதி 7 மணமக்களுக்கு முல்லைத்தீவு தண்ணீரூற்று ஊற்றங்கரை விநாயகர் ஆலயத்தில் கடந்த 20-10-2017 வெள்ளிக்கிழமை அன்று நடத்திவைக்கப்பட்டது.

திருமண வயதினை அடைந்தும் வறிய நிலை காரணமாக திருமண பந்தத்தில் இணைய முடியாமலிருக்கும் 40 மணமக்கள் தெரிவுசெய்யப்பட்டு இத் திட்டத்தின் கீழ் திருமணம் செய்து வைக்கப்படவுள்ளனர். ஒவ்வொரு மணமக்களுக்கும் தாலி, கூறைப்புடவை, பட்டுவேட்டிசால்வை, இரண்டு மோதிரங்கள் ஆகியவற்றுடன் வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் திருமணச் செலவுக்கென நிதியுதவியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நவராத்திரிப் பெருவிழா

இந்து வித்தியாவிருத்திச் சங்கத்துடன் ஏனைய இந்து நிறுவனங்களும் கலைத்துறை விற்பன்னர்களும் கொழும்பில் வாழும் எதிர்கால சந்ததியினரின் சயமப்பற்றைத் தக்கவைத்து ஊக்குவிக்கும் நோக்கில் கடந்த 2016ம்ஆண்டுமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நவராத்திரிப் பெருவிழாவை ஒழுங்கு செய்து ஒன்பது நாட்களும் ஒவ்வொரு கலைத்துறை நிறுவனங்களுக்கும் பொறுப்பினை பகிர்நதளித்து அவர்கள் திறம்பட அவ்விழாவினை நடாத்த வழிசெய்தார்.

# இந்து மக்களின் குரலாக...

## சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை

இந்து மக்களின் தொடர் வேண்டுகோள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகள் சிலரை இவ்வரசு பிணையில் விடுவித்துள்ளது. எனினும் கணிசமான அரசியல் கைதிகள் எவ்வித விசாரணையோ சட்ட நடவடிக்கையோ இல்லாமல் சிறையில் இன்னமும் வாடுகின்றனர். இவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று இந்து மாமன்றம் சார்பில் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் தொடர்ந்து அறிக்கைகள், கடிதங்கள் மற்றும் மகஜர்கள் ஊடாகயும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை நேரில் சந்தித்தும் வலியுறுத்தினார்.

## இந்திய பிரதமர் கெளரவ மோடி அவர்களின் இலங்கை விஜயம்

கடந்த 2015ம் ஆண்டு மார்ச் மாதம் 13, 14ந்திகதிகளில் இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் இலங்கை விஜயத்தின்போது அவர் பிறசமயங்களின் வழிபாட்டுத்தலங்களுக்கு சென்று வழிபாடாற்றுவதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்து சமய வழிபாட்டு தலங்களுக்குச் செல்வதாக நிகழ்ச்சிநிரலில் இருக்கவில்லை



என்பதை அவதானித்த நீலகண்டன் அவர்கள் மாமன்றத்தின் தலைவராக; இலங்கைவாழ் இந்துக்களின் குரலாகக் கண்டனம் தெரிவித்தும் நகுலேஸ்வரத்துக்கோ அல்லது திருக்கேதீச்சரத்திற்கோ விஜயம் செய்வது இலங்கைவாழ் இந்துக்களுக்கு மகிழ்ச்சி தரும் என்பதையும் குறிப்பிட்டு உரிய அதிகாரிகளுக்குக் கடிதங்களை அனுப்பினார். அதன் பிரதிபலனாக ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் நகுலேச்சர திருத்தலத்திற்கு விஜயம் செய்து வழிபாடாற்றினார்.

## மிருகபலிக்கு மாமன்றத்தின் எதிர்ப்பும் கண்டனமும்

இந்து ஆலயங்களில் மிருகபலியை முற்றாகத் தடை செய்ய வேண்டுமென அகில இலங்கை இந்து மாமன்றம் காலத்திற்குக் காலம் வேண்டுகோள் விடுத்து வந்திருக்கின்றது. அன்பே உருவான இறைவன் பெயரைக்கூறி மிருகங்களையோ, பட்சிகளையோ பலியிடுவதும், ஆலயத் திருத்தலத்திலோ சுற்றாடலிலோ எந்தவொரு உயிரினத்திற்கும் கொடுமை செய்வதும் அனுமதிக்க முடியாதவை. அந்த வகையில் முன்னேஸ்வரத்திலும், யாழ். சிவபூமியில் கவுணாவத்தை என்ற ஆலயத்திலும் மிருக பலி நிகழ்வு இடம்பெற இருந்ததை அறிந்து அதிர்ச்சியடைந்ததோடு அதனை நிறுத்துமாறு ஆலய நிர்வாகத்தினரையும், பூசகர்களையும் வேண்டுகின்றோம் என்று 2013, 2014 ஆகிய ஆண்டுகளிலும் பின்பும் தொடர்ந்து திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் இந்துக்களுக்கு எதிராக அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டபோதும் அவர்களின் குரல் நசுக்கப்பட்டபோதும் ஆலயங்கள் தாக்கப்பட்டு விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டபோதும் துணிந்து குரல்கொடுத்து அவற்றுக்கான தீர்வினையும் பெற்றுக்கொடுக்கத் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் செய்தார் என்பதை என்றும் நாம் நினைவுகூரவேண்டும்.

## சைவவித்தகர் பயிற்சிநெறி

சைவனாக பிறந்த ஒவ்வொருவரும் இளமைப் பருவத்தில் கற்க வேண்டிய நெறிகள் பற்றி எமது அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துக்கூறுவதற்கு சில இளைஞர்களைத் தயார்படுத்த வேண்டும் என்ற உன்னத நோக்கில் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் அரும்பாடுபட்டு வருகிறார்கள். இதன் அடிப்படையில் உருவாகியதே சைவவித்தகர் பயிற்சி நெறி. இதனை கற்ற மாணவர்கள் அறுவரும் இன்று தமது பிரதேசங்களில் சமயப்பிரச்சாரம், தொண்டுகள் ஆற்றிவருகின்றனர்.

வெ.சசிகரன் (வந்தாறுமூலை), யோ.கஜேந்திரா (கல்முனை), க.முரளிதரன் (வவுனியா), சி.யோகம் (நாவலப்பிட்டி), யோ.மோகதாசன் (வாழைச்சேனை), ஆ.பிரசாந் (வாழைச்சேனை) ஆகிய அறுவருமே சைவவித்தகர் பயிற்சியனை நிறைவுசெய்தவர்கள். இவர்களுக்கு இப்பயிற்சி நெறிமுடிவில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு 29.10.2012 அன்று 'சைவவித்தகர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தொடர்ந்து வெ.சசிகரன் மற்றும் யோ.கஜேந்திரா ஆகிய இருவரும் தாம் இத்துறையிலேயே பட்டக்கல்வி ஒன்றினை யாழ் பல்கலைக்கழகத்தில் பயில விரும்புவதாக கோரிக்கை ஒன்றினை தலைவர் அவர்களுக்கு தெரிவித்தபோது அதனை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கான பயிற்சிக் கட்டணத்தை முழுமையாக மாமன்றத்தினூடாகச் செலுத்தி அவர்களை மேலும் ஊக்குவித்தார். அவர்கள் இருவரும் இப் பட்டக்கல்வியில் சித்திபெற்று இந்நாட்டில் வாழும் இந்துக்களுக்கு மேலும் தொண்டாற்றவேண்டும்.

## நினைவுப்பேருரைகள்

மாமன்றத்தின் தலைமையை ஏற்று மாமன்றத்தின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய தலைவர்களான திரு. வே. பாலசுப்பிரமணியம், கலாநிதி க. வேலாயுதபிள்ளை, 'மனிதநேயமாமனிதர்' அமரர் வி. கயிலாசபிள்ளை மற்றும் முன்னைநாள் பொதுச்செயலாளர் திரு.முத்தையா கதிர்காமநாதன் அவர்களின் நினைவாகவும் வருடந்தோறும் நினைவு நிகழ்வுகளை திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் ஒழுங்குசெய்து அவற்றில் நினைவுப்பேருரைகளைத் தவறாது ஒழுங்குசெய்து வந்தார்.

## இந்து இளைஞர்களுக்கான கருத்தரங்குகளும் சிந்தனைக்களமும்

மாமன்றத்தின் இளைஞர் வலுவூட்டல் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதில் தலைவர் அவர்கள் மிகுந்த கரிசனை காட்டிவந்தார். அதன் அடிப்படையில் இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்து இளைஞர்களுக்கான சிந்தனைக்களம் ஒன்று 2015 பெப்ரவரி மாதம் 3ம் 4ம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளின்போது "எக்காலத்திற்கும் உகந்த இந்து சமயம்", 'தொழில்நுட்ப யுகத்தில் இந்து சமயம் எதிர்நோக்கும் சவால்களும் சாதனைகளும்' என்ற



பொருள்களில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் அவர்களின் வழிகாட்டலில் மாமன்றத்தின் கல்விக் குழுவின் ஏற்பாட்டில் 14.06.2014 அன்று சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு. திருமுருகனின் தலைமையில் நடந்த நிகழ்வில் இந்து நாகரிகம் (திருத்திய இரண்டாம் பதிப்பு) வெளியிட்டு வைக்கப்பட்டது. இங்கு க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு இந்து நாகரிகம் தொடர்பான பயிலரங்கு நடாத்தப்பட்டது. 15.06.2014 ஞாயிற்றுக்கிழமை இதேபோன்ற கருத்தரங்கு கிளிநொச்சி கல்லூரியில் நடாத்தப்பட்டது.

## பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இந்து மன்றங்களுக்கும் கணனிகள் வழங்கல்

கடந்த காலங்களிலும் அன்பளிப்பு செய்யப்பட்டது. பிரித்தானியாவிலுள்ள திரு. சிவா ரமேஷ் என்ற நலன்விரும்பியின் ஒழுங்கில் திருவாளர்கள் B.G. குறூப் என்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் 04.12.2014இல் எமக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 59 மடிக்கணனிகளில் 54 மடிக்கணனிகள் நிதிநிலை குறைந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இந்து சமய அமைப்புக்களுக்கும் நன்கொடைகளாக வழங்கப்பட்டன. தலைவரின் ஆலோசனையின்படி பின்தங்கிய பிரதேச பாடசாலைகளின' கொரிக்'கைக்கு ஏற்ப கணணிக்ளுக்கான தேவையான உதிரிப்பாகங்கள் மாமன்றத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையான கணணியாக நன்கொடைகளாக வழங்கப்பட்டன. இதில் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை உட்படத் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உள்வாங்கப்பட்டாார்கள்.

## சிவதொண்டர் அணியும் புலமைப்பரிசில் திட்டமும்

நாட்டின் பல இந்துப் பாடசாலைகளிலும் சிவதொண்டர் அணியை விஸ்தரித்து நடாளாவியரீதியில் 71 அமைப்புக்களில் சிவதொண்டர் அணிகள் தாபிக்கப்பட்டு 1858 சிவதொண்டர்கள் சிவதொண்டர் அணிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டனர். இவர்களில் 26 அமைப்புக்கள் ஊடாக தொரிவுசெய்யப்பட்ட 261 சிவதொண்டர்களுக்கு தவணை தோறும் தலா 3000/- புலமைப்பரிசில் வழங்கினார். வறுமை காரணமாக மாணவர்கள் கல்வியை கைவிடக்கூடாது என்ற உயரிய நோக்கம் இத் திட்டத்திற்கு மூல நோக்கமாக அவர் மனதில் பதிந்திருந்தது.

ஆலயங்கள் சமயப்பணிகளுக்கு மேலாக சமூகப்பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை தொடர்ந்தும் வலியுறுத்தி வந்ததுடன், ஆலயங்கள் கட்டட அமைப்புகளுக்கு நிதிஉதவி வழங்கும்போது அந்த பகுதி மாணவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி கூறுவார்.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்தப்படும் ஊர்வலத்தின் முன்னிலையில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் ஒழுங்கமைப்பில் சிவதொண்டர்கள் கலாசார அடையாளங்களுடன் அணிவகுத்துவருவதைப் பெரும்பேறாக கருதினார்.

## அறநெறிப் பாடசாலைபிள்ளைகளுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகள்

சிவதொண்டர் அணிகள் செயற்படும் அதேநேரம் அறநெறிப் பாடசாலைகளையும் அமைத்தல் தொடர்பாக நீலகண்டன் அவர்கள் முக்கிய கவனமெடுத்தார். எமது இளம் சமூகத்தை ஆன்மீக வழியில் நடாத்திச் சென்று நற்பிரசைகளாக்கும் நடவடிக்கைக்கு அறநெறிப் பாடசாலைகளே ஆரம்ப படிநிலையாக விளங்குகின்றது என்ற அடிப்படையில் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்காக ஆண்டு தோறும் இலவச அப்பியாசக் கொப்பிகளை அச்சிட்டு விநியோகிக்க நடவடிக்கை எடுத்தார்.

## நடுத்தீர்ப்பு மையம்

ஆலயங்கள் தமது உள்ளகப்பிணக்குகள் காரணமாக நீதிமன்றத்திற்குப் பல்லாண்டு காலம் இழுபறிப்படுவதைத்தடுத்து அப்பிணக்குகளைத் தமக்குள்ளேயே சுமுகமாகத் தீர்த்து ஆலயங்களில் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்குக் களங்கம் வரக்கூடாது என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதே மாமன்றத்தின் நடுத்தீர்ப்பு மையம். இந் நடுத்தீர்ப்பு மையத்தினை ஆரம்பித்து அதனைச் சட்டரீதியானதாக்க நடுத்தீர்ப்பு மைய விதிகளை உருவாக்கி அதனைச் செய்றபடுத்துவதில் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் தனது முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.



# சிரேஷ்ட சட்டத்தரணி, அமரர் கந்தையா நீலகண்டன்

## அவர்கள் வகித்த பதவிகள் ஒரே பார்வையில்...

- தலைவர் , இணை முன்மாதிரிப் பங்காளர் - நீலகண்டன் & நீலகண்டன் சட்டத்தரணிகளும் பிரசித்த நொத்தாரிசும்
- சட்டத்தரணியாக 48 வருடங்கள்
- பொதுச் செயலாளர் - அகில இலங்கை இந்து மாமன்றம் - 22 வருடங்கள்.
- தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம் - 5 வருடங்கள்.
- ஆளுநர் சபை உறுப்பினரும், அதன் செயலாளரும் - இந்து வித்தியா விருத்திச் சங்கம் - 22 வருடங்கள்.
- துணைத்தலைவர் - கொழும்பு விவேகானந்த சபை.
- தலைவர் - திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை
- செயலாளர் / நம்பிக்கைப் பொறுப்பாளர் - மனிதநேய நம்பிக்கை நிதியம்
- செயலாளர் - கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை
- முன்னாள் தலைவர் - கொழும்பு தமிழ்ச்சங்கம்
- முன்னாள் தலைவர் - உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை.
- முன்னாள் தலைவர் - இலங்கை - இந்திய நட்புறவுச் சங்கம்
- முன்னாள் பிரதித் தலைவர் - ஜோர்ஜ் ஸ்ருவாட் குழுமம்
- உறுப்பினர் - நல்லை ஆதீன நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை
- உபபோசகர் - யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை
- நம்பிக்கை பொறுப்பாளர் - யாழ் இந்துக் கல்லூரி நம்பிக்கை நிதியம்.
- முன்னாள் செயலாளர் / செயற்குழு உறுப்பினர் - பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 30 வருடங்கள்
- செயலாளர் - பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை
- முன்னாள் செயலாளர் - வடகிழக்கு பாடசாலைகள் புனருத்தாபன சபை.
- முன்னாள் பேரவை உறுப்பினர் - யாழ் பல்கலைக்கழகம்.
- முன்னாள் அங்கத்தவர்- நிதி ஆணைக்குழு
- முன்னாள் அங்கத்தவர் - சட்ட ஆணைக்குழு
- முன்னாள் உறுப்பினர் - சட்டக்கல்வி பேரவை
- ஆளுனர் சபை உறுப்பினர் - தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க சபை
- முன்னாள் உறுப்பினர் - கம்பனிகள் சட்ட ஆலோசனைக் குழு
- செயலாளர் - வியாபார மீளெடுத்தல் மற்றும் மீளச்செலுத்தாதோர் ஒன்றியம்
- முன்னாள் செயலாளர் - சட்டக்கல்லூரி இந்து மாணவர் சங்கம்
- முன்னாள் துணைச் செயலாளர் / செயற்குழு உறுப்பினர் - இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்
- முன்னாள் ஆசிரியர் - இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செய்தி மடல்
- பதிப்பாசிரியர் - The BAR Association Law Journal (25 Years)



# பிரார்த்தனைச் செய்திகளும்
# நினைவுப்பகிர்வுகளும்



## நல்லை ஆதீன குருமுதல்வர்
## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின்
## பிரார்த்தனைச் செய்தி

சைவ மக்களின் மதிப்பார்ந்த தலைவராக விளங்கிய திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் திடீர் மறைவு குறித்து மிகுந்த கவலையடைகிறோம். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உன்னத வளர்ச்சியில் பெரிதும் அக்கறையோடு செயற்பட்ட செயல்வீரன் இன்று நம்மிடையே இல்லை. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் மிகுந்த அக்கறை காட்டிய இப்பெரியாரின் பிரிவு பெரிதும் வேதனை தருகிறது.

எமது ஆதீனத்தின் வளர்ச்சியில் திரு. நீலகண்டன் அவர்களின் பங்களிப்பு என்பது வார்த்தைகளால் சொல்லமுடியாது. ஆதீனத்துக்கு மோட்டார் வாகனமொன்று வாங்கி கப்பலில் அனுப்பிவைத்தவர். கொழும்பில் நடைபெறும் முக்கியமான வைபவங்களுக்கு எம்மை அழைத்துக் கௌரவப்படுத்தியவர். எந்தவொரு இந்து சமய விழாக்களிலும் நானும் பங்குபற்றவேண்டும் என சகல ஏற்பாடுகளையும் செய்தவர். நாட்டின் தலைவர்கள் யாழ்ப்பாணம் வரும்போது, எமது ஆதீனத்துக்கும் வருகைதந்து மதிப்பளிப்பதற்கு இவர்தான் முக்கிய காரணமாக இருந்துள்ளார்.

ஆதீனத்தின் புதிய கட்டட நிர்மாண ஏற்பாடுகளை பொறுப்பேற்று, இன்று ஆதீன பிரதான கட்டடம் கம்பீரமாகக் காட்சிதருவதற்கு வித்திட்டவர் திரு. நீலகண்டன் அவர்கள்தான். ஆதீன வளர்ச்சியில் அக்கறைகொண்டு, இந்து மாமன்றத்தினால் நிதியுதவி வழங்குவதற்கு இவரே காரணகர்த்தாவாக விளங்கியவர். அன்னாரின் இடத்தை யாரும் நிரப்பமுடியாது.

அமரர் நீலகண்டன் அவர்கள் துரிதமாக செயற்படும் ஆற்றலும், துணிவும்மிக்கவர். எம் சமயத்துக்காக இவரது குரல் ஓங்கி ஒலித்தது. பணிவும் பக்குவமுமிக்க இவர் துறவிகளுக்கு உயர்மதிப்பை வழங்கிவந்தவர். சகலதுறை வல்லுனராகிய இச்சான்றோனின் ஆத்மா, தில்லைக்கூத்தன் திருவடியில் நிரந்தர ஆறுதல்பெறப் பிரார்த்திப்போம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
(நல்லை ஆதீன குரு முதல்வர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்)



## கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் பிரார்த்தனைச் செய்தி

# தன்னம்பிக்கை மிக்க தலைவராகத் திகழ்ந்த நீலகண்டன்!

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒர சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை உள்ளே இருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவுகடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவிற்கு ஒவ்வொருவரிடமும் சக்தி இருக்கிறது. அதை முயற்சி செய்து வெளிக் கொணர்வதே நமது கடமை என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

அவர் தன்னுடைய சட்டத்தரணித் தொழிலையும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் வாக்கிற்கு அமைய இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டு வாழ்ந்து, சைவ மதத்தின் முன்னேற்றத்திற்கும், இளைய தலைமுறையினரிடையே சமய நெறிகளைப் புகுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு அயரது பாடுபட்டார்.

மேலும் திரு.நீலகண்டன் அவர்கள் இராமகிருஷ்ண மிஷனுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அத்துடன் சுனாமி அனர்த்தத்தின் போது இராமகிருஷ்ண மிஷனின் நிவாரணப் பணிகளில் பங்கேற்றார்.

இந்து மாமன்றத் தலைவராக பணிகள் பலஆற்றிய திரு.நீலகண்டன் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து 18.02.2018 அன்று சிவபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினர் அனைவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றேன்.

இறைபணியில்
**சுவாமி சர்வரூபானந்த**

(இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு)



# தமிழ்நாடு, பேரூர் ஆதீனத்தின் பிரார்த்தனைச் செய்தி

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்"

என்பது வள்ளுவர் வாக்கு. அவரவர் செய்யும் செயல்களே சமுகத்தில் அவர்களுக்கான இடங்களைத் தீர்மானிக்கின்றன. அவ்வகையில் சிறந்த பயனுள்ள செயல்களைச் செய்தவர்கள் மறைந்தாலும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டே இருப்பர். அத்தகைய செயல்களைச் செய்து அடியார்களின் மனதில் அழியா இடம்பிடித்தவர் திருமிகு கந்தையா நீலகண்டன் அவர்கள்.

நூற்றாண்டு பெருமை மிக்க அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராகப் பல சான்றோர்கள் பணி செய்துள்ளனர். இத்தகைய சிறப்பு மிக்க மன்றத்தில் திருமிகு கந்தையா நீலகண்டன் அவர்கள் பணியாற்றிய காலம் பொற்காலமாகப் போற்றப்படுகிறது. அக்காலத்தில் இளைஞர்களை ஒன்று சேர்த்து சிவதொண்டர் அணியினை சிறப்பாக நடத்தியவர். இலங்கையில் போர்க் காலங்களிலும் போர் முடிந்த பிறகும் தமிழ் மக்களின் துயர்தீர்க்கத் தன்னால் ஆன உதவிகளைப் புரிந்தவர். நமது குருமகா சந்நிதானங்கள்பால் மிகுந்த மதிப்பு கொண்ட இவர் சீர்வளர்சீர் குருமகாசந்நிதானங்களின் 90ஆம் அகவை நிறைவு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தவர். மட்டக்களப்பு நகரில் நிகழ்ந்த ஆறுமுக நாவலர் விழாவிலும் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த தவத்திரு விபுலானந்தர் விழாவிலும் நம்மைக் கலந்து சிறப்பிக்கச் செய்தவர். போர்க்காலத்தில் திருக்கோயில்கள் இடிக்கப்பட்ட போதும் சைவத்திற்கு இடையூறுகள் ஏற்பட்ட போதும் முன்னின்று குரல் கொடுத்தவர். திருக்கேதீஸ்வரம் திருக்கோயில் உள்நாட்டுப் போரினால் சிதைவுற்ற போது அக்கோயிலை புனரமைக்கப் பல கோடி ரூபா செலவில் திருப்பணிகள் நடைபெற துணைநின்றவர். தற்போது அக்கோயில் திருக்குட நீராட்டுப் பெருவிழாக் காண இருக்கின்றது.

பாரதியார் பல்கலைக்கழகத்தின் வழி இயங்கும் தொலைநிலைக்கல்வி மையத்தில் ஒன்றாக நமது ஆதீனத்தில் அமைந்துள்ள சீர்வளர்சீர் கயிலைக்குருமணி சமுதாய கல்லூரியின் பணிகளைக் கண்டு அங்கிருந்து நமது ஆதினத்திற்கு ஆட்களை வரவழைத்தும் இங்கிருந்து அங்கு அனுப்பியும். இக் கல்வி முறையை அங்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொண்டவர். இவர்தம் முயற்சியைப் பின் வருபவர்கள் தொடர்ந்து செயலாற்ற வேண்டும் இலங்கையின் மேனிலைக் கல்வியைக் கொண்டுவரவும் குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி வழங்கவும் வழிவகை செய்தவர்.

சைவத்திற்கு இவர் ஆற்றியுள்ள பணிகள் சொல்லால் அளவிடற்கரியது இவர்தம் இழப்பு ஈழத்திற்கும் சைவ சமயத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். திருக்கேதீஸ்வரத் திருக்குடநீராட்டுப் பெருவிழாவைக் கண்ணினால் காண முடியாவிட்டாலும் விண்ணிலிருந்து கண்டு மகிழ இறையை வேண்டுகிறோம். பிரிவால் வாடும் இவர்தம் துணைவியாருக்கும் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் தம் ஆன்மா அமைதியுற எல்லாம் வல்ல அருள் மிகு அம்பலவாணப்பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் தன்னருளையும் திருக்கயிலாய மரபு மெய்கண்டர் வழிவழி பேரூராதீனம் கயிலைக்குருமணி முதுமுனைவர் சீர்வளர்சீர் பேரூரடிகளார் குருவருளையும் சிந்திக்கின்றோம்.

**கயிலைப்புனிதர் தவத்திரு மருதாசல அடிகள்**
*இளையபட்டம், பேரூர் ஆதீனம்*



# அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம்
# ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் பிரார்த்தனைச் செய்தி

பற்று அற்ற வாழ்வில் பல வருடங்கள் வாழ முயன்ற போதிலும் கொழும்பில் ஒரு மகத்தான மனிதரிடம் என்னை அறியாமலே எல்லையில்லா பற்று வைத்துவிட்டேன். என்னைப் பற்றிக்கொண்ட இனிய மானிடம் உயர்திரு கந்தையா நீலகண்டன் என்றால் மறுவார்த்தை இல்லை. கடந்த பதினொரு ஆண்டு காலமாக இப்பெருமகனால் எனக்கு கிடைத்த அன்பும் சிறப்புக்களும் வார்த்தைகளால் சொல்ல முடியாது. என்னை அறிந்த நாள் முதல், உடன்பிறப்பாக பழகிய நீலகண்டன் ஐயாவின் அன்பு உள்ளத்தை அடியேன் எப்படிச் சொல்வேன்?

ஆண்டுதோறும் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வரும்போது என்னைத்தேடி விமானநிலையம் வந்து வரவேற்று, தன்வீட்டிலேயே தங்கவைத்து உபசரித்த இனிய பண்பாளரை நாம் இழந்துவிட்டோம். இலங்கைக்கு வரும்போது முதலில் சந்திப்பதும், இலங்கையிலிருந்து திரும்பும்போது இறுதியாக விடைதந்து அனுப்பிவைப்பதும் நீலகண்டன் ஐயாதான். அகில இலங்கை இந்து மாமன்றத்தில் என்னை அறிமுகம் செய்து, நான் இலங்கை வரும்போதெல்லாம் மேடையேற்றி சிறப்புச் செய்தவர் அவர். கிழக்கு, மலையகம் உட்பட அனைத்துப் பிரதேசங்களுக்கும் என்னை அழைத்துச் சென்று பலரை அறிமுகம் செய்துவைத்த பண்பாளன். இந்து ஒளி ஆன்மீக இதழிலும் எனது சிந்தனைக்கு எட்டியவற்றை எழுதத் தூண்டியவர். வயதில் மூத்தவர். ஆனால் வயதில் இளையவர்களை உயர்த்தி விடுவதில் ஆர்வம் உடையவர். அவரும், அவரது மனைவி பிள்ளைகளும் எம்மீது மிகுந்த பிரியமுடையவர்கள்.

அமெரிக்க ஹவாய் ஆதீன முதல்வர் சற்குரு போதி நாத வேலன் சுவாமிகளும், அறுபத்தைந்து ஆன்மீக யாத்திரிகர்களும் இலங்கை வருவது தொடர்பாக ஐயாவுக்கு அறிவித்தேன் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அவர்களை வரவேற்கும் விழாவை ஏற்பாடு செய்தார்கள். விழா ஏற்பாடுகளை நேரடியாகவே வந்து கவனித்துக்கொண்ட வேளையிலேயே அந்த துயரமான நிகழ்வு இடம்பெற்றுவிட்டது. உயிர் பிரிவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பும் தொலைபேசி ஊடாக என்னுடன் உரையாடிய நீலகண்டன் ஐயா இனிமேல் பேசமாட்டார் என நினைக்கும்போது உள்ளம் உறைகிறது. கடவுளால் படைக்கப்பட்ட நல்லதோர் ஜீவாத்மா பரமாத்மாவை அடைந்துவிட்டது.

ஐயாவின் பிரிவால் அழுவதால் பயனில்லை. அவர் காட்டிய நல்ல பாதையால் பயணம் செய்வதே எமது கடமையாகும். அன்னாரின் ஆத்மா சிவனின் பாதத்தில் ஆறுதல்பெற திருக்கேதீஸ்வரப் பெருமானை வேண்டுகிறேன்.

**ரிஷி தொண்டுநாதன்**
(ஹவாய் சைவ ஆதீனம், ஐக்கிய அமெரிக்கா)



## இணுவில், தர்மசாஸ்தா குருகுலத்தின் பிரார்த்தனைச் செய்தி

## கீர்த்திமிகு பணிகள் செய்த பெருந்தகை

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் அவர்களது இறைபத மெய்திய செய்தி அறிந்து கவலையுற்றோம். அமரர் நீலகண்டன் அவர்கள் எமது இனத்திற்கும், மொழிக்கும், சமயத்திற்கும், சமூகத்திற்கும் பல கீர்த்திமிகு பணிகளைச் செய்தப் பெருந்தகை.

குறிப்பாக எமது சமயத்தின்பால் அதீத பற்றுறுதியுடன் செயல்பட்டவர். சமயமே வாழ்க்கை வாழ்க்கையே சமயம் என்பதில் உறுதியுடன் இருந்து நிர்வாகிகள் சமூகப்பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட வேண்டும் என தூண்டுதலை மேற்கொண்டு வந்ததுடன் மட்டுமல்லாது சமய குருமார்மீது அதீத அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார். குறிப்பாக இடம்பெயர் காலங்களில் சிவாச்சாரியர்களினதும் அவர்களின் குடும்பத்தினரதும் இயல்பு வாழ்க்கைக்காகப் போராடி பல தீர்வுகளை பெற்றுக்கொடுத்தார்.

கிடைத்தற்கரிய நூல்களான சிவாகமசேகரம் மற்றும் சிவலிங்கப் பிரதிஷ்டா விதி எனும் இரண்டையும் அமரர் வி.கயிலாசபிள்ளை அவர்களின் அனுசரணையுடன் பதிப்பித்துச் சிவாச்சாரியார்களுக்கு மாமன்றத்தினூடாக இலவசமாக வழங்கியதையும் மிக்க நன்றியுடன் இங்கு நினைவுகூர வேண்டியது எனது கடப்பாடாகும்.

எமது சமூகத்திற்கும் சமயத்திற்கும் அவரது இழப்பானது ஈடுசெய்ய முடியாதது. இச்சூழலிலும் அவரது ஆத்மா இறைவன் பாதக்கமலங்களில் நிலைபெற்றிட பிராத்தித்து அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் தொடர்ந்தும் அவர் இட்டுச்சென்ற வழியில் பணிசெய்திட எல்லாம் வல்ல பரம்பொருளினது திருவருள் துணை நிற்க வேண்டும் எனப் பிராத்தனை செய்கின்றேன்.

**சிவஸ்ரீ தாணுமஹாதேவ குருக்கள்**
தர்மசாஸ்தா குருகுலம்
இணுவில்



## இந்து குருமார் அமைப்பின் பிரார்த்தனைச் செய்தி
## மாண்புறு பணிகள் ஆற்றிய சான்றோன் நீலகண்டன்!

ஆன்றோரும் சான்றோருமாய் வாழ்ந்து தமது உயிரை நீத்தாலும் பலர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எம் மனங்களில்.

செயற்கரியன செய்து செய்வதற்கு ஆகாதனவற்றினை விடுத்து நிறைமொழி மனிதர்களாக வாழ்ந்து, மறைந்தவர்களே இவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எம் மனங்களில் பூதவுடலை விடுத்து, புகழுடலைப் புவியில் விட்டு வானுலகு சென்றடைந்தும் அங்ஙனமாய் மறக்க முடியாமல் மனதார நினைத்தோங்க வைத்தவர் தான் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள்.

அவர் மறைந்தாலும் மாண்பு பெற்ற வழிகாட்டியாய் எப்போதும் இருக்கக் கூடிய அன்னாரின் இழப்பு ஒரு தடவையல்ல ஓராயிரம் தடவைகள் நினைவுகளில் வந்து நிலைக்கின்றன.

"அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக்கொளல்"

எனும் வள்ளுவப்பெருந்தகையின் குறளுக்கு ஏற்ப நாமும் அவர்கள் பணிதனை அவர் வழி பேணி அவர் செய்த நற்காரியங்களை இனி வரும் காலங்களில் நாமும் எமது வழி சந்ததியினரும் போற்றி வாழ வேண்டும். இது எமது கடமையாகும். இந்து மக்களினது மாண்புமிக்க வாழ்வியலின் சமயநெறி சிறிதேனும் மாறாது மேலும் தழைத்தோங்குவதற்கு மிகவும் பங்காற்றியவர் அமரர் கந்தையா நீலகண்டன்.

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பொதுச்செயலாளர், தலைவர் பதவிக்காலங்களில் மாண்புற சேவையாற்றியவர். அவருடனும் அவரது சேவையுடனும் நாமும் இணைந்து சிலகாலமாக பயணித்துள்ளோம். இவ் அனுபவம் மறக்க இயலாதது. ஒரே நேரத்தில் பல தரப்பட்ட விடயங்களில் அவதானத்தை செலுத்தவல்லவராக விளங்கினார்.உடல் நலக்குறைவு ஏற்பட்ட காலங்களில் கூட அவரது வேளைகளில் தளர்ச்சி ஏற்படவில்லை. தனது இறுதி நிமிடத்தில் கூட சிவபக்தர்களுக்கு மரியாதை வழங்கி விருந்திடும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தே தேகம் விடுத்தார்.அவரது இயல்பிற்கு இதுவே ஓர் எடுத்துக்காட்டாகும் என நினைக்கின்றேன்.

இவ்விடத்தில் இந்து சமய குருமார் மீது அவர் கொண்டிருந்த மரியாதையினையும் பற்றினையும் குறிப்பிட வேண்டும். எமது மக்கள் அனுபவித்த யுத்த இறுதிக் காலப்பகுதியில் வன்னி பெரு நிலப்பரப்பில் இருந்து இடம்பெயர்ந்திருந்தனர். இடைத்தங்கல் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் அமரர் நீலகண்டன் அவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்தினூடாக பலவிதமான செயற்திட்டங்களை வகுத்து அனைவரையும் இணைத்துச் செயல்பட்டவர். அவர்களுக்கான பிரத்தியேகமான உணவு வழங்கல் உட்பட பலநிலை செயல்பாட்டினை மறந்திட, மறுத்திட முடியாது.

எல்லாவற்றிற்கும் மேலாக இடைத்தங்கல் முகாம்களில் இருந்தவர்களினதும் அவர்களின் குடும்பத்தினரதும் விடுதலை தொடர்பில் தன்னுடன் எம்மையும் இணைத்துத் தனிப்பொறுப்பு உறுதியுரை வழங்கி விடுதலைக்கு உதவிய செயற்பாட்டினை குருமாராகிய நாம் என்றும் மறக்க முடியாது.

எமது வழிபாட்டிடங்கள் தாக்கப்பட்ட சமயங்களில் எல்லாம் உயரியவர்களின் கவனத்திற்கு விடயத்தினை எடுத்துக் கூறிக் கண்டனத்தினையும் பதிவு செய்யத்தவறவில்லை.இவ்வாறான ஒருவரின் இழப்பு எமக்குட் எம் இனத்தினருக்கும் மிகவும் கவலைதரக்கூடிய நிலையினையே ஏற்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் இறை நியதியை ஏற்றுத்தானே ஆகவேண்டும். ஆகவே அவரது ஆத்மா சாந்திக்குப் பிரார்த்தனை செய்து அவரது செயற்திட்டங்களை அனைவரும் இணைந்து முன்னெடுப்போம்.

**சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர் - இந்து குருமார் அமைப்பு, கொழும்பு



# MESSAGE FROM VISHVA HINDU PARISHAD

**DEEPEST CONDOLENCES ON NIDHAN OF ADVOCATE KANDIAH NEELAKANDAN JI, COLOMBO, SRI LANKA**

Saddened by the demise of professional from the field of law from Sri Lanka, Shri Kandiah Neelakandan Ji (70yrs; 16 Apr 1947- 18 Feb 2018). He will be remembered for his sewa to Hindu society through All Ceylon Hindu Congress. He was long serving General secretary of ACHC during most difficult time of Hindu society in Sri Lanka and later as president.

Hindu brethren will miss him much. My deepest condolences!

*"Na Hi Kalyaana Kruta Kaschit, Durgatim Tat Gachchhati"! ("There is never any loss to an altruist in the divine scheme who engages in auspicious and spiritual activities." - Gita: 6/40).*

May his Ishtdev guide his departed noble soul to perfection and liberation! May he get a pride of place at the lotus feet of Sachchidanand Bhagwan! May the Almighty give strength to his bereaved family and friends to bear this irreparable loss!

*"Om Purnamadah Purnamidam Purnaat Purnamudachyate, Purnasya Purnamaadaay Purnamevaavashishyate."*

*- Brihadaranyaka Upanishad 5.1.1.*

*Om Shaantih, Shaantih, Shaantih!*

In grief and with prayers,
SWAMI VIGYANANAND
Joint General Secretary
Vishva Hindu Parishad

*February 20, 2018*



ශ්‍රී ලංකා ජනාධිපති

இலங்கை சனாதிபதி

**President of Sri Lanka**

## இரங்கல் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கந்தையா நீலகண்டன் அவர்கள் இயற்கை எய்திய செய்தியை அறிந்து கவலையடைகிறேன்.

மக்களை ஆன்மீக ரீதியில் நல்வழிப்படுத்தி அவர்களை ஒழுக்கசீலர்களாக வாழ வழிகாட்டுவதே சிறந்த சமூகப்பணி என்பது எனது நம்பிக்கையாகும்.அந்த வகையில் கந்தையா நீலகண்டன் அவர்கள் தொழில்முறைச் சட்டத்தரணியாக இருந்தபோதிலும் ஆன்மீக துறையிலும் அதிக நாட்டம் கொண்டிருந்தார் என அறியும் போது ஆன்மீக எண்ணங்களின் ஊடாகவே சமூகத்தில் சாதகமான மாற்றங்கள் ஏற்படுத்த முடியும் என்பதை அவரும் நம்பியிருக்கின்றார் என்பதை என்னால் ஊகிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அகில இலங்கை இந்து மாமன்றம், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை, இந்து வித்தியா விருத்திச் சங்கம், விவேகானந்த சபை , மற்றும் கொழும்பு தமிழ்சங்கம் போன்றவற்றில் முக்கிய பதவிகளை வகித்த அன்னார், தமிழுக்கும் சமயத்திற்கும் பெரும் பணியாற்றியதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திலும் முக்கிய பங்கினை ஆற்றியுள்ளார் என அறிகின்றேன்.

இந்தவகையில் சட்டத்துறைக்கு மாத்திரமன்றி சமூகத்திற்கும் சேவையாற்றி வந்த அமரர் கந்தையா நீலகண்டன் மறைவினால் துயருறும் அன்னாரது மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றேன்.

மைத்ரிபால சிறிசேன

2018 பெப்ரவரி 20 ஆம் திகதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

Democratic Socialist Republic of Sri Lanka



ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

*இலங்கையின் பிரதம அமைச்சர்*

**Prime Minister of Sri Lanka**

# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

# பிரதம மந்திரியின் இரங்கல் செய்தி

பிரபல சட்டத்தரணியும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபைத் தலைவரும், இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளரும் மற்றும் பல நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்த அமரர் திரு.கந்தையா நீலகண்டன் காலமானதை அறிந்து மிகவும் கவலையடைந்தேன்.

இந்து மதத்திற்கு மட்டுமல்லாது தமிழ்ச்சமூகத்தில் பல சேவைகளை புரிந்தனூடாக அவர் எப்பொழுதும் மக்கள் மனதில் நினைவு கூரப்படுபவராக நிலைத்திருப்பார்.

பல்வேறு மதங்களிடையே மற்றும் சமூகக் குழுக்களிடையே சமாதனத்தையும், ஒற்றுமையையும் வழிநடத்துவற்காக எம்மால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவில் அவர் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிப்பவராக இருந்தார்.

இந்திய அரசங்கத்தின் உதவியுடன் மன்னாரில் திருக்கேதீஸ்வர ஆலயம் மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு செய்வதில் அன்னார் முக்கிய பங்களிப்பவர் என்பதை நான் அறிவேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**ரணில் விக்கிரமசிங்க**
பிரதம அமைச்சர்

23.03.2018




කාර්යාලය/ அலுவலகம்/ Office

විපක්ෂ නායක කාර්යාලය,
03 වැනි මහල, පාර්ලිමේන්තුව,
ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ,
ශ්‍රී ලංකාව.
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்,
03 ஆவது மாடி, பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
இலங்கை.
Office of the Leader of the Opposition,
03rd Floor, Parliament,
Sri Jayewardenepura Kotte,
Sri Lanka.

ආර්. සම්බන්දන්, පා.ම.
இரா. சம்பந்தன், பா.உ.
R. Sampanthan, MP
විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கைப் பாராளுமன்றம்
Leader of the Opposition - Parliament of Sri Lanka

දුරකථන/தொலைபேசி/Telephones:
කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2777253, 011-2777256
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2777257, 011-2777285
නිවස / வதிவிடம் / Residence: 011-2559787, 026-2227520
විද්‍යුත් තැපැල් / மின்னஞ்சல் / Email: sampanthan_r@parliament.lk, r.sam.tco@gmail.com, sam_tco@yahoo.com


மூத்தச் சட்டத்தரணியும் சமய, சமூக சேவையாளருமான திரு.கந்தையா நீலகண்டனின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் மிகுந்த மனவேதனையுமடைந்தேன்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.நீலகண்டன் அவர்கள் , சட்டக்கல்வியை மேற்கொண்டு 1970 ஆம் ஆண்டு சட்டத்தரணியாகத் தனது தொழிலை ஆரம்பித்தார்.பின்னாளில் "நீலகண்டன் அன்ட் நீலகண்டன்" என மாற்றம் பெற்ற "முருகேசு அன்ட் நீலகண்டன்" எனும் சட்ட நிறுவனத்தில் இணைந்து இறுதிவரை அதன் பங்காளராகச் செயற்பட்டார்.

தமிழ் அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர்,தமிழ்த் தலைமைகளிடேயே ஒற்றுமையை வலியுறுத்தி வந்ததுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திலும் பெரும் பங்கு கொண்ட ஒருவராக விளங்கினார்.

பழகுவதற்கு இனியவராகவும் உயர் பண்புகளைக் கொண்டவராகவும் தொழிலில் கடமையுணர்வும், நேர்மையும் நிறைந்தவராகவும் திகழ்ந்தார்.

இலங்கையின் பழம்பெரும் கம்பனிகளுள் ஒன்றான ஜோர்ஜ் ஸ்ருவட் கம்பனியின் பிரதித் தலைவராகச் செயற்பட்டு அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார்.

சட்டத்தரணிகள் சங்கத்தினால் வெளியிடப்படும் LAW Journal எனும் இதழின் ஆசிரியராக நீண்டகாலம் சிறப்பாக பணியாற்றிய அன்னார், கம்பனிச் சட்ட ஆலோசனைக்குழு, இலங்கை சட்ட ஆணைக்குழு மற்றும் இலங்கைச் சட்டக்கல்விக் கவுன்சில் போன்ற சட்டம்சார் நிறுவனங்களின் உறுப்பினராக இருந்து அந்நிறுவனங்களின் செயற்பாடுகளில் காத்திரமான பங்களிப்பினை வழங்கியிருந்தார்.

இலங்கைக் கம்பனிச் சட்டம் சம்பந்தமான பல நூல்களை எழுதியுள்ள அவர் , கம்பனிகள் தொடர்பான பல நூறு வழக்குகளில் முன்னிலையாக்கி சட்டத்துறைக்குப் பெரும் பங்காற்றியிருந்தார்.

இந்நாட்டிலுள்ள இந்து சமய அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச்செயலாளராக நீண்ட காலம் அர்ப்பணிப்புமிக்க சேவையை வழங்கிய அன்னாரது பங்குபணிகளைக் கருத்தில் கொண்டு பின்னாளில் அதன் தலைவராக தேர்ந்தேடுக்கப்பட்டு இறக்கும் வரை அப்பணியில் அயராது ஈடுபட்டிருந்தார். போர் மற்றும் சுனாமி போன்ற அனர்த்தங்களினால் மக்கள் பாதிக்கப்பட்ட போதெல்லாம் துணிச்சலுடன் மன்றத்தின் சார்பாக கண்டனங்களையும் எதிர்குரலையும் எழுப்பிவந்தமையை இவ்வேளையில் நினைவுகூர்வது பொருத்தமானதாகும்.

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபையின் தலைவராகி அவ்வாலயப் புனரமைப்புப் பணிகளில் சிரத்தையுடன் செயற்பட்டு வந்ததுடன் , இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் இறக்கும் வரை செயற்பட்டு வந்தார்.

தலைநகரில் தமிழ்ப் பணியாற்றிவரும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் நீண்கால உறுப்பினராக அங்கம் வகித்த அவர், அதன் தலைவராக பணியாற்றும் சிறப்பினையும் பெற்றிருந்தார். சட்டம்.சமயம், அரசியல், தமிழ்ப்பணி என பன்முகப் பணிகளை மேற்கொண்டு வந்த அன்னாரது மறைவு சட்டத்துறைக்கும் குறிப்பாக இலங்கை வாழ் இந்துக்களுக்கும் தமிழர்களுக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும், தமிழரசுக் கட்சி சார்பிலும் எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சுகின்றேன்.

**இரா.சம்பந்தன், பா.உ.,**
எதிர்க்கட்சித் தலைவர். - இலங்கைப் பாரளுமன்றம்.
தலைவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.



## மேல்மாகாண ஆளுனரின் நினைவுப் பகிர்வு

## சமய சமூகப் பணிகளின் அச்சாணியாகத் திகழ்ந்த நீலகண்டன்

1998 ஆம் ஆண்டு முதன் முதலாக திரு. கந்தையா நீலகண்டன் அவர்களை எனது நண்பர் ஒருவரின் இல்லத்தில் சந்தித்தேன். அப்போது எனது நண்பர் அவரைச் சிறந்ததொரு சிவில் வழக்கறிஞர் என்று அறிமுகப்படுத்தினார். பிரபல்யமிக்க ஒரு சட்ட நிறுவனத்தின் சிரேஸ்ட பங்காளி என்றது மட்டும் தான் அப்போது எனக்குத் தெரியும். சில ஆண்டுகளிற்குப் பின் வெளிநாட்டிலிருந்து நான் கொழும்பு திரும்பியதன் பின்பாக இவரைச் சந்தித்த போது இவர் தமிழ், சைவத் தொண்டினை மிக அர்ப்பணிப்புடன் ஆற்றுகின்ற ஒருவராகக் கண்டேன். புகழ் பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீஸ்வர புனருத்தாபன திருப்பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தமை எனது மனதைக் கவர்ந்தது. இவரது நிர்வாகத் திறமையை பலர் போற்றிப் பேசியமை எனது மனதில் பதிந்தவை.

மேல் மாகாணத்தினுடைய ஆளுநராக நான் நியமிக்கப்பட்டதன் பின்பாக அவரைப் பல தடவைகள் சந்திக்க வேண்டி இருந்தது. சில தமிழ், சைவ கூட்டங்களுக்கும் விழாக்களுக்கும் என்னை அழைத்திருந்த போது அவற்றை மன மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு அவற்றில் பங்குபற்றினேன். சரஸ்வதி மண்டபத்தில் முன்னாள் மாநகர முதல்வர் அமரர் கணேசலிங்கத்தின் ஞாபகார்த்த விழாவின் போது பலர் கூடியிருந்த சபையில் என்னிடம் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. அது தான் பல அறிஞர்களும், ஆர்வலர்களும் உருவாக்கிய இரத்மலானை இந்துக் கல்லூரியை மாகாண விளையாட்டை ஊக்குவிக்கும் ஒரு பாடசாலையாக உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கை. அக் கூட்டத்தின் தலைவராக இருந்த அமரர் நீலகண்டனிடம் நான் கேட்டேன். "எனது மாகாணசபை இதற்குத் தயார் நீங்கள் அதற்கு தயாரா என்று." அவர் அதற்கு மேடையிலேயே உடன்பட்டதும் அல்லாமல் ஓரிரு வாரங்களுள் அக் கல்லூரியில் பல அரசாங்க உத்தயோகத்தர்களையும், இந்து மாமன்ற உறுப்பினர்களையும் வரவழைத்து ஒரு சிறந்த கூட்டத்தினை ஒழுங்கு செய்தார். இன்று இவருடைய ஆரம்ப முயற்சியினால் பல கருமங்கள் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது. விளையாட்டில் ஆர்வம் மிக்க சிறுவர் சிறுமிகளைச் சேர்த்துள்ளோம். மாணவ விடுதி வசதிகளை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அரைகுறைக் கட்டடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இந் நடவடிக்கைகளிலெல்லாம் அச்சாணி போன்று திகழ்ந்த அமரர் நீலகண்டனைச் சைவ தமிழ் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

**கே. சி. லோகேஸ்வரன்**

ஆளுநர் (மேல் மாகாணம்)




நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் - வட மாகாணம்
විනිසුරු සී.වී. විග්නේෂ්වරන්
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත
Justice C.V.Wigneswaran
Chief Minister – Northern Province


# நண்பர் நீலகண்டன்

இந்துக்களின் சிந்தனைத் தெளிவிற்கும் சுதந்திர வாழ்விற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்றிய அமரர் நீலகண்டன் அவர்களின் திடீர் மறைவு ஒரு வெறுமையை எம்மிடையே உண்டாக்கிவிட்டது. அந்த இடைவெளி இலேசில் நிரப்பக் கூடியதொன்றல்ல. அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவரும், நீலகண்டன் - நீலகண்டன் சட்ட நிறுவனத்தின் தலைவருமாகிய திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் மறைவுச் செய்தி இதயத்தில் நெருஞ்சி முள் கொண்டு உரசுவது போன்ற ஒரு இரண வலியை விட்டுச் சென்றுள்ளது. திரு.நீலகண்டன் அவர்கள் மாணவப் பருவத்திலிருந்தே இந்து சமயத்தின் கோட்பாடுகளால் மிகவும் கவரப்பட்டவர். இந்துக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு உழைக்கக்கூடிய ஒரு சிந்தனையாளராக விளங்கினார். சுமார் ஐம்பது வருட கால நண்பர். அவர் இந்து மாமன்றத்துடன் தொடர்பு வைத்துக் கொண்ட காலந் தொடக்கம் என்னுடன் தொடர்பில் இருந்தார். தொடர்ந்து அவர் செயலாளர் பதவியை வருடா வருடம் வகித்த போது சிலர் கோபத்துடன் அவரை நிந்தித்து அவரை அகற்ற வேண்டும் என்று என்னிடம் கூறினார்கள். அவர் செய்வதை விட உங்களால் செய்ய முடியும் என்றால் தாராளமாக அகற்றுங்கள் என்றேன். அத்துடன் அவர்களின் இடைவிடாத நச்சரிப்பு நின்றது. அவர் தமது பதவியை வைத்து மக்களுக்கு, இனத்திற்கு, உலகத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்று எண்ணத்தில் இருந்தார். பதவியை ஒரு சேவையின் கருவியாகப் பாவித்தார். பதவியில் இருந்தால்தான் உரிய சேவைகளை ஆற்றலாம் என்ற உண்மையை அறிந்திருந்தார். இந்துமா மன்றத்தின் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு வெறுமனே கட்டடங்களை உருவாக்கி வாழாதிருக்காது தமிழ் மக்களுக்கும் இந்துக்களுக்கும் நெருக்கடிகள் ஏற்படுகின்ற போதெல்லாம் இந்துமாமன்றச் செயற்பாட்டின் ஊடாக பல வகையான உதவிகளை வழங்கி அம் மக்களைத் துன்பச் சூழ்நிலையிலிருந்து பாதுகாப்பதற்கு அரும்பாடுபட்டவர்.

யாழ்ப்பாணத்திலும், வன்னி மாவட்டத்திலும் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் விளைவாக பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் சிக்கித்தவித்த வேளைகளில் கொழும்பிலிருந்து அரசியல் தலைமைத்துவங்களின் அனுமதிகளைப் பெற்று வவுனியாவில் இடைத்தங்கல் முகாம்களில் இன்னலுற்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உடுபுடவைகள், நிவாரண உதவிகள், அத்தியாவசியப் பொருட்கள் என அனைத்தையும் கொழும்பிலிருந்து நேரடியாகக் கொண்டுவந்து அவர்களுக்கு வழங்கியமை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூரப்படலாம்.

இம் மக்கள் யாழ் மாவட்டத்திற்கு மீண்டுவந்து யாழ்ப்பாணத்தில் முகாம்களில் தங்கியிருந்தபோது வட மாகாணசபை சார்பில் எமது கோரிக்கையை ஏற்று அந்த மக்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களைத் தொடர்ச்சியாக 06 மாதங்களுக்கு வழங்குவதற்கான நிதி உதவிகளை மனிதநேய அமைப்புடன் இணைந்து பெற்றுத் தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக ஒழுங்குகளை மேற்கொண்டவர் இந்த உலர் உணவுப் பொருட்களைத் தங்கு தடையின்றிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு மூலகாரணமாக இருந்தவர். அரசியலில் நேரடியான பங்கு பற்றல்கள் இல்லாத போதும் சட்ட ரீதியான உதவிகளை வழங்குவதற்கு ஒருபோதும் பின் நிற்காதவர். எனினும் அரசியலை உன்னிக் கவனித்து வந்தவர். 2002ம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உண்டாக வேறு ஐவருடன் சேர்ந்து பாடுபட்டு உழைத்தவர். வெற்றியும் கண்டவர். ஆன்மீக உணர்வு சமய அறிவு ஆகியன ஒவ்வொரு வீடுகளிலும் இருந்து உருவாக வேண்டும் என்ற வலுவான சிந்தனையுடன் இந்துத் தாய்மாரை அவர்களின் பிள்ளைகளுக்கு ஆன்மீக அறிவை அவர்களே புகட்ட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர். யாழ்ப்பாணத்தில் நல்லூர்ச் சூழலில் நல்லை ஆதீனத்திற்கான ஒரு அழகிய மண்டபத்தை அமைத்துக் கொடுத்தமை, சிவபூமி மண்டபத்தை கீரிமலை தீர்த்தக்கேணிக்கு அருகே அமைத்து கொடுத்தமை, அங்கு யாத்திரிகர்கள் தங்குவதற்கு வசதியாக அறைகளைக் கட்டிக் கொடுத்தமை, அங்கு தினமும் வருகின்ற பக்த அடியார்களுக்கு அன்னதான நிகழ்வுகள் ஒழுங்காக நடைபெற வழிவகுத்தமை போன்ற பல கைங்கரியங்களில் ஈடுபட்டிருந்தார். நல்லூர் கோவில் வீதியில் இந்துமா மன்ற யாழ்ப்பாணக் கிளை அமைத்தமை, முறிகண்டியில் இந்துமாமன்ற பிராந்தியக் கிளை அமைத்தமை, திருமுறிகண்டியில் சரவணப்பொய்கை முருகன் கோவில் அமைத்தமை என இவரின் பணிகள் நீண்டு செல்வன. எனது நெருங்கிய நண்பர் நீலகண்டன் அமரத்துவம் அடைந்து விட்டார் என்பது கற்பனையாக இருக்காதா என்ற ஏக்கத்துடன் எனது இரங்கல் செய்தியை அவரின் ஆன்மா இறைவனின் பொற்பாதங்களில் அமைய வேண்டி நிறைவு செய்கின்றேன்.

ஓம் சாந்தி!

**நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர் வடமாகாணம்.



# முன்னாள் பிரதம நீதியரசரின் நினைவுப்பகிர்வு
# மறைந்தும் மறையாத மாமனிதர்

"மனிதரில் மரம் உண்டு, பறவை உண்டு, விலங்குண்டு மனிதரில் மனிதரும் உண்டு" என்றார் ஒரு சமயப் பெரியார். மனிதரில் மாணிக்கமாக மனிதத்தன்மையுடன் வாழ்ந்து தமிழ் மக்களின் அதிலும் குறிப்பாக சைவ மக்களின் நலனைப் பேணுவதற்காகப் பல்வேறு செயற்பாடுகளை ஆற்றி, சமயப் பணிகளிலும் சமூகப் பணிகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மக்கள் சேவையிலேயே பூரண திருப்தி கொண்டவராக தம் பணியிலே எம்மையும் இணைத்து இன்ப சுகம் அனுபவித்த ஒரு ஆன்மீகவாதியும் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமாகிய அமரர் கந்தையா நீலகண்டனின் மறைவைக் கேட்டதும் பேரதிர்ச்சியடைந்தேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனாக, சட்டக் கல்லூரி மாணவனாக, சட்டத்தரணியாக, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையினதும் நம்பிக்கை நிதியத்தினதும் உறுப்பினராக ஆன்மீகவாதிகள்மீது அளவற்ற பற்றுக்கொண்டவராக, தொண்டர்க்குத் தொண்டனாகப் பலர் கண்களையும் கவர்ந்து இன்று இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்ட அமரர் நீலகண்டனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கும் பலவருடங்களாகக் கிடைத்ததையிட்டு மனநிறைவடைகிறேன்.

தனது மாணவப் பருவத்தில் கலைத்தாகம் கொண்ட இளைஞனாக வாழ்ந்து, சட்டத்தரணியாக தனது வாழ்விலும் செயல்களிலும் சீரிய ஒழுங்கு முறையைப் பின்பற்றி, இலட்சியத்தின் பாதையில் படிப்படியாக வெற்றிகண்ட ஒருவர் தூய உள்ளமும் தெளிவான சிந்தனையும் கொண்டவர். பிறர் தவறுகண்டு தன் தவறைத் திருத்திக்கொள்ள முனைந்தவர். இல்லறத்தில் இருந்து இதயம் அடக்கிய வல்லவர். தனது வயது, முதுமை, இயலாமை என்பவற்றையும் கவனிக்காதவர். "மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" என்பதற்கு எடுத்துக்காட்டாக பல சமய சமூக நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளை வகித்து நமது சமுதாயத்திற்கு அரிய சேவைகளைச் செய்ததன் மூலம் தன்னிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்தியவர். மக்களுக்காக நான் எதையும் சாதிக்க வல்லவன் என்ற உறுதியுடனும் நம்பிக்கையுடனும் வாழ்ந்த வரம்பில்லா வலிமை பெற்றவர். மனிதநேயப் பண்பாளர் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று நினைத்தே செயற்படுபவர்.

நான் 2002ம் ஆண்டு மேன்முறையீட்டு நீதியரசராகப் பதவியேற்றபோது எமது தமிழ்ச் சமூகத்தின் சார்பாக எனக்கு ஒரு விழா எடுக்க விரும்பியபோது அதற்கு நான் சம்மதிக்காத நிலையில், கொழும்பிலுள்ள பல சைவ சமய நிறுவனங்களினதும் அனுமதியுடன் அந்த நிறுவனங்களுக்கூடாக எனக்கு அழைப்பு விடுத்து, யாருக்கும் தெரியாமல் அவ் விழாவின் பின்னணியில் தானே செயற்பட்டு வெற்றிகரமாக விழாவை அரங்கேற்றியவர். தனது மனதில் எழும் எண்ணங்களைச் செயலில் வடிவமைப்பதற்கு யாரை, எப்போது, எவ்விதத்தில் அணுகவேண்டுமென்பதை நன்கு அறிந்தவர்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியவர்

திண்ணியராகப் பெறின்" என்ற வள்ளுவர் கூற்றுக்கு அமைய தான் நினைத்த விடயத்தைச் செய்துவிடவேண்டும், சாதிக்க வேண்டும் என்பதில் மிக உறுதியான எண்ணமுடையவராக இருப்பவர்.

அமரர் இவ்வுலகை விட்டு பிரிவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் தொலைபேசியில் அவருடன் கதைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவருடைய உடல் நலம் பற்றி விசாரித்தபோது, தனது உடல் நிலையில் ஓரளவு முன்னேற்றம் இருப்பதாகவும் ஆனால் தன் இருதயம் (Heart) 30% தான் இயங்கிக் கொண்டிருப்பதாகவும் கூறினார். நன்கு ஓய்வெடுத்துக் கொள்ளும்படி கூறினேன். "இதையேதான் வைத்தியர்களும் கூறினார்கள்" என்று பதில் வந்ததுமட்டுமல்லாது "எவ்வளவோ செய்ய



இருக்கின்றது, நான் எப்படி ஓய்வெடுத்துக் கொள்வது?" என்றார். வைத்தியர்களின் அறிவுரைகளோ, எனது பதிலோ செவிடன் காதில் ஊதிய சங்குபோலானது. சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருந்த ஒரு விழாவுக்கான ஆயத்தங்களைச் செய்துவிட்டு மிகவும் களைப்படைந்த நிலையில் வீடு வந்து மதிய போசனம் அருந்திய பின்னர் எவ்வித சலனமுமின்றி இறைவனடி சேர்ந்த செய்தியை நான் புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த போது அறிந்து கொண்டேன் - அதிர்ச்சியுமடைந்தேன்.

பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றிராது தான் வாழும் காலத்தில் நற்காரியங்கள் பலவற்றில் ஈடுபட்டு பலரின் மனதிற்கு நிறைவைத்தந்த ஆன்மா இன்று பூவுலகம் சென்றுவிட்டது. மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் என்றோ நாள் மரணித்துத் தான் ஆக வேண்டும். பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையேயுள்ள கால எல்லைக்குள் தான் வகித்த பதவிகளுக்கெல்லாம் பெருமை சேர்த்து அனைவரையும் தம்பால் கவர்ந்தவர்தான் அமரர் நீலகண்டன் அவர்கள். இப்படிப்பட்ட ஒருவர் இனி இத் தமிழ்ச்சமூகத்திற்கு கிடைப்பாரா என்பதற்கு காலம் தான் விடைசொல்ல வேண்டும்.

இவ்வேளையில் அவரை இழந்து தவிக்கும் அவர் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், நண்பர்கள், உற்றார் உறவினர் அனைவருக்கும் ஆறுதல் தர வேண்டுமென நல்லைக் கந்தனின் திருமென்மலர்ப் பாதங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

**க.ஸ்ரீபவன்**

(முன்னாள் பிரதம நீதியரசர் - இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு)



# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரின் நினைவுப்பகிர்வு

# சமூகத்தையும் தமிழையும் சமயத்தையும் பாதுகாத்த மாமனிதர்

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃ திலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

அமரர் நீலகண்டன் அவர்களை மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் சட்டமாணவனாகச் சந்தித்தேன். அப்போது அவர் புகழ்பெற்ற சட்ட நிறுவனமொன்றின் பங்குதாரராக இருந்தார். அன்று எங்களுக்கு நிதி உட்பட அனைத்து உதவிகளும் செய்தார். அன்றிலிருந்து இன்றுவரை அவரின் பண்பான உபசரிப்பில் எந்த வேறுபாடும் இருக்கவில்லை. மனிதர்களைத் தராதரத்தை பார்த்துப் பழகாமல் மனித நேயத்துடன் பழகிய ஒரு மாமனிதரை இழந்து நிற்கின்றோம்.

அமரர் சட்டத்துறைக்கு அளப்பரிய சேவைகள் புரிந்துள்ளார். சட்டத்தரணிகள் சங்கத்தின் முதுகெலும்பாக விளங்கினார். சட்டஅறிக்கைப் பதிவேடுகளை (Bar Assosiation Law Report) சர்வதேச தரத்திற்கு உயர்த்தியது இவரேயாகும்.

புதிய சட்டமாணவர்களுக்கும், புதிய சட்டத்தரணிகளுக்கும் ஒளி விளக்காய் விளங்கிய ஒரு சட்ட மாமேதை என்றால் அது மிகையாகாது.

அன்னார் தமிழுக்கும், சைவசமயத்திற்கும் செய்த சேவைகள் இம்மண்ணில் தமிழும், சைவமும் நிலைத்திருக்கும்வரை நினைவில் நிறுத்தப்படும். இலங்கையில் இருக்கும் சிறிய, பெரிய பல ஆலயங்கள் இன்று உயிரோட்டமாக இருப்பதற்கு இவரே மூலகாரணமாகும். இவரது தொண்டுகளை எழுத ஏடுகள் காணாது.

அன்னார் இறப்பதற்கு முதல் நாள் மாலை ஒரு நிகழ்ச்சியில் அன்னாருடன் கலந்து கொண்டேன். எமது சம்பாசனையில் அனைத்து விடயங்களும் பொது நலனைப்பற்றியதாகவே இருந்தது. மறுநாள் நடைபெறவுள்ள ஹவாய் சுவாமிகளின் வருகை முதல் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி வரையிலான விடயங்களே உள்ளடங்கின. மேலும் இடம்பெயர்ந்தோர், ஆதரவற்ற குழந்தைகளின் கல்வி, எதிர்காலம் பற்றி மிகவும் கவலையுடனும், கரிசனையுடனும் குறிப்பிட்டார். சுமார் ஒன்றரை மணிநேர சந்திப்பில் ஒரு வினாடியேனும் தன் உடல் உபாதையை பற்றி கதைக்காத ஒரு தீபச்சுடரை மறுநாள் இழந்துவிடுவோம் என்று ஒரு கணப்பொழுதேனும் நினைக்கவில்லை.

ஒரு சிரேஷ்ட சட்டவல்லுனராய், தகப்பனாய், தாயாய், பெரும் கொடையாளியாய் மற்றும் செயல் வீரராக, சட்டத்துறையையும், சமூகத்தையும், தமிழையும், சைவசமயத்தையும் பாதுகாத்த மாமனிதரை நாம் இன்று இழந்துள்ளோம்.

சட்ட அறிக்கைகள், ஆலயங்கள், மனிதர்கள் உள்ளவரை இந்த மாமனிதர் மறக்கப்படமாட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**எஸ். துரைராஜா**

(நீதியரசர், மேன்முறையீட்டு நீதிமன்றம்)



# புதிய கதிரேசன் கோயில், பிரதம அறங்காவலரின் நினைவுப்பகிர்வு
# திருக்கேதீச்சர குடமுழுக்கினைக் காணாமலேயே சென்றுவிட்டார்

அமரர் நீலகண்டன் அவர்கள் மனிதரில் மாணிக்கம். திருக்கேதீச்சரம் கோயிலை கருங்கல்லால் கட்டி முடிக்க வேண்டும் என்ற நினைவுடன் தன் வாழ்க்கையின் பெரும் பகுதியினை செலவிட்டார். அதற்காக இந்திய அரசிடம் இருந்து பலகோடி ரூபாய்களை இத்திருப்பணிக்காக பெற்றார். இந்த முயற்சியில் அதற்குரிய முக்கிய பத்திரத்தில் கோயிலின் சார்பாக நானும் இலங்கை அரசின் சார்பாக முன்னாள் அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களும் இந்தியாவின் சார்பாக இந்திய உயர்ஸ்தானிகர் அவர்களும் கையொப்பம் இட்டோம். அன்றிலிருந்து இரவு பகல் பாராமால் அரும்பாடுபட்டு உழைத்தார்.

மேலும் வடபகுதியிலுள்ள கோயில்களை திருத்திக்கொடுத்தார். கடைசிக்காலத்தில் அவர் உடல் நிலை சுகவீனமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சையிலிருந்த பொழுது அவரின் நலன் வேண்டி நானும் கதிரேசன் கோயிலில் அர்ச்சனை செய்துகொண்டு விபூதிப்பிரசாதத்துடன் இரு முறை அவர்களை சென்று பார்த்தேன். அவரது அந்த நிலையில் சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு சேவைகளை குறைத்துக் கொள்ளுங்கள் என்று அவரிடமும் அவரின் அன்பு மனைவியாரிடமும் கூறினேன். அவர்கள் தன் கடமையே முக்கியம் என்று கூறினார். அவர் அவருடைய முக்கிய கனவாகிய திருக்கேதீச்சர கருங்கற் திருப்பணிகள் நிறைவுற்று குடமுழுக்கு நடைபெறுவதைப் பாராமல் இறைவனடி சேர்ந்து விட்டார். எந்தவொரு முக்கிய காரியத்தையும் என்னிடம் பகிர்ந்து கொள்வார் அவர்.

அவரின் ஆன்மா சாந்திபெற்று எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களின் நிழலில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி எஸ். சுப்பிரமணியம் செட்டியார் (JP)**
பிரதம அறங்காவலர், புதிய கதிரேசன் கோவில், கொழும்பு - 04



# மாமன்றப் பிரதித்தலைவரின் நினைவுப்பகிர்வு.. மாமன்றத்தின் செயல் திறன் மிக்க தலைவராக தீர்க்கதரிசனத்துடன் தொண்டாற்றிய அமரர் கந்தையா நீலகண்டன்!

மாமன்றத்தின் முகாமைப்பேரவை உறுப்பினராக, துணைச்செயலாளராக, பொதுச்செயலாளராக, தலைவராக படிப்படியாக உயர்ந்து 48 வருடங்கள் தனது பங்களிப்பை மாமன்றத்தின் வளர்ச்சிக்கு வழங்கிய அமரர் திரு கந்தையா நீலகண்டன் அவர்களுடனான எனது நினைவுப்பகிர்வுகளை இங்கு பகிரலாமென நினைக்கின்றேன்.

1970 முதல் மாமன்றத்தின் முகாமைப்பேரவை உறுப்பினராக மாமன்றத்தின் பணிகளில் உடனிருந்தவர் 1990ம் ஆண்டு நீலகண்டன் அவர்கள் பொதுச் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்ட வேளையில் மாமன்றத்தின் கட்டிடக்குழுத்தலைவராக நான் பணியாற்றிக்கொண்டிருந்தேன்.

ஓர் செயல்திறன் மிக்க உறுப்பினராக - பொதுச் செயலாளராக தொடர்ந்து 2012 முதல் மாமன்றத்தின் தலைவராகவும் இந்நாட்டின் இந்து நிறுவனங்களின் உச்ச நிறுவனமாகத் திகழும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினூடாகத் தனது அளப்பரிய சேவைகளை ஆற்றியவர் என்பது எவராலும் மறக்கமுடியாததாகும்.

அமரர் நீலகண்டனை எனக்கு 30ஆண்டுகளுக்கும் மேலாகத் தெரியும். உங்களில் பலருக்கு மூத்த வழக்கறிஞராகவும் சிலருக்கு மாமன்றத் தலைவராகவும் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபைத் தலைவராகவும் தெரியும். அதற்கும் மேலாக நான் மாமன்ற பிரதித்தலைவராக இருந்து சக அதிகாரியாக அவருடன் பணியாற்றிமையால் அவரது திறமை, விடாமுயற்சி, பொறுமை, சுறுசுறுப்பு, யாவற்றையும் பார்த்துப் ரசித்து பிரமித்துப் போனேன். 1990ல் கட்டிட வேலை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் மாமன்றத்தின் பணப்பற்றாக்குறையை முன்கூட்டியே உணர்ந்து அதற்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு அன்றைய CTC Eagle காப்புறுதி நிறுவனத்தினைத் தொடர்புகொண்டு அவர்களுக்குக் கட்டடத்தினை வாடகைக்கு விடுவதற்கும் அதற்கான 10வருட வாடகை முற்பணமாக ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாவினைப் பெற்றதனால் கட்டிடத்தைப் பூரத்திசெய்து மேலும் பல அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றிக்கொள்ளவும் தொடர்ந்து மாமன்றத்தின் சமய சமூகப் பணிகளை செய்வதற்கான நிதிப் பலமும் குறைவின்றிக் கிடைத்தது. கடந்த வருடம் AIA காப்புறுதி நிறுவனம் வெளியேறிய பின்பு மக்கள் வங்கியுடன் தொடர்பு கொண்டு புதிய குத்தகை ஒப்பந்தத்தை ஏற்படுத்தி முன்னதாகவே வாடகை முற்பணத்தைப் பெற்று அதனூடாக மாமன்றப் பணிகளைத் தொடர்ந்து ஆற்ற வழிவகை செய்தார்.

இந்த ஏற்பட்டால் மாமன்றத்திற்கு இன்றுவரை தொடர்ந்து கிடைத்துவருகின்ற நிதி ஆதாரமே இந்நாட்டு இந்து மக்களுக்கான சமய, சமூக, கல்வி, மருத்துவ, வாழ்வாதாரப்பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வழிசமைத்தது.

வரலாற்றுப்புகழ்மிக்க திருக்கேதீச்சர ஆலயத்தில் இந்திய அரசின் நிதி அனுசரணையுடன் பலகோடிரூபா பெறுமதியில் கருங்கல்லால் மகாமண்டத்தை அமைக்கும் புண்ணிய பணிக்காக இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகளைப் பலதடவைகள் தொடர்புகொண்டு பேச்சு நடாத்தி அத்திருப்பணிகளை சரிவர நிறைவேற்றிய பெருமை நீலகண்டனையே சாரும்.

மன்னாரில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையில் காணிப்பிரச்சினை ஏற்பட்டபோது முன்னின்று அந்தப் பிரச்சினைகளை கத்தோலிக்க மதகுருமாருடன் கதைத்து இரண்டு பகுதியினரையும் திருப்திப்படுத்தி சுமுகமாக தீர்த்துவைத்தார்.

இந்த நாட்டின் எந்தப்பகுதியில் இந்துக்கள் சோதனைகள் வேதனைகளை எதிர்நோக்கினாலும் உடனடியாக மாமன்றத்தினூடாக தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத்தவறியதில்லை. அது வெள்ளம், மணிசரிவு, சுனாமி, இடப்பெயர்வு என்று எந்த அனர்த்தங்களாயினும் அந்த இடத்தில் மாமன்ற தூதுக்குழு பணிகளை ஆரம்பிக்க தனது முழுக் கவனத்தையும் செலுத்துவார்.



2009 இறுதியுத்தத்தினபின் இடம்பெயர்ந்து முகாம்களில் வாடிய தமிழ்மக்களை வெளியே கொண்டுவருவதற்கு அவர் எடுத்த முயற்சிகள் பல. குறிப்பாக அங்கு பாதிக்கபட்ட 273 பிள்ளைகளை அழைத்துவந்து சக்தி இல்லத்தில் அடைக்கலம் கொடுத்து அவர்களை எந்தக் குறையும் வராது ஒரு வருட காலம் பராமரித்த தொண்டு இங்கு நினைவுகூரப்பட வேண்டிதாகும். இவ்வாறு மாமன்றத்தின் ஊடாக அன்னார் ஆற்றிய சமய, சமூக நலப் பணிகள் பலவாகும்.

அவர் தான் பதவி வகித்த நிறுவனங்கள் யாவற்றிலும் தன்னாலான சிறந்த பணிகளை ஆற்றினார். அவற்றின் நோக்கங்கள் நிறைவேறியதும் அடுத்த தலைமுறையினருக்கு அப்பதவியை விட்டுக் கொடுக்க அவர் என்றும் தயங்கியதில்லை. இளைஞர்களை எதிர்காலத்திற்கு ஏற்றவாறு வளப்படுத்தும் செயலினை மிக நுட்பமாக கையாண்டார். அவர்களை என்றும் ஊக்கப்படுத்தினார்.

சிறிய ஊசியைக் கொடுத்தாலும் விளம்பரம் தேடும் இக்காலத்தில் அன்னாரின் தற்புகழ் விரும்பாத குணத்தினாலும் தலைமைத்துவத்திற்குரிய பண்பினாலும் அவரது பணிகள் மேன்மையுற்றன. மாமன்றத்தின் செலாளராகவும்சரி தலைவராகவும்சரி, அன்னார் ஆற்றிய பணிகளை எந்நாளும் நாம் நினைவுகூரவேண்டும். அவர் விட்டுச் சென்ற பணிகளை நாம் தொடர்வதே அவருக்கு நாம் செலுத்தும் நன்றியாகும்.

ஒருமனிதன் இந்த உலகில் எவளவு காலம் வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. ஆனால் அவன் எவ்வளவு அறப்பணிகளை உதவிகளை செய்தான் என்பதே முக்கியமானது. அந்தவகையில் நீலகண்டன் அவர்கள் அதிகமான அறப்பணிகளையும் உதவிகளையும் செய்துள்ளார். அவர் இன்னும் பல ஆண்டு காலம் வாழ்ந்து இன்னும் பல அறப்பணிகளையும் உதவிகளையும் செய்திருக்கவேண்டியவர்.

அன்னாரின் ஆத்மா சந்தியடைய எல்வாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் பாதங்களைப் பணிகின்றேன்.

**மா.தவயோகராஜா**

பிரதித்தலைவர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்.



## மாமன்றப் பொதுச் செயலாளரின் நினைவுப்பகிர்வு...

# அகில இலங்கை இந்து மாமன்றத்தைக் கட்டிக்காத்து வளர்த்த பெருந்தகை அமரர் கந்தையா நீலகண்டன்!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளராகவும் அதன் தலைவராகவும் 27 வருடங்களுக்குமேல் கட்டிக்காத்து வளர்த்த பெருமை எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களையே சாரும். மாமன்ற பதவிகளில் பலர் இருந்தாலும் அவர்களையெல்லாம் இயக்குபவராக அவர்களின் நம்பிக்கைக்கும் மதிப்பிற்குமுரியவராய் விளங்கி எல்லாப் பணிகளையும் நிறைவாகவும் திருப்தியாகவும் நிறைவேற்றினார்.

எந்த விடயத்திலும் தனது ஆளுமையால் எல்லோரையும் இலகுவில் தான் செயற்படுத்தும் பணிகளில் நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களின் உதவியையும் ஒத்தாசையையும் பெற்று நடைமுறைப்படுத்தினார்.

அமரர் அவர்கள் 1990ம் ஆண்டு மாமன்றப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு மாமன்ற ஐந்து மாடிக்கட்டடத்தை கட்டி முடிப்பது பெரும் சவாலாக அமைந்தது. அமரர் அவர்கள் தனது அணுகுமுறையாலும் செயற்பாடுகளினாலும் எல்லோரினதும் நம்பிக்கையைப் பெற்றார். இதனால் ஐந்து குடும்பத்தவர்களிடமிருந்து கட்டிடம் கட்டி முடிப்பதற்கானபெரும் பங்களிப்புக்கு சம்மதத்தைப் பெற்றார். மேலும் பொது மக்களிடமிருந்து பெறும் பணத்தைக் கொண்டு முழுக்கட்டிடத்தையும் கட்டமுடியாதென உணர்ந்து பத்து வருட வாடகை பணத்தை முன்கூட்டியே பெறுவதற்கு சி.ரி.சீ ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனியிடமிருந்து சம்மதத்தையும் பெற்று, தனது சட்ட ஸ்தாபனத்திலேயே அதற்கான ஆவணங்களைத் தயாரித்து சம்பந்தப்பட்ட கம்பனியுடன் உடன்படிக்கை ஏற்படுத்தி பணத்தைப் பெற்று 1996ம் ஆண்டு தலைமையகக் கட்டிடத்தைப் பூர்த்திச் செய்ய ஆவண செய்தார். இந்தச் சாதனை மாமன்ற வளர்ச்சிக்குத் தளமாக அமைந்தது.

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் காலத்தில் தான் மாமன்றம் மறுமலர்ச்சி கண்டது. அதாவது வெறுமனே சமய நிகழ்ச்சிகளுடன் நின்றுவிடாது காலத்தின் தேவைக்கேற்ப ஆன்மீகப்பணிகள், சமூகப்பணிகள், கல்விப் பணிகள், வெளியீடுகள் எனப் பல்வேறு பணிகளிலும் ஈடுபட்டு இந்துக்களின் முன்னேற்றத்திற்காகச் சேவையாற்றி வழிநடத்தினார்.

மாமன்றப் பணிகளுக்குத் தலைமையக கட்டிட வாடகை பேருதவியாக இருந்தது. இதனால் மாமன்றத்தின் சேவைகளை அறிந்தவர்கள் பெரும் பங்களிப்புச் செய்தார்கள். முக்கியமாக நிதிசேகரிக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அப்போதைய தலைவர் அமரர் திரு வி.கயிலாசபிள்ளை அவர்கள், பிரதித் தலைவர் திரு மா.தவயோகராஜா அவர்கள், அமரர் நீலகண்டன் அவர்கள் ஆகியோர் பெரும் பங்களிப்பைச் செய்து வந்துள்ளனர். அத்துடன் மற்றைய மாமன்ற உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோரிடமும் நிதிசேகரித்து மாமன்ற நிதியுடன் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களான புயல், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ஆகிய சந்தர்ப்பங்களில் எல்லோரும் மெச்சத்தகு வகையில் உதவிசெய்ய அமரர் நீலகண்டன் அவர்கள் எல்லோரினதும் ஒத்துழைப்பையும் பெற வழிசமைத்தார். அவரின் துணிச்சலான அர்ப்பணிப்பான சேவையால் பலரும் முக்கியமாக வெளிநாடுகளிலிருந்தும் மாமன்றத்திற்கு நிதி உதவி கிடைத்தது. அவர் மாமன்றத்திற்கு உதவி கேட்டால் இல்லையென்று சொல்லாது பலரும் இலங்கையிலும் வெளிநாடுகளிலுமிருந்து பெரும் உதவி செய்தார்கள்.

மாமன்றம் செய்த எல்லாப்பணிகளையும் அமரர் அவர்கள் தனது செல்வாக்கினாலும் சுலபமாகச் செயற்படுத்தினார். நாம் சேவையைத் தொடர்ந்தால் நிதி வந்து சேரும் என்ற நம்பிக்கை எப்போதும் அவருக்கு இருந்தது. அதில் வெற்றியும் கண்டார்.

மாமன்றப் பணிகளில் வெளியீடுகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. கடந்த 21 வருடங்களாக காலாண்டிதழாக வெளிவந்த 'இந்து ஒளி' யை இரு மாதங்களுக்கொரு முறை வெளியிட்டமைக்கான பாராட்டும் பெருமையும் அமரரையே சாரும். மேலும் விழாக்காலங்களில் மற்றும் சந்தர்ப்பங்களிலும் முக்கியமாக நல்லூர்க்கந்தசாமி கோயில், நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில், மாத்தளை முத்துமாரியம்மன் கோயில், திருக்கேதீச்சரம் ஆகியவற்றின் தேர் மற்றும் உற்சவ காலங்களில் விசேட சிறப்புப் பிரதியாக இந்து ஒளியை வெளியிட்டதன் மூலம் அக்கோயில்களைச் சார்ந்தவர்களினதும் மற்றும் இந்துக்களினதும் பாராட்டையும் ஒத்துழைப்பையும் மேலும் பெற்றார். மேலும் நாவலர் குருபூசை, விபுலானந்தர் குருபூசை, யோகர்சுவாமிகள்



குருபூசை ஆகியவற்றுக்கும் விசேட வெளியீடுகள் செய்யவைத்தார். இதனால் மாமன்றத்தின் பெருமையும் செல்வாக்கும் மேலும் மேலும் வளர்ந்தது.

மாமன்றம் நடாத்திய ஒவ்வொரு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளை நுணுக்கமாகத் திட்டமிட்டு, புலமைக்கேற்ப பொறுப்புக்களை ஒதுக்கிக் கலந்துரையாடி கடைசி நேரங்களில் சம்பந்தப்பட்டவர்களின் பங்களிப்பை கவனித்து நிறைவேற்றுவதில் அமரரின் பங்கு அளப்பரியது. இதன்போது எதிர்பாரத்த பங்களிப்புச் செய்வதில் தாமதம் ஏற்படும்போது அல்லது தவறுமிடத்து மாமன்ற உத்தியோகத்தர்களைக் கண்டிப்பார். ஆனால் அடுத்த கணமே மறந்து அவர்களை அரவணைத்து தாமதத்துக்கான காரணத்தைஅறிந்து திருத்திச் செயற்படுத்துவார். பாரிய பங்களிப்பு செய்தவர்களுக்கு சன்மானம் வழங்கவும் தவறுவதில்லை.

மாமன்றப் பொன்விழா மலர், வைரவிழா மலர் மற்றும் 30ற்கு மேற்பட்ட வெளியீடுகளை திட்டமிட்டு வெளியிடுவதில் அமரரின் பங்களிப்பு அளப்பரியது.

அமரர் அவர்கள் சர்வமத ஒருங்கிணைப்பு சமாதான அமைப்புக்களில் உறுப்பினராக இருந்து இன மத ஒற்றுமை, சாந்திசமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் செயற்படும் சில அமைப்புக்களில் பங்குபற்றி தனது ஆலோசனையையும் வழங்கினார்.

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் வினைத்திறனான அர்ப்பணிப்பான சேவையை அரசாங்கத்தில் உயர்மட்டத்தில் உள்ளவர்கள், உயர்அதிகாரிகள், பல்கலைக்கழக சமூகம் மற்றும் எல்லாத் துறை சார்ந்தவர்களும் அறிந்தவர்களாக இருந்தனர். அமரர் அவர்களை அரசாங்கத்தில் பல உயர்பதவிகளை ஏற்கும்படி அழைப்புவிடுத்தபோதும் அவற்றை ஏற்றால் தான் துணிச்சலாகவும் சுதந்திரமாகவும் பாரபட்சமின்றியும் சேவைசெய்ய முடியாது என்பதை உணர்ந்து மிகவும் சாதுரியமாக அவற்றை ஏற்காமல்விட்டதை நான் அறிவேன்.

அமரர் அவர்கள் மாமன்றப்பணிகளை அவுஸ்திரேலியா, இங்கிலாந்து சிங்கப்பூர், கனடா மற்றும் புலம்பெயர் தமிழ்ரகள் அதிகமாக வாழும் நாடுகளில் தெரியப்படுத்தி உதவிகளையும் பெற ஆவன செய்தார். அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நடைபெற்ற சமய விழாக்களில் பங்குபற்றி தனது பேச்சாற்றலினால் எமது மக்களின் இன்னல்களையும் துயரங்களையும் தெரியப்படுத்தி அவர்களின் மனதைத் தொடச்செய்து அவர்களின் உதவிகளையும் அனுதாபங்களையும் பெற்றார். மேலும் இவ்விழாக்களில் மாமன்ற வெளியீடுகளை அறிமுகம் செய்து பிரதிகளை வழங்கி மாமன்றத்தின் சேவைகளை தெரியப்படுத்தி அவர்களின் மனதில் உதவ வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தினார்.

அமரர் அவர்கள் இந்து மாமன்றத்தின் பெயரை உச்ச நிலைக்கு கொண்டுவரவும் தமிழ் மக்களின் நலனுக்காகவும் தம் உடல் பொருள் நேரம் வசதிகள் மற்றும் தொழில்சார் புலமை ஆகியவற்றைத் தியாகம் செய்துவாழப் பக்கபலமாக இருந்தவர்கள் அவரின் மனைவியும் பிள்ளைகளும். இங்ஙனம் எடுத்துக்காட்டாக இருந்த ஒரு குடும்பத்தின் தலைவனை விதி பறித்துச் சென்றுவிட்டது.

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் இழப்பு முக்கியமாக இந்துக்களுக்கும் தமிழ்ரகளுக்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். இவ்வளவு விரைவில் அவருக்கொரு மரணம் என்பதை எம்மால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அவரோடு தொடர்புபட்டவர்கள் எல்லோரும் கண்ணீர்விட்டுக் கலங்குகின்றோம். எனினும் உலக நியதியை நினைத்து நாம் மனம் தேறுவோமாக.

ஓம் சாந்தி...சாந்தி...சாந்தி...!

**வே. கந்தசாமி**

பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்



# மாமன்றப் பொருளாளரின் நினைவுப்பகிர்வு...
# நீங்காத நினைவுகளில் நீலகண்டன்

அண்மையில் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு பிரிந்த நீலகண்டனின் நீங்காத நினைவுகளிலிருந்து விடுபட முடியாமல் இன்னமும் தவிக்கின்றோம். இந்துத் தமிழ் மக்களுக்கு இவரது இழப்பு பேரிழப்பு என்பது சொல்லத் தெரிய வேண்டியது அல்ல. இதற்கு மேலாக எம்மோடு பல அமைப்புக்களில் ஒன்றாக இருந்து சமூக ஆன்மீகப் பணிகளை ஆற்றியதுடன் எமது குடும்ப நண்பர்களில் ஒருவராகவும் இருந்தவர் என்ற வகையில் எமக்கு இவரது பிரிவு என்பது இரட்டிப்பு வேதனையை அளிக்கின்றது. தேவை ஏற்பட்ட போதெல்லாம் தனது எந்தச் சிரமத்தையும் பொருட்படுத்தாது முதலாளாக வந்து உதவிபவர். எந்தக் கருமத்தையும் நிறைவேற்றக் கூடிய சக்தி வாய்ந்தவர் - ஈடு இணை இல்லாதவர்.

நீலகண்டனின் ஆற்றல், ஆளுமை பற்றி நான் சொல்லித் தெரிய வேண்டும் என்பதில்லை. உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் , யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பவற்றில் கல்வி பயின்ற இவர் தனது தொழில் ரீதியான பயிற்சியை சட்டக் கல்லூரியில் பெற்று சட்டத்தரணியானார். தொடர்ந்தும் சட்டத்துறையில் மேற்கொண்டு கற்று தன்னை ஒரு ஆற்றல் மிக்க சட்டத்தரணி ஆக்கினார். இவரது தொழிற்துறை சார்ந்த வளர்ச்சி முருகேசு நீலகண்டன் நிறுவனத்தில் ஏறுமுகம் கண்டது. சட்டத்துறையில் இவருக்கு இருந்த ஆற்றல் காரணமாக சட்ட வல்லுனர்கள் மத்தியிலும் பிரபலமானார். சட்டத்துறை சார்ந்த அமைப்புக்களிலும், சட்டக் கல்லூரியிலும் அவரது பணிகள் தொடர்ந்தன.

சட்டக் கல்விக்கான நூல்கள் சிலவற்றையும் இவர் எழுதியுள்ளார். இவரது மதிநுட்பம் இயல்பாக எவருடனும் தயக்கமின்றி பழகும் முறை என்பவற்றால் பலரது அறிமுகம் ஏற்பட்டது. எவற்றையும் மனதில் வைத்திருக்காமல் வெளிப்படையாகக் கதைத்து கருத்து முரண்பாடுகள் வந்த போதும் அதனை மறுத்து எந்த ஒரு காரியத்தையும் தொடர்வதில் வல்லவர்.

ஆதரவற்ற நிலையில் வறுமைக்கோட்டில் வாழும் சிறார்களை பராமரிப்பதற்காக இலவச மாணவர் விடுதி அமைக்க வேண்டும் என்ற அமரர் வைத்தியகலாநிதி வேலாயுதப்பிள்ளை அவர்களின் கனவை நனைவாக்கி, முன்னாள் இந்து மாமன்றத்தின் தலைவராக செயற்பட்ட அமரர் திரு.வி.கயிலாசப்பிள்ளை அவர்களுடன் அப்போதைய விடுதிக் குழுச் செயலாளராக இணைந்து நானும் விடுதியை அமைத்து வெற்றியும் கண்டோம். விடுதியை அமைத்தது மாத்திரமின்றி அவர்களுக்கு தேவையான அனைத்தையும் பெற்றுக் கொடுத்து மகிழ்ச்சி கொண்டார். 2002 ம் ஆண்டு பெண்களுக்கான விடுதி "சக்தி இல்லம்" என்ற பெயரில் அமைக்கப் பெற்று இன்று நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி கற்று வறுகின்றனர். அங்கு இருக்கின்ற ஒவ்வொரு பிள்ளைகளினதும் பிறந்த நாள் வைபவங்கள் மாதம் மாதம் நடைபெற்று வருகின்றன. அது மாத்திரமின்றி அவர்கள் நாளாந்தம் தமது கல்வியை கற்பதற்காக பிரத்தியோக வகுப்புக்களும், கணணி வகுப்புக்களும் ஒழுங்குசெய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. இதனால் அப்பிள்ளைகளின் கல்வியில் சிறந்த முன்னேற்றம் ஏற்படுவதைக் கண்டு தானும் மகிழ்ந்தார். தன்னுடைய பிறந்த தினத்தையும் தனது பிள்ளைகளுடன் கொண்டாடுவதுபோல் எமது விடுதிப் பிள்ளைகளுடன் கொண்டாடி மகிழ்வார். அன்னார் அமரராவதற்கு முன்பு தனது மனைவியாருடன் சக்தி இல்லப்பிள்ளைகளுடன் இணைந்து தமது 40வது திருமணப்பூர்த்தி விழாவையும் மாணவர்களின் பிறந்ததின விழாவையும் கொண்டாடி மனநிறைவடைந்தமை என்றும் அப்பிள்ளைகளின் மனங்களிலும் எமது நெஞ்சங்களிலும் நீங்காதிருக்கும் காட்சியாகும்.

சக்தி இல்லத்தின் மாணவர்கள் பலர் தமது கல்வியைப் பூரத்தி செய்து பலர் நல்ல நிலைகளில் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் நல்ல நிலையிலிருப்பதை என்றும் அகநிறைவுடன் கூறிப் பெருமைப்படுவார். விடுதிக்கு ஏதாவது பிரச்சினையோ, நல்லகாரியங்களோ என்றால் முதலில் நிற்பது நீலகண்டன் என்றால் அது மிகையாகாது.

சில சந்தர்ப்பங்களில் இவரது கருத்துக்கள் முரண்பட்டு நின்ற போதும் அவற்றை சுமூகமாக தீர்த்து பொது நோக்குடன் செயல்படுவதில் வல்லவர். இன்று அந்தத் திறன் மிக்க நீலகண்டன் இல்லை என்கிறபோது மனது கனக்கின்றது ...... அவரது ஆத்மா சாந்தி அடைய சிவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அபிராமி கயிலாசபிள்ளை**

பொருளாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்.
தலைவி, மாமன்ற விடுதிகள் குழு



# மாமன்ற, யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநரின் நினைவுப்பகிர்வு

# தனக்கு உவமை இல்லாத தலைவன்

"தனக்குவமை இல்லாதான்" என்று இறைவனை வாழ்த்தினார் வள்ளுவர். இன்று தனக்கு உவமை இல்லாத ஒரு தலைவனாக விளங்கிய நீலகண்டன் ஐயா அவர்களை எப்படி மறக்கமுடியும்? சொல்லாலும் செயலாலும் ஒன்றாகி, ஓயாத பணி செய்த ஒப்பற்ற தலைவனை இனிமேல் நாம் எங்கே சந்திக்கப்போகின்றோம்? ஒருபடி ஜனனம் மறுபடி மரணம். பிறந்தவர்கள் இறப்பது இயற்கை. இவையெல்லாம் தத்துவத்துக்கு தக்கதாக உள்ளன. ஆனால், தகைசான்ற ஒருவரை நாம் இழக்கும்போது, தத்துவத்துக்கு அப்பால் எம்மால் தாங்கமுடியவில்லை.

இவர் ஒரு சதாவதானி என்று மூத்த சட்டத்தரணி ஒருவர் சொன்னார். அது முழுக்க முழுக்க உண்மை. சட்டத்துறையில் ஜாம்பவானாக இறுதிவரை வாழ்ந்தவர். இந்து மக்களின் குரலாக ஒலித்தவர். திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலை நிரந்தர கருங்கற் கோயிலாக மாற்றியவர்; ஏழைபங்காளன்; கொழும்பு தமிழ்ப் பாடசாலைகள் குறையின்றி நிமிர்வதற்கு அனவரதம் உழைத்தவர்; ஆதரவற்ற சிறுவர்களுக்காக இல்லங்களை அமைத்து அதனூடாக அவர்களை அரவணைத்தவர்; ஏற்றத் தாழ்வின்றி எவரையும் தோளில் கைவைத்து அன்பாய் நேசித்தவர். தனித்து ஒருநாளும் உணவு அருந்தியது கிடையாது. இந்த மனிதரை நாம் எப்படி மறக்கமுடியும்?

கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக நீலகண்டன் ஐயா அவர்களுக்கும் எனக்கும் இடையிலான அன்புப் பிணைப்பு தொடர்ந்தது. இந்து மாமன்றத்தில் சிறியேனையும் இணைத்து கௌரவப்படுத்தியவர். நல்லை ஆதீன சுவாமிகளுக்கு போக்குவரத்துக்காக மோட்டார் வாகனம் ஒன்று தேவையாக இருப்பதாக ஒரு தடவை குரல்கொடுத்தேன்.அப்போது கொழும்பு - யாழ் போக்குவரத்து இல்லாத காலப்பகுதியாக இருந்தும்,ஒரு மாத காலத்தில் கப்பல் மூலமாக மோட்டார் வாகனமொன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. நந்திக்கொடியோடு ஆதீன சுவாமிகள் கௌரவமாகப் பயணம் செய்வதற்கு ஒரு புதிய மோட்டார் வாகனமொன்று கிடைப்பதற்கு வழிசெய்தவர் நீலகண்டன் ஐயா.

இந்து மாமன்றத்தின் பிராந்தியப் பணிமனையொன்று யாழ் மண்ணில் அமைக்கப்படவேண்டும் என கயிலாசபிள்ளை ஐயாவுக்கும்,நீலகண்டன் ஐயாவுக்கும் 2005ஆம் ஆண்டு அன்பு வேண்டுகோள் விடுத்தேன்.பிராந்தியப் பணிமனை அமைக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள்.2007ஆம் ஆண்டு மூன்று மாடிகளைக் கொண்ட பிராந்தியப் பணிமனை நல்லூரில் கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது. சொன்னால் அதைச் செய்ய வேண்டும் என்பதில் இறுதி மூச்சுவரை உறுதியாக இருந்த உத்தமர் அவர். வன்னி பெருநிலப்பரப்பில் இந்து மாமன்றத்திற்கு ஒரு பிராந்திய நிலையம் உருவாகவேண்டும் என ஒருதடவை கொழும்பு சரஸ்வதி மண்டப வைபவமொன்றில் சிறியேன் வேண்டுகோள் விடுத்தேன். அன்றிரவே நீலகண்டன் ஐயா அவர்கள் "காணியை தேடுங்கள், வன்னியில் வசதியான பிராந்திய நிலையத்தை உருவாக்குவோம்" என்றார். முறிகண்டி பிள்ளையாருக்கு அருகே காணியை இலவசமாக நான் ஒழுங்குபடுத்தினேன். தற்போது வன்னி பிராந்திய நிலையம் எண்பது வீதமான வேலைகள் நிறைவுபெற்ற நிலையில் நிமிர்ந்து நிற்கிறது. கிழக்கிலங்கையிலும் மலையகத்திலும் பிராந்திய நிலையங்கள் உருவாக்கவேண்டும் எனவும் நீலகண்டன் ஐயா ஆவலுற்றார். ஆனால் காலன் எவருக்கும் தெரியாமல் அழைத்துவிட்டான்.

போர்ச்சூழல் காலத்தில் யாழ் குடாநாட்டில் புற்றுநோயாளர் அருந்தும் பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டபோது, நான் ஐயாவுடன் தொடர்பு கொண்டேன். கப்பலில் சஸ்டோஜன் பால்மாவை பெருமளவு அனுப்பிவைத்தார். யாழ் குடாநாட்டிலுள்ள அனைத்து புற்றுநோயாளர்களுக்கும் பகிர்ந்து வழங்கினோம். 2009ஆம் ஆண்டு வன்னி இறுதி யுத்தத்தின்போது அகதிமுகாமில் சிவாச்சாரியர்கள் அகப்பட்டுள்ளார்கள். அவர்களை மீட்டெடுங்கள் என ஐயாவிடம் வேண்டுகோள் விடுத்தோம். அவர் அன்றைய ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு மேற்கொண்ட நடவடிக்கையால் சிவாச்சாரியர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். வன்னி முகாமிலிருந்த கர்ப்பிணித் தாய்மார்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.ஆதரவற்ற சிறுவர்களை சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைப்பதில் அவர் காட்டிய ஆர்வம் சொல்லில்வடிக்க முடியாதது. தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் நூறுக்கும் மேற்பட்ட வன்னிப் பகுதி பிள்ளைகளை நாம் சேர்த்துக்கொள்வதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் நீலகண்டன் ஐயா என்றால் மிகையாகாது.



போராட்டத்தில் இணைந்த பாடசாலை மாணவர்களை காப்பாற்றுவதில் இவர் பெரிதும் அக்கறை கொண்டார். இராணுவத்தினால் பிடிக்கப்பட்ட மாணவர்களுக்காக இரத்மலானை இந்துக் கல்லூரியில் புனர்வாழ்வு நிலையத்தை இயங்கச்செய்து, அதனூடாக அவர்களை பெற்றோர்களிடம் கையளிக்கவைத்த ஆற்றல்மிக்க இத்தலைவனை யாரோடு ஒப்பிடமுடியும்?

நீலகண்டன் ஐயா அவர்களோடு உற்ற சகோதரமாகப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எத்தனை மேடைகள், எத்தனை விழாக்கள் அவர் தலைமையில் நான் பேசினேன். இலங்கையில் எல்லா திசைகளுக்கும் அவர் என்னை அழைத்துச் சென்றார். கண்டி, ஹட்டன், நாவலப்பிட்டி, மாத்தளை, அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி என யாழ் குடாநாட்டுக்கு வெளியே ஐயாவுடன் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் ஏராளம். இவற்றுக்கப்பால் இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, மலேசியா போன்ற நாடுகளிலும் இருவரும் சமய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மகிழ்வாய் கழித்த நாட்களை உயிருள்ளவரை மறக்கமுடியாது. என் வாழ்வில் கிடைக்கமுடியாத ஓர் உறவு. எனக்குச் செய்த தனிப்பட்ட உதவிகள் எண்ணில் அடங்காது. எந்தவொரு வெளிநாட்டுக்கு நான் போவதாக இருந்தாலும், படிவம் நிரப்புவது முதல் விமானம் ஏறும்வரை அனைத்துமே நீலகண்டன் ஐயாவும், அவரது மகன் பிரணவன் நீலகண்டனும் ஏற்பாடு செய்வார்கள். தினமும் காலை,மாலை என தொலைபேசியில் அளவளாவியும் அறிவுரை தந்தும் வழிகாட்டிய அந்தக்குரல் 18.02.2018 நண்பகலுக்குப் பின் ஒலிக்கவில்லை. என்னை மிகவும் வருத்திய சம்பவங்களுள் ஐயாவின் இழப்பும் ஒன்றாகும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் மீண்டும் கொடி குடை ஆலவட்டத்துடன் பட்டமளிப்பு விழா நடைபெறுவதற்கு ஐயாவே காரணம்.யாழ் பல்கலைக்கழகத்தில் நிறுத்தப்பட்ட கொடி குடை ஆலவட்டம் பிடிக்கும் பாரம்பரியமான பண்பாட்டு செயற்பாட்டை மீளவும் நிலைநாட்டவேண்டும் என ஐயாவிடம் வேண்டுகோள் விடுத்தேன். அந்த விடயத்தில் அவர் எடுத்துக்கொண்ட அக்கறை மறக்கமுடியாதது. யாழ் பல்கலைக்கழகத்தில் பேரவை உறுப்பினராக என்னை நியமிப்பதற்கு காரணமாக இருந்தவரும் ஐயா அவர்களே. ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளை ஐயாவுக்கு அறிமுகம் செய்து, இவர் எமது சமயத்திற்கு பெரிய வளம் என்று கூறினேன். அன்று முதல் சுவாமிகளை இந்து மாமன்ற செயற்பாடுகளில் முக்கியமான ஒருவராக ஐயா பயன்படுத்தினார். இவை எல்லாம் அகத்தில் நிழலாடுகிறது.

சிவபூமி அறக்கட்டளை வளர்ச்சிக்கு புண்ணியவான் செய்த உதவிகளை நீள நினைந்து பார்க்கிறேன். இந்த ஆத்மாவின் இடத்தை யாராலும் நிரப்பமுடியாது. ஐயாவின் பிரிவுச் செய்தி அறிந்து கொழும்பு சென்றேன். அவரது இல்லத்தில் பூதவுடலை காண்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கொண்டேயிருந்தார்கள். இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தவர்கள், இன்றைய ஜனாதிபதியாக இருப்பவர் முதலாக அத்தனை அரசியல் தலைவர்களும் ஐயாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திய காட்சி உள்ளத்தை வருத்தியது. சிங்கள,முஸ்லிம் மக்கள்,நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் எனப் பலர் தொடர்ந்து அஞ்சலி செலுத்தினர். மலர் வளையங்கள் மலைபோல் குவிந்தன. இலங்கை, இந்திய மலர் மாலைகள் ஐயாவின் மீளா உறக்கத்திற்கு அணி செய்தன. கனத்தை மயானத்தில் வந்தவர் எல்லாம் கண்ணீர் விட்டனர். சரவணனும் பிரணவனும் சந்தனக்கட்டைகளில் இரண்டை எடுத்து எனக்கும் தொண்டுநாதன் சுவாமிகளுக்கும் தந்தனர். ஐயாவின் அக்கினிப் பிரவேசத்திற்கு நானும் சந்தனக் கட்டை வைக்கும் பாக்கியம் பெற்று,நீலகண்டம் அக்கினிச் சுவாலையில் அகப்பட்டுவிட்டது. அழுதழுது விடைபெற்றோம். யாழ்ப்பாணம் வரும்வரை ஐயாவின் அன்பு முகம்,பற்றிப்பிடிக்கும் கரங்கள் கனத்தையின் நெருப்பில் அஸ்தியாகியிருக்கும் என்ற நினைவுடன் வந்து சேர்ந்தோம்.

ஐயாவைப் பற்றி முழுவதும் எழுதிமுடிக்க இயலாது.அகத்தில் பல நினைவுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பேனாவால் முடிந்ததை எழுதியுள்ளேன். வாழ்நாளில் மறக்கமுடியாத ஆத்மாவை வார்த்தைகளால் எப்படி எழுதி முடிப்பது? ஐயா! உங்கள் வழிகாட்டலில் நாம் பணி தொடருவோம். நீங்கள் தொடங்கிய ஒவ்வொரு கைங்கரியங்களும் நன்கு எழுச்சிபெறும். உங்களுக்கு நாம் செய்யும் கைமாறு உங்கள் பணிகளை முன்னெடுப்பதேயாகும்.விண்ணிலிருந்து ஆசி தாருங்கள். உங்கள் அன்புப் பிள்ளைகள் என்றும் உமக்கு துணை செய்வார்கள்.ஆதலால் நீங்கள் இறையடியில் இனிது ஆறுதல் பெறுங்கள்.துர்க்கை அம்பாளை பிரார்த்தித்து அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்**

கௌரவ இயக்குநர் - யாழ். இந்து ஆராய்ச்சி நிலையம்,

உபதலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்.



## மாமன்ற சமூகநலன் குழுத்தலைவரின் நினைவுப்பகிர்வு

## ஆளுமை கொண்ட நிர்வாகியாகத் திகழ்ந்த திறமை மிக்க சட்ட வல்லுனர்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 63 வருட கால வரலாற்றுப் பாதையில் நான் நான்கு தசாப்த காலம் மாமன்ற முகாமைப் பேரவையுடன் இணைந்திருந்தவன் என்ற வகையில் மாமன்ற எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர்களுள் ஒருவராக அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களைக் குறிப்பிடுகின்றேன்.

இந்து மாமன்றத்தில் திரு.நீலகண்டன் அவர்களுடன் தொடர்புகள் ஆரம்பமாவதற்கு ஒரு தசாப்த காலத்திற்கு முன்பதாகவே இவருடன் பழகுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் சட்டக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபோது அங்குள்ள இந்து மாணவர் மன்றத்தில் பொறுப்பான பதவிகளை வகித்து வந்த நிலையில் மன்றத்தினால் வெளியிடப்படும் சிறப்பு மலர்களையும் மற்றும் பிரசுரங்களையும் எனது தகப்பனார் சிந்தனைச் சிற்பச்செல்வர் ச.த.சின்னத்துரை அவர்கள் நடாத்தி வந்த லீலா அச்சகத்தில் அச்சிட்டுக் கொள்வற்கு திரு. நீலகண்டன் அங்கு வருகை தரும் போதும், அதன் பின்னர் எனது சகோதரரான சட்டத்தரணி சின்னத்துரை சுந்தரலிங்கம் அவர்களது சட்டத்துறை நிறுவனத்தில் தொழில் அனுபவத்தை பெறும் வகையிலான கற்கைநெறியில் இணைந்திருந்த காலத்திலும் அவரை சந்திக்கக்கூடிய இருந்தது. இதன் பின்னர் இவர் இந்து மாமன்றத்தின் முகாமைப் பேரவையில் இணைந்து உப செயலாளராக இருந்தபோது நானும் மாமன்ற உப தலைவர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டதால் திரு.நீலகண்டன் அவர்களுடன் இணைந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

1990ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அப்போது மாமன்ற செயலாளராகவிருந்த திரு.எஸ். சச்சிதானந்தசிவம் அவர்களது மறைவுக்குப்பின் திரு.நீலகண்டன் தெரிவுசெய்யப்பட்டு 2012 டிசெம்பர் மாதம் வரை மாமன்ற பொதுச் செயலாளராகவும் பின்னர் மாமன்ற தலைவராகவும் பதவி வகித்த காலப்பகுதியானது ஒரு பொற்காலமாகும்.

இந்து மாமன்ற தலைமைப் பணிமனை அமைப்பதற்கு காணி கிடைத்திருந்தும் கட்டட நிர்மாண வேலைகளை தொடர முடியாத நிலை இருதசாப்தமாக இருந்த வேளையில் மாமன்ற தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. வே.பாலசுப்பிரமணியம் ஒருதொகைப் பணத்தை தான் அன்பளிப்பாக வழங்கி கட்டட வேலையை தொடக்கி வைத்தார். மாமன்ற பிரதித் தலைவராக இருந்த திரு.வி.கயிலாசபிள்ளை, பொதுச் செயலாளர் திரு.சச்சிதானந்தசிவம், கட்டடக்குழுவின் தலைவராகவிருந்த திரு. மா.தவயோகராஜா, நிதிக்குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட அடியேன் உட்பட உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து கட்டட வேலைகளை சிறப்பாக முன்னெடுத்துச்சென்ற வேளையில் திரு.சச்சிதானந்தசிவம் காலமாகியதால் புதிய பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்ட திரு.நீலகண்டன் அவர்களும் எங்களுடன் இணைந்து கொண்டார். இந்த வேளையில் 1992ஆம் ஆண்டு மாமன்றத் தலைவர் திரு.பாலசுப்பிரமணியம் காலமாகியதால் அந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட திரு. வி.கயிலாசபிள்ளை அவர்களையும், அதே ஆண்டு கட்டடக்குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட அடியேனையும் இணைத்துக் கொண்டு திரு.நீலகண்டன் வெற்றிகரமாக செயற்பட்டு 1996ஆம் ஆண்டு மாமன்ற தலைமையகக் கட்டடம் நிறைவு பெறுவதற்கும், அதன் பின்னரான இரு தசாப்த காலத்திற்கும் மேலாக உயர்ந்த கட்டடத்திலிருந்து மாமன்றப் பணிகள் உயர்ந்து செல்வதற்கும் ஆற்றிய உன்னத சேவையானது வரலாற்றுப்பதிவில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

மாமன்ற தலைமையகக் கட்டடத்தை மாமன்றத்தின் செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி அதனூடாக வருமானம் பெற்று மாமன்றப் பணிகளை மேலும் விஸ்தரிப்பதற்கு ஏற்ற வகையில் கட்டடத்தின் ஆறு மாடிகளை காப்புறுதி நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுப்பதற்கு அப்போதைய கட்டடக் குழுவின் தலைவர் என்ற வகையில் அடியேனுடனும், அன்றைய மாமன்றத் தலைவர் திரு.வி.கயி லாசபிள்ளை, பிரதித் தலைவர் திரு.மா.தவயோகராஜா, பொருளாளர் திரு.மு.கந்தசாமி உட்பட ஏனைய உறுப்பினர்களுடனும் கலந்து ஆலோசித்து திரு.நீலகண்டன் மேற்கொண்ட பெரு முயற்சியானது போற்றுதற்குரியது.

மாமன்றத் தலைமையகக் கட்டடம் இயங்கத் தொடங்கிய பின்னர், மாமன்ற சமூக நலப் பணிகள் ஆரம்பமான போது சமூக நலன் குழுத் தலைவராக இருந்த வைத்திய கலாநிதி க.வேலாயுதபிள்ளை, யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டும் வறுமைக் கோட்டின் கீழும் வாழ்ந்து கொண்டிருந்த வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கொழும்பு, இரத்மலானை இந்துக் கல்லூரியில் இலவச விடுதியை அமைக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்தார். இவரது கனவை நனவாக்கும் வகையில் திரு. நீலகண்டன் விடுதி அமைப்பதற்கான பணிகளை ஆரம்பித்த வேளையில் வைத்தியகலாநிதி வேலாயுதபிள்ளை மறைந்துவிட்டார். அப்போது திரு. நீலகண்டன் சமூகநலன் குழு தலைவராக அடியேனைத் தெரிவு செய்ததுடன் குழுச் செயலாளராகவிருந்த திருமதி வானதி ரவீந்திரன் உட்பட ஏனைய உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு விடுதியை ஆரம்பித்து சிறப்பாக இயங்க வைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளை எவருமே மறந்துவிட முடியாது.

மாமன்ற நிர்வாகக் கட்டமைப்புக்கு அமைய மாணவர் விடுதியை பராமரிக்கும் வகையில் புதிதாக விடுதிகள் குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டதால் எனது தலைமையிலான சமூக நலன் குழுவுடன் இணைந்து வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாடளாவிய ரீதியில் சூறாவளி, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும், போர்க்காலச் சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்ட



வசதி குறைந்த மக்களுக்கும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பெண் களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் மாமன்றம் சார்பாக வாழ்வாதாரம் உட்பட பல்வேறு உதவிகளையும் நிவாரணங்களையும் வழங்குவதில் எங்களுக்கு ஊக்குவிப்பையும் உந்துதலையும் தந்ததுடன் நாடளாவிய ரீதியில் சிவதொண்டர் அணிகளை அமைத்து அதனூடாக சமய சமூகப் பணிகளை ஆற்றுவதற்கும், மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் வழிகாட்டிய ஓர் உத்தமராக திரு. நீலகண்டன் அவர்களை அடையாளப் படுத்துகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் மாமன்றப் பிராந்திய அலுவலகம் அமைத்து அதனூடாக பணிகளை விஸ்தரித்ததுடன், திருமுறிகண்டியில் சரவணப் பொய்கை என்ற பெயரில் வன்னிப் பிராந்திய நிலையம் அமைப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்தவர். கொட்டகலை, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் மாணவர்கள் நலன் கருதி மாமன்றப் பணிகளை முன்னெடுப்பதற்கு காணிகள் கிடைத்திருப்பதும் திரு. நீலகண்டனின் திறமையான பணிகளுக்கு எடுத்துக் காட்டுவனவாகும். இதற்கும் மேலாக மட்டக்களப்பு, இந்து மாமன்றத்திற்கு கட்டடம், ஆலையடிவேம்பு இந்து மாமன்றத்திற்கு அறநெறிப் பாடசாலை, சங்கமன்கண்டி மலையில் முருகன் ஆலயம், வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் கலாசார மண்டபம், மன்னாரில் வைரவர் கோயில் என்பன அமையப் பெறுவதற்கும் திரு. நீலகண்டனின் விடாமுயற்சியே காரணம் என்றுதான் சொல்லவேண்டும்.

மாமன்றத்தின் பணிகளுள் ஒன்றாக நூல் வெளியீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை கச்சிதமாக செயற்படுத்திய பெருமையும் இவரைச் சாரும். மாமன்றத்தின் பொன்விழா, வைரவிழா காலப் பகுதிகளில் இரு பகுதிகளைக் கொண்ட சிறப்பு மலர்களை காத்திரமானதாக தொகுத்து வெளியிடுவதற்கும், மாமன்ற ஆன்மீக இதழான இந்துஒளியை ஆரம்பித்து வைத்து இருபத்தொரு வருடங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கும் திரு.நீலகண்டன் ஆற்றிய பணிகள் காலத்தால் மறக்கப்பட முடியாதவையாகும். இந்து ஒளியின் ஒவ்வொரு வெளியீடு களிலும் நந்திக் கொடி தொடர்பான கட்டுரைகளையும் சமூக நலன் குழு செயற்பாடுகள் பற்றிய தகவல்களையும் வெளியிடுவதை பெரிதும் விரும்பியவராக, அதற்கான ஒத்துழைப்பை முழு அளவில் வழங்கியவர் என்பதையும் சிறப்பாகச் சொல்லலாம்.

கொழும்பு விவேகானந்த சபையில் இணைப்புக் கட்டடமொன்றை அமைக்கும் வேலைகள் தாமதமாகி வந்த நிலையில் அதனை நிறைவு செய்யும் முயற்சியில் பெரிதும் ஈடுபாடு காட்டி செயற்பட்டவர் இவர். சைவக் கொடியாகப் போற்றப்படும் நந்திக் கொடிக்கு உரிய மதிப்பளித்து அதன் மகத்துவத்தை இந்து மாமன்றத்தின் ஊடாகப் பலரும் அறியச் செய்வதில் உதவிய பெருமகன். லண்டன் ஐ.தி.சம்பந்தன் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க, நீண்ட காலமாக செயற்படாதிருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபைக்கு மற்றும் சிலருடன் இணைந்து புத்துயிர் அளித்து மீளவும் அதனை இயங்கச் செய்வதற்கு காரணமாக இருந்த பெருமைக்குரியவராகவும் திரு. நீலகண்டன் திகழ்கிறார்.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் திருக்கேதீஸ்வர திருக்கோயிலை கருங்கற் கோயிலாக மாற்றியமைக்கும் திருப்பணி செயற்பாடுகளில் தலைவர் பதவியிலிருந்த திரு.இ.நமசிவாயம், திரு. வி.கயிலாசபிள்ளை, திரு. மா. தவயோகராஜா ஆகியோரைத் தொடர்ந்து திரு. நீலகண்டன் அவர்களும் இணைந்து கொண்டு முதற்கட்ட புனருத்தாரண வேலைகளை வெற்றிகரமாக நிறைவு செய்தமையானது பாராட்டுக்குரியது. தொடர்ந்து இரண்டாம் கட்டமாக பரிவார மூர்த்திகளுக்கான கோயில் வேலைகளை முன்னெடுத்துச் செல்லும்போது அவர் மறைந்துவிட்டது துரதிர்ஷ்டவசமானது.

கொழும்பு கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நிர்வாகப் பிரச்சினை ஏற்பட்டபோது நீதிமன்ற உத்தரவின்படி, இந்து மாமன்ற நிர்வாகத்தின் கீழ் ஆலய பரிபாலனத்தைக் கொண்டு வந்தமையும், பின்னர் வழமையான செயற்பாட்டுக்கு வந்தபோது ஆலய அறங்காவலர் சபை செயலாளராகவும் இறக்கும்வரை செயற்பட்டு வந்தமையும் வரலாறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்து மாமன்ற நிகழ்வுகளிலும், ஏனைய வைபவங்களிலும், வெளிநாட்டு சமய மாநாடுகளிலும் நாங்கள் இருவரும் ஒன்றாகக் கலந்து கொண்டமையானது மறக்க முடியாத இனிய அனுபவங்கள். சிறந்த ஆளுமைகொண்ட திறமை மிக்க ஒரு நிர்வாகி இவர். எத்தனை சவால்கள் வந்தாலும் அதற்கு முகம் கொடுத்து சமாளித்து வெற்றிகாணும் வல்லமை மிக்கவர். தியாக சிந்தையும் துணிச்சலும் செயற்திறமையும் தலைமைத்துவ பண்பும் கொண்டவராக விளங்கியவர். திறமைமிக்க சட்ட வல்லுநர். உடல் நலக் குறைவாக இருந்த காலத்திலும் சமய, சமூகப் பணிகளில் சுறுசுறுப்பாக இயங்கிய ஒரு செயல்வீரர். இறப்பதற்கு சில மணி நேரத்திற்கு முன்பும் தலைநகரில் ஹவாய் ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகளை வரவேற்கும் நிகழ்வுக்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டமையானது அன்னாரது குரு பக்தியையும், ஆன்மீகப் பற்றையும் எடுத்துக் காட்டுகிறது.

இந்து மாமன்றத்தில் மட்டுமல்ல, இந்து வித்தியா விருத்திச் சங்கம், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை, மனிதநேய நிதியம், கொழும்பு விவேகானந்த சபை போன்ற பல அமைப்புகளிலும் அடியேன் திரு.நீலகண்டன் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அந்த இனிமையான காலப் பகுதிகளை என்றென்றுமே மறந்துவிட முடியாது. அன்னாரது ஆத்மசாந்திக்கு இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா**

உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்

தலைவர், மாமன்ற சமூக நலன் குழு



# மாமன்ற கல்விக்குழுத் தலைவரின் நினைவுப்பகிர்வு

# ஆற்றலும் ஆளுமையும் கொண்ட அமரர் நீலகண்டன்

ஆற்றலும் ஆளுமையும் கொண்ட இந்துத் தமிழன் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டு இறைவன் திருவடியில் அமைதியடைந்து விட்டார். ஆம், பல்துறை ஆற்றலும் ஆளுமையும் கொண்ட அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் நீலகண்டன் தனது எழுபத்தோராவது அகவையில் அமரத்துவமடைந்துவிட்டார். பிறப்புண்டு, வாழ்வுண்டு, இறப்புமுண்டு என்ற இயற்கை நியதிக்கொப்ப 1947 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினாறாம் திகதியன்று வட இலங்கையின் வடமராட்சியின் உடுப்பிட்டியில் கந்யைா தம்பதியினரின் மகனாகப் பிறந்த அன்னார், தனது ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையிலும், உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று இலங்கை சட்டக்கல்லூரியில் பயின்று 1969 இல் சட்டத்தரணியானார்.

பாடசாலைக் காலத்திலே தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்திய அன்னார் கொழும்பில் தனது தொழிலை மேற்கொண்ட காலம் முதல் இறக்கும் நாள் வரை சமயப்பணி, கல்விப் பணி, சமூகப்பணியென்று பல்வேறு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இறப்பை எதிர்கொண்ட 2018, பெப்ரவரி 18 ஆம் நாளில் சில மணித்தியாலத்திற்கு முன்பு சமய நிகழ்வொன்றின் ஒழுங்குகளை நேரில் மேற்பார்வை செய்தமை அவரின் செயலுறுதியை வெளிப்படுத்துகின்றது.

ஆரம்பத்தில் அனைத்திலங்கை இந்த வாலிபர் சங்கப் பேராளராக அகில இலங்கை இந்து மாமன்றத்தில் இடம் பெற்ற அவர் மாமன்றத்தின் துணைச்செயலாளராகவும், பொதுச் செயலாளராகவும், தலைவராகவும் பல்லாண்டுகள் திறமையுடன் பணியாற்றினார். கொழும்பு விவேகானந்த சபை, திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை உட்பட பல இந்து சமய நிறுவனங்களில் பல பொறுப்புகளை வகித்துள்ளார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

காலஞ் சென்ற அமைச்சர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் முன்னாள் கல்வி இராஜங்க அமைச்சர் திருமதி.இராஜமனோகரி புலேந்திரன், மாமன்ற முன்னாள் தலைவர் அமரர் ஆ.சின்னத்தம்பி இரத்மலானை இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு.மன்மதராஜன், ஆகியோருடனும் அமரர் வைத்தியகலாநிதி க.வேலாயுதபிள்ளையுடனும் இணைந்து மூடிக்கிடந்த இரத்மலானையிலுள்ள கொழும்பு இந்துக் கல்லூரி மீண்டும் இயங்க செயற்பட்டவர்களில் கந்தையா நீலகண்டனும் முக்கிய இடம் பெறுகின்றார். அத்துடன் இரத்மலானை இந்துக் கல்லூரியின் மாணவ, மாணவியரின் எண்ணிக்கைப் பெருக்கத்தையும் வசதியற்ற பிள்ளைகளின் நலனையும் நோக்காகக் கொண்டு இலவச தங்குமிட மற்றும் உணவு உட்பட வசதிகளுடன் கூடிய மாணவ விடுதிகளை நிறுவவும் உதவினார். பல ஆண்டுகளாக பலநூறு தமிழ்ப்பிள்ளைகளின் குறித்த விடுதியான சக்தி இல்லத்தில் தங்கி பயின்று பயன் பெற்றுள்ளனர்.

காணி கிடைத்ததும் பல்லாண்டு காலமாகக் கட்டடம் அமைப்பதில் பின்னடைவு கண்டிருந்த அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமைப் பணிமனையை அதன் முன்னாள் தலைவர் அமரர்.க.பாலசுப்பிரமணியம் மற்றும் அமரர் வி.கயிலாசபிள்ளை, மா.தவயோகராஜா மற்றும் இரத்மலானை கொழும்பு இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு மன்மதராஜன் உட்பட பலருடன் இணைந்து நிறுவுவதில் வெற்றி கண்டவர் கந்தையா நீலகண்டன். இவரது காலத்தில் யாழ்ப்பாணம் நல்லூரில் மாமன்றக் கிளை அலுவலகம் நிறவப்பட்டமையும் முறிகண்டியில் சரவணப் பொய்கை என்ற பெயரில் கட்டடம் நிறுவப்படுவதும் அதே போல் நாட்டில் பல பகுதிகளிலும் மாமன்றச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் அவரது ஆற்றல் மிகு வழிகாட்டல்கள் ஆகும்.

கல்விப் பணியைப் பொறுத்தவரை மாமன்றக் கல்விக் குழுவின் செயற்பாடுகளுக்கு ஊககமுய ஊந்தலும் தந்தவர் நீலகண்டனே என்பதை அதன் செயலாளராகச் செயற்பட்டு வருபவன் என்ற முறையில் என்னால் உறுதியாகக் கூற முடிகின்றது.

இன்று நாடு முழுவதுமாக இந்துப் பிள்ளைகளுக்கு உதவிக் கரம் நீட்டி அவர்களது சமய அறிவை மேம்படுத்த நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். பயிலரங்குகள் செயலமர்வுகளை நடத்தி பல்லாயிரம் மாணவ மாணவியருக்கு



கற்பித்தல் செயற்பாட்டை நடத்தி வருகின்றோம். எதிர்வரும் காலங்களில் அனைத்துப் பாடங்களுக்கும் இது போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம். இவ்வாறான கல்விப் பணிகளைத் தளராது மேற்கொள்ளவுள்ளோம். இவ்வாறான கல்விப் பணிகளைத் தளராது மேற்கொள்ள ஊக்கமும் உதவியும் ஒத்துழைப்பும் மாமன்றத் தலைவர் என்ற முறையில் நீலகண்டன் தயங்காது வழங்கினார்.

நாட்டின் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்பிலும் இந்து நாகரிகம் ஒரு பாடமாக இருந்த போதிலும் அதற்கான பாடநூல் இல்லாமை ஒரு குறையாகவிருந்து வந்தது. அக்குறையை நீக்க பாடத் திட்டத்தோடிணைந்த பாடநூலொன்றைத் தயாரித்து வெளியிட எமக்குப் பலவழிகளிலும் நீலகண்டன் உதவினார். அதற்கு இந்து கல்விச்சமூகம் என்றும் நன்றியுடையதாயிருக்கும்.

மலையகத்தின் ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் தமிழ் மொழி மூலம் உயர் வகுப்புகளில் கணித, விஞ்ஞான பிரிவுகள் இன்மையால் மாணவர்கள் பல ஆண்டுகளாக நுவரெலியா மாவட்டத் தமிழ் பாடசாலைகளில் இணைந்து கற்று வந்தனர். திடீரென நுவரெலியா மாவட்ட அரசியல்வாதிகளால் அவ்வாறு பயின்ற மாணவ , மாணவியர் இடைநடுவில் வெளியேற்றப்பட்டு நிராக்கதிக்குள்ளாக்கப்பட்டனர். இந்நிலையிலே இது தொடர்பில் மாமன்றக் கல்விக் குழுவுடன் கலந்துரையாடிய மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க வகை செய்ததால் குறித்த பாதிக்கப்பட்ட 106 தமிழ் மாணவ . மாணவியர் மீண்டும் நுவரெலியா மாவட்டப் பாடசாலைகளில் இணைந்து கல்வியை தொடர வழியேற்பட்டது.

இந்து மாமன்றத்தால் பல சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆண்டு மலர்கள், நினைவு மலர்கள் எனப் பலவுள்ளன. இந்து ஒளி என்ற காலாண்டு சஞ்சிகை இரண்டு தசாப்தங்களைத் தாண்டி வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவற்றிக்கொல்லாம் ஆணிவேராகவிருந்து ஆலோசனைகளையும் வழங்கி செயற்பட்டவர் நமது தலைவரே.

நல்லவர்களையும் அல்லாதவர்களையும் அணைத்துச் செல்லும் சாணக்கியராகச் செயற்பட்ட நீலகண்டன் தமிழர் அரசியலிலும் நாட்டம் கொண்டவராகச் செய்பட்டார். இவ்வாறு பல்வேறு துறைகளில் ஈடுபட்ட அன்னார் சட்டத்துறையிலும் முத்திரை பதிக்கத் தவறவில்லை. கந்தையா நீலகண்டனின் மறைவு நமது சமூகத்திற்கு பெரும் இழப்பாக இருப்பினும் இயற்கை நியதியை யாரால் வெல்ல முடியும் ? அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிராத்திப்போம்.

**த.மனோகரன்**

உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.

செயலாளர் - மாமன்ற கல்விக்குழு

பொதுச்செயலாளர் , அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கம்.



## கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபை, அகில இலங்கை இந்து மாமன்றம், அமரர் கந்தையா நீலகண்டர் ஆகிய முக்கோணத் தொடர்பு

கொழும்பில் இயங்கிவரும் சைவ சமயத்துடன் தொடர்புடைய ஒரு சில மூத்த சபைகளில் ஒன்றாக விளங்குவது கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையாகும். 1925ம் ஆண்டுகளில் ஸ்தாபனம் பெற்ற எமது சபை மருதானை கப்பித்தாவத்தையில் கடந்த ஒன்பது சகாப்தங்களுக்கு மேலாக, தனது மடாலயத்தில் தலைமையகத்தையும் அமைத்து இயங்கி வருகின்றது. மருதானையில் கப்பித்தாவத்தையில் தொண்டர் வித்தியாலயம் ஒன்றை உருவாக்கிய பெறுமையும் எமது சபையையே சாரும்.

இன்று இக்கல்லூரி மருதானை தமிழ் வித்தியாலயம் என்னும் பெயருடன் செயல்பட்டு வருவதும் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்னர் இப்பாடசாலைக்கு ஓர் விசாலமான விளையாட்டு மைதானத்தையும் ஏற்படுத்திக்கொடுத்ததும் எமது சபையாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மூத்த அங்கத்துவ சங்கங்களில் ஒன்றாக எமது சபை இணைவு பெற்றதை பெருமையாகக் கொள்கின்றோம். கடந்த எட்டு சகாப்தத்திற்கு மேலான வரலாற்றினைப் புரட்டிப்பார்த்தால் இதன் மகிமைகள் விளங்கும். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தற்போதைய மாடிக்கட்டடம் அமைவதற்கு முன்பாக துரதிஸ்டவசமாக மாமன்றம் ஓர் உறங்கு நிலையில் இருந்து வந்தது எல்லோரும் அறிந்த விடயமாகும். உறக்க நிலை அடையாமல் இருக்க உதவியதில் எமது தொண்டர் சபை பெரும் பங்காற்றியிருந்தது.

1960 ஆண்டளவில் எமது சபைத் தலைவர் அமரர் ஆ.சின்னத்தம்பி, அமரர் க. மதியாபரணம் மற்றும் உப தலைவர் அமரர் ச.த.சின்னத்துரை அவர்களின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கது. எமது சபையின் தற்போதைய தலைவரும் மாமன்றத்தின் உப தலைவருமாகிய திரு.S.T.S அருளானந்தன் மற்றும் எமது சபையின் அறங்காவலரும் மாமன்றத்தின் சிரேஷ்ட உப தலைவருமான திரு.சின்னத்துரை தனபாலா அவர்களினது தந்தையாரே அமரர் ச.த.சின்னத்துரை யாவர். மாமன்றம் புத்துயிர் பெற்று இன்றைய பெரு நிலையை அடைவதற்கு காரணகர்தாக்களில் ஒருவரும் எமது தலைமைக் கட்டடம் அமையும் வேளையில் தலைவருமாக இருந்த அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் என்றால் அது மிகையில்லை. அவர்களின் பெரு முயற்சியும் உந்து சக்தியும் துணை நின்றது. திரு. பாலசுப்பிரமணியம் அவர்களைத் தொடர்ந்து அமரர் ப.கயிலாசபிள்ளை தற்போது தலைவராக இருந்து அமரத்துவமடைந்த கந்தையா நீலகண்டன் அவர்கள் உட்பட பல பெரியோரின் முயற்சியினால் தற்போதைய 5 மாடிக்கட்டடம் நிறுவி தமிழுக்கும், சைவத்துக்கும் பெறும் தொண்டாற்றி வந்தது கண்கூடு. அமரர் நீலகண்டன் அவர்கள் மாமன்றத்தின் அடிப்படைத் தொண்டனாக இருந்து துணைக் செயலாளராகவும் பின்பு பொதுச் செயலாளராகவும், தனது இறுதி மூச்சு வரை மாமன்றத்தின் தலைவராகவும் பணியாற்றிவந்தார். மாமன்றத்தில் தலைவர் பதவிக்கு மேல் வேறு பதவிகள் இல்லை என்றதாலோ என்னவோ அதியுயர் பதவியாக தில்லை நடராஜனின் பாதங்களில் சேவைகள் புரிய விண்ணுலகம் சென்றுவிட்டார் போலும்.

இலங்கையில் உள்ள எல்லா இந்து நிறுவனங்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டு இலங்கை வாழ் இந்து தமிழ் மக்களுக்கு சேவை செய்வதே தமது கடமையும் குறிக்கோளுமாகும் என்னும் நோக்குடன் செயற்பட்டு வரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினை வழிநடாத்திய ஓர் பெருந்தகையான் அமரர் இன்று எம்முடன் இல்லை.

இச்சேவைகளை மிகவும் திறம்பட செய்த அமரர் அவர்களின் பணி போற்றுதற்குரியது அவர்களின் பணிகளுக்கு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையின் முக்கியஸ்தர்கள் பல வகையிலும் தமது பங்களிப்புகளை வழங்கி வந்திருக்கின்றார்கள். தொண்டர் சபையின் பல முக்கியஸ்தர்கள் மாமன்றின் துணைத் தலைவர்களாகவும், முக்கிய குழுக்களின் தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் அமரர் கந்தையா நீகண்டனுடன் சேர்ந்து சேவைகள் பல ஆற்றி வந்தார்கள். அமரர் அவர்களுடன் இணைந்து மாமன்ற விழாக்கள், சமயச் சடங்குகள், சமய சமூகப்பணிகளுக்கு தம்மாலான சேவைகளைப் புரிந்து வந்திருக்கின்றார்கள்.



அமரர் கந்தையா நீலகண்டன் யாழ் வடமராட்சியில் பிறந்து தனது இளவயதுக் கல்வியினை உடுப்பிட்டி அமெரிக்க மிசன் பாடசாலையிலும் மேல்கல்வியினை யாழ் இந்துக் கல்லூரியிலும் பயின்று கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று தனது வாழ்வினை தொடங்கினார். பிரபல சட்டத்தரணியாக சட்ட நிறுவனம் ஒன்றினை நடாத்தி வந்தார். தான் பிறந்த மண்ணுக்கும் விசுவாசமாக அதன் மேம்பாடுகளுக்கு தனது இறுதி மூச்சுவரை பாடுபட்டவர். இந்த விசுவாசமும், நற்பண்புகளும் அவர் வரைந்த பத்திரிகை, கட்டுரைகள் நேர்காணல்களிலும் ஊடகச் செய்திகளிலும் அவருடைய இறுதி ஊர்வலத்தில் கலந்து சிறப்பித்த பெரியோர்களின் பேச்சுக்களிலும் மிளிர்ந்ததை காணக்கூடியதாக இருந்தது.

மானிடப்பிறவி எடுத்த பயனையும் சிறப்புற வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர் அமரரவர்கள் அந்த வகையில் அவர் விட்டுச் சென்ற நற்பணிகள் தொடரவேண்டும். அந்தச் சேவைகளை நாம் முன்னெடுத்து எமது தாய் மொழிக்கும் சைவசமயத்துக்கும் தொண்டுகள் செய்து நிற்போம் என்று கூறி அமரரவர்களை இழந்து நிற்கும் அவர் பாரியார், பிள்ளைகள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களுக்கும், அகில இலங்கை இந்து மாமன்ற உறுப்பினர்கள் அமரர் சேவைகளை செய்த மற்றும் நிறுவனங்களுக்கும், கதிர்காமயாத்திரிகர் தொண்டர் சபையின் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவிப்பதில் மனத்திருப்தி கொள்கின்றோம்.

வணக்கம்

**ச.த.சி. அருளானந்தன்**

உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்

தலைவர், மாமன்ற கட்டடக்குழு

தலைவர், கதிர்காமர் யாத்திரிகர் தொண்டர் சபை, கொழும்பு



# மன்னார் மாவட்டம் இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் நினைவுப்பகிர்வு சித்தம் சிவமாக்கி செய்தனவே தவமாக்கி சிவனாகவே வாழ்ந்து சிவனுடன் கலந்த நீலகண்டன்

மாசி மாதம் 18ம் திகதி ஒவ்வொரு வருடமும் வந்து சென்ற திகதி தான் . ஆனால் இந்த வருடம் எங்களை நிலைகுலையச்செய்த நாளாக அமைந்திருந்தது. அன்று பிற்பகல் மன்னாரில் பரவிய சைவத் தமிழ் இனத்தின் குரல் மௌனித்துவிட்டது என்ற செய்தி கிடைத்த போது என்னால் இதை நம்பவே முடியவில்லை. அவருடைய மகனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் அதை உறுதிபடுத்தியபோது தாங்கமுடியாத ஆறாத்துயரில் சைவத்தமிழ்ச் சமூகம் ஒப்பற்ற தலைவரொருவரை இழந்துவிட்டதே என்று தவித்துப் போனேன்.

மன்னார் ஞானவைரவர் தேவஸ்தான அரசாங்க அதிபரினால் போடப்பட்ட காணி சம்பந்தமான வழக்கு 2000ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2ஆம் திகதி நடைபெறுவதான அறிவித்தல் எனக்கு 1ம் திகதி அரசவேலை சம்பந்தமாக மடுத்திருப்பதியில் இருந்தபோது கையளிக்கப்பட்டது. அடுத்த நாள் வழக்கு நடைபெறவிருப்பதனாலும், மன்னாரில் இந்து மதத்தை சரியாக புரிந்துகொள்ளக்கூடியதாக ஒரு நல்ல சட்டத்தரணி இல்லாத காரணத்தினாலும் பிற்பகல் நான்கு மணிக்கு எனக்கு கையளிக்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின் படி, உடனடியாக கொழும்புக்குச் செல்ல முயன்ற போது, எனது மனைவியும் என்னுடன் கூடவந்தார். பிற்பகல் நான்கு மணிக்கு புறப்பட்ட நாங்கள் 11.00 மணிக்கு கொழும்பை அடைந்தோம். இந்த இரவு நேரத்தில் முதல் முதலாக பிரபல சட்டத்தரணியான திரு.கந்தையா நீலகண்டன் அவர்களது வீட்டுக்குச் சென்று ஆலோசனை கேட்டோம். இது தான் திரு. கந்தையா நீலகண்டனை நான் முதல் முதலாக சந்தித்த சந்திப்பு, இந்த அகாலஇரவு நேரத்திலும் எங்களுடைய பிரச்சனைகளை ஆறுதலாக கேட்டு பிரச்சினைகளின் பரிமாணங்களை சரியாகப் புரிந்து கொண்டு உடனடியாக கொழும்பிலுள்ள பிரபல சட்டத்தரணியான கே.எஸ்.இரட்ணவேல் அவர்களிடம் தொடர்புகொண்டு அவர் மன்னாருக்கு வருவதற்கான ஆயத்தங்களை செய்துதந்தார். கொழும்பிலிருந்து இரவு 12.00 மணிக்கு புறப்பட்ட நாங்கள் மன்னாருக்கு காலை 8.00 மணிக்கு வந்தடைந்த பின்னர், 9.00 மணிக்கு நீதிமன்றத்துக்கு செல்லக்கூடியதாக இருந்தது. திருவள்ளுவர் கூறியதுபோல "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்பதுபோல தேவையறிந்து செய்த இந்த உதவியை என்றென்றும் என்னால் மறக்கமுடியாதுள்ளது.

போரினால் தாய் தகப்பன் இருவரையுமோ அல்லது தகப்பனையோ இழந்த ஆறு வயதிற்கும் பன்னிரெண்டு வயதிற்கும் இடைப்பட்ட இராணுவ பீதி சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த 35 சிறுவர்களுக்கு புதுவாழ்வு கொடுப்பதற்காக இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளையினரின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டு மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும் அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து நிர்வகிக்கும் சிறுவர்களுக்கான வளர்ப்பகம் மூலம் புதுவாழ்வு கிடைக்க முதற்காரணமும் முழுக்காரணமுமாக இருந்து செயற்பட்டவர் அமரர் கந்தையா நீலகண்டன் ஐயா அவர்கள். இந்த இல்ல திறப்புவிழா 2004ம் ஆண்டு மாசி மாதம் 28ஆம் திகதி நடைபெற்றது.

சைவ சமயத்தவர்கள் தமது சமயத்தை அறியாமல் சமய உணர்வு அற்றுப்போகின்ற ஒரு பரிதாபநிலையில் மன்னார் மக்கள் வாழ்கின்றதை கண்டு "சைவமும் வாழ்வும்" என்ற தொனிப்பொருளில் சித்திவிநாயகர் இந்துகல்லூரியில் 2004ம் ஆண்டு ஆவணி மாதம் 7ம்,8ம், திகதிகளில் மாபெரும் ஆன்மீக அறநெறி ஆற்றுப்படுத்தல் ஆய்வரங்கம் அப்போது இந்து மாமன்ற பொதுச்செயலாளராக இருந்த நீலகண்டன் ஐயா அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டு இந் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் குருமகாசன்னிதானம் தவத்திரு ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்மந்த பரமாச்சாரிய சுவாமிகள், திருமதி வசந்தா வைத்தியநாதன், சிவஞானச்செல்வர் க.இராஜபுவனீஸ்வரன், இளைப்பாறிய கல்வி அதிகாரி கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம், வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.என்.கார்த்திகேயன் ஆகியோர் இந்த ஆற்றுப்படுத்தும் கருத்தரங்கை வரலாறு காணாத முறையில் ஒரு எழுச்சிக் கருத்தரங்காக நடாத்தி வைத்தனர்.

சுனாமி அனர்த்தம் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்ட போது அகில இலங்கை இந்து மாமன்றம் ஒரு பாரஊர்தி நிறைய சாப்பாட்டுப் பொருட்கள், புதிய ஆடைகளை அனுப்பி வைக்க இன்னுமொரு வாகனத்தில் மருந்து பொருட்களும் மருத்துவ தளபாடங்களும் 30 பெயரைக்கொண்ட மருத்துவ குழு மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை, ஆகிய இடங்களில் ஒரு மாதம் தங்கியிருந்து சேவைசெய்ய காரணகர்த்தாவாக இருந்தவர் இறைபதம் அடைந்த கந்தையா நீலகண்டன் ஐயா அவர்கள்.

சிவதொண்டர் அணி பயிற்சி பட்டறை என்ற பெயரில் 2005ம் ஆண்டு சித்திரை மாதம் 20ம் திகதியில் இருந்து 25ம் திகதி வரை இரத்மலானை இந்துக்கல்லூரி மண்டபத்தில் இலங்கையில் உள்ள பெயர்பெற்ற சைவப்பேச்சாளர்கள் அனைவரையும் இணைத்து ஒரு பயிற்சி பட்டறை நடாத்தப்பட்டது. மன்னாரில் இருந்து 300 சிவதொண்டர்கள் ஐந்து பஸ்களில் சென்று இந்த ஐந்து நாட்களும் கலந்து சிறப்பித்தார்கள்.



முருகன் கோவிலடி இந்து மீனவர்களைப் பேசாலை இறங்கு துறையைப்பாவித்து மீன்பிடிக்க உள்ளூர் மீனவர்கள் திடீரென அனுமதிக்காத நிலை ஏற்பட்ட போது இந்த மீனவர்கள் கடலுக்கு போக முடியாமல், தொழில் இன்றி வருமானம் ஏதுமின்றி பட்டினிச்சாவை எதிர்நோக்கவேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டனர். இரு பகுதியினரும் பேசித்தீர்க்கும் நீதியோடு கூடிய நிலையான நல்ல தீர்வு ஒன்று எந்த காலத்திலும் கிடைக்கமாட்டாது என்று அறிந்த அப்போதைய இந்து மாமன்ற பொது செயலாளர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் இந்த பிரச்சினையை தீர்க்க ஒரே ஒரு வழிதான், அது இந்து மீனவர்களுக்கென்று தனியான ஒரு காணியுடன் கூடிய இறங்குதுறை என்று முடிவுசெய்தார். இது சம்பந்தமான கடலோர காணிகளை இனங்கண்டு பெரும் இன்னல்களை எதிர்கொண்டு இரண்டு ஏக்கர் காணியை இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு.சி.பிரேமச்சந்திரன் அவர்களின் உதவியுடன் இந்து மாமன்றத்தின் பெயரில் வாங்கப்பட்டது. இன்று இந்த இரண்டு ஏக்கர் காணியும் தற்போது இறங்குதுறையாக மட்டும் பயன்படாமல் தனிமீனவர் கிராமம் போல கடல்சார் தொழில்களின் கேந்திர மையமாகத் திகழ்கிறது.

பெண்களை வலுவூட்டல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்த கந்தையா நீலகண்டன் ஐயா அவர்கள் இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகிகளின் உதவியுடன் மன்னாரில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை அமைத்து படித்துவிட்டு வீட்டில்இருக்கும் இளம் பெண்களுக்கும், போரினாலும் மற்றும் இயற்கை காரணங்களினாலும் கணவனை இழந்த பெண்களிற்கும் ஒரு இலவச தையல் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இறைசிரோரத்தினம் திரு. வி.கயிலாசபிள்ளை ஐயா, திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களின் பங்கும் இவ் நிலையம் அமைப்பதற்குக் காத்திரமான பங்களிப்பாக இருந்தது.

நாவலர் மாநாட்டை மட்டக்களப்பிலும் விபுலானந்தர் விழாவை யாழ்ப்பாணத்திலும் நடாத்தி வடக்கையும் கிழக்கையும் இணைத்து வைத்த பெருமை கந்தையா நீலகண்டன் அவர்களையே சாரும். இந்த இரு விழாக்களிலும் மன்னாரைச் சேர்ந்த சிவதொண்டர் அணியினரின் கணிசமான பங்களிப்புத் தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கின்றது.

சிவதொண்டர் அணிக்காக வாங்கப்பட்ட அம்புலன்ஸ் வாகனத்தை கொழும்பில் இருந்து கொண்டுவந்து 2006ம் ஆண்டு மாசி மாதம் 26ம் திகதி மன்னார் பெரியகடை ஞானவைரவர் தேவஸ்தானத்தில் பூஜைகள் நடாத்திய பின்பு திருக்கேதீச்சரத்தில் வைத்து செஞ்சொற்செல்வன் ஆறுதிருமுருகன் ஐயாவிடம் உத்தியோக பூர்வமாக கையளித்தது நேற்று நடந்தது போல் என் நெஞ்சில் இன்றும் பசுமையாக இருக்கின்றது. திருக்கேதீச்சரத்தில் வைத்தியசாலை இல்லாத காலகட்டத்தில் தற்காலிக வைத்தியமுகாம் ஒன்றை அமைத்து தகுதிபெற்ற வைத்தியர்கள் மற்றும் தாதிகள் மருந்தாளர்கள் சிவதொண்டர்கள் அனைவரையும் இணைத்து திருக்கேதீச்சரத்தில் ஒரு நிரந்தர வைத்தியசாலை அமையும்வரை வருடாவருடம் இந்த கடமையை சிவதொண்டர் அணியின் மூலமாக செய்துவந்தவர். மன்னார் பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தினால் அவர்களின் பயிற்சிக் காலத்தில் தைக்கப்பட்ட ஆடைகளை கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும், மன்னார் நகரசபையிலும், சிவராத்திரி நாளன்று திருக்கேதீச்சரத்திலும் கண்காட்சி நடாத்தி அவர்களுடைய திறமைகளை வெளி மாவட்டங்களிற்குத் தெரியச்செய்தவர். மன்னாரில் நடைபெறும் சிவராத்திரி விழாவில் அகில இலங்கை இந்துமாமன்ற தொண்டர்களினால் பாலாவி தீர்த்த காவடிகளுக்கான செம்பு வழங்கும் நிலையம் கடந்த 10வருட காலங்களாக நடைபெற்ற காலகட்டத்தில் முதற்செம்பை தானே வாங்கி அதிகாலையில் இவ் நிகழ்வை ஆரம்பித்துவைத்து எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்களுக்கு தமது கைகளினாலே பாலாவி தீர்த்தத்தை சிவனிற்கு அபிஷேகம் செய்யும் பாக்கியத்தைக் கொடுத்தவர். இந்த வருடம் (2018ம் ஆண்டு) சுகயீனம் காரணமாக பிரயாணம் செய்ய முடியாததால் அவர் இல்லாமலே நடந்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் எமக்கு ஏற்பட்டது.

சிவராத்திரி தினத்தன்றே உலக சைவப்பேரவையின் கொடிதினம் வருவதால் முதலாவது நந்திக்கொடியை வாங்கி உண்டியலில் காசுபோட்டு ஆரம்பித்துவைத்த பெருமைக்கும் இவரே காரணகர்த்தா. இத்தனை வருடகாலமும் இந்து ஒளி சஞ்சிகை சிவராத்திரி காலகட்டத்தில் வெளியிடப்பட்டு குறித்ததொகை இந்து ஒளிப்பிரதிகளை எமக்கு வழங்கி அதனை விற்று அதனால் பெறப்படும் நிதியை சிவதொண்டர் அமைப்புகளுக்கு அதன் சேவைத்திட்டங்களுக்கும் பயன்படுத்தவழங்கி ஊக்குவித்தார்.

மன்னார் ஞானவைரவர் தேவஸ்தானம் ஆகமமுறைப்படி கட்டத்தொடங்கிய பின் மாவட்டத்தில் ஏற்பட்ட பெரும் பஞ்சம் காரணமாகவும், வர்த்தகர்களுடைய வியாபாரங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதனாலும் கடுமையான நிதி நெருக்கடியை நாங்கள் எதிர்நோக்கினோம். இந்த நிலையில் அகில இலங்கை இந்துமாமன்றம் ஐம்பது இலட்சம் ரூபாவினையும், திருக்கேதீச்சர தேவஸ்தானம் இருபது இலட்சம் ரூபாவினையும் வழங்கியதன் மூலம் திரு.கந்தையா நீலகண்டனின் தற்துணிவு எங்களை கைதூக்கிவிட்டது. உத்தமர்கள் என்றும் சாவதில்லையே ஐயா. உங்கள் புனித ஆன்மா சிவன் திருவடிகளில் தங்கி ஆனந்தத்தில் திளைக்க வேண்டி இரந்து நிற்கின்றோம்.


**வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன்**

தலைவர், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம்

உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்



# மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினரின் நினைவுப்பகிர்வு

"செயற்கரிய செய்வர் பெரியர்", எனவும், "அந்தணர் என்போர் அறவோர்", என்றும்: திருவள்ளுவர் மொழிந்துள்ள மறை வாக்குகளை உரைகல்லாகக் கொண்டு: அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் ஆற்றிய சமய, சமூக, அறப்பணிகளை நோக்குமிடத்து: அப்பெருமகனார் பெரியார் ஆகவும் அறவோர், அந்தணர் ஆகவும்: சமுதாயத்தில் உயர்ந்து நிற்பதை உணரமுடிகின்றது. மனதநேயம், ஆன்மநேயம் இரண்டும் அப்பெரியாரின் இருகண்கள் போன்றவை.

மனிதர்கள் அனைவரையும் எவ்விதவேற்றுமைகள் கருத்து வேறுபாடுகள் பாராட்டாது, நேசித்தல், அன்பும் கருணையும், செலுத்துதல் மனித நேயம் எனப்படுகின்றது. எல்லா உயிரினங்கள் மீதும், அருள் உள்ளத்தோடு, அன்பும் கருணையும் கொண்டு பாதுகாத்தல், ஆன்ம நேயம் ஆகும் என்பது இந்து தர்மம் காட்டும் வாழ்க்கை நெறி.

இந்து சமயத்தவர், சமய சேவைக்கே முக்கியத்துவம் வழங்குபவர்கள்: சமூக சேவைக்கு இடமளிப்பதில்லை என்ற குற்றச்சாட்டுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பணிகள் செயற்பாடுகள் மூலம், முற்றுப்புள்ளிவைத்த பெருமகனார் அதன் கௌரவ பொதுச் செயலாளராகவும் அதன் தலைவராகவும் பல ஆண்டுகள் தமது உடல் பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துப் பணியாற்றிய அமரர் கந்தையா நீலகண்டன். "இந்துவாக வாழ்வோம், இந்து தர்மம் காப்போம்" எனபது அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மகுடவாசகம்.இம்மகா வாக்கியத்திற்கு உயிர்ப்புக் கொடுத்து, அதனைச் செயற்படுத்திக் காட்டிய தனிப்பெருந்தலைவரும் ஆவார்.இது வெறும் புகழ்ச்சிக்காக ஒருவரின் மறைவுக்குப் பின்னர் கூறப்படும் வெற்றுரையோ, புகழுரையோ அன்று இது உண்மை.

அமரர் கந்தையா நீலகண்டனின் தலைமைத்துவம் போற்றுதற்குரியது. அவர் ஒரு செயல் வீரர், கர்மயோகி, சொல்வதைச் செய்பவர், செய்யக்கூடியவற்றையே செய்வதாக வாக்களிப்பவர். அந்த வகையில் ஆன்மீகப் பண்புகள் நிறையப் பெற்றவர்.

முழு முதற்கடவுள் சிவபெருமான் எமது இறைவன். இறைவன் என்ற சொல்லுக்கு தலைவன் என்று பொருள். தலைவன் எப்படி இருக்க வேண்டும், தலைமைத்துவம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைத் தமது அருட்செயல் மூலம் உணர்த்தி, வழிக்காட்டியுள்ளார். ஆலகால விஷத்தை தாம் உண்டு, தேவர்களை காத்த வரலாறு இதற்கு உதாரணமாகும்.

ஒருமுறை தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் எடுப்பதற்கு திருப்பாற்கடலைக் கடைந்தனர். அமிர்தம் உண்டவர்களைச் சிரஞ்சீவிகளாக மரணமின்றி உயிர்வாழச் செய்யும் சஞ்சீவியாகும். அப்பொழுது திருப்பாற்கடலிலிருந்து முதலில் வெளிவந்தது ஆலகால விஷம் அமிர்தம் அல்ல. ஆலகால விஷம் அகில உலகத்தையும் மற்றும் அண்ட சராசரங்களையும் கண நேரத்தில் அழித்தொழிக்கவல்லது.

தேவர்களும் அசுரர்களும் ஆலகால விஷத்தின் கடும் வெப்பத்தைத் தாங்க முடியாமல் ஓடோடிச் சென்று சிவபருமானிடம் சரண் புகுந்து, தம்மை காப்பாற்றும் படி வேண்டினர்.அவர் தனிப் பெருந்தலைவர் அல்லவா! உடனே ஆலகாலவிஷத்தை அப்படியே எடுத்துத் மது வாயினுள் போட்டு விழுங்கிவிட்டார். அருகில் அமர்ந்திருந்த உமாதேவியார் தமது திருக்கரத்தால் சிவனின் தொண்டையை அழுத்திப்பிடித்தார். ஆலகாலம் தொண்டைக்குள் நின்றுவிட்டது.அதனால் கண்டம் நீலநிறமாகியது. ஆலமுண்ட நீலகண்டன் என்ற திருநாமத்திற்குரியவர் ஆனார். தேவர்களும் அசுரர்களும் காப்பாற்றப்பட்டனர்.சிவபெருமான் அனைத்துலகின் தலைவர் என்ற முறையில் துன்பங்கள் இன்னல்களைத் தாம் ஏற்றுக்கொண்டு, இன்பங்கள் இனியன ஆகியவற்றைத் தம்மால் பரிபாலனம் செய்யப்படுகின்ற தேவர்கள், அசுரர்கள், தொண்டர்கள் மற்றும் அனைத்து மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்களுக்கு வழங்கினார். இவ்வருட செயல் மூலம் தலைமைத்துவம் என்றால் என்ன? ஒரு நிறுவனத் தலைவரிடம் இருக்க வேண்டிய தலைமைத்துவப் பண்புகள் எவை, அவை எவ்வாறு அமைய வேண்டும் என்பனவற்றைக் கோடிட்டுக் காட்டியுள்ளமை நோக்கற்பாலது.

"அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி" என்பது மூத்தோர் வழங்கிய அமுத மொழி தமக்கோ, பிறர்க்கோ, பிற உயிரினங்களுக்கோ வருகின்ற துன்பங்கள், கஷ்ட நஷ்டங்களை முறையான பரிபாலனத்தின் மூலம் வரமுன் அறிந்து தடுப்பதும் வந்த பின் நீக்க வழிவகைகளைக் கண்டறிந்து உதவுவதும் சிறந்த தலைமைத்துவத்திற்கு அணிசேர்ப்பவை.அமரர் நீலகண்டனின் தலைமைத்துப்



பண்பு நலம் முகாமைத்துவத்திறன் அவை நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்கி நடத்தும் பண்புத்திறன் பொருத்தமானவர்களை உரிய பதவிகளில் அமர்த்தி நிறுவனத்தை தளம்பலின்றி நடத்திச் செல்லுகின்ற வல்லமை, விடயத்தை விளங்கிக் கொள்கின்ற ஆற்றல் பிரச்சினைகள் எழும் போது அவற்றை சுமுகமாக எதிர்கொண்டு தீர்வு காணும் முறைமை, நடவு நிலைமை, நேர்மை, நேரமுகாமைத்துவத்திறன் போன்ற நற்பண்புகள், மனிதத்துவம், நாவன்மை, போன்ற நல்லனவெல்லாவற்றையும் தமதாக்கிக்கொண்டு அவற்றை சமயப்பணிகள் சமூகப்பணிகளில் முதலீடு செய்து பெரும் வெற்றிகண்ட பெருமகனார் அமரர் கந்தையா நீலகண்டன் ஆவார்.

திருக்கேதீச்சரம் திருப்பணிச்சபை, இந்து வித்தியா விருத்திச்சங்கம் ஆகியவற்றின் கௌரவ தலைவராக விளங்கியவர். சட்ட வல்லுநரான உயர்திரு நீலகண்டன், சட்ட நிறுவனத்தின் தலைவராகவும் பணிபுரிந்தவர்.யாவற்றிற்கும் மேலாக சிறந்த குடும்ப தலைவர் ஆகவும் மிளிர்ந்தவர். அன்னாரின் மறைவு வீட்டுக்கும் நாட்டுக்கும் இந்துக்களுக்கும் அன்றி மனித சமுதாயத்திற்கே பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா அவர் வணங்கும் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத தில்லை நடராஜ பெருமானின் திருவடி நிழலில் சாந்தி பெறுவதாக எனப் பிரார்த்தனை செய்வோமாக!

**குமாரசாமி சோமசுந்தரம்**

அறங்காவலர் சபை உறுப்பினர்

அகில இலங்கை இந்து மாமன்றம்



# மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் நினைவுப்பகிர்வு..
# சைவத்தின் பெரும் காவலன் நீலகண்டன்

எமது ஈழமணி திருநாட்டில் சைவத்தினையும், தமிழையும் பாதுகாக்க காலா காலங்களில் பலர் பிறந்துள்ளனர் அந்த வகையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் காட்டிய சைவத்தமிழ் பாதையை எம் சைவ தமிழ் மக்களுக்கு உணர்த்தி வழிப்படுத்திய பெருமகன் அமரர் கந்தையா நீலகண்டன் ஆவார்.

இவர் சிறந்த சட்டதரணியாக விளங்கியதுடன் தமது குடும்பத்தையும் சட்ட வல்லுனர்களாக உருவாக்கி தமது நற்பண்பு மிக்க துணைவியாருடன் இல்லறத்தினை நல்லறமாக நடாத்தி எமது தமிழுக்கும் சைவ சமயத்திற்கும் தொண்டாற்ற தொழில் கடமை அதிகமாக இருந்த நிலையிலும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளராகவும், இறுதிக் காலத்தில் அதன் தலைவராகவும் திருக்கேதீஸ்வரர் ஆலய திருப்பணி சபையின் தலைவராகவும், மனிதநேய அமைப்பின் செயலாளராகவும் இன்னும் பல சமய, சமூக அமைப்புக்களிலும் தாம் இணைந்து மாபெரும் பணியை இம் மண்ணில் புரிந்த பெருந்தகை ஆவார் இவரின் புனித ஆன்மா மண்ணுலகில் இருந்து விண்ணுகை சென்றுள்ளது என்ற செய்தி எங்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

எங்களுடன் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் அமரர் நீலகண்டன் அவர்கள் எனது அரசியல் வாழ்வில் ஒரு ஆலோசகராகவும் செயற்பட்டார் அதுமட்டும் அன்றி எங்களது மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பணிகளை மேம்படுத்துவதில் இவரின் பங்கு இன்றியமையாததாக இருந்தது. மட்டக்களப்பு மாவட்டம் சுனாமியாலும், யுத்தத்தாலும் ஏனைய இயற்கை அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்ட போது உடனடியாக பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்களுக்கு அகில இலங்கை இந்து மாமான்றம், மனிதநேய அமைப்பு இவைகளினை பயன்படுத்தி அம்மக்களுக்கான அவசர அவசிய உதவிகளை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஊடாக வழங்கியவர் இவர் ஆவார்.

அதுமட்டும் அன்றி பல்கலைக்கழக வறிய மாணவர்களுக்கான நிதி உதவிகள், வறிய மாணவர்களுக்கான கல்வி உபகரண உதவிகள், வறிய மக்களுக்கான அவசர சத்திர சிகிச்சை உதவிகள் போன்றன இப் பெருந்தகையின் நடவடிக்கையால் எமது மாவட்ட மக்கள் பெற்ற பெருதவிகளாக திகழ்கின்றது. அத்தோடு மலையகத்தில் அண்மையில் கொஸ்லந்த, மீரியபெத்த பகுதியில் மண்சரிவு ஏற்பட்டு அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்ட வேளையில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல் முதலாக அவர்களது அவசர தேவைகளை நிறைவேற்ற உதவியை வழங்க தமது தலைமையில் உள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுத்தவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் என்றால் மிகையாகாது.

மேலும் தில்லை நடராஜர் மீது அயராத பக்தி உணர்வு மிக்க அமரர் நீலகண்டன் அவர்கள் எமது சைவ சமயம் மேம்பட நாடு முழுவதும் சென்று ஆன்மீகப்பணியினை மேற்கொண்டவர் எமது சமயத்திற்கு பாதிப்பு தோன்றும் வேளை உடனடியாக அதற்கு குரல் கொடுத்து நடவடிக்கை எடுத்த பெருமை மிக்கவர். சிறந்த ஆளுமையும் தலைமைத்துவ பண்பும் செயற்திறனும் மிக்க இவர் இன்நாட்டில் நீதித்துறையின் மேன்மையை பாதுகாக்க நியாயத்தின் பக்கம் நின்று தமது சட்ட திறனை பயன்படுத்தி வாதாடிய தமிழ் உணர்வாளர் என்பது வெள்ளிடைமலையாகும். இவரது சேவையினை அளவிட முடியாதாயினும் இவர் தமது பிறப்பின் நோக்கினை இம்மண்ணில் நிறைவேற்றி ஒரு பக்குவப்பட்ட ஆன்மாவாக பூதவுடல் நீத்து புகழுடலுடன் விண்ணுலகினை அடைந்த நிலையில் இவரது ஆன்மா மீண்டும் பிறவாமை என்னும் சிவசாயுச்சிய பேறினை அடைய வேண்டும் என இறைவனை பிராத்திக்கின்றேன். இவ்வேளை உடல் நிலையற்றது என்ற உண்மையினை உணர்ந்து இவரது உறவுகள் இவரினது பிரிவின் துக்கத்தில் இருந்து விடுதலைபெற வேண்டும் எனவும் இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**சீ.யோகேஸ்வரன்(பா.உ)**

தலைவர்- மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை

தலைவர்-கிழக்கு இந்து ஒன்றியம்



# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நினைவுப்பகிர்வு
# இலங்கை வாழ் இந்துக்களின் உரிமைக்குரல் ஓய்ந்துபோயிற்று

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களது மறைவு இலங்கைவாழ் இந்துச் சமூகத்திற்கு நிவர்த்தி செய்துகொள்ள முடியாததொரு பேரிழப்பைத் தந்துள்ளது.

இவர் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவராக, திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையின் தலைவராக, இந்து வித்தியாபிவிருத்திச் சங்கத் தலைவராக, இலங்கை சட்டத்தரணிகள் சங்க உபதலைவராக, கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவராக, உறுப்பினராக, இலங்கை மனித நேய அமைப்பின் செயலாளராக, இனப் பிரச்சினைக்கு இணக்கம் காணும் குழு உறுப்பினராக இருந்து சிறப்பு மிக்கதோர் பணியாற்றியதோடல்லாமல் சிறுவர் இல்லங்களுக்கான மனிதநேய உதவிகள், வறிய பல்கலைக்கழக மாணவர்களின் முன்னேற்றத்திற்கான உதவிகள், வடக்குக்கிழக்கு போர்க்காலச் சூழலிற் பாதிக்கப்பட்ட வேளையில் நல்கிய வாழ்வாதார உதவிகள் எனச் சிறந்ததோர் சமூகத் தொண்டனாக வலம்வந்ததோடல்லாமல் இந்து மதத்திற்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராக மட்டுமன்றி நாட்டில் நடைபெறும் பல்வேறு முரண்பாடுகளுக்கு எதிராகவும் துணிவோடு கண்டனம் வெளியிடுவதோடுமட்டும் நின்றுவிடாது ஆக்கபூர்வமானதொரு முடிவு கிடைக்கும்வரை தன்னை அர்ப்பணித்துப் போராடும் மனவுறுதி கொண்டவராகவும் விளங்கினார்.

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் செயற்பாடுகளையும் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் சேவை மனப்பாங்கினையும் பிரித்துப் பார்க்க முடியாதளவிற்கு இரண்டும் ஒன்றிப்போயிருந்தன என்பது மறுப்பதற்கில்லை.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வளர்ச்சிப் பாதையிற் பக்கபலமாக நின்று செயற்பட்டதோடு, திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற் திட்டங்களில் நிறுவன ரீதியான அனுசரணைகள் பலவற்றை வழங்கியமையையும் இக் கணத்தில் நினைவு கூர்கின்றேன்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கான இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தைக் கொழும்பில் சேர்.பொன். இராமநாதன் பயிற்சி நிலையம் என்னும் பெயரிலும் கிழக்கு மாகாணத்திற்கான இந்து சமயக் கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தைச் சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலையம் என்னும் பெயரிலும் ஆரம்பித்து வட மாகாணத்திற்கான இந்துசமய கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தைச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையம் என்னும் பெயரில் 15.12.2017 அன்று ஆனைப்பந்தியிலுள்ள வடமாகாணப் பிராந்திய அலுவலகத்தில் ஆரம்பித்துப் பயிற்சிகள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடாத்திக்கொள்ளப் போதிய இடவசதியின்மை காணப்பட்டபோது கந்தையா நீலகண்டன் அவர்கள் 'யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள அகில இலங்கை இந்துமாமன்றத்திற்குச் சொந்தமான கட்டடத்தை இந்த நல்ல காரியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்று கூறிய வார்த்தைகளை இந்த நினைவுப்பகிர்வு மலரிற் பகிர்ந்துகொள்கிறேன்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப்பாடசாலைகளை அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டமூடாக அபிவிருத்தி செய்த வேளைகளிற் தாமாக முன்வந்து அகில இலங்கை இந்துமாமன்றமூடாக அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பரிசில்களுக்கான அனுசரணைகள் பலவற்றை வழங்கியதோடல்லாமல் மாணவர்கள் நலன்கருதி முன்னெடுத்த இந்துமாமன்றமூடான பல்வேறு செயற்பாடுகளுக்கும் திணைக்களம் சார்பான நன்றியறிதலாக இந் நினைவுப் பகிர்வு மலரிற் பகிர்ந்துகொள்கிறேன்.

**அ.உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் நினைவுப்பகிர்வு

## பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பக்கபலமாக நின்றவர்

அகில இலங்கை இந்து மாமன்றத்தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி சிவத்திரு கந்தையா நீலகண்டன் அவர்களின் திடீர் மரணம் உலகமெங்கும் வாழ்கின்ற இந்துக்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இலங்கையில் ஓர் ஆளுமைமிக்க செயல் வீரனாகச் செயற்பட்ட உன்னத மாமனிதனின் பிரிவு இன்றைய காலகட்டத்தில் இல்லாமல் போனது எமக்கு பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிய இவர், கடந்த இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற (2016,2017) சர்வதேச சைவ மாநாடுகளுக்கு வேண்டியளவு நிதியுதவிகளை வழங்கி அம்மாநாட்டின் பெருவெற்றிக்கு காரணமாக இருந்தவர். இவர் தலைவராக இருந்த காலத்தில் நடைபெற்ற பல இந்து மாநாடுகளுக்கு இந்து நாகரிகத்துறையை இணைத்துச் செயற்பட்டவர்.

எமது துறையிலே கல்வியை தொடர முடியாமல் இன்னல்களை அனுபவிக்கும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு இவர் காட்டிய ஊக்கம் எம் நெஞ்சத்தை நெகிழ்விக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிய இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கற்கைகள் பீடம் ஒன்று அவசியம் தேவை என்பதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டாரென்பது குறிப்பிடத்தக்கது.

இந்து நாகரிகத்துறையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் ஆலோசனை வழங்கிய அன்னாரின் மறைவு எமது துறைக்கு பெரும் பேரிழப்பாகக் கருதுகிறோம். அன்னாரது ஆத்மா சாந்தி பெற பார்வதி சமேத பரமேஸ்வரரின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

**தலைவர், பேராசிரியர், விரிவுரையாளர்கள், மாணவர்கள்.**



*வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள், அமரர் நீலகண்டன் நினைவுப் பகிர்வினை எழுதி எம்மிடம் சேர்ப்பித்து விட்டு 14.03.2018 அன்று இறைவனின் திருவடி நீழலைச் சேர்ந்துவிட்டார்*

# அருள்மொழி அரசியின் நினைவுப்பகிர்வு
# “திரு நின்ற கண்டன்”

உலகில் பிறக்கும் மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் குறிக்கோள்கள் வேண்டும். இலக்கு இல்லாத வாழ்வு பாறைகளுக்குப் பாய்ச்சிய தண்ணீர், பாலைவனத்தில் காய்ந்த நிலவு. ஜட வாழ்க்கை, நாம் வாழ்கின்ற ஒவ்வொரு விநாடியும் நமக்காக மட்டுமல்ல பிறருடைய வாழ்க்கையையும் வளப்படுத்தும் சிந்தனை எப்போதும் எம்முள் இருக்க வேண்டும். ஏனோ…இதனைப் பலர் நினைப்பதும் இல்லை.

" குறிக்கோளிலாது கெட்டேன்" என்பார் அப்பரடிகள். மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொரு உயிரினத்திற்கும் உயர்ந்த இலக்கு இருக்கின்றது. பசு பாலைத் தருகின்றது. மாடு உடல் இளைக்க உழைக்கின்றது. யானை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன். நாய் வீட்டைக் காக்கின்றது. சேவல் விடியலை அறிவிக்கின்றது. குதிரை பாரம் சுமக்கின்றது. இறைவனது படைப்பில் உயிர்கள் எல்லாம் தமக்காக மட்டுமல்லாது தாரணிக்காகவும் வாழ்கின்றன. பொதுநல நோக்கில் மனிதர்களுக்கு நல்வழி காட்டும் ஆசான்கள் அவைகள்.

பிறப்பால் மட்டுமல்ல இறப்பாலும் அவைகள் உயர்ந்து நிற்கின்றன. இறந்த மாட்டின் தோல் செருப்பாகின்றது. அதன் கோரோசனையும் மான் வயிற்றுக் கஸ்தூரியும் உயர்ந்த மருந்துகள். எருமையின் கொம்பு சிக்கெடுக்கும் சீப்பாகின்றது. காண்டாமிருகத்தின் கொம்பு சிறந்த அபிஷேக கலசமாகின்றது. யானையின் தந்தம் விலை மதிப்பற்ற கலைப்பொருளாகின்றது. சிங்கத்தின் பிடறி மயிர் அழகிய சாமரை. புலித்தோல் ஆடனம். இது போன்று விலங்குகள் இறந்தும் உதவுகின்றன. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் இருந்தும் உதவுவதில்லை. இறந்தும் உதவுவதில்லை.

இதற்குப் புறனடையாக வாழ்ந்தவர் அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள். தாய் சின்னத்தங்கம் தாய்ப்பாலுடன் தியாக உணர்வையும் குழைத்து ஊட்டிவிட்டாள் போலும். பெற்றோர் இட்ட "நீலகண்டன்" என்னும் பெயர், அவர் நாளும் வணங்கும் ஞானமா நடராசப் பெருமான் பெயராகவமைந்தது சாலப் பொருத்தம்.

ஆலமுண்ட நீலகண்டன் சிவபெருமான், தியாகத்தின் திருவுரு. பாற்கடலில் எழுந்த ஆலகால நஞ்சை தான் உண்டு அமரரைக் காத்தார். இச் செய்தியை சிவானந்த லஹரியில் ஆதிசங்கரரும் பேசுவார். வடலூர் வள்ளலாரும் புகழ்வார்.

"மாலெங்கே? வேதனுயர் வாழ்வெங்கே? இந்திரன் செங்கோலெங்கே? வானோர் குடியெங்கே?
கோலம் செய் அண்டம் எங்கே? அவ்வவர் அரும் பொருள் எங்கே? நினது கண்டம் அங்கே
நீலமுறாக்கால்"

(வள்ளலார்)

நீலகண்டம் தியாகத்தின் உயர் பொருள் - உயிர் பொருள் "நீலகண்டம்" என்ற உயர் சொல்லையே மந்திரமாக்கி உய்தி பெற்றவர் அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவாரகிய திருநீலகண்ட நாயனார்.

இவ்வுயர் பெயரையே தன் பெயராக்கிக் கொண்டு, அப்பெயரின் பொருளாக மற்றவர் துன்பம் பெறாது ஓடிச் சென்று உதவும் உத்தம குணமுடைய அமரர். திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் பண்பு நலன்கள் தொகுப்பின் எஞ்சும். விரிப்பில் பெருகும்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்

தம் புகழ் நிறக தாம் மாய்ந்தனரே"

வாழ்க சைவப்பெரியாரின் தொண்டு வாழ்க்கை

வளர்க அவரது வான்புகழ்.

வித்துவான்.

**திருமதி வசந்தா வைத்தியநாதன்.**



உ

# பாரதனில் இவர்க்கு நிகர் எவரோ?

-கம்பவாரிதி இ. ஜெயராஜ்-

உலகமெலாம் தன் கருணைத் திறத்தினாலே
ஒப்பற்ற தொண்டியற்றி உயர்ந்து நின்று
நிலம் புகழ பலபணிகள் நிமிர்ந்து செய்தோன்.
நிகரில்லாத் தன் நுட்பமதியினாலே
பலர் புகழச் சட்டமதைக் கையில் ஏந்தி
பாரதனில் இவர்க்கு நிகர் எவரே என்று
வளம் மிகுந்து புகழ் கொண்டோன் மண்ணும் வாட
வானோர்க்கும் துணை புரிய வையம் நீத்தான்.

ஆழமிகு பெரும் புகழோன் அரிய தொண்டால்
அனைவர்க்கும் துணைபுரிந்த அரிய செம்மல்
வேழமென நின்றேதான் பகைவர் தம்மை
வீழ்த்தியவன், அறிவதனால் பணிகள் செய்து
நாள் முழுதும் ஓயாது தொடர்ந்தே ஓடி
நற்பணிகள் பல செய்தோன் நலிந்தபோதும்
காலமதை எதிர்த்தேதான் நிமிர்ந்த வள்ளல்
கற்றோர்கள் மனம் நோக காலமானான்.

கம்பனது கழகமதை கருத்திலேற்றி
கனிந்தேதான் பலதுணைகள் செய்த ஏந்தல்
தெம்புதர எம்அருகில் திகழ்ந்தே நின்று
தேற்றங்கள் பல செய்தோன் தெளிந்து நல்ல
நம்புகிற சட்டங்கள் எமக்காய் ஆக்கி
நற்கழகம் உயர்ந்திடவே வழிகள் செய்தோன்.
தம் உயிரைத் தொண்டுக்காய் ஈந்த வள்ளல்
தரையதனை விட்டிறைவன் அடிகள் சேர்ந்தான்.

மானமுற தமிழினமும் இந்த மண்ணில்
மாண்புறவே வாழ்வதற்கு வழிகள் செய்தோன்.
ஈனமுறா இந்துமதம் எழுச்சி கொள்ள
எத்தனையோ பணிகள் தமை எடுத்துச் செய்தோன்.
தானுயர நினையாது தளரா நின்று
தரணிக்காய் தன் உயிரை ஈந்தோன் தன்னை
வானுலகம் மகிழ்வோடு தெய்வம் என்றே
வரவேற்றுப் போற்றிடுமாம் வளமை கூற.



# பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளரின் நினைவுப் பகிர்வு

# குணத்தால் நிறைந்த நீலகண்டர்

அவர் நினைத்ததை முடிக்கும் நேரியர். அப்படித்தான் கேள்விப் பட்டிருந்தேன் அவர் பற்றி. அது, உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை என்பது .. பழகப் பழகத் தெரிய வந்தது.

ஒரு கழக நிர்வாகியாய் - அகில இலங்கை இந்து மா மன்றச் செயலராய் - அவரிடமிருந்து, அழைப்பு வரும். ஒரு விழாக் குறித்து, அதில் நான் பங்கெடுக்க வேண்டிய நிகழ்ச்சி குறித்து உறுதிபட அவர் எடுத்துச் சொல்லுவார். அவர் குரலில் ஒரு கட்டளைத் தொனி இருக்கும். அது கடந்து காந்தம் இழுக்கும். பின் மறுப்பதற்கு வழியேது? நான் சம்மதம் சொல்வதும், பின் விழா அழைப்பிதழ் வருவதும், விழாவுக்கு ஓரிரு நாட்களின் முன் மீண்டும் அவரிடமிருந்து நினைவூட்டல் அழைப்பு வருவதுமாக தொடர்ந்த அந்த அதியற்புத உறவுக்கு கிட்டத்தட்ட வயது 20 ஆண்டுகள். எத்தனை விழாக்கள்! எத்தனை மேடைகள்!

இனி அந்த அழைப்பு வராதே எனும் துக்கம் - இனி அந்தக் காந்தம் இழுக்காதே எனும் துக்கம் - இனி அந்த மேடைகளிலே மடித்த சால்வையோடு ஓர் ஆளுமை உலவாதே எனும் துக்கம் நெஞ்சை அடைக்கிறது.

இந்த விழாத் தொடர்பு மட்டும்தான் அவருக்கும் எனக்குமானதன்று. இதுகடந்து என் தனி வாழ்வைப் புஸ்பிக்கவென அவர் வார்த்த நீர் சீர்மியது. எந்த நன்றிக் கடனாலும் தீர்த்துவிட முடியாத மாண்பினது.

விரிவுரையாளர் பதவி நியமனத் தேர்வுகளின்போது பல்கலைக் கழகங்கள் பலவற்றால் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்ட ஒருவன் நான். விரும்பித் தமிழ் கற்றிருந்தும், அத் துறையில் உயர் சித்தி மற்றும் பரிசில்கள் பெற்றிருந்தும் தமிழ்த் துறைகள் பாராமுகம் செய்தன. பிற பல்கலைக் கழகங்கள் கை விரித்தபோது ஏற்படாதவொரு பெருத்த வலி, பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை என்னைத் திருப்பியனுப்பியபோது ஏற்பட்டது. என்னைவிடத் தகுதியும், கல்வித் தகைமையும் குறைந்தவரை எப்படி நியமிக்கலாம்? எனும் வெப்பிகாரம் வந்து வந்து மோதிற்று. நீதி கேட்க வேண்டும் எனும் உத்வேகம் எழுந்தது. ஆனால்.. என் போன்ற சாதாரணர்க்கு இது இயலுமானதா?

அறச் சீற்றம் கொண்ட என் ஆசான் கம்பவாரிதி அவர்கள் தன் தொடர்பால், பிரபல சட்டத்தரணி சுரேந்திரன் அவர்களிடம் என்னைச் செல்லப் பணித்தார்கள். அவரிடம் சென்ற தருணங்கள் என் வாழ்வில் முக்கிய திருப்பங்களுக்கான தருணங்கள் என்பதை அப்போது நான் உணரவில்லை.

தான் எனக்காக வழக்காட இருப்பதாகச் சொன்ன சுரேந்திரன் அவர்கள், அவ்வழக்கை நீலகண்டன் அண்ட் நீலகண்டன் நிறுவனம் ஊடாகத் தாக்கல் செய்ய இருப்பதாகவும் கூறினார்கள். அந்த நிறுவனத்தின் பெயரை சட்ட உலகம் மதிக்கும். சமுதாயம் மதிக்கும். அதனால் இவ்வழக்கு கவனம்பெறும் என்றார்கள்.

அந்த அப்பொழுது அங்கு வந்தார் ஒருவர். தன் சட்ட நிறுவனத்தை; அதன் கண்ணியத்தை ; நீதி உலகெங்கும் நிறுத்தியிருந்த அந்த ஒருவர்தான் .. தொலைபேசியில் கட்டளை இடும் மா மன்ற நிர்வாகி; காந்த அன்பில் கட்டிப்போடும் பண்பாளர்; ஆம் அந்த நீலகண்டர்.



தன் புகழ்பெற்ற சட்ட நிறுவனத்தின் அலுவல்களில் தொடர்ச்சியாக மூழ்கியிருக்கும் ஒருவர், பல்வேறு காரணங்களின் நிமித்தமாகப் பலரும் நேர ஒதுக்கீட்டைக்கோரிச் சந்திக்கக் காத்திருக்கும் ஒருவர், தான் அழைத்தவுடன் வந்து பேசும் ஒரு இளம் பேச்சாளனுக்கு ஓர் அநீதி என்றறிந்ததும், நேரே சட்டத்தரணியின் இல்லத்துக்கு வந்தார். வயது வேறுபாட்டையும் பாராமல் தகுதி வேறுபாட்டையும் கருதாமல் வந்து தெம்பூட்டிய அவருடைய வார்த்தைகளில் இருந்த நம்பிக்கையும், உண்மையும் தேற்றம் தந்தன. வழக்கு எனில் அது நீளும் - பெருத்த பொருட் செலவை உண்டாக்கும் என, நீதியை நாடி மன்றேறத் தயங்கிய இளைஞனின் தயக்கங்களை துவம்சம் செய்தன அவர் வார்த்தைகள்.

உண்மையில் அவர் பெரு மனிதர். வழக்கின் ஒவ்வொரு நகர்வையும் அவர் அவதானித்தார். தன் கூர்த்த சட்ட அனுவத்தோடு செயலாற்றினார். தன் சகலரோடு சேர்ந்து நீதி வெல்வதற்கான சகலமும் செய்தார். நீதி அவர்கள் வாயிலாகத் தன் வெற்றியை நிரூபித்தது. ஆம், அவர்கள் இருவரும் இல்லையேல் எனக்கு இன்று பல்கலைக்கழக வாழ்வில்லை.

புகழ் பூத்த தன் சட்ட நிறுவனத்தினூடு வழக்கை நடாத்தியதற்காகவோ, தன் சட்ட ஆலோசனைகளுக்காகவோ அந்தப் பெருமனிதர் இளம் பேச்சாளன் இவனிடமிருந்து எந்தவொரு சன்மானத்தையும் எதிர்பார்க்கவில்லை. வழக்கை பதிவு செய்வதற்கான அடிப்படைச் செலவை மட்டும் பெற்றுக் கொண்டு, தனதும் தன் நிறுவனத்தினதுமான பொருள் வரவை சைவத் தமிழ் அறிவுலகில் ஈடுபட்டுள்ள இளைஞன் என்ற காரணம் ஒன்றுக்காக, பெற்றுக் கொள்ளாமல் தியாகித்த நீலகண்டரின் பெருந்தன்மை உண்மையில் வியப்புக்குரியது. சமுதாயத் தொடர்புக்காகத் தனி நலன்களைத் துறக்கும் இது, எமக்கு வழிகாட்ட வல்லது.

பொருள் தேடும் பூமியில் அருள் தேடிய அவர் ஆன்மா இறையடியில் இன்புறும் என்பது திண்ணம்.

"நீலமுண்ட மிடற்றினன் நேர்ந்ததோர்
கோலமுண்ட குணத்தால் நிறைந்ததோர்
பாலுமுண்டு பழனன்பா லென்னிடை
மாலுமுண்டிறை என்றன் மனத்துளே."

\- நாவுக்கரசர் தேவாரம்


**கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்**

*சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்*

அமைப்பாளர், கொழும்புக் கம்பன் கழகம்



# திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் நினைவுப்பகிர்வு
# நீலகண்டன் என்ற நிழல் தந்த நீண்ட விருட்சம்



யாழ் இந்துக்கல்லூரியில் அவருடன் ஒன்றாகப் படித்தவன் என்ற முறையிலும் பின்னர் அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளையில் இருவரும் பணியாற்றியும் இறுதியில் சில வருடங்களாக திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையில் செயலாளராக அமரர் நீலகண்டனுடன் பணியாற்றியவன் என்ற முறையில் அவருடன் நெருங்கிய நண்பனாக இறுதிவரை பழகும் வாய்ப்பு கிட்டியதன் பலனாக அவருடன் பெறப்பட்ட அனுபவங்களை உங்களுடன் சிறிதளவு பகிர்ந்துகொள்வதனால் மனதில் ஆறுதலடைகிறேன்.

கல்லூரிக் காலத்திலேயே தமிழில் வாதாடும் திறமைபெற்றவராக விளங்கினார். அதுவே அவரைப் பின்னர் சட்டக் கல்வியில் நாட்டம் கொள்ளவும் ஒரு நல்ல சட்ட வல்லுநராக திகழவைக்கவும் காரணமாக அமைந்தது. அவரது சட்ட அறிவு அவர் தலைமை வகித்த பல சட்ட, சமய, சமூக நிறுவனங்களில் திறம்பட இயங்க ஊன்றுகோலாக அமைந்தது. வெறுமனே சட்ட அறிவுடன் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாது சமயம், சமூகவியல், மொழி, அரசியல் போன்றவற்றிலும் தனது அறிவை கடின உழைப்பால் வளர்த்து ஓர் பரந்த அறிவு பொருந்திய தலைவராக தன்னை ஆக்கிக் கொண்டார். இவர் தலைமை வகித்த வேறுபட்ட பல நிறுவனங்களே இதற்குச் சான்றாக அமைகிறது.

இவர் சிவபதமடைவதற்கு முதல்நாள் மதியமளவில் இங்கிலாந்தில் இருந்து வந்த வைத்திய நிபுணர் தம்பதியினரை சட்ட அடிப்படையில் ஓர் கடிதம் வரைவதற்காக அவரிடம் அழைத்துச் சென்றேன். நீண்ட நேரம் அவர் கலந்துரையாடிய போது அவரை நன்கு அவதானித்த வைத்தியர்கள் அவரின் தேக ஆரோக்கியம் சரியாகக் காணப்படவில்லை எனக்கூறி சற்று ஓய்வெடுத்துக்கொள்ளுமாறு வற்புறுத்தும்படி என்னை வேண்டிக்கொண்டனர். அவர், கூறியபடி ஓய்வெடுத்ததாகவும் தெரியவில்லை. அவர் மறைந்தநாள் காலை எனது கணனியைத் திறந்தபொழுது தேவைப்பட்ட கடிதம் அவரால் தயாரிக்கப்பட்டு மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததை அறிந்தேன். இதுவே அவரது இறுதிச் சட்ட ஆலோசனையாகவும் அமைந்துவிட்டது.

எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும்வரை ஓயாத ஓர் அபூர்வ மனிதராக விளங்கினார் அமரர் நீலகண்டன். அவரது தலைமைத்துவப் பண்புகளில் சிறந்தன சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். எதையும் ஒரு சிறிய விடயமாக இருந்தாலும் சரி, போதிய ஆதாரமின்றி ஏற்றுக்கொள்ளமாட்டார். செயலாளர் என்ற முறையில் அதனை



பதியவும் ஒத்துக்கொள்ளமாட்டார். அதேமாதிரி தானும் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க வரும் பொழுது வேண்டிய சகல ஆவணங்களையும் தானே காவிக்கொண்டு வந்து அமர்வார். தேவையேற்படின் கேள்விகள் எழும்பொழுது உடனே ஆவணங்களிலிருந்து அதுபற்றிய விளக்கங்களை எடுத்துக்கூறி ஐயப்பாடுகளை உடனே தீர்த்துவைக்கும் வல்லமைபொருந்தியவராக விளங்கினார். இதன் காரணமாக சில வேளைகளில் அவர் தலைமை வகிக்கும் பொழுது கூட்டங்களில் காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் பரிமாறப்படும். ஆனால் அவையாவும் கூட்டம் முடிவடையும் வரைமட்டும்தான். அதன்பின் அதை மறந்து சகஜமாகப் பழகுவார். சகலதையும் சரிபார்த்துக் குறிப்பிட்டவிடயம் சரியானதென அவர் மனதில் உள்வாங்கிக்கொண்டால் அதனை எதிர்ப்பவர் யாராகவிருந்தாலும் வாதாடி தனது அல்லது தனது கட்சிக்காரர் நிலைப்பாட்டை தப்பவைத்துக்கொள்ளும் பண்பு வியக்கத்தக்கது. இந்திய அரசாங்கத்துடனான மகாமண்டபம் அமைப்பதற்கான பணி ஆரம்பமாகும்பொழுது இந்திய மத்திய அரசாங்கம் சார்பில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகமும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், சிவன், அம்பாள் விமானங்களும், சுற்றுப்பிரகார சந்நிதிகளும் கருங்கல்லினால் அமைக்க இந்தியாவில் புகழ்பெற்ற ஸ்ரீ வைத்தியநாத ஸ்தபதி அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கும் திருப்பணிச்சபைக்கும் இடையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தம் ஆகியனவற்றைத் தயாரிப்பதிலும் அதனை நிறைவேற்றுவதிலும் அமரர் நீலகண்டன் அவர்கள் ஆற்றிய அரும்பணியைச் சகலரினதும் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இருநாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தமாகையினால் இரவுபகலாக பல சட்டநுணுக்கங்களை ஆராய்ந்து இவ்விரு ஒப்பந்தங்களையும் திருப்பணிச் சபைக்கு எவ்வித செலவுகளும் இல்லாமல் திறம்படக் குறுகியகாலத்தில் நிறைவேற்றித் தந்ததை யாராலும் மறக்கமுடியாது.

கடைசியாக நடந்த ஆட்சிக்குழுக் கூட்டத்தில் சிலர் அவரது தேகஆரோக்கியநிலையைக் கருத்திற் கொண்டு தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள நிர்ப்பந்தித்தபொழுது தானெடுத்துக் கொண்ட கோவில் புனருத்தாரண திருப்பணி முடியும்வரையும், அதைக் கொண்டுநடாத்தி முடிக்கும் தார்மீகப்பொறுப்பு தனக்குண்டு எனவும் அது முடியும்வரையும் தன்னைப் பதவியிலிருக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதும் சகலரும் அதை ஆமோதித்தனர். ஆனால் இறைவனோ அவரை அதற்கு முன்னதாகவே தன்னிடம் அழைத்துக்கொள்ளத் தீர்மானித்துவிட்டது ஏனோவென்று எமக்கு விளங்கவில்லை விளங்கிக்கொள்ளமுடியவுமில்லை.

முன்பந்தியில் குறிப்பிட்டது போன்று அமரர் நீலகண்டனிடமிருந்த சட்டம், சமயம், சமூகம், சரித்திரம், மொழி, அரசியல்பற்றிய பரந்த அறிவு, தலைமைத்துவ இயல்புகள், நுணுக்கமாக விடயங்களை ஆராயும் பண்பு, நினைத்ததை செய்துமுடிக்கும் வல்லமை இவையாவையும் அவரை பலருக்கு நிழல்கொடுக்கும் விசாலமான விருட்சம்போல், ஒரு தனிமனிதனாக அல்லாமல் ஒரு பன்முகசேவைகள் வழங்கும் நிறுவனம்போன்று திகழ்ந்தவர். நாம் இப்படிப்பட்ட சக்திவாய்ந்த நிறுவனத்தை இழந்து நிற்கிறோம். ஈடுசெய்வது மிகவும் கடினம். இறையருளும் அவரது ஆசியும்தான் எமக்குத் துணைபுரியவேண்டும்.

இறுதிக்காலங்களில் சுகவீனமுற்று வைத்தியசாலையில் இருந்து வேளையிலும், திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண திருப்பணி வேலைகளையே இருபத்தி நான்கு மணிநேரமும் அவரது சிந்தனையிலிருந்ததை எம்மில் சிலர் கண்கூடாகக் காணக்கூடியதாகவிருந்தது. அவரது இறுதி அஞ்சலி நிகழ்வில் யான்கூறியது போல் நாம் யாவரும் ஒற்றுமையாகவிருந்து எடுத்த இந்தக்கோவில் கைங்கரியத்தை செவ்வனே குறிப்பிட்டகாலத்தினுள் செய்துமுடிப்பதே அவரது ஆத்மா சாந்தியடைய நாம் செய்யக்கூடிய காரியமாகும்.

"புல்லினால் ஐந்து கோடி புது மண்ணால் பத்துக் கோடி சொல்லுமா ஞாலம் தன்னில் செங்கல்லால் நூறு கோடி அல்லியங்கோதை கேளாய் அறனுறை ஆலயத்தை கல்லினால் செய்வித்தோர்கள் கயிலைவிட்டு அகலார் அன்றே"

என்ற திருப்பதிகத்தில் கூறியதற்கமைய அவரது ஆத்மா, ஸ்ரீகௌரி அம்பாள் இணை திருக்கேதீச்சரநாதர் திருவடியின்கீழ் சாந்தியடையப் பிரார்த்தித்து முடிக்கின்றேன்.

**செல்வரெத்தினம் இராகவன்**

தலைவர், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை



# இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் நினைவுப்பகிர்வு

## கொழும்பில் இந்துக் கல்வி மறுமலர்ச்சிக்கு மெருகூட்டிய அமரர் கந்தையா நீலகண்டன்

1951ம் ஆண்டு 24 இந்துப் பெரியார்கள், எமது பிள்ளைகள் கொழும்பில் இந்துப் பாரம்பரியத்தில் கல்விகற்க வேண்டுமென்பதற்காக இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தை அமைத்து ஒரு சில நாட்களில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியையும் இரத்மலானை இந்துக் கல்லூரியையும் ஸ்தாபித்தனர். இவ்விரு கல்லூரிகளும் 1961ம் ஆண்டில் தேசிய உடமையாக்கப்படும்வரை இந்து வித்தியாவிருத்திச் சங்கமே நிர்வகித்து வந்தது. மேலும் இந்து வித்தியாவிருத்திச் சங்கம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தை அமைத்து 1954ல் திறந்து வைத்து. அதனால் பெறும் வருவாயை இந்துக் கல்வி வளர்ச்சிக்காகவே செலவிட்டனர்.

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் இந்து வித்தியாவிருத்திச் சங்கதின் செயலாளராகவும் ஆளுநர் சபை உறுப்பினராகவும் 1997ல் நியமிக்கப்பட்டு அப்பதவியில் அவர் காலமாகும்வரை (18-02-2018) 22 வருடங்கள் தொடர்ச்சியாகச் சேவையாற்றியுள்ளார். அமரர் அவர்கள் இந்துக் கல்லூரிகளின் வளர்ச்சியிலும் செயற்பாடுகளிலும் மிகவும் அக்கறை செலுத்தினார். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயற்குழு உறுப்பினராக, செயலாளராக, பெற்றோராக, நலன்விரும்பியாக 24 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியதை நானும் செயற்குழுவில் அக்காலத்தில் இருந்ததால் நன்கு அறிவேன். கல்லூரியில் புலேந்திரன் கட்டடம், ஜனாதிபதி கட்டடம், பல்பரிசோதனை நிலையம், விளையாட்டு மைதான புனரமைப்பு, விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இன்னும் பலவிடயங்களில் நிதிசேகரித்து கல்லூரியில் கற்றல் வசதிகளை மேம்படுத்த அயராது பாடுபட்டார். கல்லூரியில் ஆசிரியர் பற்றாக்குறை, சிற்றூழியர் பற்றாக்குறை ஆகியவற்றை உயர்மட்ட அரச அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு தீர்த்துவைப்பதில் அமரர் வெற்றிகண்டு கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர்தின நிகழ்வில் தவறாது பங்குபற்றி கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் ஸ்தாபகர் தின உரையாற்றிய பெருமை அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களையே சேரும்.

இரத்மலானையில் இந்து வித்தியாவிருத்திச் சங்கத்துக்குரிய 0.5648 ஹெக்ரயர் காணி 1986ல் அரசுடமையாக்கப்பட்டபோது அதனை மீட்பதில் தொடர்ச்சியாகப் பாடுபட்டதால் 1999ல் அரசாங்கம் திரும்பவும் அந்தக் காணியை வழங்கியமையில் இந்து வித்தியாவிருத்திச் சங்க ஆளுநர் சபையுடன் அமரர் அவர்களின் பங்கு மறக்க முடியாதது.

இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் சரஸ்வதி மண்டபத்தினைத் தமிழ்க்கல்வி, சங்கீதம், பரதநாட்டியம், பண்ணிசை போன்றவற்றை மேம்படுத்தப் பயன்படுத்த வேண்டுமென மிகக் குறைந்த கட்டணத்தில் சில வேளைகளில் இலவசமாகவும் வகுப்புக்களை நடாத்த ஆளுநர் சபையின் அனுமதியுடன் செயற்படுத்தி வசதி குறைந்த பிள்ளைகளுக்கான தங்குமிட வசதிகளையும் குறைந்த கட்டணத்தில் கொடுத்து உதவுவதில் அமரர் மிகவும் அக்கறையாக இருந்தார்.

தமிழ்நாட்டிலிருந்து ஆதீன முதல்வர்கள் மற்றும் பேச்சாளர்கள், சங்கீத வித்துவான்கள் இலங்கைக்கு வரும்போது அவர்களைச் சரஸ்வதி மண்டபத்திற்கு அழைத்து ஆசீர்வாதம் வழங்கவும், பேச்சுக்கள், சங்கீதக் கச்சேரிகள் மற்றும் எமது மக்களுக்கு நலன் தரும் பூசைகள் ஆகியவற்றை அமரர் முன்னின்று நடாத்தியதை நாம் என்றென்றும் நன்றியுடன் நினைவுகூருவோம்.

கொழும்பில் இந்துக் கல்வி மறுமலர்ச்சியின் மையங்களாக விளங்கிய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் ஸ்தாபக சங்க பிரதிநிதியாகவும், அதன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் செயலாளராகவும், அக்கல்லூரி அபிவிருத்தி நிதியத்தின் செயலாளராகவும் கிட்டத்தட்ட 30 வருடங்களும் அதேகாலப்பகுதியில் கொழும்பு விவேகானந்த சபையின் துணைத்தலைவராகவும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளராகவும் தலைவராகவும் 27 வருடங்களுக்கு மேல் அர்ப்பணிப்பான சேவையை செய்தமையினால் கொழும்பில் இந்துக் கல்வி மறுமலர்ச்சி மையங்களின் செயற்பாடுகளை நன்கறிந்தவராகவும், எமது மக்களின் கல்விப்பணிக்கும் மற்றும் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் முகங்கொடுக்கும்போது ஆதாரங்களுடன் அரசாங்க உயர்மட்டத்தினருக்கு எடுத்துரைத்த பெருமகன் அமரர் கந்தையா நீலகண்டன் இன்று எம்முடன் இல்லை.

கந்தையா நீலகண்டன் அவர்கள் கொழும்பில் இந்துக்களின் கல்விப் பாரம்பரியத்தை தொடர ஆற்றிய அளப்பரிய சேவையை இந்துப் பெருமக்கள் என்றென்றும் நினைவுகூருவார்கள்.

**வே.கந்தசாமி**
தலைவர், இந்து வித்தியாவிருத்திச் சங்கம்



# A MESSAGE FROM THE PAST PRESIDENT HINDU EDUCATIONAL SOCIETY

## A TOWER OF STRENGTH

We all suffered a benumbing shock when the news of our leader's demise reached us on that fateful day of 18th February 2018.It was a great loss not only to the near & dear ones but to the entire community.A vacuum that cannot easily be filled.

Having had the great opportunity to work with him at the Colombo Hindu Educational Society,for more than a decade,I was astonished by his sheer capacity & ability to handle many a subjects simultaneously.As a key office bearer,he was deeply involved in the administration of All Ceylon Hindu Congress,Thirukeetheeswaram Temple Restoration project,Hindu Educational Society ,Indo-Sri Lanka Society and many many more Religious & Social Organisations.All this were in addition to his professional life as one of the leading lawyers in Sri Lanka.

His ready response to extend all possible assistance to the needy during natural or man made calamities was well known. We remember the way he initiated action to have collection centres for dry rations,cloths,stationery etc and dispatched lorry loads to affected areas.

His contribution towards Religion & Language will always be remembered by our community.He was the first to voice objections whenever there were incidents hurting the feelings of Hindus or the Tamil community.His courage & determination were his strength and that brought relief to many a problem.

He was responsible in getting several writers to get their works on matters of Religion and Language to print.Late "Neela" was the source of motivation to many such authors to get their writings published in book form for the benefit of our community in general.

His wings were not confined to Sri Lanka only.His name was well known among the Tamil Community domiciled in every country of the globe.His journeys reflected on the needs of our people who suffered immensely due to the internal strife which lasted for almost three decades.It opened several avenues of help & support to the affected.

He was also instrumental in organizing & providing assistance to needy students and under graduates not only by way of scholarships but also by providing Lap Tops and other requirements to enable them to achieve their goals in their respective fields.

I consider it as appropriate to mention at least one such instance to illustrate his readiness to extend a helping hand to all deserving cases. In this case he came forward not only to support the stay of a student in the Ladies Hostel run by the Hindu Educational Society but also helped her to reach her ultimate goal of becoming a Medical Professional.

His ability in setting Goals & selecting appropriate Teams to work towards the said goals coupled with his dedication to work for the upliftment of the community & the Religion were his hall mark of success.

"Getting together is beginning" "Keeping together is Progress""Working together is Success" –Henry Ford Jr. How true it is? The life & deeds of Late Neela is a shining example of team work.He was an excellent leader who fought injustice from any corner.We have lost him but the memory of his selfless service to the community,religion & language will remain alive forever in the hearts of everyone .

*S.Ramachandran*
Past President,
Hindu Educational Society,
Colombo.



## கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் நினைவுப்பகிர்வு

## 'இயங்கு சக்தியாக' திகழ்ந்த திரு. நீலகண்டன்

இவ்வுலகில் பிறந்தவர்கள் யாவருமே இறப்பார்கள் என்பதே இயற்கை நியதி. 'அரிது அரிது மானுடராகப் பிறத்தல் அரிது' என மானுடப்பிறப்பின் அருமையை அடித்தடித்துச் சொன்னாள் ஔவைப்பிராட்டி. கிடைத்தற்கரிய பிறவியான இம்மானிடப்பிறவி வாய்த்தவர்கள் எதுவும் செய்யலாம், எப்படியும் வாழலாம், என்ற சர்வசுதந்திரமும் மிக்க இப்பூமியிலே தத்தமக்கென வாழும் சில அறநெறிகளை வகுத்துக் கொண்டு சமுதாய உள்ளுணர்வோடு சில நியதிகளைக் கடைப்பிடித்து வாழத்தலைப்படுகின்றவர் சிலர். இத்தகைய முறையில் வாழ்வை மேற்கொள்வோரையே திருமறை தந்த வள்ளுவர்ப் பெருமகனார் "வைத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்து வைக்கப்படும் என அர்த்தப்படுத்திக் கூறியுள்ளார்.

மானுடதர்மத்தின் நியதிகளைக் கைக்கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்த பெரியோர்களோடு வைத்து எண்ணப்படக் கூடியவர்களுள் ஒருவரே அண்மையில் திடீரென எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து இயற்கையோடு இணைந்து கொண்ட பெரியார் திருமிகு கந்தையா நீலகண்டன் அவர்கள்.

இப்பெருமகனை ஒரு தனிமனிதராகவோ; புகழ்பூத்த சட்டத்தரணியாகவோ; சமய-தாய்மொழி-இனப்பற்றாளனாகவோ; அல்லது ஒரு ஸ்தாபனமாகவோ மட்டும் கருதி மதிப்பிடுவது அவரது செயலாற்றலுக்குப் போதாது; அவரை ஒரு இயங்கு சக்தி என்று குறிப்பிடுவதே மிகவும் பொருத்தமானது என்றே கருத வேண்டி இருக்கின்றது.

உயர்ந்தோர்; கற்றறிந்தோர்; பெரும் பதவிகளைத் தாங்கயிருப்போர் என்ற மேல்மட்ட மக்களுடன் மாத்திரமன்றி இவரது ஊடாட்டங்கள் அநாதைகள், அவலமுற்றிருப்போர், ஏதிலர் போன்றோருடனும் கூட ஒன்றினைந்து ஊடாடி அவர்களது இன்னல்களைத் தீர்த்து வைப்பதில் பெரும்பங்காற்றியவர்.

சமயம், இனம், மொழி, நாடு, சமுதாயம், என்றபவற்றை உயிருக்கு உயிராக நேசித்ததோடு அவற்றின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டுக்காகவும் ஒத்த மனப்பாங்குடையோரையும் தன்னோடு இணைத்துக் கொண்டு ஓய்வொழிச்சல் இன்றி இயங்கிக் கொண்டே இருந்த இந்த இயக்கசக்தி தனது இயக்கத்தை திடீரென நிறுத்திக் கொண்டதென்றால் அதன் பலாபலன் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை தெளிவுபடுத்த சொற்களே இல்லை எனலாம்.

தான் மாத்திரமே மேல்நிலை அடைந்தால் போதும் என்ற தன்னலமே எங்கும் தலைதூக்கியிருக்கும் இக்கால கட்டத்திலே பிறருடைய வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் கூட தானே முன் வந்து உதவும் மனப்பாங்கு இவரிடம் நிறையவே உண்டு . இப்படியே நம் நாட்டில் உள்ள சமய சமூக நல மன்றங்கள் சங்கங்கள் போன்ற அமைப்புக்களுக்கெல்லாம் அவை பல்வேறு காரணங்களால் இயங்கமுடியாத அவலநிலை எய்தியிருந்த போதெல்லாம் இந்து மாமன்றம் மூலமாகவும் தனது தனிப்பட்ட செல்வாக்கின் மூலமாகவும் இடர் களைந்து உதவுவதில் முன்னணி வகிக்கும் மேன்மையான குணம் பொதுப் பணியில் ஈடுபட்டிருக்கும் எல்லோருக்கும் வாய்த்துள்ளதென கூறமுடியாது.

இந்து மாமன்றத்தின் ஒருமைப்பாட்டிற்கும் வளர்ச்சிக்குமாக ஏராளமான செயற்பாடுகளை முன்னெடுத்ததுமல்லாமல் ஏனைய சமூதாய சமய நல மன்றங்கள் உருவாக உதவியதோடு அவை ஒழுங்காகவும் வெற்றிகரமாகவும் இயங்குவதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்தி பக்கபலமாக இருந்தார். போற்றற்குரிய இப் பண்புகளினால் பெருமைக்கும் பலரது பாராட்டுகளிற்கும் புகழுக்கும் உரியவராக திகழ்ந்தார்.

கொழும்பு மநாகரிலே இந்துப் பெண்களுக்கான அமைப்பென்று இல்லாத குறையை 1965 ஆண்டு தாபிக்கப்பட்ட கொழும்பு இந்து மகளிர் மன்றம் நிறைவு செய்து இயங்கி வந்தது. ஆனாலும் 1983ல் நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரம் காரணமாக ஏற்பட்ட வன்செயல்களால் செயலிழந்து முடங்கிக் கிடந்தது. அதனை அப்படியே குலைந்து போகவிடமால் மீளமைப்பு செய்வதற்காக எம்மன்ற அங்கத்தவர்களைத் தேடி ஒன்றினைத்து நாம் செயற்பட முன்வந்தபோது எம் மன்றத்துக்கு வலது கரமாகவிருந்து ஆக்கபூர்வமான



பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து உதவியதை நாம் நன்றியோடு குறிப்பிட்டே ஆக வேண்டும். பொருளாதாரத்தில் நம் மன்றம் வெகுவாக பின்தங்கியிருந்த வேளையில் விகாரமாதேவி பூங்காவில் நாம் ஏற்பாடு செய்த "ஜனரஞ்சக மேளா" என்ற விற்பனை நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்த மனப்பூர்வமாக அவர் தந்த அனுசரணையை நாம் என்றுமே மறக்க முடியாது. இதே போன்று எமது மன்ற வளர்ச்சிகான தேவையின் போதெல்லாம் எப்பெப்போ இப்பெரியாரின் உதவியை நாடினாலும் முகம் சுளிக்காமல், மனம் கோணாமல் எமக்கு போதிய ஆதரவு நல்கியவர். எம் மன்ற நிகழ்ச்சிகள், விழாக்கள், கண்காட்சி, விற்பனை போன்றவற்றை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்து சிக்கலின்றி மேற்கொள்ள உதவி எம்மை உற்சாகப்படுத்தியமைக்கு என்றும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

கொள்ளுப்பிட்டி பகத்தலே வீதியில் இயங்கி வரும் 'விசாலாம்பாள் அன்பு இல்லம்' என்ற எமது முதியோர் விடுதிக்கு புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கான மின்தூக்கியை இந்து மாமன்றம் சார்பாக அன்பளிப்பாக தந்துதவியமையை இச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருகிறோம். எப்படி இந்து மாமன்றம் இந்து சமயத்திற்கும் அச் சமயம்சார் மக்களுக்கும் அவை தொடர்பான அமைப்புக்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக இருந்து ஒளியூட்டுகிறதோ அதே போல இந்து மகளிர் மன்றமும் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தி பல பணிகளையாற்ற முன்வரவேண்டும் என்ற நோக்கோடு 2017ம்ஆண்டு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு நிகழ்வில் இந்து மாமன்றத்தின் மகளிர் அணியொன்றையும் எமது மன்ற அங்கத்தவர்களையும் இணைத்து செயலாற்ற ஓர் அணியை ஆரம்பித்து வைத்துள்ளார். இப்படியாக சமூகத்தின் இயங்கு சக்தியாக திகழ்ந்த திரு நீலகண்டன் அவர்கள் இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராகவும், தலைவராகவும் இருந்து ஆற்றிய பணிகளில் வைத்த ஒவ்வொரு அடியும் அர்த்தம் பொருந்தியதாகவும் ஆற்றல் மிக்கதாகவும் ஆத்மார்த்தமானதாகவும் சமய, சமூக தொண்டின் ஆணிவேராகவும் அமைந்திருந்தது என்பதுதான் அவருக்கான சிறப்பாகும்.

பல்துறையாற்றலும் அறிவும் அனுபவமும் நிபுணத்துவமும் சமய சமூக இன மொழி பற்றும் மிக்க இப்பெருமகன் மிக எளிமையான வாழ்வை மேற்கொண்டார். சாதாரண மாமன்ற செயற்குழுக் கூட்டம் தொடக்கம் ஏனைய கருத்தரங்குகள் விழாக்கள் மாநாடுகள் ஆலய திருவிழாக்கள் போன்ற எத்தகைய நிகழ்வுகளிலும் நீறணிந்த நெற்றியிலே சந்தன குங்குமப் பொட்டுடனும் வேட்டி சட்டை சகிதம் இடுப்பிலே இந்து மாமன்றம் அடையாளம் பொறித்த மஞ்சள் நிற சால்வை அணிந்து சைவ அடியாராகவே காணப்படுவார்.

தான் மேற்கொண்டிருந்த சட்டரீதியான தொழில்வழி மூலமும் இறைபணியோடும் இன மொழி நாட்டுப் பற்றோடும் தனிப்பட்ட முறையில் அல்லலுற்றிறுப்போருக்கும் சமூதாய மேம்பாட்டுக்குமே தன் வாழ்நாளை அர்ப்பணித்த இப்பெருமகனுடைய மறைவு ஈடு செய்யமுடியாத பெரும் இழப்பேதான். மனிதப் பிறவி எடுத்த ஒருவர் எத்தனையாண்டுகள் வாழ்ந்தார் என்ற எண்ணிக்கையில் பெருமையில்லை அவர் வாழ்ந்த காலத்தில் எவற்றை சாதித்திருந்தார் என்பதிலேயே பெருமையும் சிறப்பும் மேலோங்கியிருக்கும். சமூதாய நோக்கோடு வாழ்ந்த இம் மாபெரும் சாதனையாளனை இழந்து இச்சமுதாயம் வெறிச்சோடி கிடக்கிறது. இவ்விழப்பை ஈடுசெய்ய இப்பெருமகனோடு இணைந்து செயற்பட்டோர் மனம் தளராது அவர் காட்டிய பாதையில் ஊக்கத்துடன் உழைத்துப் பணி செய்ய முற்படுவதே அவரது ஆன்மா சாந்தியடையச் செய்ய வேண்டிய உதவியும் பிரார்த்தனையும் ஆகும்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**கொழும்பு மகளிர் இந்து மன்றம்**



## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நினைவுப்பகிர்வு
## தமிழின்மீது தீராப்பற்றுக்கொண்ட தக்கார்...

"தோன்றின் புகழோடு தோன்றுக" என்ற பொய்யாமொழியாரின் வாக்குக்கு இலக்கணமாக இத்தரணியில் தோன்றிய பெருமகனாக கந்தையா நீலகண்டன் அவர்களைக் காண்கின்றோம். பிறந்த பிறப்பின் பயனைக் கண்டவர்கள் ஒரு சிலரே. அவர்களில் ஒருவராக திகழ்ந்து நின்ற பெருமைக்குரியவராக வாழ்ந்து காட்டியுள்ளார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தைப் பொறுத்த அளவில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. 1989இல், சட்டம் சம்பந்தமான கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி பரிசில் பெற்ற போது அவரின் ஆற்றலை அறிந்து முன்னாள் பொதுச் செயலாளர் அமரர் தமிழ்வேள் க.இ.க.கந்தசாமி அவர்களால் கொழும்புத் தமிழ்ச் சங்க ஆயுள் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அன்று தொடக்கம் ஆட்சிக்குழு உறுப்பினராகவும், நம்பிக்கை பொறுப்பாளர் சபை உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் நீண்ட காலம் சேவை புரிந்தார். 2003 ஆம் ஆண்டு தலைவராகவும் வீற்றிருந்து சிறப்பாகப் பணி செய்தார்.

ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு கூறப்படும் கருத்துக்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கியும் வந்துள்ளார். சங்க நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன் சங்கத்தின் அபிவிருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கச் சிறந்த ஆலோசகராகவும் திகழ்ந்தார். ஆரம்ப காலத்தில் நிதி இன்றிச் சங்கம் இங்க முடியாது நிலை இருந்தபோது நூலக உத் தியோகத்தர் களின் மாதாந்தச் சம்பளத்தை அவரே வழங்கி உதவி வந்தார். மேலும் வேண்டப்படும் வேளைகளிலும் தம்மாலான நிதி உதவிகளை வழங்கி வந்துள்ளார். மாங்குளம் காணியின் முன்னேற்றகரமான செயற்பாடுகள் தற்பொழுது முன்னெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அதற்கும் உதவிகள் பல செய்யத் தயாராக இருந்தவர். இத்தகைய பல துறை சார்ந்து தமிழ்ச் சங்கத்திற்கு தமது மேலான உதவிகளை வழங்கிய ஒரு மாமலை இன்று இல்லை என்று எண்ணும் போது, எம்மால் அவர் பிரிவைத் தாங்க முடியவில்லை. அவர் நாமம் என்றும் நிலைத்து நிற்கும்.

**தம்பு சிவசுப்பிரமணியம்**
தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

## பம்பலப்பிட்டி, கொழும்பு இந்துக்கல்லூரி முன்னாள் அதிபரின் நினைவுப்பகிர்வு
## இந்து சமயத்தின் காவலன் மக்கள் சேவையாளன்
## அமரர் கந்தையா நீலகண்டன்

உலகப் பிறவிகளிலே மானிடப்பிறவி மேலானது.மானிடராகப் பிறந்த யாவருக்கும் அவர்களது வாழ்கை சுமுகமாக அமைவது அபூர்வம் . மேடு பள்ளம் நிறைந்த வாழ்க்கையில் சவால்கள் பல.ஆசையும் , பாசமும் ஒரு புறம் , கல்வியும் கடமையும் மற்றொரு புறம். இச் சவால்களைச் சமாளித்து முன்னேறுபவனே மனிதனாக மதிக்கப்படுகின்றான்.அத்தகைய மதிப்பைப் பெற்று வாழ்ந்த பெருந்தகையே அமரர் கந்தையா நீலகண்டன் பூர்வ புண்ணியத்தால் தமது வாழ்வின் பெரும் பகுதியை மற்றவர்களுக்காக சேவை செய்து அதில் மகிழ்ச்சி கண்ட புகழுக்குரியவரே அமரர் ஆவார்.நிறைவான மனிதாபிமான சிந்தனை கொண்டவர். வறியவர்களுக்கும் வசதி குறைந்த பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கும் தம்மால் இயன்ற ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்து கொடுத்த பெருந்தகை. நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது அந்தந்த பிரதேசங்களில் பாதிப்புற்றவர்களுக்கு இந்து மாமன்றம், இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் மூலம் அம் மக்களை அரவணைத்து உதவிகள் பெற்றுக் கொடுத்தவர்.அவர்களது இடர்களை நீக்க அரும்பாடுபட்டவர். இனிய சுபாவத்துடன் நட்புறவோடு ஏற்புடைய அணுகுமுறைகளோடு எல்லோரையும் அரவணைத்து இனிதே பணியாற்றியவர். அவரது அமைதியான ஆனால் ஆழமான பேச்சும் திடசங்கற்பமான சிந்தனைகளுமே அவர் சார்ந்த சங்கங்களின் செயற்பாட்டின் வெற்றிக்குக் காரணங்களாகின என்றால் மிகையாகாது .



இத்தகைய பெருந்தகை இந்துக் கல்லூரியுடன் இறுக்கமான நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்தவர்.இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் 24 பெரியோர்களால் உருவாக்கப்பட்ட இரு இந்துக் கல்லூரிகளும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் கலைக்கூடங்களாக என்றும் இருக்க வேண்டும் என்ற ஸ்தாபகர்களின் கனவைத் தொடர்ந்தும் நிறைவேற்ற வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்ட பெரியார் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள்.

நான் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு 22.07.1996 அன்று வந்து கடமையை பெறுப்பேற்றேன். 28.07.1996 அன்று பிற்பகல் 06.00 மணியளவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் அமரரும் திரு.வே.கந்தசாமியும் , திரு.எஸ்.குகதாசனும் வருகை தந்தனர்.நாம் சந்தித்த முதல் சந்திப்பில் அவர் கூறிய வார்த்தைகள் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அதாவது பாடசாலையை ஸ்தாபித்த 24 சைவப் பெரியாாகளின் கனவு இப்பாடசாலைகள் இரண்டும் கொழும்பு மாநாகரில் என்றும் சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்பதே.அதற்காக என்ன உதவி வேண்டும் என்றாலும் நாம் செய்து தருவோம் என்ற வாசகங்களே அவை.இவ்வாா்த்தைகள் அப்பெருந்தகை அவர்களது நீண்ட நாள் கனவுகள் ஆகும்.

சொன்னபடியே பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முதலாவது ஆளுகைக் குழுக் கூட்டத்தில் தீா்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்.வா்த்தக பிரமுகர்கள் , ஏனைய பிரமுகர்களை ஒரு கூட்டத்தின் மூலம் அழைத்து அவர்கள் உதவி பெற்று பாடசாலை வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்றார்.அத்தீா்மானத்தின் படி அதே ஆண்டு புரட்டாதி மாதம் 24ம் திகதி இரவுப் போசனத்துடன்(தனது செலவிலேயே) ஒரு கூட்டத்தைக் கூட்டி அதன் மூலம் பாடசாலை வளர்ச்சிக்கென கொழும்பு வாழ் மக்களை ஒன்று திரட்டி வெற்றி கண்ட செயல் வீரர்.முதல் ஆளுகைக்குழு கூட்டமே நல்ல சகுனமாக அமைந்ததைக் கண்டு நான் மகிழ்வடைந்தேன். அதனால் இந்துக் கல்லூரிக்கு கிடைத்த உதவிகளே அளப்பரியன.

இன்றைய விண்ணளாவிய எம் கல்லூரியின் புகழுக்கு இதுவே அத்திவாரமானது.

பாடசாலை நிகழ்வுகளுக்கு அழைப்பிதழ் அனுப்பினால் அந்த அழைப்பிதழை ஏற்று அதற்கு மதிப்புக் கொடுத்து நிகழ்வில் தவறாது உரிய நேரத்தில் பங்கேற்பார். ஸ்தாபகர் தின நிகழ்வுகளில் தவறாது பங்கேற்று வித்தக விநாயகர் ஆலய விசேட அபிடேகத்திலும் கலந்து கொண்டு ஸ்தாபகர் தின உரையையும் நிகழ்த்துவார். பரிசளிப்பு விழாவினை ஒரு முறை நடாத்த நிதி நிலைமை சரியில்லாது கஷ்டப்படுவதை கண்டு தேவையான உதவி செய்ததோடு மாணவர்களுக்குரிய பரிசில், கேடயங்கள், புத்தகங்களுக்குரிய பணத்தையும் இந்து வித்தியா விருத்திச் சங்கம் மூலம் வழங்கியதுடன் தொடாந்து வந்த பரிசளிப்பு நிகழ்வுகளிலும் அதனை வழங்கி வந்தார்.அவரது செயற்பாட்டுக்கு இந்து வித்தியா விருத்திச் சங்க ஆளுகைக்குழு உறுப்பினர்களும் பூரண ஆதரவு வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை, நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் உறுப்பினராக செயலாளராக இருந்து பெருந்தொண்டாற்றினார்.பாடசாலைக்கு ஒரு நம்பிக்கை நிதியம் உருவாக்க வேண்டும் என்ற அவர் மனதில் எழுந்த கருத்தை நிறைவேற்ற சகலரது ஒத்துழைப்பையும் பெற்று தனிமனிதனாக இருந்து அதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு அனுமதி பெறுவதற்காக அப்போதைய அமைச்சர் கௌரவ.ஜீ.எல்.பீரிஸ் அவர்களின் வீடு சென்று வேண்டிய விளக்கங்கள் கொடுத்து அதற்கான அனுமதியும் பெற்று அச்சபையை ஆரம்பித்ததையும் அமைச்சரிடம் சென்ற போது அமைச்சர் அவருக்குக் கொடுத்த மரியாதையையும் பார்த்து இப்படிப்பட்ட ஒரு மனிதரா என்று வியந்து பெருமிதமடைந்தேன்.எந்த இடத்துக்கு என்ன தேவைக்கு சென்றாலும் அவர் அதைச் சாதிப்பதில் வல்லவர் மட்டுமல்ல அவரைக்கண்டதும் அமைச்சர்கள் அதிகாரிகள் அவரை வரவேற்கும் பெருந்தன்மையைக் கண்டு மகிழ்வடைந்தவன் நான் அந்தளவிற்கு அவர் நாடறிந்த பெரியவராக இருந்தார்.

பாடசாலை விடயங்களில் ஏதாவது சட்டச்சிக்கல் ஏற்பட்டால் அதனை முன்னின்று தீர்த்து வைப்பார்.ஒரு முறை ஒரு ஆசிரியருக்கு ஏற்பட்ட சிறு பிரச்சினையால் நீதி மன்றம் செல்ல வேண்டி ஏற்பட்டது.தனது நிறுவனத்தின் சட்டத்தரணி ஒருவரை அனுப்பி அதனைத் தீர்த்து வைத்தார்.எந்த வித கொடுப்பனவையும் பாடசாலை, பாடசாலை சார்ந்த அங்கத்தவர் விடயங்களில் பெற்றுக் கொள்ள மாட்டார். ஆசிரியர்களிடத்தில் மரியாதையும் அன்பும் வைத்திருந்தார். சைவச் சூழலிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் அவரது இரு புதல்வர்களும் எமது கல்லூரியில் கல்வி கற்க வேண்டும் என்று தரம் 1ல் இருந்து கற்க வைத்தவர் என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இன்றும் அவர்கள் சமய நிகழ்வுகளில் பஞ்சபுராணம் படிக்கும் பழக்கத்தை விடாது கடைப்பிடிப்பது வரவேற்கத்தக்கது.



எமது பாடசாலை மாணவன் ஒருவன் நீர் கொழும்பிலிருந்து பாசாலைக்கு புகையிரதத்தில் வரும் போது 2001ல் பம்பலப்பிட்டி புகையிரத நிலையத்திற்கு அண்மையில் விசமிகள் சிலரினால் தள்ளி வீழ்த்தப்பட்டு பலத்த காயங்களுடன் பாடசாலைக்கு வந்தான்.இதனைக் கண்டு நிலமையை அறிந்த மாணவர்கள் உணர்சி வசப்பட்டு கொதித்தெழுந்த போது இதனை அறிந்த அமரர் உடனடியாக பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்பு கொண்டு கொழும்பு மநாகரத்திற்கு பெறுப்பான காவல்துறை அதிபரை அமைச்சர் உடனடியாக பாடசாலைக்கு அனுப்பி பிரச்சினைக்கு தீர்வு கண்டு கொந்தளிப்பு நிலையை அடக்க தனது பரிபூரண உதவியை நல்கினார்.பாடசாலை வரலாற்றில் ஏற்பட இருந்த கறையை இல்லாமல் செய்ய பெருமுயற்சி எடுத்தவர்.

2006 ம் ஆண்டு வேறு மூன்று பாடசாலை மாணவர்கள் எமது பாடசாலை மாணவரை பஸ்தரிப்பு நிலையத்தில் வைத்து தாக்கிய போது காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் எது வித நடவடிக்கையும் எடுக்க வில்லை இதனால் ஆத்திரமடைந்த எமது மாணவர்கள் அடுத்த நாள் பஸ்தரிப்பு நிலையத்தில் அவர்களை தாக்கிய போது காவல் துறையினர் எமது மாணவர்களை கைது செய்து காவல் நிலையம் கொண்டு சென்றனர். அப்போது அமரர் அவர்கள் உடனடியாகக் தலையிட்டு நேற்றைய பிரச்சினையை நீங்கள் சரிவரக் கையாண்டு இருந்தால் இன்றைய இந்தப் பிரச்சினை எற்பட்டிருக்காது.நீங்கள் விட்ட பிழையினாலேயே இன்று இந்தப் பிரச்சினை ஏற்பட்டது அந்த மாணவர்கள் குற்றமற்றவர்கள் எனக் கருதினால் இந்த மாணவர்களும் குற்றமற்றவர்களே என வாதாடினார். காவல் துறையினர் உடனடியாக மாணவர்களை விடுவித்தனர்.மேலும் இப்பிரச்சினை தொடராதிருக்க சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை அழைத்து கலந்துரையாடுவது நல்லது என ஆலோசனை வழங்கி விட்டு வந்தார்.

2011 வைகாசி மாதம் 15ம் திகதி எமது பாடசாலை வைரவிழா நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.அதில் நாட்டின் தலைவர் பங்கேற்க இருந்தார். பாதுகாப்புப் ஏற்பாடுகள் தீவிரமாக இருந்தன.நல்லையாதீனம் சுவாமி அந்நிகழ்வில் கலந்து கொள்ள வந்திருந்தார்.அவரை பாதுகாப்பு பிரிவினர் மேடைக்கு விடவில்லை உடனடியாக பாதுகாப்பு அதிகாரிகளிடம் அவர் எமது சைவ மதத்தின் தலைவர் அவரை தடுக்க முடியாது என்று கூறினார்.அவர்கள் மேலிடத்தின் கட்டளை இது என்றனர் .உடனடியாக கட்டளையிட்ட அதிகாரியின் தொலைபேசியின் இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அத்தடையை நீக்கி அவரை மேடையின் முன்வரிசையில் அமரவைத்தார் அமரர் நீலகண்டன்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய இன்னும் பல செயற்பாடுகளை கூறிக்கொண்டே செல்லலாம் .ஆனால் நீண்டு விடும் என்பதால் சுருக்கிக் கொள்கிறேன்.

சைவசமயத்தின் காவலனாக மொழியினதும் , மண்ணினதும் மைந்தனாக தமிழ் பேசும் நல்லுலகம் போற்றும் நாயகனாக சைவப் பணி அறப்பணிகளை தான் சார்ந்த நிறுவனங்கள் ஊடாகச் செய்து சமூகத்தை மேலாக நேசித்து வாழ்ந்த ஒரு பெருந்தகையான அமரரின் இறப்பு ஈடு செய்ய முடியாத இழப்பு.விதியின் திருவிளையாடல் இதுவென எண்ணிக் கலங்குவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா இறைவனடியில் சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி**
ஓய்வு நிலை அதிபர்
கொழும்பு இந்துக் கல்லூரி, கொழும்பு 04



# கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபரின் நினைவுப்பகிர்வு

## சைவத்தின் காவலர்...!

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் இன்று எம்மிடையே இல்லை என்று எண்ணும்போது, உலகியல் வாழ்வு அர்த்தமற்றதோ? என மனம் ஏம்பலிக்கிறது. தன் இறுதி மூச்சுவரை உடல் நலத்தைக் கருதாது சைவத்திற்காகவும் தமிழுக்காகவும் அயராது பாடுபட்டு இவ் அவனி நீத்த ஒப்புயர்வற்ற பெரியவரை நாம் இழந்து நிற்கிறோம். நாளெல்லாம் தமிழ்ப் பேச்சு பொழுதெல்லாம் சைவநினைப்பு என வாழ்ந்து மறைந்த இப்பெரியாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இலங்கை வாழ் சைவத்தமிழ் மக்களின் தவக்குறைவு என்றே நாம் இதனை எண்ணி நொந்து கொள்ள வேண்டியுள்ளது.

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் எங்கள் கல்லூரியோடும் நெருங்கிய தொடர்பு உடையவர். எனக்கு வேண்டிய எத்தனையோ ஆலோசனைகளை நான் அவரிடமிருந்து பெற்றிருக்கிறேன். ஆழ்ந்த புலமை நிறைந்த அனுபவம் நிறைந்த ஆளுமை என நான் அவரிடம் கண்டு வியந்த ஆற்றல்கள் பற்பல.

சட்ட அறிவில் அவருக்கிருந்த தேர்ச்சி என்பது சொல்லும் தரமன்று. சட்டத்துறையில், வேற்றினத்தாரும் போற்றும் வண்ணம் தன்னையும் இனத்தையும் உயர்வுற வைத்த பெருமை ஐயா அவர்களையே சாரும்.

ஆயிரக்கணக்கான சட்ட நிபுணர்களை உருவாக்கி நிமிர்வுறச் செய்த ஐயா, அவர்கள் தன் சட்ட நிறுவனத்தை மிகப்பெரும் மதிப்பிற்குரிய ஒன்றாக தனித்த நம்பிக்கைக்குரிய ஒரு ஆளுமைக் குறியீடாக தன் உழைப்பால் உயர்த்தி இருக்கிறார். இது அவருக்கு மட்டும் பெருமைதருகின்ற விடயம் அன்று தமிழினத்திற்கே உரிய ஓர் நிமிர்வு என்றுதான் சொல்ல வேண்டும்.

எங்கள் பாடசாலை விழாக்கள், நிகழ்வுகள் எதுவானாலும் நாங்கள் எங்கள் சொந்த மண்டபம் போல் எண்ணிப் பயன்படுத்தி மகிழும்படியாக எமக்கு சரஸ்வதி மண்டபத்தை எப்போதும் இன்முகத்தோடு தந்து மகிழ்பவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள்.

கொழும்பு தமிழச் சங்கம், இந்து மாமன்றம் எனப் பல சமூக தொண்டு நிறுவனங்களில் தலைமைப் பொறுப்புக்களை வகித்து தலைவராக மட்டும் நின்றுவிடாமல் தூய தொண்டனாகவும் தன்னை அர்ப்பணிக்கும் அமரர் நீலகண்டன் அவர்கள் எம் போன்றோர்க்கு மிகப் பெரும் முன்மாதிரியாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் இருந்து வந்தவர். அவரின் வாழ்நாட்பணிகள், உன்னத சேவைகள், உயர்ந்த இலட்சியங்கள் ஆகியவற்றை தொடர்ந்து நாம் நன்றியுணர்வோடு போற்றுகின்ற அதே வேளை நாமும் அவர் ஆற்றிவந்த பணிகளை முடிந்தவரை முன்னெடுக்க முன்வரவேண்டும். அதற்குரிய எல்லா வல்லமைகளையும் எல்லாம்வல்ல இறைவன் தந்தருள வேண்டும் என்று பிரார்த்தித்து, அமரர் நீலகண்டன் ஐயா அவர்களின் பிரிவால் தாங்கொணாத்துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தார்க்கும் உறவினர்கட்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்ற அதே வேளை ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வரசித்தி விநாயகரின் திருவடித்தாமரைகளைப் பணிந்து வேண்டி நிற்போமாக!

**கோதை நகுலராஜா**
அதிபர், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு - 04.



# பம்பலப்பிட்டி, கொழும்பு இந்துக்கல்லூரி அதிபரின் நினைவுப்பகிர்வு

# நீக்கமற நிறைந்த செம்மல்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை" என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு" என்ற கூற்றுக்கொப்ப அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் பெருமையுடன் உடல் நீங்கி அழியாப் பெருவாழ்வு பெற்றுவிட்டார்.நாம் பிறந்த அன்றே செல்லும் நாளும் உண்டென்று தெரிந்த போதும் அது நடக்கும் போது அந்நபர் எம்முடன் இல்லை என்பது எமக்கு துயரத்தை தருகின்றது.நம்மை விட்டு அகன்றது அவரது உருவம் தாங்கிய உடல் மட்டுமே. அந்த ஆன்மா என்றுமே அழியவில்லை என்பதை நாம் உணர்ந்தால் அந்த துயரம் ஒரு சம்பவமாக மட்டுமே இருக்கும் அவர் ஆன்மா என்றும் எம்மை வழிநடத்தும் என்பதே என் உணர்வு.

இவ்வுலகை விட்டு மறைவதற்கு சில தினங்களுக்கு முன் எமது பாடசாலைக்கு வருகை தந்த நினைவு என் மனக்கண்முன் நிறைகின்றது.12.02.2018 காலை சரியாக 7.15 மணிக்கு பாடசாலையில் ஸ்தாபகர் தினத்திற்கு வழமையான சிரித்த முகத்துடன் பாடசாலையின் வித்தக விநாயகர் ஆலயத்தில் நின்ற காட்சியும், கௌரவ அமைச்சர் மனோகணேசன் வரும் வரையும் பாடசாலையின் அலுவலகத்திற்குள் இருந்து கலந்துரையாடிய விடயமும் இன்றும் என் மனதில் அசையோடியபடியேயுள்ளது. அமைச்சரை எம்முடன் சேர்ந்து வரவேற்று ஸ்தாபகர் தூபிக்கு தானும் மாலை போட ஏறமுற்பட்டார். நாம் துணையாக நின்ற போதும், பின் மாணவ முதல்வரை அழைத்து மாலையைப் போடும்படி கூறினார். என் நிலையிலும் தளராத மனநிலை அவரிடம் காணப்பட்டதை உணர முடிந்தது. அதன் பின் நடந்த எல்லா கௌரவிப்பு நிகழ்விலும் கலந்து கொண்டு ஒரு கம்பீரமான உரையையும் ஆற்றி எமது பாடசாலை பயணிக்க வேண்டிய விடயங்களை பற்றி குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வருடங்களாக நான் பாடசாலையைப் பொறுப்பேற்றவுடன் எனக்கு ஒரு சிறந்த ஆலோசகராக இருந்ததையிட்டு நான் பெருமிதம் அடைகிறேன். நமது சமுதாயத்திற்கு கொழும்பில் உயர்ந்த தரத்தை தரக்கூடிய நவீன பௌதீக வள வசதிகளை இப்பாடசாலை விரைவாக அடைந்து விட வேண்டும் என்பதில் எம்முடன் சிறந்த வேலைத்திட்டங்களை செயற்படுத்த ஒத்தாசையாக இருந்தார்.

அந்த வகையில் எமது பாடசாலைக்கு காணிகளை தந்துதவிய பம்பலப்பிட்டி மாணிக்கவிநாயகர் ஆலய தர்மகர்த்தாவுடனும், பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் ஆலய தர்மகர்த்தாவுடனும் நல் உறவை மேம்படுத்தி தந்தார்.அவரது ஆலோசனைக்கு ஏற்ப இரண்டு வருடங்களும் அவ்ஆலய தர்மகர்த்தா அவர்களை பாடசாலையின் ஸ்தாபகர் தினத்திற்கு அழைத்து கௌரவித்து தற்போது கல்வி பயிலும் மாணவர்களுக்கும், பெற்றோரிற்கும் பழைய மாணவர்களிற்கும் தெரியப்படுத்துவதோடு தொடர்ந்தும் அவர்களுடன் நல் உறவுப்பாலத்தைபேணி வளர்க்க வேண்டும் என்றும் வழிக்காட்டினார். பாடசாலையை உருவாக்கிய இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தைப் பாடசாலையின் முழுச்செயற்பாடுகளிலும் ஒன்றிணைக்க வேண்டும் என்பதில் எம்முடன் இணைந்து செயற்பட்டார். அவரது சிறந்த கருத்துக்களையும் ஆலோசனைகளையும் நாம் தலைமேற்கொண்டு செயற்படுவதே நாம் அமரர் அவர்களிற்குச் செய்யும் மரியாதையாக இருக்கும்.

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் இப்பாடசாலையில் தனது இரு மகன்மாரையும் கல்வி பயில வைத்து இப்பாடசாலைக்கு பெரும் கௌரவத்தை அளித்திருக்கிறார். அந்த காலப்பகுதியில் கொழும்பில் பிரபல்யமான பல பாடசாலைகள் இருந்த போதும் இந்து பாரம்பரியத்தை ஒட்டி வளர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கோடு சமூகத்திற்கு ஒரு உதாரண புருஷ ராக இருந்து செய்தும் காட்டியுள்ளார்.அக்காலகட்டங்களில் அபிவிருத்தி சங்க செயலாளராக இருந்து பாடசாலைக்கு பெரும் சேவையாற்றியுள்ளார்.அத்துடன் பாடசாலைக்கு நம்பிக்கை நிதியம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் பல செயற்திட்டங்களை செயற்படுத்தியும் உள்ளார் என்பதை நான் அறியக்கூடியதாக இருந்தது.

என்னைப் பொறுத்தவரையில் இப்பாடசாலைத் தொடர்பு அறிமுகத்திற்கு 30 வருடங்களிற்கு முன்னரே அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களை நன்கு அறிவேன். யாழ்/இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் என்ற ரீதியில் பழைய மாணவர்



சங்கத்தினூடாக இவருடன் இணைந்து செயற்பட வாய்ப்புக்கிடைத்தது. எமது சங்கத்தின் செயற்கூட்டங்களை நடாத்த செயற்படுத்த ஒரு இடம் தேவைப்பட்ட இடத்தில் இந்து வித்தியாவிருத்திச்சங்கத்தில் நடாத்தலாம் என்று பெருமனதுடன் உதவினார். அக்காலத்தில் நீதியரசர் அமரர் சர்வானந்தா அவர்களுடன் சேர்ந்து யாழ் இந்துவிற்கு நம்பிக்கை நிதியத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தை எம் மனதில் உருவாக்கினார். அதன் பின் அவரது வடிவமைப்புதான் யாழ்/இந்துக்கல்லூரியின் நம்பிக்கை நிதியம். அச்சங்கம் இன்றும் கொழும்பில் நிலை நின்று செயற்படுகின்றது. என்னைப் பொறுத்தவரையில் சமய, சமூகப்பணிகள் என்றால் எமக்கு ஒரு ஆலோசகர் மட்டுமல்லாது தானே முன்னின்று ஏற்படும் இடர்பாடுகளை நீக்கி தன் கரங்கள் மட்டுமன்றி அலுவலகத்தையும் தந்துதவுவார். சட்டரீதியாக சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு அவரை அணுகினால் நிச்சயம் அது வெற்றியாகவே அமையும். அந்த வகையில் நிறுவனங்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை தனது சட்ட வல்லமையால் உடைத்தெறிந்து எமக்கு மனவலிமை தந்தார் என்பதை கூறிக்கொள்வதில் பெருமிதமடைகின்றேன்.

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் தனது வாழ்நாளில் பலரை அவர்களது திறமைகளைக் கண்டறிந்து ஊக்கம் கொடுத்து வழிகாட்டிச் சமுதாயத்திற்குப் பயன்கருதாது சேவையாற்றும் சேவையாளர்களை உருவாக்குவதில் வெற்றி கண்டவர். அந்த வகையில் நான் இந்தப்பாடசாலையைப் பொறுப்பேற்ற பின் உள்ளார்ந்த அக்கறையுடன் அவர் கூறிய அறிவுரையும் வாழ்த்தும் அவரின் எதிர்பார்ப்பு என்ன என்பதை என்னால் உணரமுடிந்தது.

அவர் காட்டிய பாதையில் சைவத்திற்கும் தமிழ் சமுதாயத்திற்கும் எம்மால் ஆன உயர்ந்த சேவையை உண்மையாய் செய்வதேயே ஆறுதலாகக் கூறுவதோடு அவர் தம் ஆன்மா பேரின்ப பேற்றை பெற்றுய்ய எம் கல்லூரியின் வித்தக விநாயகப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றேன்.

**த. ப. பரமேஸ்வரன்**
அதிபர், கொ / இந்துக்கல்லூரி, கொழும்பு 04



# நாவலர் நற்பணி மன்றத்தின் நினைவுப்பகிர்வு
# என் நினைவில் நின்ற நீலகண்டன்

"ஜீனியஸ்" அல்லது ஒரு பேரறிவாளன் - மேதாவி தோன்றுவது ஆயிரத்தில் ஒருவனல்ல, பல்லாயிரத்தில் ஒருவன். இவர்கள் தான் தோன்றிகளே இன்னொருவரால் ஆக்கப்பட்டவர்களல்ல.

மேதாவிகளின் உச்சக்கட்ட உதாரண புருஷர் ஆறுமுகநாவலர் ஒருவர்தான். அவருக்கு இணையானவர் முன்பும் இல்லை பின்பும் இல்லை.

ஒரு வகையில், மேதாவியான ஒருவர் தான் நீலகண்டன். இவர் உடுப்பிட்டி என்னும் கிராமத்தில் தனது ஆரம்ப படிப்பை தொடங்கி, பின் யாழ் இந்துக்கல்லூரியில் மேற்படிப்பையும், அதன்பின் சட்டக்கல்லூரியிலும் பயின்றார்.

2007 ம் ஆண்டில் தனிமனிதனாக புதிய கம்பனிச்சட்ட நூலாக்கத்தில் ஆசிரியராக விளங்கினார். தற்போது, கம்பனிச்சட்டம் பயில்பவர் எவர் கையிலும் இவரது இந்தப் புத்தகம் தவழ்கிறது.

பன்முகப்பட்ட செயல்வீரரான இவர், எங்கு ஓர் உயர் தாபனம் இருக்கிறதோ, அங்கு அவர் உயர்பதவியை வகித்தார்.

பல்நோக்கை கொண்ட இவரை, சிறுவர் முதல் பெரியவர் வரை எவரும் கையெடுத்து வணக்கம் செலுத்துவார்கள். சாதாரணமாக எவரையும் பணிவுடன் கவர்ந்திழுக்கும் வல்லமை படைத்தவர். இவர் வாழ்வில் சாதிக்காதது எதுவும் இல்லை.

உயர் நீதிமன்றங்கள் பலவற்றிலும் தனது சாதனையை நிலை நாட்டியவர். எமது நாட்டின் முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி திருமதி ஷிராணி பண்டாரநாயக்கவின், வழக்கில் அவருக்காக வாதாடி வெற்றியும் பெற்றவர். இன்முகம் காட்டி மற்றவர் துன்பங்களைத் துடைப்பவர் இனி இவரைப்போல் ஒருவரை நாம் காண முடியுமா? முடியாது!

இவர் சிறார்கள் நலன் கருதி, இரத்மலானையில் அவர்களுக்கு வதிவிடம், உடுபுடவை, கொப்பிகள், போன்ற பல உதவிகளைச் செய்து, அவர்களை அரவணைப்பது மட்டுமல்லாது, இந்துமாமன்ற வைபவங்கள் எப்போது எங்கு நடந்தாலும் இப்பிள்ளைகளை அந்த வைபவங்களில் பங்கு கொள்ளவும் அறிவூட்டல் பெறவும் இடைவிடாது முயன்றார்.

இந்து மாமன்றம் வெளியிட்டுவரும் கையடக்கப் பஞ்சாங்க வெளியீட்டில் என்னையும் இணைத்துக் கொண்டதோடு, கீரிமலை தங்குமிட கட்டட நிர்மாணப் பணிகளின்போது நான் உவந்தளித்த நன்கொடையையும் பெற்றுக்கொண்டமை எனக்கு பெருமை தந்துள்ளது.

"நெருநல் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு" என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைவாக, திடீரென மறைந்த பெரியாரது இழப்பை, எவராலும் நிரப்ப முடியாது. எல்லாம் வல்ல இறைவன் பாதங்களில் சேர்ந்து அவர் இன்புற்று இருப்பார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ந. கருணை ஆனந்தன்**
நிறுவுனர் - நாவலர் நற்பணி மன்றம்



## இரத்மலானை, கொழும்பு இந்துக்கல்லூரியின் நினைவுப்பகிர்வு..

# நீங்காத நினைவுகளில் நீலகண்டன் எனும் மாமனிதர்

"இன்று கொல்? அன்று கொல்? என்று கொல்? எண்ணாது
பின்றையே நின்றது கூற்றம் . . ." என்கிறது நாலடியார்.

மரணம் எப்போதும் வரும் என்பது யாருக்கும் தெரியாது. அது எப்போதும் வரலாம். எனவே வாழும் காலத்தில் மாட்சிமைப்பட்ட அறச்செயல்களை செய்து வாழ்வதே மேலான வாழ்க்கையெனும் நாலடியாரின் வாக்குக்கொப்ப வாழ்ந்து மறைந்தவர் மாமனிதர் நீலகண்டனவர்கள். எமது பாடசாலையின் ஸ்தாபக அமைப்பான "இந்து வித்தியா விருத்திச் சங்கத்திற்கும்" எமது பாடசாலையின் தாய், தந்தையரை இழந்த மாணவரின் விடுதியான "சக்தி இல்லத்துக்கும்" அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கும் இடையிலான தொடர்பினால் அவரோடு நெருங்கிப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. 1983 ம் ஆண்டு இன வன்முறையால் மூடப்பட்ட இந்த இந்துக் கல்லூரியை மீட்டெடுப்பதில் அவர்காட்டிய அக்கறையும் ஆர்வத்தையும் கல்லூரியின் வரலாறு பறைசாற்றுகின்றது.

தொழில் நிமித்தம் அவர் பல நிறுவணங்களோடு இணைந்து பணியாற்றியுள்ளார். அதே போல் " இந்து வித்தியா விருத்திச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம்" எனும் இரு பெரும் தமிழ், இந்து நிறுவனங்களையும் தம் இரு கண்கள் போல் போற்றினார். இந்து மாமன்றம் இலங்கை வாழ் இந்துக்களுக்கும் சமூகத்தில் நலிவுற்ற தமிழ் மக்களுக்கும் ஆற்றுகின்ற பணிகளிலே மிக உன்னதமானது தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளுக்கான "சக்தி இல்லமாகும்". வருடாந்தம் இதனுடாக 150ற்கு மேற்பட்ட மாணவர்கள் உணவு, உடை, உறையுள், கல்வி என பயன் பெறுகின்றனர். ஏறக்குறைய கடந்த இருபது வருட காலப்பகுதியில் பலநூறு மாணவர்கள் பயன் பெற்று இன்று உலகமெங்கும் உன்னத நிலையில் உள்ளனர். எத்தனை வேலைச்சுமை இருந்தாலும் "சக்தி இல்ல மாணவர்களின்" பிறந்த நாள் விழாவுக்கு மாதமொருமுறை தம்பதி சமேதராய் வந்து தாமே தலைமையேற்று முன்னின்று நடாத்தி வாயார வாழ்த்தி, பரிசு வழங்கி, உணவருந்திக் கொண்டாடி மகிழ்வதை வழக்கமாக கொண்டிருந்தார். இனி ஒரு பிறந்தநாள் விழா அப்படி வராதா? என அப்பிள்ளைகள் இப்போதும் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். அப்பிள்ளைகளின் எல்லா நலனிலும் அவருக்கு அக்கறை இருந்தது.

"இரத்மலானை - கொழும்பு இந்துக் கல்லூரி" அதன் பழைய உன்னத நிலையை எய்த வேண்டும் என்று அடிக்கடி சொல்வார். அதற்காக எடுக்கப்பட்ட எல்லா முயற்சிலும் மிக முக்கியமான உந்து சக்தியாக அவர் விளங்கினார். அதில் முக்கிமாக ஒன்றை மட்டும் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். "இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி" 2018ம் ஆண்டு முதல் இலங்கையின் முதலாவது விளையாட்டுப் பாடசாலையாக அரசால் அங்கிகரிக்கப்பட்டு இன்று செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந் நிலைப்பாட்டை அரசு எடுப்பதற்கு இம்மனிதரின் முயற்சி முக்கியமானது. பாடசாலை சார்பில் இக்கோரிக்கையை கௌரவ மேல்மாகண ஆளுநர் திரு.கே.சி.லோகேஸ்வரனிடம் எடுத்துரைத்தவர் அவரே. அதன் பயனைத்தான் இப்போது நாம் பெற்றுக் கொண்டுள்ளோம். "கற்றாரை கற்றாரேகாமுறுவர்" என்பதற்கொப்ப வரிசையறிந்து உபசாரம் செய்வதில் அவருக்கு நிகர் அவரே.எத்தனை பெரிய சபையாக இருந்தாலும் கைப்பிடியாய் அழைத்துச்சென்று என்னை எல்லோரிடமும் அறிமுகம் செய்து வைத்துவிடுவார். விழாக்களுக்கு சம்பிரதாயமாக அனுப்புகின்ற அழைப்பிதழுக்கு மேலாக உரிமையோடு ஒரு தொலைபேசி அழைப்பும் அவரிடமிருந்து வரும் அந்த அன்புக் கட்டளைகள் புறக்கணிக்க முடியாதவை.

தலைவர் உடல்நலமின்றி இருக்கின்றார் என்ற தகவல் காற்றோடுகலந்து கவலையாய் காதுக்கெட்டியது. இரண்டொரு நாட்களின் பின் தேறி விடுகிறார் என்ற நல்ல செய்தி மகிழ்வாய் இருந்தது. பெப்ரவரி மாத தொடக்கம் அலுவலகத் தொலைபேசிக்கு ஒரு அழைப்பு, ஆச்சரியப்பட்டுப் போனேன். "நலமாக இருக்கிறீர்களா? மறுமுனையில் தலைவரின் குரல். "நலம் வைத்தியசாலையில் அனுமதிக்கமாட்டார்கள் என்பதால் பார்க்க வரவில்லை"யென, நலம் விசாரித்தேன். "பரவாயில்லை, நான் நலமாக இருக்கிறேன், ஹவாய் ஆதீனத்தாருக்கு வரவேற்பு வைபவம், தவறாது வரவேண்டும்" அன்புக் கட்டளை . "விளையாட்டுப் பாடசாலை செயற்பாடுகள் எப்படி ? நாம் எல்லா உதவியும் செய்வோம், ஸ்தாபக தின ஏற்பாடுகள் எப்படி ? யார் யாருக்கு கடந்த ஆண்டு புலமைப்பரிசில் கொடுத்தோம்? இந்த ஆண்டு யார் யாருக்கு கொடுக்க வேண்டும்? விபரத்தை அனுப்பி வையுங்கள். சில விடயங்கள் கதைக்க வேண்டும்" கட்டாயமாக விழாவுக்கு வரவேண்டும். இது அவரோடு சம்பாஷித்த கடைசி சம்பாஷனை. இது தான் கடைசி சம்பாஷனையாக இருக்குமென அப்போது தெரியாது. இப்போது நினைத்தாலும் நெஞ்சு கனக்கிறது. கனவு போல் எல்லாம் நடந்தேறிமுடிந்து விட்டது. அவருடைய முகம் நெஞ்சுக்குள் நிழலாடும் போது காலமாகிவிட்டார் என்பதை அறிவு சென்னாலும் உளம் ஏற்க மறுக்கின்றது. ஏற்றுத்தான் ஆக வேண்டும் என் செய்வோம். உலக நியதி அதுவல்லவோ?

உடல் நீங்கினாலும் உள்ளத்துள் நீங்காது நிலைபெற்ற அவரது பணிகளை தொடர்வோம்.அதுவே அவர் விரும்புகின்ற அவருக்கு நாம் செய்கின்ற கைம்மாறாக இருக்கும்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**எஸ்.ஜெயக்குமார்** - அதிபர்
கொழும்பு இந்துக் கல்லூரி, இரத்மலானை



# கொழும்பு விவேகானந்த சபையின் நினைவுப்பகிர்வு
# அவதாரங்கள் பல ஒன்று சேர்ந்த அமரர் நீலகண்டன் சட்டத்தரணி

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக கொழும்பு விவேகானந்த சபையின் உறுப்பினராகவும், ஒரு தசாப்தத்துக்கு மேல் சபையின் உப தலைவராகவும் கடமையாற்றி மறைந்தவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நீண்ட கால பொதுச் செயலாளராக இருந்த காலத்தில் எமது சபை வளாகத்தில் இந்து மாமன்றத்துடன் இணைந்து சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலையைப் பிரதிஷ்டை செய்வதில் முழுமூச்சாய் ஈடுபட்டு கல்கத்தாவில் இருந்து சிலையை இலங்கைக்குக் கொண்டுவரும் முயற்சியில் பல சிக்கல்களுக்கும் மத்தியில் வெற்றி பெற்றார். சபையில் நடைபெறும் எல்லா விழாக்களையும் இந்து மாமன்றத்துடன் இணைந்தே நடத்தப்படவேண்டும் என்பதில் குறியாக இருந்ததுடன் அவ்வப்போது அவ்விழாக்களுக்கு இரத்மலானை சக்தி இல்ல சிறார்களையும் அழைத்து வந்து எல்லோரும் ஒரு சேர உண்டு மகிழும் உன்னத கைங்கரியத்தை செவ்வனே நிறைவேற்றிய செம்மல் அவர். சபையின் 116 வருட குறிப்புகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து இங்கிருந்துதான் அகில இலங்கை இந்து மாமன்றமும், எமது சபை உறுப்பினரான சுவாமி விபுலானந்தர் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனையும் ஸ்தாபித்தார் என்று அறியக்கிடக்கிறது. இச் சபையின் பெருமைகளை நன்குணர்ந்த அமரர் நீலகண்டன் எத்துணை பெரிய காரியம் அவருக்கு வெளியே இருந்தாலும் சபை நடவடிக்கைகளில் முக்கியமாக முகாமைச் சபை, நிர்வாகசபைக் கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ளும் ஒரு நல்ல பழக்கத்தை கொண்டிருந்தவர். அந்த காலகட்டத்தில் ஓர் ஒற்றை விளக்கின் கீழ் இருந்து கட்டிடக் குழுவில் பணியாற்றிய அனுபவம் பசுமரத்தாணி போல் இன்றும் இனிக்கிறது. அந்த அனுபவத்தை அமரர் எமது சபையின் புதிய நான்கு மாடிக் கட்டிடத்தை கட்டுவதில் கட்டிடக் குழுவின் தலைமைப் பதவியை எடுத்து இயன்றவரை விரைவாக கட்டி முடிக்க முனைப்புடன் செயற்பட்டார். அண்மையில் திறந்து வைக்கப்பட இருக்கும் இக்கட்டிடம் வாழும்வரை அன்னாரின் பெயர் சொல்லும்.

வருடாந்தம் இடம்பெறும் சபை விழாக்களான சேர் பொன் இராமநாதன் உருவச்சிலைக்கு மாலையிடும் விழா, சுவாமி விவேகானந்தரின் ஜனன வைபவமும் சிலை திறப்பு நினைவு நாளும், சமய குரவர் குருபூசைகள்,நவராத்திரி விழா,சபை அறநெறிப் பாடசாலை மற்றும் பாலர் பாடசாலை சிறப்பு விழாக்கள்,நாவலர்,விவேகானந்தர், அகில இலங்கை பேச்சு, கட்டுரைப் போட்டி, பூர்த்தி விழாக்கள், சித்தி விநாயகர் வருடாபிஷேகம் என எல்லா நிகழ்ச்சிகளிலும் தனது உடல் நலத்தை ஒரு பொருட்டாக எண்ணாது கலந்து சிறப்பித்து எல்லோரையும் ஊக்குவிக்கும் பண்பாளர்.

இந்து சமூகத்தின் மீது மாறாத பற்றும் சமய அறிவும் ஒரு சேரப் பெற்ற அமரர் அவர்கள் இலங்கையின் புகழ்பூத்த சட்டத்தரணிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். அவரது சட்ட அறிவும் நுணுக்கமாக பிரச்சனைகளை துணிவோடு அணுகும் பாங்கும் இலங்கை சைவ மக்களுக்கு ஆண்டவனின் அனுக்கிரகமாகவே அமைந்திருந்தது. எந்தவிதப் பிரச்சனைகள் சபைக்கு வந்த சமயத்திலும் அமரர் நீலகண்டன் எமது உப தலைவராகவிருந்த ஒரு விடயம் மட்டுமே சபையை இறுமாப்புடனும், பயமின்றிச் செயற்படவும், செய்த காரியங்களில் வெற்றியையே காணவும் அடி நாதமாக விளங்கியது.

கொள்கை முரண்பாடுகள் எத்தனை பேருடன் இருந்தாலும் கூட்டம் நிறைவு பெற்றபின் அவர்களுடன் அளவளாவி தன் பக்க நியாயத்தை தெரிவித்து அவர்களை தொடர்ந்தும் நண்பர்களாக வைத்திருக்கும் ஓர் அற்புதப் பண்பாளராக நீலகண்டன் இருந்தார். அதனாலேயே எந்த விடயத்தையும் அவர் தொலைபேசி ஒன்றின்மூலம் ஒரு நண்பரைத் தொடர்பு கொள்வதன் மூலம் முடித்துவிடும் அற்புத ஆற்றல் அவருக்கு இருந்ததை இந்த முப்பது வருட நட்பின் காலத்தில் கண்டு வியந்திருக்கிறேன்.

கடவுள் பல அவதாரங்களை எடுத்ததாக படித்திருக்கிறோம், ஆனால் ராமரும் கிருஷ்ணரும் ஒருசேர வந்ததில்லை. அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களோடு நான் கூட இருந்த இடங்களிலேயே ஒரே நேரத்தில் சைவ சமயத்தின் காவலராக, சமூக ஆர்வலராய் ஓடிப்போய் கண்ணீர் துடைப்பவராக, சிரேஷ்ட சட்டத்தரணியாக, சட்ட ஆசிரியராக, சட்ட எழுத்தாளராக, பதிப்பாளராக, எமது பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினராக, நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபகராக, கல்லூரி ஸ்தாபக சங்கமான இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் பிரதிநிதியாக ஒரே சமயத்தில் கடமையாற்றியுள்ளார். பல தடவைகள் ஒரேநாளில் அவருடன் பல் வேறு சபைகள்,சட்டத்தரணிகள் கூட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு ஒன்றை ஒன்று கலக்காது தனித்திறமையை வெளிக்காட்டி அவர்தம் பங்கை வெளிப்படுத்தியதை நேரில் கண்டு வியப்படைந்திருக்கிறேன்.

சைவ உலகில் ஒரே ஒரு நாவலர், ஒரே ஒரு விவேகானந்தர், ஒரே ஒரு விபுலானந்தர் போல இலங்கை சைவர்களின் சரித்திரத்தில் ஒரே ஒரு நீலகண்டனாகத் திகழ்வார் இந்த அமரர் பெருந்தகை. இவர்போல் வருவரோ இன்னொருவர் என்று எமது சமூகம் வியந்து பாராட்டும் இச் செம்மலின் சடுதியான மறைவில் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் இலங்கை சைவ சமூகத்திற்கும் கொழும்பு விவேகானந்த சபை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த பங்குனி 11ஆம் திகதி அவரது இரங்கல் கூட்டத்தை விவேகானந்த சபை மண்டபத்தில் சிறப்புற நடத்தி எமது துயரைப்



பகிர்ந்து கொண்டோம். அக் கூட்டத்தில் பிரதான உரையை நிகழ்த்திய அருள்மொழி அரசி வசந்தா வைத்தியநாதன் அம்மையார் நீலகண்டனின் பெருமைகளை சபையோர்க்கு எடுத்து இயம்பினார். ஆயினும் இரண்டு நாட்களில் எமது இன்னொரு உப தலைவரான அருள்மொழி அரசியும் இறையடி சேர்ந்தார். இவர்களது ஆத்மா சாந்தியடைந்து எல்லாம் வல்ல ஈசனின் பாதங்களில் சரணடைந்து முக்தியடைய ஆண்டவனை இறைஞ்சி நிற்கிறோம். மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

**எம்.ஆர்.ராஜ்மோகன்**

குழுக்களின் தலைவர், கொழும்பு விவேகானந்த சபை

## சிவயோகசுவாமி நம்பிக்கை நிதியத்தின் நினைவுப்பகிர்வு

## ஆளுமை மிக்க தலைவர்

அமரர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களை சுமார் இரண்டு தசாப்த காலமாகத் தெரிந்தாலும் அவரோடு எனக்கு கடந்த பதினான்கு ஆண்டுகளாக நெருக்கமாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.முதலாவதாக நான் அவரோடு நெருக்கமாக ப் பழகிய காரணம் நான் ஒரு விலைமதீப்பீட்டாளர் என்றதால் என்னுடைய தொழில் சார் சேவையைப் பெற்றவர்.

இரண்டாவதாக நான் 2014ம் ஆண்டு தொடக்கம் சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியத்தின் பொதுச்செயலாளராகப் பணியாற்றி வருகிறேன். சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியம் மாதாந்தம் நடாத்துகின்ற சிவயோக சுவாமிகள் திருவடி வழிபாடு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்று வந்தது.நீலகண்டன் அவர்கள் இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்து சரஸ்வதி மண்டபத்தை நிர்வாகிப்பதனால் அவருடைய அனுமதியோடு சிவயோக சுவாமிகளின் பூசைகள் அங்கே நடைபெற்றன.

இன்னும் அமரர் இந்து மாமன்றத்தின் செயலாளனராகவும்,தொடர்ந்தும் தலைவராகவும் இருந்தமையால் சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியத்தின் பிரதிநிதியாக முகாமைப்பேரவையில் நானும் ஒரு உறுப்பினராக இருக்கின்றேன்.நான் சமய விவகாரக் குழுக்களின் செயலாளராகவும்,கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் நீலகண்டன் அவர்களின் ஆலோசனையின் படி சிவயோக சுவாமி, சுவாமி விபுலானந்தர் , ஆறுமுகநாவலர்,போன்ற மகான்கள் பற்றிய கட்டுரைகள் இந்து ஒளியில் இடம்பெற வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டு ஒவ்வொரு இந்து ஒளியிலும் இடம் பெற்று வருகின்றது.

இந்துமாமன்றம் சிவயோக சுவாமிகளின் 50வது ஆண்டு சமாதி நிறைவுக் குரு பூசையை யாழ்ப்பாணத்தில் நடாத்தத் தீர்மானித்து யாழ்ப்பாணத்தில் சிவயோக சுவாமிகளின் உருவச்சிலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு ஒரு விழாவாக சிறப்பாக நடாத்தினார்கள். அதே போல சரஸ்வதி மண்டபத்திலும் சில நிகழ்ச்சிகள் இந்து மாமன்றத்தினால் சிவயோக சுவாமிகளின் 50வது ஆண்டு சமாதி நிறைவை நினைவு கூரும் படி நடாத்தி வைக்கப்பட்டது. நீலகண்டனின் விருப்பப்படியே இந்து ஒளி சிவயோக சுவாமிகளின் 50வது ஆண்டு சமாதி நிறைவையொட்டி ஒரு சிறப்பிதலாக சரஸ்வதி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியமும்,இந்துமாமன்றமும்,இந்து வித்தியா விருத்திச் சங்கமும் இணைந்து சிவயோக சுவாமிகளின் 50வது ஆண்டு சமாதிக் குருபூசையைக் கொழும்பில் சரஸ்வதி மண்டபத்தில் நடாத்துவதற்கு அமரர் ஆவன செய்தார்.

வெள்ளவத்தை சிவயோக சுவாமி திருவடி நிலைய திறப்பு விழாவிலும் (31.08.2016) எங்கள் அழைப்பை ஏற்று அவர் ஒரு அதிதியாக வந்து கலந்து சிறப்பித்ததோடு இந்து மாமன்றத்தின் நன்கொடையாக ரூபா ஐந்து லட்சம் கட்டிட நிதிக்கு தந்துதவினார்.

ஒரு சட்டத்தரணியாக, இந்து மாமன்றத்தின் செயலாளராக,தலைவராக,இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராக தமிழ் இந்து மக்களுக்கு பல ஆண்டுகளாக சேவை செய்த ஒரு செயற்றினும் ஆளுமையும் மிக்கத் தலைவன் இன்று இல்லை.ஆனால் சேவைகள் என்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஓர் ஐயமில்லை.அவரின் ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் பிரார்திப்போமாக.

"எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்."

**த.செ.சிவசுப்பிரமணியம்**

செயலாளர், சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியம்



# நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் நினைவுப்பகிர்வு

மலையகத்தின் இதயமாக திகழும் நாவலப்பிட்டியில் இந்து மன்றம் என்ற நிறுவனம் அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களால் கிடைத்த வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகாது. 2009-01-11 ஆந் திகதி அமரர் .திரு.க.நீலகண்டன் அவர்கள் ஐக்கிய அமரிக்கா ஆதீனத்திலிருந்து இலங்கை வருகை தந்திருந்த வணக்கத்துக்குரிய ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மலையகத்து மக்களுக்கு அருளாளராகவும் மற்றும் ஏழ்மையான மக்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும், வேட்டி,சேலைகளும் வழங்குவதற்கு விரும்பியதாலும் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவாக நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஏற்படுத்தப்பட்டது. இச் சமய விழா மிகச் சிறப்புற நடாத்திய பின் இவ்விழா ஏற்பட்டார்களாகிய எமக்கும் இவ்விழாவில் கலந்து கொண்ட அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நிர்வாகிகளுக்குமிடையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.அவ் வேளையில் தான் அமரர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் நாவலப்பிட்டி இந்து மாமன்றம் என்ற இயக்கத்தை ஆரம்பிக்கும் படி ஆலோசனை வழங்கினார்.அன்றைய தினமே மாலைக் கூட்டத்தில் தான் நாவலப்பிட்டி இந்து மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன் அதன் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டு இயங்கத் தொடங்கியது.இதன் தாய்ச் சங்கமாக அகில இலங்கை இந்து மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் .இதன் பேராளர்களின் முதல்வராக அமரர்.திரு.க.நீலகண்டனும் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் 10வது ஆண்டு நிறைவை எட்டிப்பிடிக்கும் தறுவாயில் அமரர் திரு.க.நீலகண்டன் மலையக மக்களுக்கு ஆற்றிய அளப்பெரிய சேவைகள் என்றென்றும் மறுக்கவே, மறக்கவோ முடியாது. இருப்பினும் எண்ணிலடங்கா சேவைகளில் ஒரு சிலவற்றையேனும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிவிப்பதால் நாவலப்பிட்டி இந்து மன்றம் அமரருக்கு நன்றிக்கடன் செலுத்துகிறது.

நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் ஆண்டு விழாக்கள் ஆண்டு தோறும் அதிகளவில் மலையக மக்கள் கூடும் கூட்டமாக மிகச் சிறப்பான முறையில் நடப்பது வழக்கம் .இவ்விழாக்களுக்கு எமது மன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மிக முக்கிய உறுப்பினர்களையும் அமரர் அழைத்து வந்து இந்து சமய விழிப்புணர்வை ஊட்டுவதற்காக அரிய கருத்துக்களைக் கூறியும் மன்றத்தால் நடாத்தப்பட்ட இந்து சமய அறிவுப் போட்டிகளில்,கலைநிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பங்கு பற்றிய மாணவர்களுக்கும் ஊக்குவிப்பு பரிசில்களாக கற்றல் உபகரணங்களை கொண்ட பொதிகள் அன்பளிப்பாக வழங்கியும் அளப் பெரிய சேவை ஆற்றினார்.

மலையத்தில் குறிப்பாக பெருந்தோட்டப் பகுதிகளில் ஏற்படும் மண்சரிவு அனர்த்தங்களின் போதும், தீயினால் அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட போதும் அவ்வப்போது அவ்விடம் சென்று உதவிக்கரம் நீட்டுவதுடன் சிற்சில சமயங்களில் நாவலப்பிட்டி இந்து மன்றம் ஊடாக உடனடி உதவிகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

மலையக இந்து ஆலயங்கள் குறிப்பாக பெருந்தோட்டங்களில் அமைந்த ஆலயங்கள் பரிபாலனம் செய்வதற்கும் அதனால் ஏற்பாடும் சிற்சில பிரச்சினைகளுக்கும் பற்பல கோணங்களில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுமிடத்து அவற்றிற்கு தீர்வு காணும் முறைகளைக் கொண்ட செயலமர்வு நடாத்தும்படி நாவலப்பிட்டி இந்து மன்ற அனுசரணையுடன் அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் மத்திய மாகாண இந்து கலாச்சார அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க பெருந்தோட்டப்பகுதி ஆலயங்களின் பரிபாலனசபை நிர்வாகிகளை அழைத்து கண்டி மாவட்டத்திற்கும் வெவ்வேறான திகதிகளில் செயலமர்வை நடாத்தியும், அதற்கான யாப்புத் தயாரிக்கும் முறைகளும், நிர்வாக முறைகளும்,நிதி அறிக்கை பேணும் முறைகளும், கோயில் நிதியை அதிகரிக்கும் வழிவகைகள் போன்ற பல்வேறு பகுதிகளில் ,செயலமர்வை நடாத்திப் பேருதவி புரிந்துள்ளார்.

மலையக வாலிபர்கள் பலருக்கு யாழ் அகில இலங்கை இந்து மாமன்றக் கிளைப் பணிமனையில் நடாத்திய சிவதொண்டர் பயிற்சி பட்டறையில் கலந்து கொள்வதற்கும் அவ்வாறன பயிற்சி பெற்ற சிவதொண்டர்கள் மலையக மக்களுக்கு தொண்டு செய்வதற்கான செயல் முறைகளை வகுத்துக் கொடுத்து உதவினார்.

மலையக இளைஞர்கள் சிலருக்கு யாழ் அகில இலங்கை இந்து மாமன்றக் கிளை பணிமனையில் தங்குமிட வசதிகளுடன் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களால் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற புலமைப்பரிசில் வழங்கியும் அவ்வாறனவர்களுக்கு கணனி பயிற்சியும் வழங்கியும் இலவச கணனி வழங்கியும், சைவ சமய நூல்கல் வழங்கியும் பேருதவி புரிந்தார்.

புசல்லாவை சரஸ்வதி வித்தியாலயத்தில் நாவலப்பிட்டி இந்து மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சைவ சமய எழுச்சி விழாவில் தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளையும் அழைத்து வந்து அப்பகுதி பாடசாலைகளின் மாணவர்களின் ஆன்மீகக் கலை



நிழச்சிகளுக்குப் பாராட்டும் வழங்கி ஊக்குவிப்புப் பரிசில்களாக கற்றல் உபகரணங்களையும் வழங்கியதுடன் அக்காலகட்டத்தில் புசல்லாவ கதிர்வேலாயுத சுவாமி ஆலய புனருத்தாபன திருப்பணிக்காக ரூபா ஒரு இலட்சம் நிதியுதவியை வழங்கினார்.

இந்தியாவிலிருந்து வருகை தரும் இந்து சமயப் பெரியார்களை மலையகத்திற்கும் அழைத்து வந்து ஆன்மீக சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கும் அவர்களின் ஆசீர்வாதம் பெறுவதற்கும் வழி வகுத்துக் கொடுத்தார்.

இறுதியாக 2017-01-28ம் திகதி நாவலப்பிட்டி இந்து மன்ற ஆண்டு விழாவிற்குத் தான் நோயுற்றிருந்தும் உடல் நலத்தையும் பாராது அகில இலங்கை இந்து மாமன்ற நிர்வாகிகளுடன் தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளையும் அழைத்துக் கொண்டு குறிப்பாக மலையக பெருந்தோட்டத்தில் அமைந்த வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தியாலயத்திற்கு வருகை புரிந்து சைவசமய எழுச்சி விழாவில் கலந்து கொண்டது மறக்க முடியாத அனுபவம். அமரர் அவ்விழாவில் உரையாற்றுகையில் நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் தொண்டுகளைப் பாராட்டியும் அடுத்து வரும் 10ம் ஆண்டு நிறைவு விழாவினை மிகப்பிரமாண்டமான முறையில் அமைய வேண்டுமெனக் கூறியும் வாழ்த்துக்களைத் தெரிவித்ததும் எம் மனதில் நீங்காத நினைவாக இருக்கும்.

இவ்வாறு பற்பல வழிகளில் மலையக இந்து சமய விழிப்புணர்வை ஏற்படுத்த அரும்பெரும் தொண்டாற்றி வரும் தனக்கென வாழாது பிறர்கென வாழ்ந்த செம்மல் எம்மை விட்டுப் பிரிந்து விட்டாலும் அவரது வழிகாட்டலுக்கமைய எம்மாலான தொண்டினைத் தொடந்து அவருக்காக நாம் செய்யும் நன்றிக்கடனாக அமையும். அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் எமது சிந்தையில் என்றென்றும் நீங்காதிருப்பார்.

**தேசபந்து சு.இராஜேந்திரன்(J.P)**
தலைவர்

**கலாபூஷணம் பி.திருநாவுக்கரசு(J.P)**
செயலாளர்

## திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் நினைவுப்பகிர்வு

இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான எமது திருகோணமலை இந்து இளைஞர் பேரவையின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாமன்றத்தினூடாக திரு.கந்தையா நீலகண்டன் அவர்களால் வழங்கப்பட்ட உதவிகளும் சேவைகளும் என்றென்றும் நம் நினைவுகளை விட்டகலாதவை..

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள், ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள், வெள்ளம், சூறாவளி, போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும், அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கும் அப்பியாசக் கொப்பிகள் ,பாடசாலை உபகரணங்கள், பேரவையின் பணிமனைக்காகக் கணனி இயந்திரம், சிவதொண்டர் அணியினருக்கான பயிற்சிச் கருத்தரங்குகள் எனப்பலவழிகளிலும் அன்னார் எமக்கான உதவிகளை நல்கியிருந்ததை நன்றியுடன் இங்கு நினைவுகூருகின்றோம்.

மேலும் திருகோணமலை இந்து மயானத்தின் கடற்கரைப்பக்கமாவுள்ள 390, அடி நீளமான எல்லை மதில் கட்டுவதற்கான உதவிகளை வழங்கினார். ஆனால் இம்மதிலை கட்ட விடாமல் பேரினவாதிகள் தடுத்தனர். இதற்கு அரச ஊழியர்களும் உதவி புரிந்தனர். இவற்றை கேள்வியுற்ற அன்னார் இம்மதிலைக் கட்டுவதற்காக கொழும்பில் உள்ள கடலோர சூழல் பாதுகாப்பு திணைக்களத்தையும், பாதுகாப்பு அமைச்சையும் அணுகிய போதிலும் துரதிஷ்டவசமாக அனுமதி கிடைக்கவில்லை.

கன்னியா வெந்நீர் ஊற்றுக் கிணறுகள், கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிள்ளையார் ஆலயக் கட்டுமான பணிகள் வெந்நீர் ஊற்றுக்கருகாமையில் உள்ள பேரவையின் 15 ஏக்கர் காணி, திருக்கோணஸ்வரத்தின் எல்லைக்குள் அத்துமீறி அமைக்கப்பட்ட கடைகள், இந்து ஆலயங்களினதும், இந்து மயானங்களினதும் காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ளவர்களை அகற்றுவது, திருக்கோணேஸ்வர, மகோற்சவ கால தீர்த்தோற்சவத்தின் போது பேரவையினால் கடந்த 50 வருடங்களாக நடாத்தப்பட்டு வரும் தண்ணீர்ப்பந்தலை நடாத்துவதற்காகப் பந்தல் அமைப்பதற்கு இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டது. ஈச்சிலம்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இலங்கைத் துறைமுகத்துவாரத்தில் உள்ள இந்து ஆலயம் அகற்றப்பட்டு விகாரை நிர்மாணிக்கப்பட்டு பெரும்பான்மை இன குடியேற்றத்துடன் “லங்கா பட்டுன” என பெயர் மாற்றப்பட்டுள்ள விடயம், திருக்கோணமலை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டதுமான இந்து ஆலயங்களைப் புனரமைப்பதற்கும் திருப்பணிகளை முன்னெடுப்பதற்கும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்பது தொடர்பாகவும் இந்து ஆலயங்களினதும் இந்து சமய நிறுவனங்களினதும் காணி வழக்குகளுக்கு தேவையான ஒத்துழைப்பு



வழுங்குதல் தொடர்பாகவும் திரு.கந்தையா நீலகண்டன் பாதுகாப்புச் செயலாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறைக்கொண்டு இருந்த அமரர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் எமது பரிபாலனத்தில் உள்ள பன்குளம், பறையன்குளம் அருள் மிகு எல்லைக்காளி அம்பாள் ஆலயத்தின் திருப்பணி மற்றும் எமது பணிமனையுடன் இணைந்த கேட்போர் கூடம் அமைத்தல் போன்ற இரண்டு விடயங்களுக்கும் மிக்க உறுதுணையாய் இருந்தார்.

அமரருக்கு திருக்கோணமலை மாவட்ட இந்து மக்களின் இதய அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எம்மையெல்லாம் வழி நடத்துகின்ற தாயினும் இனிய மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**செ.விஜயசுந்தரம்**
பொதுச் செயலாளர்.

## ஸ்ரீ சங்கமன் கண்டி பிள்ளையார் உள் ஆலய பரிபாலன சபையினரின் நினைவுப்பகிர்வு

ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் உள் ஆலயத்துடன் இணைந்துள்ள ஸ்ரீ சங்கமன் கண்டி மலைமுருகன் ஆலயத்திற்கு அங்குரார்ப்பண நிதியாக ரூபா பன்னிரண்டு இலட்சம் நிதியை இந்து மாமன்றத்திலிருந்து பெற்றுக் கொள்ள உதவிய மனித தெய்வம். அவர் விட்டுச் சென்ற இறைபணியை அன்னாரின் நாமத்தால் தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ள எமது ஆலய பரிபாலன சபையினரும் அடியார்களும் அன்னாரைப் பிரிந்து ஆறாத்துயரிலுள்ள அவரது குடும்பத்தாருக்கும், அகில இலங்கை இந்து மாமன்றத்தினர்க்கும் ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென அம்பாறை மாவட்டத் திருக்கோயில், தாண்டியடி ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையாரை இரு கரம் கூப்பி வேண்டி வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை.**

## செந்தூர் முருகன் ஆலய பரிபாலன சபையினரின் நினைவுப்பகிர்வு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் மறைவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. ஈடு செய்ய முடியாத இழப்பு என்றே நாம் கருதுகின்றோம். அன்னாரின் மறைவையிட்டு அவரது மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினர்க்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்திக்கின்றோம்.

**தலைவர்**

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பரிபாலனசபையின் நினைவுப்பகிர்வு

அகில இலங்கை இந்து மாமனறத்தின் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் மறைவு எமக்குப் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

எமது செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அறநெறிப்பாடசாலை மாணவர்களைச் சிவதொண்டர் அணியில் இணைத்து அதனூடாக அவர்களுக்குக் கல்வி கற்பதற்காக உதவிகளை ஏற்படுத்தியவர். அறநெறிப்பாடசாலை அமைப்பதற்கு முயற்சி எடுத்தவர். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு மனசாந்தி ஏற்பட செல்வச்சந்நிதி வேல் பெருமானை வணங்குகின்றோம்.

**செயலாளர்**



## இரத்மலானை-மொரட்டுவ இந்து மன்றத்தின் நினைவுப்பகிர்வு

அமரர் கந்தையா நீலகண்டனின் அகால மறைவினைக் கேட்டு மிக அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கிறோம். அன்னாருடன் எமது மன்றத்துக்கிருந்த சமய, சமூகப்பணிகளுடனான தொடர்புகளை இச்சந்தர்ப்பத்தில் பதிய வேண்டியது எமது கடைமையாகின்றது.

இரத்மலானை-மொரட்டுவ இந்து மன்றம் சொய்சாபுர தொடர் மாடித்திட்டத்தினை மையமாகக் கொண்டு, இரத்மலானை மொரட்டுவைப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆங்காங்கே வதிவிடமாகக் கொண்ட இந்துக்குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இயங்கி வருகின்றது. சொய்சாபுர வீட்டுத்திட்டப் பகுதியில் 1996-ஆம் ஆண்டுக்குப் பின்னரே, செறிவான அளவில் இந்துகுடும்பங்கள் குடியேறின.எனவே அக்குடும்பங்களை ஒன்றிணைத்து ,சமய சமூகப் பணிகளை முன்னெடுப்பதற்காக 2000-ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் எமது மன்றம் ஆரம்பிக்கப்பட்ட போது ,அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச்செயலாளராகப் பொறுப்பிலிருந்த திரு. கந்தையா நீலகண்டனின் தொடர்பு ஏற்பட்டது. 1983-ஆம் ஆண்டு இனக்கலவரங்களின் பின்னர், இரத்மலானை இந்துக்கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டது போலவே, இப்பிரதேசத்தில் வாழ்ந்த இந்துக்குடும்பங்களும் சிதறடிக்கப்பட்டிருந்தன. இதனைக் கட்டியெழுப்புவதில், அகில இலங்கை இந்து மாமன்றத்தினதும், ஆரம்பத்தில் அதன் பொதுச்செயலாளராக அரும்பணியாற்றிய திரு. கந்தையா நீலகண்டனினதும் பங்கு பெருமளவானது. இரத்மலானை - மொரட்டுவை இந்துமன்றம் இரத்மலானை இந்துக் கல்லூரியினையே தமது செயற்பாடுகளுக்கான தளமாகக் கொண்டு இயங்கவேண்டிய கட்டாய சூழ்நிலைகளுக்குட்பட்டிருந்தது.போர் முரண்பாடு நிலவிய இக்கட்டான இக்காலப்பகுதியில் எமது மன்ற அங்குரார்ப்பணத்துக்கும் அதன் பின்னரும் இராம கிருஷ்ண மிசன் சுவாமிகளுடன் இணைந்து திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் அனுசரணை எமக்கு மிகவும் பக்க பலமாக இருந்ததென்பதனை மிகவும் நன்றியறிதலுடன் நினைவு கூர்கின்றோம்.துணிச்சலுடன் கருமமாற்றி இந்து மக்கள் அல்லலுக்குட்படும்போது ஊன்றிக்குரல் கொடுப்பதில் திரு. நீலகண்டன் எப்போதும் பின்வாங் குவதில்லை.

புகழ்பெற்ற நந்தீஸ்வரம் எனப்படும் சிவன் ஆலயத்தினை, இரத்மலானையில் முன்னர் இருந்த இடத்திலேயே மீளக்கட்டியெழுப்புவதில் வெற்றி கண்டார். அதே போல் இரத்மலானை இந்துக்கல்லூரிக் கட்டடங்கள் இராணுவத்தினரால் பாடசாலை நிர்வாகத்துக்கு 1990 அளவில் மீளளிக்கப்பட்டதின் பின்னர் அதனை வழமை நிலைக்கு கொண்டுவருவதில், இந்து மாமன்றத்தினதும் திரு. கந்தையா நீலகண்டனினதும் சேவை போற்றற்குரியது. போரினால் அனாதைகளாக்கப்பட்ட பிள்ளைகளுக்காக சக்தி இல்லம் என்னும் விடுதி பாடசாலைக்கு அண்மையில் இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வந்தமை, பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

செயற்குழு

**இரத்மலானை–மொரட்டுவை இந்து மன்றம்**

## புத்தளம் இந்து மகாசபையின் நினைவுப்பகிர்வு

புத்தளம் இந்து மகாசபையின் வரலாறு காணாத பொன்விழா வைபவத்தில் பிரதம விருந்தினராக வருகை புரிந்து விழாவின் நாயகனாக மிளிர்ந்து புத்தளம் இந்து மகாசபையையும் புத்தளம் வாழ் சைவமக்களையும் பெருமைப்படுத்திய பெருமகன். அத்துடன் புத்தளம் கொழும்பு வீதி ஐயனார் கோயிலை ஆக்கிரமிப்பாளரிடமிருந்து மீட்டெடுக்கும் சட்டரீதியான செயல்முறைக்குக் காத்திரமான ஆலோசனைகளை வழங்கியதுடன் அதற்கான வழக்கினை முன்னெடுப்பதற்கு சட்ட வல்லுனரை இலவசமாக ஏற்பாடு செய்த சான்றாண்மையாளர்.

தன்னலம் கருதாது பொதுநலம் நோக்கிய பெருமகன். சமய நிகழ்வொன்றை ஒழுங்குபடுத்திய வேளையில் சிவபதம் அடைந்தமை ஆழ்ந்த துயரைத் தந்தாலும் அவரது சிவத்தொண்டு எம்மை மெய்சிலிர்க்கவைக்கிறது.

பெருமகனாரின் ஆத்மா சிவனடியில் உறைவதற்குப் பிரார்த்திக்கின்றோம்.

**மா. நாகராஜா**
தலைவர்

**இ. சிவனேசன்**
செயலாளர்



## காமதேனு இந்துசமய வளர்ச்சி மன்றம், இந்து இளம்பிறை இறைபணிமன்றம், சமன்பிட்டி இந்து மகளிர் மன்றத்தின் நினைவுப்பகிர்வு

இலங்கையில் பலருக்கும் இன்றளவும் தெரியாது பொலனறுவையில் தமிழர்களா? நீண்ட நாள் வினாவுக்கு இலங்கையர் பலருக்கு விடையளித்த நீலகண்டன் ஐயா 2012ம் வருடம் தொடக்கம் 2018ம் வருடம் 02ம் மாதம் 14ம் திகதி வரை எமது சமய சமூக பணிகளுக்கு வழிகாட்டியாக இருந்தவர். பொலனறுவையில் எமது தொன்மையை மீட்டெடுக்க அவர் எடுத்த பெருமுயற்சிதான் பொலன்னறுவை 2ம் சிவாலயத்தில் கடந்த மூன்று வருடங்களாக மாமன்ற நிதியனுசரணையுடன் எமது அன்னை ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப்பாடசாலையின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றுவருகின்ற "சிவராத்திரி விழா".

அதுமட்டுமா? சமன்பிட்டி பிரதேசக் குழந்தைகளையும் அவர்களுக்கான அறப்பணிகளையும் மேலும் வலுப்படுத்த இந்துமாமன்றத்தின் வழிகாட்டல்களால் தோன்றியதுதான் காமதேனு இந்துசமய வளர்ச்சி மன்றம். இந்து இளம்பிறை இறைபணிமன்றம், சமன்பிட்டி இந்து மகளிர் மன்றம் என்ற எமது அத்தனை நிறுவனங்களினூடாகவும் சிவதொண்டர் அணிகளை உருவாக்கி அவர்களுக்கான புலமைப் பரிசில்களை வழங்கி உதவிய உத்தம உள்ளம் கொண்டவர்.

மாணவர்களுக்கான கணினி, அப்பியாசக் கொப்பிகள், சிவதொண்டர் அணிக்கான புலமைப்பரிசில், சிவதொண்டர் சால்வை என ஒவ்வொன்றையும் எமக்கும் வழங்கி எம்மையும் ஊக்குவித்தவர். அமரரின் இறுதியாத்திரையில் அஞ்சலிக்காக நிறைந்திருந்த அத்தனை அத்தனை அகங்களின் பிரார்த்தனையும் ஐயாவின் ஆத்மாவை இப்போது நடராஜப் பெருமான் திருவடியில் சேர்த்திருக்கும் என்று திடமாக நம்புவோம்.

**பாலன் சுதாகரன்**
அதிபர்

## இலங்கை சட்டக் கல்லூரி, சட்ட மாணவர் இந்து மகா சபையின் நினைவுப்பகிர்வு

"காலமது வரும் வேளை இயற்கையின் நியதியில் இறையோடு உயிர் சேரும் மறைகள் ஓதி வெறும் கூடு விறகென வேகும் ஆனாலும் உயிரது கூட்டில் இருக்கையில் உணர்வொடு செய்த புண்ணியம் எழுபிறப்பும் தமைச் சூழும் "

சிரேஷ்ட சட்டத்தரணி அமரர் கந்தையா நீலகண்டன் ஐயா அவர்களின் சிறுவர் இல்லப்பராமரிப்பு, அறநெறிப்பாடசாலை, ஏழைகளுக்கு உணவளித்தல் என நீளும், இந்து மதம் சார்ந்த சமூகசேவைப்பயணத்தில் இலங்கை சட்டக் கல்லூரி சட்டமாணவர் இந்து மகா சபையாகிய எமக்களித்த பங்களிக்கப்பினை மறந்துவிட முடியாது. 1967 இல் எமது மன்றத்தின் செயலாளராகவும் 1968 இல் தலைவராகவும் இருந்தது மட்டுமல்லாது எப்போதும் எம் மன்றத்தின் வளர்ச்சிக்கு எம்மோடு துணைநிற்கும் எம் மன்றத்தின் சிறந்த பற்றாளர் ஆவார்.

அதுமட்டுமல்லாது வருடந்தோறும் எம் மன்றம் பிரசவிக்கும் "நக்கீரம்" இதழ் பெருமையும் சிறப்பும் அடையப்பெறுவது அன்னாரின் ஆசிச் செய்தியால் ஆகும். ஆசிச் செய்தி மட்டுமல்லாது அச்சாகிய இதழ் சிறப்புறவே வெளியீடு செய்யப்பட தனது சொந்த செலவில் வருடந்தோறும் சரஸ்வதி மண்டபத்தை எமக்காக வழங்குவதுடன் எமது நூல் செலவு, விழாச் செலவின் ஒருபகுதியை வழங்கி மற்றும் கலைவிழா சிறப்புப் பெறவும் எமக்கு உதவும் கொடையாளராவார்.

இத்தகைய இந்துமதம் மீது பற்றுக்கொண்ட கொடையாளரை எமது மன்றம் இழந்து நிற்கின்றது. அன்னார் மறைந்தாலும் அவர் தம் சேவைகளும் நல்மனதின் பிரதிபலிப்பும் சட்ட மாணவர்களின் மனதில் மறையா இடம்பிடித்திருக்கும்.



## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் நினைவுப்பகிர்வு

அறுபதுகளின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, எண்பதுகளில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளாற் செயற்பாட்டில் மந்தநிலை கண்டது. இந்த நிலையில் லண்டனிலிருந்து 2014 இல் இலங்கைக்கு வருகைதந்த ஐ.தி.சம்பந்தன் அவர்களை அணுகி இச் சபையின் மீளுருவாக்கப் பணியில் முன்னின்றுழைத்தவர்களில் ஒருவரான அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களது மறைவு நம் சமூகத்திற்கு நிவர்த்தி செய்துகொள்ள முடியாததொரு பேரிழப்பைத் தந்துள்ளது.

நாவலர் குருபூஜை பல இடங்களிற் சிறப்புற நிகழவும், நாவலர் மாநாட்டு மலர் மீள்பதிக்கும் முயற்சியில் முன்னின்றுழைத்தமை, உலகம் முழுவதும் நந்திக்கொடி பரப்பும் பணியில் ஒத்தாசையாக நின்று செயற்பட்டமை, தன் வாழ்நாளின் பெரும்பகுதியைச் சிவப்பணிக்காய் அர்ப்பணித்தமை எனச் சொல்லிலும் செயலிலும் தன் சேவை உணர்வை வெளிக்கொணர்ந்த இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையிற் பொறுப்பான பதவிகளையும் வகித்த காலத்தில் மனிதநேய உதவிகள் பலவற்றை நிறுவன ரீதியிலும் தனிப்பட்ட வகையிலும் ஆற்றியிருந்தார். அன்னாரது இழப்பு எந்த வகையிலும் ஆறுதற்பட்டுக்கொள்ள முடியாத தாங்கொணாத் துயரநிலையில், அன்னாரது பிரிவாற் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சின்னத்துரை தனபலா**

தலைவர்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, சர்வதேச இணைப்பாளரின் நினைவுப்பகிர்வு
## சைவ மலை சாய்ந்தது! ஆறாத் துயரில் சைவ உலகம்

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் 18-02-2018ல் சிவபதம் அடைந்தார் என்ற செய்தி அறிந்து சைவ உலகம் ஆழ்ந்த கவலையில் மூழ்கியது. மறைவதற்கு முன் அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருந்த ஹாவாய்ச் சுவாமிகளின் வரவேற்புக்கான ஏற்பாடுகளை செய்துவிட்டு தனது இல்லம் சென்றவரின் உயிரை காலன் கவர்ந்து சென்றுவிட்டான் என்ற செய்தியை அறிந்து இலண்டனிலுள்ள சைவ மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

கால் நூற்றாண்டு காலமாக சைவ மக்களின் கேந்திர நிலையமாக விளங்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தை கட்டியெழுப்பி செயற்பட வைத்த செயற்றிறன் மிக்க சைவப்பற்றாளன்.

கொழும்பில் தலைமை சைவ கலாச்சார நிலையத்தை அமைக்க வேண்டுமென்று போராடி வந்த கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் அபிலாசையைத் தனது காலத்தில் நிறைவேற்றி வைத்த பெருமைக்குரியவர். கொழும்பில் சைவத் தலைமை அலுவலகம் செயற்பட தொடங்கிய நாள்தொட்டு சைவசமயப் பணிகள் நாடு பூராவும் நடைபெற வழிவகுத்தவர். சைவசமய விழிப்புணர்வை மக்களிடையே வளர்ப்பதற்கு இந்து மாமன்றம் மேற்கொண்ட திட்டங்கள் வெற்றி பெற தாயக உணர்வுடன் அயராது உழைத்தவர். யாழ்ப்பாணத்தில் நாவலரின் கலாச்சாரத்தை வேரூன்ற வைப்பதற்கு இந்து மாமன்றத்தின் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவி செயற்பட வைத்தவர்.

"இந்து ஒளி" இந்து மாமன்றத்தின் பிரதான பிரசாரக்கருவி. இது சிறப்பாகவும் ஒழுங்காகவும் வெளிவர உற்காகத்துடன் உழைத்து வந்தவர். இந்து ஒளியை சர்வதேசரீதியாக வளர்ப்பதற்கு முயற்சி எடுத்து வந்தவர். இப்பொழுது இலண்டனில் பல சந்தாதாரர்கள் சேர்ந்துள்ளனர். இவருடைய பெரும் முயற்சியால், 2007ல் வெளிவந்த பொன்விழா சிறப்பு மலர் வெளியீடு இருதொகுப்புகளும் சைவசமய வரலாற்றுத் தொகுப்பாகும். ஒரு சைவக்களஞ்சியமென்றே கூறலாம்.

வரலாற்றுப் பெருமைபெற்ற திருக்கேதீஸ்வர ஆலயம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்ததை மீட்டெடுப்பதற்கு இந்து மாமன்றம் மூலம் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கது.



பிரத்தானிய சைவமுன்னேற்றச்சங்கம் அதன் 40வது ஆண்டு நினைவாக பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்திய 40 திருமணவிழா சிறப்பாக நடைபெற பெரும் பங்காற்றியவர் திரு நீலகண்டன் அவர்கள்.

1969ல் நிறுவப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை போர் சூழலால் செயலற்றிருந்தது. சைவகலாச்சாரத்திற்கு புத்துயிர் கொடுக்க வேண்டுமானால் மீண்டும் நாவலர்சபை புதுப்பிக்கப்பட வேண்டுமென கருதினார். தனது பெரும் முயற்சியினால் நாவலர் சபை அறங்காவலரின் உதவியுடன் 2007 ஆண்டில் புனரமைக்கப்பட்டு துரிதமாக செயற்பட வைத்தவர் அமரர் நீலகண்டன் அவர்கள்.

தமிழ், இனஉணர்வுமிகுந்த திரு. நீலகண்டன், சமயத்தோடு மட்டுமல்லாமல் அரசியலிலும் பெரும்பங்காற்றி வந்தவர். தமிழர் சுயாட்சி பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவிருந்து வந்தவர். தேவையான அரசியல் ஆலோசனைகளை தமிழத் தலைமைக்கு வழங்கி வருபவர்.

சமயப்பற்று, தமிழ்ப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று மிக்கபெரும் சைவத் தலைவரை தமிழ் இனம் இழந்தவிட்டது. அன்னாரின்பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி பிள்ளைகள் உற்றார் உறவினருக்கும் சைவமக்களும் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக

**ஐ.தி.சம்பந்தன்**

சர்வதேச இணைப்பாளர் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

## பிரித்தானிய சைவத்திருக்கோயில்களின் ஒன்றியத்தின் நினைவுப்பகிர்வு

சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் (UK) இன் கட்டமைப்பிலும் அதன் குறிக்கோளின் வளர்ச்சியிலும் அக்கறையுடன் அறிவுரைகளையும் ஆக்க செயற்பாடுகளையும் செய்வதற்குப் பெருந்துணையாக இருந்தவரும் பல தடவைகள் சைவத்திருக்கோயில்கள் ஒன்றிய மாநாட்டிற்கு வருகை தந்து சிறப்பித்தவருமான சமூகத் தொண்டர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் ஆத்மசாந்திக்கு சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் (UK) இன் அனைத்து ஆலய அறங்காவலர்களும் ஆலய குருக்கள்மார்களும் அனைத்து பக்தர்களும் பிரார்த்திப்பதோடு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரின் குடும்பத்தினருக்கு தெரிவிக்கின்றோம்.

**நா. யோகநாதன்**

தலைவர் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் (UK)

## சைவமுன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா) - நினைவுப்பகிர்வு

பல ஆண்டுகளாக எங்களின் சமய, மொழி, சமுதாய நலனுக்காகப் பாடுபட்ட ஒரு திறமை வாய்ந்த தலைவரைத், தொண்டரை, சாதனையாளரை நாங்களும், அவருடைய குடும்பத்தினரும் இழந்த இந்த வேளையில் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தினர் எங்களது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். பல வகையிலும் எங்கள் சங்கத்தின் பணிகளுக்குத் துணையாக இருந்த பெரியாரை எங்கள் சங்கம் ஒரு நாளும் மறக்க முடியாது. சிறப்பாகக் குறிப்பிடுவதென்றால் எங்களின் 40வது ஆண்டின் பாரிய திட்டமாகிய 40இல் திருமணங்கள் 40 திட்டத்தை வெற்றிகரமாக இலங்கையில் நடத்தத் துணை இருந்தவர். எங்களின் பணிகளை உலகறியச் செய்த பேராற்றலைச் சங்கத்தின் சரித்திரம் ஒருபோதும் மறக்காது. இந்த உதாரணம் ஒன்றே போதும் திரு. நீலகண்டன அவர்களின் சிறப்பை எடுத்துக் கூற. மன்றத்தின் உறுப்பினர்களுக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சதாசிவம் ஆனந்ததியாகர்**

தலைவர்



# தேசபந்து அமரர் தெய்வநாயகம் ஈஸ்வரன் அவர்களின் குடும்பத்திலிருந்து ஒரு நினைவுப்பகிர்வு வேண்டும் உங்கள் வழிகாட்டல்

நிமிர்ந்த நன்னடை. நேர்கொண்ட பார்வை …நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் என்ற பாரதியின் வரிகள் புதுமைப் பெண்ணுக்கானதொன்றாலும் மேலும் சில வரிகளையும் சேர்த்தால் அமரர் நீலகண்டன் ஐயாவுக்கென்றே எழுதியது போல் எனக்கு தோன்றுகிறது.

கூரிய சிந்தனை, குறையற்ற சேவை, மாசிலா மனம், மனிதநேய நோக்கு, சட்டத்தில் பெரும்புலமை, சாதுர்ய காரியகர்த்தா, செயல் வீரச்செம்மல், சிறப்பான தலைமை.

சிறுவயதில், எனது தந்தை சட்ட ஆலோசனைக்காக ஐயாவிடம் செல்லும்போது நான் கூடப்போயிருக்கிறேன். அப்போதெல்லாம் ஐயா நீலகண்டன் அவர்களை ஆச்சிரியத்தோடும், பய பக்தியோடும் பார்த்த நினைவுகள் வருகிறது. அந்த நேரத்தில் என்னுடைய தந்தை அமரர் ஈஸ்வரன் அவர்கள் ஐயாவினுடைய சட்ட வல்லமையைப் பற்றி மட்டுமின்றி எப்படி தன்னுடைய தரப்பு மக்களுக்காக நீலகண்டன் ஐயா தோள் நின்று வாதிடுவார், போராடுவார் என்றும் சொல்லுவார்கள்.

எடுத்த காரியத்தை முழுமையாக முடிக்கும் திறன் மட்டுமன்றி, காரியத்தின் சித்திக்காக, மக்கள் நன்மைக்காக, கொள்கைக்காக, எமது அடையாளத்திற்காக கடைசிவரை போராடும் அந்த அர்ப்பணிப்பு ஐயாவின் சிறப்பான குணாதிசயம் என்று சொல்லலாம்.

காலத்தின் கோலம், 2 மாதங்களுக்கு முன் எமது தந்தையார் இறைவனடி சேர்ந்தார்கள். அன்றைய தினத்தில் நீலகண்டன் ஐயா வைத்திய சிகிச்சையில் இருந்தாராயினும் வெளியே வந்தவுடன் உடனடியாக ஒரு இரங்கல் கவிதையை பதிப்பித்தார். அது மட்டுமின்றி இந்து மாமன்றத்தின் சார்பில் முதலாவதும் முன்னோடியுமான இரங்கல் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். அதுமட்டுமல்ல எப்போதும் போல முன்னின்று கூட்டத்தை நடத்தினார். நிகழ்ச்சி ஆரம்பிக்குமுன் ஏற்பாடுகளை கவனித்துக்கொண்டிருக்கையில் திடீரென்று ஒரு கதிரையை தூக்கிகொண்டு யாரோ மேடையில் ஏறுவதைப்பார்த்தேன். உதவி செய்ய அருகில் போனால் அது வேறு யாருமல்ல - நீலகண்டன் ஐயாவே கதிரையுடன் படிகளின் ஏறிக்கொண்டிருந்தார். ஐயா நீங்கள் எதற்காக இதை செய்யவேண்டும் என்று கேட்டதற்கு புன்முறுவலுடன் “வேலை நடக்கவேண்டுமல்லவா?” என்றார்.

முதல் நாள் சுகி சிவத்தினுடைய பேச்சு, காலையில் இந்து மாமன்ற நிகழ்ச்சி, மாலை மற்றுமொறு நிகழ்வு இவைகளுக்கிடையே பம்பரம்மாக ஆன்மீக சேவைகளை செய்வதற்கிடையே அவருடைய இன்னுயிர் பிரிந்தது. ஆம், அவர் விரும்பியபடியே வேகமாக தனது சேவைகளை ஆற்றும்போதே அவர் காலமானார். காலம் காலமாய் அவர் செய்த நற்காரியங்கள் அவருடைய ஆத்மாவை சிவனடிக்கு கொண்டு செல்லும் என்பதில் எந்த ஐயமும்மில்லை.

இறையடியில் இருந்து கொண்டு இவ்வுலகில் உள்ள நமக்கு வழிகாட்டுமாறு ஐயாவின் ஆன்மாவின் சக்தியை வேண்டி நிற்கிறோம்.

**கணேஷ் தெய்வநாயகம்**

## சிவநெறி அறப்பணி மன்றத்தின் நினைவுப்பகிர்வு
## தொண்டருள் தொண்டராம் அமரர் நீலகண்டன்

சைவத் தமிழ் மக்களிற்கு பெருந்தூணாக நின்று இறுதிவரை எம்மக்களுக்காக வாழ்ந்த பெருமகனார் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள். தான் வாழ்ந்த ஒவ்வொரு விநாடியையும் சமயத்திற்காகவும், இந்து மக்களுக்காகவும் செலவிட்ட பெருமகனார். இந்துமாமன்ற செயலாளராக, தலைவராக அவர் பதவி வகித்தபோதும் நடையில் எளிமையும், மக்களுக்கு உதவும் காருண்யராக திகழ்ந்தார். கிழக்கு மக்கள் தொடர்பாக அதிக அக்கறையுடன் காணப்பட்டார். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் சமய வளர்ச்சிக்கு முடிந்தவரை அதிகளவான பங்களிப்புகளை நல்கியவர். இதிலும் எமது மன்றமான சிவநெறி அறப்பணி மன்றம் ஆனது கல்முனை பிரதேசத்தில் அமைவது தொடர்பாக கருத்து கேட்ட வேளையில் எங்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நல்ல காத்திரமான ஆலோசனை வழங்கியது மட்டுமல்லாமல் எமது மன்றத்தை அங்கத்துவ சங்கமாக அங்கீகரித்து இரண்டு முகாமைப்பேரவை உறுப்பினர்களை முகாமைப்பேரவையில் உள்வாங்கி எங்களையும் சமய, சமூக பணியில் பயணிக்க ஓர் ஆசானைப்போல் வழிகாட்டியாக விளங்கியவர்.



எங்களது மன்றத்தினூடாக வழங்கிய சேவை எனின் என்று பாரக்கையில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் வறுமையினால் பல மாணவர்கள் கல்வி கற்பதில் உள்ள இடரினை பற்றி கூறிய பொழுது சிவதொண்டர் அணி என்ற ஒன்றினை உருவாக்கி அதில் உள்ள வறிய மாணவர்களுக்கு பாடசாலையில் நடைபெறும் மூன்று தவணைக் கொடுப்பனவுகளை வழங்கினார். குறிப்பாக இதில் 21 மாணவர்கள் பயன் பெறுவது அன்னார் காட்டிய காருண்யமே ஆகும். சிவதொண்டர் என்ற ஒரு மாநாடு நடைபெற வேண்டும் இதன் மூலம் மாணவர்கள் சமயக்கல்வி, தொண்டு, மனித நேயம் போன்ற கருத்துக்களை பெரியவர்களினைக் கொண்டு செய்வதன் மூலம் அவர்கள் வாழ்வியலை மேம்படுத்தலாம் என்ற கோரிக்கையை முன்வைத்த போது அம்மாநாட்டுகான அனுசரணையை வழங்கியது மாத்திரம் இல்லாமல் நல்லை குருமகா சந்நிதானம், மற்றும் சமய சான்றோர்களையும் வரவழைத்து சிறப்பாக நடைபெற அவர் காட்டிய வழியே இன்றும் எங்களை சீரிய பாதையில் செல்ல வழிகாட்டியாக அமைகிறது. மேலும் அனர்த்தங்கள் வரும் பொழுது தாமதியாது எமது மாவட்டத்திற்கு பல உதவிகளை வழங்கியுள்ளார். வறிய மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் போன்றவை வழங்கி அம்மக்கள் துயர் துடைத்தவர். மேலும் ஆலயங்கள் சேதமாக்கப்படும் வேளையில் துணிந்து இவை தொடர்பாக கண்டனங்களை வெளியிட்டும் உள்ளார். மேலும் மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்காக மாணவர்களுக்குரிய அப்பியாசக் கொப்பிகள், சிவ வழிபாட்டு மலர், இந்து மக்களுக்கு ஒரு கையேடு போன்ற நூல்களை வழங்கியதன் மூலம் மாணவர்கள் சமயம் தொடர்பாக விரிவான விளக்கங்களையும் பயனையும் பெற உதவியாய் உள்ளதனை காணமுடிகிறது.

சிறந்த தலைமைத்துவத்தின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கு உரிய வேளையில் தீர்வுகளை செய்து கொடுத்துள்ளார். மேலும் சுவாமி விபுலானந்தர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு விழா எடுத்து அவ்விழால் சிவ தொண்டர் அணி, மாணவர்கள் பயன் பெற அதனை ஓர் மாநாடாக தொடர்ச்சியாக நடாத்தி வருகிறார். இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கு நிகழ்வில் எங்களது பங்களிப்பையும் செய்து கொள்வதற்கு வாய்பினை ஏற்படுத்தி தந்துள்ளார். இவ்வாறு பல சேவைகளால் உயர்ந்த குன்றமாய் திகழ்ந்த பெருமகனார் அன்னாருடைய பங்களிப்பும், ஆலோசனையும் எமது மன்றத்தின் வளர்ச்சி பணிகளில் சேவைகளில் உதவியினை யாரும் எளிதில் மறந்து விடமுடியாது.

**தலைவர், செயலாளர்**

சிவநெறி அறப்பணி மன்றம் - கலமுனை, சேனைக்குடியிருப்பு

## பிரித்தானியாவின் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலயமும் நம்பிக்கைச்சபையும் வழங்கிய நினைவுப்பகிர்வு

தலைவராக, பொதுச் செயலாளராக, சட்டவாளராக பல ஆண்டுகள் அகில இலங்கை இந்து மாமன்றத்தை வழிநடத்தி எம் இனத்தின் ஏக்க நிலைகள் எங்கெங்கு இடம் பெறுகின்றதோ அங்கெல்லாம் அரண் அமைத்து ஆற்றிய சேவைகளை அகம் நிறுத்தி ஆழ்ந்த இரங்கலை ஆலயம் சார்பில் கண்ணீர் அஞ்சலியாக்குகின்றோம்.

மாந்தை மன்னாரில் சைவ முனிவர்களுக்கு வந்த நெருக்குவாரங்களில் எங்கள் ஆலயத்தின் துணைகொண்டு அன்னார் மாமன்றத்தினூடாக ஆற்றிய பணி எம் நெஞ்சங்களில் நிழலாடுகின்றது. நல்லை ஆதீனத்தை நலமுடன் அமைத்திட நம் ஆலயம் மற்றும் பல நல்லுள்ளங்களும் எடுத்த பணிக்கு நற்துணை நின்று நிறைவு கண்டாய் நானிலம் போற்றும் நீவிர் மறைந்தும் நும் பணிகளால் நிறைந்துவாழ்கின்றீர்.

**ச.அபயலிங்கம்**
தலைவர்
அறங்காவலர் சபை

**தா.யோகநாதன்**
தலைவர்
நிர்வாக சபை



## மட்டக்களப்பு மாவட்ட சைவத்திருநெறி மன்றத்தின் நினைவுப்பகிர்வு

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் எமது மட்டக்களப்பு மாவட்ட சைவத்திருநெறி மன்றம் 1991 காலப்பகுதியில் உறுப்புரிமை பெற்றுக்கொண்டது முதல் இன்றுவரை எமது மன்றத்தின் செயலாளர் என்ற ரீதியில் மாமன்றத்தின் பேராளர்களில் ஒருவராகத் தொடர்ந்து இருந்து வருவதுடன், மாமன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டங்களிலும், ஏனைய பல நிகழ்வுகளிலும் தொடர்ச்சியாக கலந்து கொண்டு வருபவன் என்ற வகையில், நீலகண்டன் ஐயா அவர்கள் மாமன்றச் செயலாளர் பதவி வகித்த காலம் தொடக்கம் பின்பு தலைவராகப் பணிபுரிந்த இறுதிக் காலம் வரைக்குமான காலப்பகுதியில் பல்வேறு மாமன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி அவருடன் பழகியவன் என்ற வகையிலும், எமது பகுதியில் இந்துக்கள் மதமாற்றம் செய்யப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும், மற்றும் இன்னல்கள், பாதிப்புக்கள் ஏற்பட்ட வேளைகளிலெல்லாம் நேரடியாகவும், தொலைபேசி மூலமும் தொடர்புகொள்ளும்போது அதனைக் கையாள வேண்டிய ஆலோசனைகளையும், யார் யாருடன் தொடர்பு கொள்ள வேண்டுமோ அவர்களுடன் தொடர்பு கொண்டு உந்துதல்களை அளித்து உதவியாக இருந்துள்ளார்.

இந்த வகையில் மட்டக்களப்பில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த பெண்பிள்ளையொருவரின் சத்திரசிகிச்சைச் செலவுக்காக எமது மன்றத்தால் சிபாரிசு செய்து பண உதவிகோரியபோது அதற்கான ஒரு பகுதி நிதியுதவியை மாமன்றத்தின் மூலம் பெற்றுக்கொடுத்தார். தற்போது அப்பெண்பிள்ளை பூரண சுகமடைந்து வாழ்ந்து வருகின்றார். யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த மற்றும் கைதுசெய்யப்பட்ட இந்துக் குருமார்கள், இந்து மக்களின் இடர் துடைப்பதற்காகவும், சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தன்னாலான கைங்கரியங்களை மேற்கொண்டு முன்னின்று உழைத்த பெருமகன்.

இவ்வாறு அனைவரையும் அரவணைத்துக்கொண்டு மாமன்றத்தை ஆளுமையுடன் நிருவகித்து இந்து சமயத்திற்கும், இந்து மக்களுக்கும் எங்கெல்லாம் இன்னல்களோ, பாதிப்புக்களோ நேரிட்டாலும் அது தொடர்பில் முதல் கண்டனக்குரல் கொடுப்பது மாத்திரமன்றி, உடனடியாக மேல்மட்டத்தின் உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கும், மேற்கொண்டு நிகழாமல் முற்றுப்புள்ளி வைப்பதற்கும் விரைந்து தன்னாலானவற்றைச் செய்து இந்து மதத்திற்கும், இந்து மக்களுக்கும் காவல் அரணாக விளங்கி நின்றார்.

மட்டக்களப்பிலிருந்து மாமன்றத்திற்குச் செல்லும் வேளைகளில் மட்டக்களப்பு நிலமை பற்றியும், இந்துக்களின் செயற்பாடுகள் பற்றியும் கேட்டறிவதோடு, சுகநலன் விசாரித்துக்கொள்வார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கமைய வாழ்ந்து, பணியாற்றிய அன்னாரின் இழப்பு இந்து உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது வழிநின்று மாமன்றத்தின் மூலம் அவரது பணியைத் தொடர்வதே அவருக்குச் செய்யும் கைமாறாகும். அவரது ஆத்ம சாந்தி வேண்டி தில்லை ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருவடி போற்றி நிற்கின்றேன்.

**ந.மோகனமூர்த்தி**

செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட சைவத்திருநெறி மன்றம்.

## வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் நினைவுப்பகிர்வு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஓர் அங்கமாகச் செயற்படும் இந்துபரிபாலன சங்கத்திற்கும் அமரர். திரு.கந்தையா நீலகண்டன் அவர்களுக்கும் நெருக்கமானதொரு தொடர்புண்டு.எமது சங்கத்தின் 50வது ஆண்டு பொன்விழா சிறப்புற அனுசரணை வழங்கியதோடு விழாவில் பங்குபற்றிச் சிறப்பித்தார். வருடாந்தம் எமது சங்கம் நடாத்தும் சேர்.பொன்.அருணாசலம் நினைவு தினத்தில் தவறாது பங்கு பற்றிச் சிறப்புரை வழங்கிச் சிறப்பித்ததோடு அன்னாரின் அறக்கட்டளையூடாக எமது சங்க அறநெறிப்பாடசாலையில் கற்கும் ஏழை மாணவர்கள் 40பேருக்கு ரூபா ஒரு லட்சம் கொடுப்பதில் அனுசரணை வழங்கி மகிழ்ந்தவர். இரத்மலானை இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் ,சிறார்களின் வளர்ச்சிக்கும் பெரும் உறந்து சக்தியாக இருந்தவர்

ஒரு முறை ஹட்டன் பகுதியில் ஒரு ஆலயம் சார்ந்த விடயமாகச் செல்லும்போது தெரிந்த ஒருவரை அறிமுகப்படுத்தும் படி கூறினார் நான் எனது உறவினர் ஒருவரைச் சந்திக்க ஏற்பாடு செய்தேன்.அவர் இதுவரை வரவேற்று தேவையான உதவிகளைச் செய்துள்ளார்.கொழும்பிற்கு வந்தவுடன் மறவாது அவர் செய்த உதவிகளை கூறி நன்றி கூறியதுடன் அந்த நபருக்கும் மறவாது நன்றி கூறினார்.ஒரு சிறியவிடயமானலும் அவரின் உயர்வான குணத்திற்கோர் உதாரணம் அவரது துணைவியாரும் எனக்கு அறிமுகமானவர்.அவரும் மிகவும் அமைதியான, மென்மையான,பண்பான குணம் கொண்டவர். அன்னாரின் பிரிவால் துயருறும் அவருக்கு என் அனுதாபங்கள்.

**எஸ்.பி.சாமி**
தலைவர்

**செல்வரத்தினம்**
செயலாளர்.



## கல்யாண வேலவர் ஆலய திருப்பணிச்சபையின் நினைவுப்பகிர்வு

கடந்த கால யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட எமது மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான விதவைகள் வாழ்வாதரத்திற்கு மிகவும் கஷ்டப்படுவதை அறிந்து எமது வேண்டுகோளுக்கு இணங்கி நூற்றுக்கு மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக ஆடு,மாடு,கோழி என்பவற்றையும் சிறுதொழில் முயற்சிக்காக பெட்டிக்கடை நடத்துவதற்கான நிதி உதவியாக எழுபத்தைந்து இலட்சம் ரூபா வரையில் இந்து மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர் திரு.சி.தனபாலா அவர்கள் மூலமாக 2010ம் ஆண்டு முதல் வழங்குவதற்கு உந்துதல் அளித்தமைக்கு அமரர்.திரு.க.நீலகண்டன் அவர்களை நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

மீள்குடியமர்ந்த குடும்பங்களின் குடிநீர்த்தேவையைக் கருத்தில் கொண்டு மூன்று குழாய் நீர்க் கிணறுகளை ரூபா மூன்று இலட்சம் செலவில் அமைத்துப் பலரும் பயன் பெற உதவியாக இருந்தார்.

பல்கலைக்கழகக் கல்வியை பெற கஷ்ட நிலையில் உள்ள 15 மாணவர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கி வருவதனையும் ,எமது பிரதேசங்களில் பாடசாலைக்கு நடந்து செல்லும் 20மாணவர்களுக்குத் துவிச்சக்க வண்டி உதவியையும் நன்றியுடன் நினைவு கூர்கின்றோம்.

எமது ஆலய புனரமைப்புக்காக 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கியதுடன் ஆலய அறநெறிப்பாடசாலைக்கு மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான கட்டடமொன்றை இந்து சமய அலுவல்கள் கலாச்சார திணைக்களத்தினர் வழங்குவதற்கும் உந்துதல் அளித்தார்.அத்துடன் சிவதொண்டர்அணியை மு/கலைமகள் வித்தியாலயத்தில் உருவாக்கி அதில் பத்து மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி கிடைக்கக் காரணமாக இருந்தார்.

**க.மார்க்கண்டு**

தலைவர் , கல்யாண வேலவர் ஆலய திருப்பணிச்சபை.

## வத்தளை இந்து மன்றத்தின் நினைவுப்பகிர்வு

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்....."

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், பல சைவ நிறுவனங்களுக்கு தலைவராகவும், ஆலோசகராகவும், பெரும் பணியாற்றிய அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களை நினைவு கூருவதில் வத்தளை இந்து மன்றம்,தனது இரங்கலுடன் கூடிய நினைவஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றது.

வத்தளை பிரதேசத்தில் பிற மதங்களின் ஊடுருவலும், மதமாற்றங்களாலும், வத்தளை இந்துக்கள் தங்கள் அடையாளத்தை மெல்ல மெல்ல அழிய முற்பட்டு கொண்டிருந்தவேளை வத்தளை

இந்துக்களின் அடையாளத்தை காப்பாற்ற, இந்து அமைப்பொன்று அவசியமாயிற்று இதற்கமைய வத்தளை வாழ் இந்து ஆர்வலர்கள் ஒன்று கூடி, வத்தளையில் இந்து மன்றம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தி வத்தளை இந்துமன்றத்தை ஸ்தாபிக்க தீர்மானம் எடுத்து, அன்று ஆலோசிக்கப்பட்ட விடயங்களை, அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பூரண ஆலோசனைகள், நடத்தி இம்மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. அமைப்பு ரீதியான வேலைகள், அமைப்பு விதிகள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் ஆசியுடன் அவரின் பங்களிப்புடன் முதலாவது உத்தியோகபூர்வ அங்குரார்ப்பனம் அன்னாரின் தலைமையில் வத்தளை நகரசபை மண்டபத்தில் இனிதே ஆரம்பித்து வைக்கப்பட்டது. வத்தளை இந்து மன்றத்தின் வளர்ச்சிக்காக அதன் முதல் பொது நிகழ்வாக அமெரிக்க ஹவாய் ஆதினம் தொண்டுநாதன் சுவாமிகளையும், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களையும், வத்தளை சபரிகிரீசன் ஆலய மண்டபத்தில் பிரமாண்டமான இந்துமக்கள் முன்னிலையில் ஆன்மிக சொற்பொழிவு நடைபெறுவதற்க்கு பேருதவியாக இருந்தார்.



சரஸ்வதி மண்டபத்தில் அனைத்துலக இந்து மகாநாடு நடைபெற்ற போது பல பிரசித்தி பெற்ற இந்து அமைப்புகள் பங்குபற்றிய கூட்டத்தில், வத்தளை இந்து மன்றத்தினரையும் அழைத்து எமது மன்றத்தை மற்ற இந்து அமைப்புகளுக்கும் அறிமுகம் செய்து எமக்கு மகத்தான அடையாளத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"..... என்ற கூற்றுக்கமைய வத்தளைப் பிரதேசத்தில் பல சைவமுன்னேற்ற பணிகளை செய்து, மிகக்குறுகிய காலத்தில் பூரணமான இந்து அமைப்பாக எமது மன்றம் பரிணமித்து இரண்டாவது ஆண்டு விழா வத்தளை நகரசபை மண்டபத்தில் நடைப்பெற்ற போது வேலைப்பளு, உடல் நிலையையும், பொறுட்படுத்தாது கலந்து சிறப்பித்து வழிகாட்டிய, அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் இழப்பு எமக்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் பூதவுடல் மறைந்தாலும், அவரின் புகழுடல் வத்தளை இந்து மன்றத்தில் நிலைத்திருக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய, வத்தளை இந்துமன்றத்தினரும் வத்தளை வாழ் இந்துக்களும் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி ...

**வத்தளை இந்து மன்றம்**

## நீலனுக்கு நிகர் காணேன்...

காலனால் காவு கொண்ட
திரு நீலகண்டன்
நீலகண்டர் காண
சரணடைவோம்

கடமையினில் உயர்
உறுதி கொண்டு
எமக்கெல்லாம் உயர்
வழிகாட்டி
உயர் சங்கங்கள் எழ
வழிகாட்டி
உயர் பதவிநிலை
அடிபணிதல் என
உணர்த்தி நின்று உயிர்
துறந்தார்

தொண்டு செய்தல்
எது வென்றுணர்த்தி
தொண்டனுக்கு தொண்டனாய்
தலைவனுக்கு தலைவனாய்
நீலனுக்கு நிகர் காணேன்

மூஞ்சுக்கு நேர் பேசி
அஞ்சா நெஞ்சங் கொண்டு
செயல் வீரர் உம் செயல் கண்டு
வியந்தோம் ஐயா

வாய்ப்புதனை உருவாக்கி
பிறர் வாழ்க்கைதனை
உயர்வாக்கி
அகம் மகிழும் உமை
யாம் உணர்ந்தோம்

எமக்கெல்லாம் வியப்பாகி
உடலுள்ளே பிணி வதைக்க
உளம் அதை மறுக்க
பிறர் நலம் காண தம்
உழைப்பினிலே
உறுதி கண்டார் கண்டர்

ஏற்கவில்லை முடியவில்லை
வயதான இறைபதம் எனினும்
பழகிய சில காலம்
உள்ளம் வதைக்குதே

**ஜெ. நிரோஷ்காந்த்**
செயலாளர், மாமன்ற சமூகநலன் குழு



# சைவவித்தகர்களின் நினைவுப்பகிர்வு

## என்னை எனக்கு அறிவித்தவர் வானுறையும் அமரர் நீலகண்டர்

"வாழ்வாவது மாயம், மண்ணவது திண்ணம்". என்ற திருமொழி நிலையாமை பற்றிக் கூறினாலும் ஐயா நீங்கள் எங்களை விட்டு அகன்றதனை எங்களால் நினைத்துப் பாரக்க முடியாது உள்ளது. நாங்கள் எடுக்கும் அத்தனை செயல்களிலும் தாங்கள் காட்டிய வழியே எம் கண்முன்னே நிற்கிறது. குறிப்பாகச் சாதாரண ஓர் கிராமத்தில் பிறந்த என்னை ஓர் சமயியாக, ஒரு தொண்டராக ஐயா அவர்கள் காட்டிய நன் நெறியே நாம் இன்று உயர்ந்து நிற்கக் காரணியாய் உள்ளது.

எதுவுமே அறியாத எமக்கு ஐயா அவர்கள் செயலாளராக இருந்த வேளையில் சைவசமயத்தில் நல்ல சமய பிரசாரகரை உருவாக்க வேண்டும் என்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கனவை தனது தோள்களில் சுமந்து சைவ வித்தகர் எனும் ஒரு வருட பாட நெறியினை யாழ் இந்து மாமன்றத்தினால் தொடங்கிச் சிறப்பாக முடித்ததன் காரணியாய் "சைவவித்தகர்" எனும் அடை மொழி தாங்கி நாம் வலம் வரக் காரணகர்த்தாவாக திகழ்ந்தவர். குறிப்பாக ஐயா அவர்கள் எங்களை சமயநெறியில் வளர்ப்பதற்காக சிவ தொண்டர்கள் மாநாடுகள், சமய விழாக்களில் பல பெரியவர்கள் முன்னிலையில் எமக்கு களம் அமைத்து எமது பிரசாரகர் பணி சிறப்பாக செயல்படவும் எமக்கான சிறந்த அங்கீகாரத்தையும் வளங்கியவர். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் சமய மேம்பாடு தொடர்பான பணிகளை ஆற்றவைத்து அவ்வப்போது ஊக்குவித்து எமது பணி சிறக்க இறுதி வரை துணையாக நின்றவர்.

இந்து ஒளி சஞ்சிகையில் சிறியேனையும் ஓர் கட்டுரையாளராக இணைத்துக் கட்டுரைகள் எழுதவும், நூல் ஆய்வு தொடர்பான கண்ணோட்டம் எழுதவும் வழிகாட்டியாக விளங்கினார். எமது பிரதேசத்தில் அறநெறிப் பாடசாலைகள் பல உருவாக வேண்டும், அறநெறிப் பாடசாலைகளிலும், பாடசாலைகளிலும் சிவதொண்டர் அணியினை உருவாக்கி சிறு பராயத்தில் இருந்து மாணவர்களுக்குச் சமய அறிவும் தொண்டு செய்யும் ஆற்றலை வளர்க்க வேண்டும் என அடிக்கடி கூறுவார். அதற்கிணங்க எம்மைக் கொண்டு சிவ தொண்டர் அணியினை உருவாக்கி ஓர் சிறந்த சமுதாயம் உருவாக்கும் முயற்சியில் என்னையும் இப்பணியில் இணைத்ததினை நினைக்கும்போது என் காலம் முழுவதும் அன்னாருக்கு நன்றியுடையவனாயிருக்கக் கடமைப்பட்டவன். மேலும் உயர் தரத்தில் இந்து நாகரிகம் பாடத்தினைக் கற்கும் மாணவர்களுக்கு பாட கைநூலாக இந்து நாகரிகம் எனும் நூலை வெளியிடவைத்து மாணவர்கள் இப்பாடத்தில் நல்ல முறையில் தேர்ச்சி பெற உதவியவர். அத்தோடு மாமன்ற வெளியீடுகள் பல நூல்களை பதிப்பித்தார்.

மாமனிதராம் ஐயா அவர்களின் பெருமையைச் சொல்லி அளக்க முடியாது. அது அந்த ஆகாயத்தை விடப் பெரிது. அன்னாரின் திருப்பாதங்களிற்கு என்றும் தொண்டராய் இருப்பதோடு மட்டுமல்லாமல் அவர் விட்டுச் சென்ற பணிக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்வதே அவருக்குச் செய்யும் உபகாரமும் நன்றியும் ஆகும்.

**சைவவித்தகர் யோ.கஜேந்திரா**

## நீங்கா நினைவில் நீலகண்டன் ஐயா....!

அன்று அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பொதுச் செயலாளராக சேவையாற்றிய அவர் கண்ட கனவு "சிவதொண்டர்கள்" ஆகும். இத்தொண்டர்களை உருவாக்க அவரும் ஒரு தொண்டராக நின்று ஆரம்பித்த அறப்பணியாக சைவவித்தகர் பட்டப்படிப்புக் கற்கை நெறியானது அமைந்திருந்தது.

இக்கற்கைநெறியின் காரணகர்த்தாவாக விளங்கிய ஐயா! அவர்கள் என்மீதும் என்சக சகோதரர்கள் மீதும் காட்டிய அக்கறையை எண்ணிய வேளையில் எதைச் சொல்வது என்று உள்ளம் உவகையடைகின்றது. ஏனெனில் எப்போதும் ஐயா எங்களைக் கண்டால் கேட்பது "எப்படி இருக்கிறீர்கள்" எனும் வார்த்தையாகும். அதற்குப் பதிலளித்த பின்னர் எமது சுகம், கல்வியின் நிலைமை, எமது செயற்பாடுகள், எழுத்தாக்கற் பணிகள் மற்றும் எமது குடும்பத்தின் நிலைமைகளையும் கச்சிதமாக விசாரித்து எமக்கு எது தேவையோ அதனைக் கேட்காமலே செய்கின்ற பண்பினைக் கொண்ட உன்னத சிந்தனையாளன் ஐயா. இளைய தலைமுறைக்குக் களம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஐயா அவர்கள் அகில இலங்கை இந்துமாமன்றத்தின்



எந்தவொரு நிகழ்விலும் தொண்டர்களை இணைத்து அவர்களுள் ஆன்மீக ஒளியேற்றிய பெருமை அவரையே சாரும். அதற்கமைய இளையவனான என்னையும் என்சக சைவவித்தகர்களையும் எப்போதும் திருமுறைகள் பாட அழைத்து எங்களோடு இணைந்து அவரும் அப்பாடல்களை பாடுவதை என்றுமே மறக்க முடியாது.

எம்மிடையே இழையோடியிருந்த திறமையை வெளிக் கொணரும் வகையில் எமக்கு பல சந்தர்ப்பங்களையும் உருவாக்கித் தந்திருந்தார். அதற்கமைய வில்லிசை, பட்டிமன்றம், சிந்தனைக்களம் விவாத அரங்கு, ஆய்வரங்கம், நாடகம், நினைவு நிகழ்வுகள், சமூகப்பணிகள், விமர்சனம் எழுதுதல், கட்டுரை எழுதுதல் என்பவற்றைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

ஒருநாள் ஆறுமுக நாவலர் மாநாட்டு நிகழ்வு ஒன்றில் திருக்கேதீச்சர ஆலய வளாகத்தில் நானும் ஒரு பேச்சாளனாகச் சென்ற போது ஐயாவே அந்நிகழ்வில் நடுநிலைமை புரிந்து இருந்தார். அங்கு "சிவ தொண்டர்கள் திரள வேண்டும்" எனும் தலைப்பில் நான் கருத்துரைத்த போது ஐயா உடனடியாக எழுந்து 'எமது இந்துமாமன்ற பாசறையில் வளர்ந்த சைவவித்தகரான இவர் என்றும் தொண்டராகத் திகழ வேண்டும்' என சபையில் என்னையும் அறிமுகம் செய்து வாழ்த்தி அவரது கரங்களாலே பொன்னாடையையும் அணிவித்திருந்தார்.

இவ்வாறு என்னை ஊக்கப்படுத்திய ஐயா அவர்கள் சைவவித்தகர்கள் ஒவ்வொருவரதும் கருத்துக்களையும் உள்வாங்கி எமக்கு தேவையான சகல வழிகாட்டுதல்களையும் வழங்கிருந்தார்.

அவரது இறுதிக் காலகட்டத்தில் கூட தேக சுகயீனத்தையும் கவனத்தில் கொள்ளாது, தொலைபேசியினூடாக சமயம் மற்றும் சமூகம் சார்ந்த ஒவ்வொரு விடயத்தையும் வழிப்படுத்திக் கொண்டிருந்த பெருந்தலைவராக விளங்கியவர் ஐயா அவர்களே..

குறிப்பாக "இந்து ஒளி" சஞ்சிகை தொடர்பில் ஆக்கங்கள் எழுதவேண்டும் விமர்சனங்கள் எழுதவேண்டும் என எங்களை எப்போதும் ஊக்கப்படுத்திக் கொண்டேயிருப்பார்.

இத்தகு பண்பாளனான ஐயா, என்றும் தோன்றாத்துணையாக எங்கள் உள்ளங்களிலெல்லாம் நீங்கா நினைவில் நிறைந்து ஐயா வாழ்ந்து கொண்டே வருகின்றார்.

**சைவவித்தகர் வெற்றிவேல் சசிகரன்**

## அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தின் நினைவுப்பகிர்வு

நீலகண்டன் ஐயா அவர்கள் எமது ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றம் மேல்மாடி நிர்மாணப்பணிகளுக்கு ரூபா பதினான்கு இலட்சம் தந்துதவிய பெருந்தகை, எமது அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை ஆயிரக்கணக்கில் வழங்கிய பெருமகன். வசதி குறைந்தோருக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கிய வள்ளல்.

ஆண்டுதோறும் கதிர்காம உற்சவகாலத்தில் பாதயாத்திரையாக செல்லும் அடியார்களுக்கு நாம் வழங்கும் அன்னதானத்திற்கு தவறாது ரூபா 100,000த்தினை அனுப்பி எமது தொண்டுக்கு மிகவும் வலுச்சேர்த்தமை மிகமுக்கியமானதொன்றாகும்.

நீலகண்டன் ஐயா அவர்களின் சமூகப்பணிகள் , கல்மேல் எழுத்துப் போல் காலமெல்லாம் காணுமே..! அவரை வானவர்நாடு வாஞ்சையுடன் வரவேற்கும், வானவர் உலகில் தெய்வமாக திகழ்வர் என்பது உண்மையிலும் உண்மை.!

**ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றம்**
அக்கரைப்பற்று.



# இந்து மதத்தை நேசிப்போரின் பாசமிகு தலைவனை இழந்துவிட்டோம்

எமது பெருமதிப்பிற்குரிய அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் அவர்களது திடீர் மறைவு மிகவும் பேரதிர்ச்சி தருவதாக உள்ளது. நான் அவருடன் பழகிய காலம் மிகவும் குறுகியது.ஆனால் பழகிய காலங்கிலே அவரது அமைதியான குணம், எல்லோருடனும் அன்பாகப் பழகும் பண்பு .விளம்பரமில்லாத மகத்தான சேவையும் உழைப்பும் எத்தனை பெறுமதியானவை என எண்ணிப்பார்ப்பதுண்டு. எங்களுடன் இந்து நாகரிகத்துறையிலே இணைந்து அகில இலங்கை இந்து மாநாடு, நாவலர் மாநாடு,மாநாட்டு மலர் வெளியீடுகளிலும் சரி அன்னாருடன் பணியாற்றிய காலங்களில் அன்னாரின் உன்னத மனப்பாங்குகள் உணரப்பட்டன. இந்து சமயத்தை அழகாக நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் தலைவரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது.

திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத் தலைவராகவும் பொறுப்பேற்று ஆற்றிய கடமைகள் பலரும் அறிந்ததே .அகில இலங்கை இந்து மாமன்றமும் மாமன்றம் நடாத்தும் "சக்தி இல்லம்" வாழும் குழந்தைகளும் தமது தந்தை போன்ற ஒருவரை இழந்து நிற்கிறார்கள். இந்து சமயத்திற்கு எங்கு தீங்கு விளைந்தாலும் தட்டிக் கேட்கத் தயங்காத துணிவு மிக்க செயல் வீரமும் உடையவராக விளங்கிய பெரிய மனிதர் ஒருவரை இழந்து உலகம் வாழ் இந்துக்களின் தவக்குறைவு போலும். இன்றைய கால கட்டத்திலே திரு.நீலகண்டன் அவர்களது முப்பதாண்டிற்கும் மேற்பட்ட சமூக, சமய, ஆன்மீகத்தின் உன்னதமான சேவைப் பணிகள் என்றும் இந்துக்களால் நினைவு கூரப்படும் என்பதில் ஐயமில்லை.அன்னாரின் மறைவு நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய ஒரு தலைவரின் பிரிவினால் துயரப்பட்டு தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் , உறவினர் நண்பர்களுக்கும் இறைவன் ஆறுதல் அளிக்க வேண்டும் எனப் பிராத்திக்கிறேன்.அப் பெரியவரின் ஆத்மா நித்திய சாந்தியில் நிறைபெற்றிருக்க சிவகாமி சமேத தில்லைப் பெருமான் அருள் புரிவாராக என வேண்டி இச் செய்தியை நிறைவு செய்கிறேன்.

**பேராசிரியர் கலைவாணி இராமநாதன்**
ஓய்வு நிலைப் பேராசிரியர் , யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
இந்து நாகரிகத்துறை.

# கிழக்குப் பல்கலைக்கழக, இந்து நாகரிகத்துறையின் நினைவுப்பகிர்வு
# சமூகத்தின் வழிகாட்டியாக திகழ்ந்த உத்தமர்

அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் இந்நாட்டில் வாழும் இந்துக்களையும் தமிழ்மக்களையும் அவர்தம் இன அடையாளங்களுடனும் உரிமைளுடனும் வாழ வழிகாட்டிநின்ற ஓர் உத்தமர் என்றால் அது மிகையாகாது.

கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையும் அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து சுவாமி விபுலானந்தரின் 125வது நாளை முன்னிட்டு நடாத்திய ஆய்வு மாநாட்டுக்கு அமரத்துவம் அடைந்த அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் சிறந்த முறையில் வழிகாட்டியவர்.

அவர் இலங்கையின் இந்து சமயப் பண்பாட்டு அம்சங்கள் மீதும், தமிழர் சமுதாயத்தின் மீதும் அக்கறையும் அபிமானமும் கொண்டவர்.அன்னாரின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிப்பாகும். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.**
வந்தாறுமூலை, கிழக்கு



## அட்டன் வலய கல்வி அபிவிருத்தி நற்பணி மன்றத்தின் நினைவுப்பகிர்வு

இவ்வுலகில் பிறப்பவர் அனைவரும் இறப்பது திண்ணமே. இருப்பினும் தான் வாழும் காலத்தினுள் தன் இனத்திற்கும் , தான் சார்ந்த மொழிக்கும் , சமயத்திற்கும் ஒப்பற்ற தொண்டாற்றி மற்றவர் மனங்களில் வாழும் பாக்கியம் சிலருக்கே கிட்டுகிறது. அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள் அப்படிபட்ட ஒரு பெரியார்.

எமது பிரதேசமான மலையகத்தை நோக்கி அகில இலங்கை இந்து மாமன்றத்தை இழுத்து வந்தவர் இவரே. மாமன்றத்தின் பணிகள் மலையகத்திலும இடம்பெற்ற வேண்டும். இங்கு வாழும் இந்துக்களும் தேசிய நீரேட்டத்தில் கலக்கவேண்டும் என தாராள சிந்தையை அவர் கொண்டிருந்தார். இவ்வாறான தயாள சிந்தை கொண்டவர்கள் அரிதே. இவரது இழப்பு எம்மை பொறுத்தவரை ஒரு பேரிழப்பாகும்.

இருப்பினும் அன்னாரின் பணி தொடர நாம் அனைவரும் இணைந்து செயல் புரிவோம். அன்னாரின் மலையக சார் பணிகளாக பின்வருவனவற்றை நான் கோடிட்டு காட்ட விரும்புகிறேன்

- ✠ பல பாடசாலைகளில் சிவதொண்டரணியை தோற்றுவித்து வறிய மாணவர்களுக்கு நானாவித உதவிகளை வழங்கியமை.
- ✠ இந்து சமய பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பல செயலமர்வுகளை துறைசார் விற்பனர்களை கொண்டு நடாத்தியமை.
- ✠ மலையக கல்வி வளர்ச்சி பணி மன்றத்தை நிறுவியமை.
- ✠ கொட்டகலையில் இந்துமாமன்றத்தின் கிளைகாரியாலயம் நிருவுவதற்காக நிலம் பெற்றமையும் அதற்கான வேலையை ஆரம்பித்தமையும்.
- ✠ நவராத்திரி விழாவின் போது பல பாடசாலைகளில் துறைசார் அறிஞர்களின் சொற்பொழிவுகள் இடம் பெறசெய்தமை.

இவ்வாறு மாமன்றத்தின் பணிகளில் மலையகத்தையும் இணைத்து கொண்ட அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கும் மலையகத்திலிருந்து ஆழ்ந்த அனுதாபங்களை பதிவுசெய்கிறோம்.

**வி.சாந்தகுமார்**
காப்பாளர்

## திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் நினைவுப்பகிர்வு

## அமரர் கந்தையா நீலகண்டன் – வியத்தகு ஆளுமை

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவா் உயர்திரு. கந்தையா நீலகண்டன் அவா்கள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்று ஒரு மாதத்திற்கும் மேலாகிவிட்டது. இன்னமும் அந்தப் பிரிவினை ஜீரணிக்க முடியவில்லை. அந்த அளவிற்கு ஐயா அவா்கள் எங்கள் உணா்வுகளில் நீக்கமற நிறைந்திருக்கிறாா். இந்து மாமன்றத்தின் இணையற்ற தலைவராக அவா் ஆற்றிய அளப்பரிய தொண்டினை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

இரு தடவைகள் அவரை நேரில் காணும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது. கொழும்பு யுனி ஆா்ட்ஸ் அச்சகத்தில் "திருக்கோணேஸ்வரம்" வரலாற்று நூலின் முதற்பதிப்பு அச்சிடப்பட்ட போது, அதன் இறுதிக் கட்ட வேலைகளில் மும்முரமாக இருந்த வேளை. பின்னால் நின்று முதுகில் கை வைத்து நீங்கள் அருள்சுப்பிரமணியம் தானே என்று கேட்டாா் ஐயா. என்னை இவருக்குத் தெரிந்திருக்கிறதே என்ற உள்ளாா்ந்த மகிழ்ச்சியுடன் ஆம் என்றேன். இந்து மாமன்றத்தினால் தொடா்ச்சியாக வெளியிடப்படும் "இந்து ஒளி" சஞ்சிகையின் இறுதிக்கட்ட பதிப்பினை பாா்வையிட அவா் வந்திருந்தாா்.



தாய் தந்தையரையிழந்த குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக திருக்கோணேஸ்வரத்தினால் மேற்கொள்ளப்படும் உதவிகள் உள்ளிட்ட சமூக சேவைகளைப் பற்றி தான் அறிந்து மகிழ்வுற்றதாகவும், யாழ்ப்பாணத்தில் சிவபூமி நிலையத்தினால் ஆற்றப்படும் முதியோர் இல்லம், மனவிருத்தி சிறுவர் பாடசாலை போன்ற உயர்வான நற்காரியங்களையும் திருக்கோணேஸ்வரம் ஆற்ற வேண்டும் என்று தான் விரும்புவதாகவும் சொன்னார். எமது ஆலயங்கள் சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியது காலத்தின் கட்டாயம் எனவும் தீர்க்கமாகக் கூறினார். அவர் கூறியவற்றில் எனக்கிருந்த ஆழ்ந்த உடன்பாட்டினை தெரிவித்த போது அவர் மகிழ்ச்சியடைந்ததை முகக் குறிப்பில் கண்டேன்.

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் என்ற முறையில் திருக்கோணேஸ்வரத்தில் தீர்வு காணப் பெறாத சில முக்கிய பிரச்சனைகளை அவருக்குத் தெரியப்படுத்துவதன் தேவையை உணர்ந்த அடியேன் இச்சந்திப்பினை பயன்படுத்த வேண்டியதாயிற்று:

கோணேஸ்வர ஆலய வளாக அருகாமையில் அமைக்கப்பட்டிருக்கும் அறுபதுக்கும் மேற்பட்ட தற்காலிக கடைகளினால் ஆலயத்தின் புனிதம் பல வழிகளிலும் கெடுகின்ற நிலைமை, ஆலயத்தின் பராமரிப்பு முன்னேற்றம் சார்ந்து செய்யப்பட வேண்டிய கட்டுமானப் பணிகளுக்கு தொல்பொருள் துறையினரால் ஏற்படுத்தப்படும் தடைகள், ஆன்மீகத் தொடர்பு மட்டுமின்றி, தமிழ்மக்களின் வரலாற்றுத் தொன்மையின் அடையாளமாக விளங்கும் திருக்கோணேஸ்வரத்தின் புனிதத்திற்கு ஏற்பட்டிருக்கும் வேறு சில நெருக்கடிகள் ஆகியவற்றை விளக்கமாகச் சொன்னேன். என் உணர்வுகளை அமைதியாக அவதானித்ததைக் கண்ணுற்று, உரியவரிடம் உரிய நேரத்தில் சொல்லக் கிடைத்ததையிட்டு அடியேன் ஆறுதலடைந்தேன்.

திருக்கோணேஸ்வரத்தின் அன்னதான மடத்தினை திருத்திக் தருவதற்கு இந்துமாமன்றம் விரும்புவதாக திரு. நீலகண்டன் அவர்கள் ஒருநாள் தொலைபேசியில் எனக்கு அறிவித்தார்.

2011ல் இடம் பெற்ற வெள்ள அனர்த்தத்தினால் திருகோணமலையில் பல கிராம மக்கள் பெருத்த பாதிப்புக்குள்ளானார்கள். வெருகல், தம்பலகமம், திரியாய், ஆலங்கேணி போன்ற மிகுதியாகப் பாதிக்கப்பட்ட பல கிராமங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொதிகளுடன் உடனடியாகச் சென்ற திருக்கோணேஸ்வரத்தின் தொண்டர்கள், ஒரு வார காலமாக அம்மக்களுடைய துன்பத்தை துடைப்பதில் துரிதமாகச் செறப்பட்டார்கள். அதனைக் கேள்விப்பட்ட திரு. நீலகண்டன் அவர்கள் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்து மாமன்றத்தின் சார்பாக ரூபா 2 லட்சம் அனுப்பி வைப்பதாகவும், அதனை பாதிப்புக்குள்ளான மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யப் பயன்படுத்தும்படியும் கேட்டுக் கொண்டார். காலத்தினாற் செய்த உதவியினை எப்படி மறக்க முடியும்!

போரின் விளைவுகளால் முற்றிலும் பாதிக்கப்பட்டிருந்த திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சம்பூர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கட்டிட நிதியாக ரூ. 15 லட்சம் ஒதுக்கியதோடு, அப்பணத்தை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை ஊடாக கட்டம் கட்டமாக அளிப்பதற்கு எங்கள் ஒப்புதலை பெற்றுக் கொண்டார் திரு. நீலகண்டன் அவர்கள். 2016ல் தொடங்கிய புனருத்தாரணப் பணி 2017ல் நல்ல முறையில் நிறைவேறியது.

ஆலயங்களோடு சம்பந்தம் கொண்ட எங்கள் இருவரின் இயல்பான முதற்சந்திப்பு உரையாடல் இனிதே நிறைவெய்திய பின் திருக்கேதீஸ்வரத்தில் இடம்பெற்ற திருப்பணிச்சபை நிர்வாகக் குழுக்கூட்டத்தில் இரண்டாவது தடவையாகச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டிற்று. அதன்பின் பல தடவைகள் தொலைபேசியில் மட்டுமே தொடர்பு கொண்டிருக்கிறோம்.

இத்தொடர்புகளிலிருந்து அன்னாரைப் பற்றி என் அவதானத்தில் வந்து இதயத்தில் பதிந்தவை:

அர்ப்பணிப்புடனான அயராத சேவை, நெறிதவறா நேர்மை, அகில இலங்கை இந்து மாமன்றம் என்கிற மிகப் பெரிய அமைப்பினைச் சார்ந்த அனைத்து விடயங்களையும் கட்டுக்குள் வைத்திருந்த வியத்தகு ஆளுமை - இவை எல்லாம் சேர்ந்து இந்து மாமன்றத்தின் பெருமையை தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறது.

அமரர் நீலகண்டன் அவர்கள் "செயற்கரிய செய்வார் பெரியர்" என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்ந்திருக்கிறார். அவர் நாமத்தை என்றும் இதயத்தில் இருத்துவதோடு நம்முடைய சமூகம் ஆன்மீகம் சார்ந்த சேவைக்கு இப்பெருந்தகையை வழிகாட்டியாகக் கொள்வோம்.

**கணபதிப்பிள்ளை அருள்சுப்பிரமணியம்**

தலைவர், திருகோணமலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை



# அபிநயக்ஷேத்திர நடனப்பள்ளியின் நினைவுப்பகிர்வு

## பல்லூழி நிலைக்கும் நாமம் !!!

"நேரறியா மக்களெல்லாம் நினைக்கண்டால்
நீதி நெறி நேர்ந்து வாழ்வார்!
யாரறிவார் நின் பெருமை?
யார் அதனை மொழியினிடை அமைக்க வல்லார் ?"

என்ற பாரதி வரிகளை என் உள்ளம் கடன்வாங்க கண்முன் காட்சியாகிறது தனக்கென்ற தனி அடையாளத்துடன், கம்பீரப் பொலிவுடன் காட்சிதரும் மதிப்பிற்கும், அன்பிற்கும் பாத்திரமான திரு.நீலகண்டன் ஐயா அவர்கள்.

என்னை நடனக் கலைஞராய், நடன ஆசிரியராய் பல மேடைகளில் கௌரவித்த நிழற்படங்களை ஒவ்வொன்றாய்ப் புரட்டிப் பார்க்கும் போது, என் வாழ்க்கைப் புத்தகத்தின் பழைய அத்தியாயங்களை என்றும் இன்றி இன்று மீட்டிப் பார்க்க எத்தனிக்கிறது என் மனம் - என் அனுமதி இன்றி.

கலை சம்பந்தமாய் நாம் வைத்த கோரிக்கை எதற்கும் தயங்காது உதவும் தாராள குணம் அவர் இயல்பு . சரஸ்வதி மண்டபத்தை மீளமைப்பு செய்து ஆரம்ப நிகழ்விற்கு எனது நடனம் அவைக்காற்ற வேண்டும் என்று மிக்க அன்புடன் கேட்டு கொண்டதும், சரஸ்வதி மண்டபத்தில் மாணவியின் அரங்கேற்றம் ஒன்று நடத்த வேண்டும் என்ற அவர் வேண்டுகோளிற்கு இணங்க 2015 இல் அரங்கேற்றும் போது தலைமை தாங்கிச் சிறப்பித்தது மட்டும் இன்றி சரஸ்வதி மண்டபத்தோடு அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளிக்குள்ள தசாப்த கால உறவைப் பற்றிக் குறிப்பிட்டு, உளம் குளிர்வித்த நிகழ்வின் ஈரமும் இன்னும் எம்மை நனைத்து செல்கிறது.

இந்து மாமன்றம், இந்து வித்தியா விருத்திச் சங்கம் என்பனவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற எண்ணிலடங்கா நிகழ்வுகளிற்கு உரிமையோடு நடன நிகழ்வு தரும்படி, தந்தை போலும் உருவகித்தார் சில நேரத்தில் பல சமயத்தில் என் இதயத்தில்.

அபிநயக்ஷேத்ரா நாட்டிய நாடக நிகழ்வுகளை கண்டு ரசித்துத் தொடர்ந்து பாராட்டுவதோடு, இந்து மாமன்ற ஏற்பாட்டில் சிவனை கருப்பொருளாய் அமைத்து நாட்டிய நாடகம் தயாரித்துத் தாருங்கள் என்று விண்ணப்பித்த ஐயாவின் கோரிக்கை நிறைவேற்றப்படாமலே சென்றதும் சிவனவன் செயலே. சிவநாமந் தனைத்தாங்கி அவனை உணர்ந்து உள்ளொளி பெருக்கிய உத்தமரோடு, சிவனெனப் பேசும் பொழுதிலெல்லாம் சிந்தை உருகியதும் உண்மை. தன் அறிவையும் வளர்த்து தன் குடும்பத்தை அன்பினால் உருவமைத்து தன் ஆக்கத்தினால் சமூகத்திற்கு உதவி, தன் ஆன்ம விலாசத்திற்கும் விடை தந்து முழுமையாய் வாழ்ந்த மா மனிதன்.

தன் நிலை மறந்து பல தொண்டில் பயனுற தொழிலெனக் கொண்ட இணையயிலா புண்ணியனை, இப்பூவுலகில் ஆற்றிய பணி போதும் இனி எம்மோடு வந்து கலந்தின்பம் கொள்வீர் என்று விண்ணவர் பூமாரி சொரிய, ஞான ரதத்தில் ஏற்றி சென்ற நீலகண்டன் அறிவானோ பூமிசை அமர வாழ்வை சுகித்துச் சீருயர நின்ற தேவர் நம் நீலகண்டன் ஐயா என்று !!?

எப்போதும் ஆனந்தச் சுடர் நிலையில் வாழ்ந்து
உயிர்கட்கு இனிது செய்வோர்
தப்பாதே இவ்வுலகில் அமரநிலை பெற்றிடுவர்.

-பாரதி-

நெக்குருகிய அன்புடன்

**"கலாசூரி" திவ்யா சுஜேன்**
இயக்குநர்
அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி



# திரு. அ கனகசூரியரின் நினைவுப்பகிர்வு...

## இந்து ஒளியை பிரகாசிக்கச் செய்த பெருமகனார்

நம்பமுடியவில்லை. ஆனால் உண்மை. மின்னாமல் முழங்காமல் மழை பொழிவது போன்று நடந்து முடிந்துவிட்டது அந்த துயரமான நிகழ்வு. திரு.கந்தையா நீலகண்டன் அவர்களது மறைவைத்தான் குறிப்பிடுகிறேன். கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி எனக்கு மட்டுமல்ல, அவர்மீது பேரன்பு கொண்டிருந்த அனைவருக்கும் மறக்கமுடியாத ஒரு நாளாக அமைந்து விட்டது.

1994ஆம் ஆண்டு ஜூன் மாதம் என நினைக்கிறேன். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகக் கட்டடவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் மாமன்றத்துக்கு நிர்வாக உத்தியோகத்தர் தேவை என்ற பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்துவிட்டு நானும் விண்ணப்பித்திருந்தேன். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டபோது, மாமன்றப் பொதுச் செயலாளரான திரு.நீலகண்டன் அவர்களும் தேர்வுக்குழுவில் ஒருவராகவிருந்தார். அப்போது எனக்கு அந்தப் பதவி கிடைக்கவில்லை. மூன்று ஆண்டுகள் கழித்து, அதாவது 1997ஆம் ஆண்டு மே மாத இறுதியில், மாமன்றத் தலைமையகம் புதிய கட்டடத்தில் செயற்பட்டுக்கொண்டிருந்த வேளையில்,திரு.நீலகண்டன் அவர்கள், தனது சட்டத்தொழில் அலுவலகத்துக்கு வந்து சந்திக்கும்படி என்னை அழைத்திருந்தார். நான் அங்கு சென்றபோது, அவர் என்னிடம் கேட்ட முதல் கேள்வி இதுதான்.

"நீங்கள் ஊரெழு கனகசூரியராமே!"

"ஓம்"

இதுபற்றி ஏன் எனக்கு முன்னர் சொல்லவில்லை?"

"உங்களுக்கு தெரிந்திருக்கும் என நினைத்துவிட்டேன்"

"இல்லை! தில்லைநடராஜாதான் எனக்குச் சொன்னார்."

என்னிடம் கதைத்துக்கொண்டே தன்னிடமிருந்த கடிதக் கோவையிலிருந்து, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நான் அனுப்பிவைத்த விண்ணப்பத்தை எடுத்துப் பார்ப்பதை அவதானித்தேன். ஒரு வாரத்தின்பின், அதாவது 1997ஜூன் முதலாம் திகதியிலிருந்து இந்து மாமன்ற தலைமையகத்தில் நிர்வாக உதவியாளராக எனக்கு நியமனம் கிடைத்தது.

அறுபதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ஈழநாடு என்ற பெயரில் புதிய நாளிதழ் ஒன்று அறிமுகமானது. மாணவர்களிடையே எழுத்தார்வத்தை வளர்த்து அவர்களது எழுத்தாற்றலுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் "மாணவர் மலர்" என்ற பகுதி ஒவ்வொரு செவ்வாய்கிழமை தோறும் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது. 1961ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏராளமான மாணவர்கள் அதில் எழுதிவந்தார்கள். அவர்களுள் ஒருவராக மாணவப் பருவத்திலேயே எழுத்துத்துறையில் கால்பதித்தவர்தான் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள். இவர் கரணவாய் தெற்கு என்ற முகவரியிட்டு எழுதுவது வழக்கம். நான் ஊரெழு மேற்கு என்ற முகவரியிட்டு எழுதிவந்தேன். நாங்கள் இருவரும் வெவ்வேறு கல்லூரிகளில் கல்வி கற்றுவந்த போதிலும், ஈழநாடு மாணவர் மலர் பகுதியில் சிறு கட்டுரைகள், பொது அறிவுக் குறிப்புகள், வரலாற்றுத் தகவல்கள் என பல ஆக்கங்களை எழுதுவோம். ஒவ்வொரு வாரமும் 'மூளைக்கு வேலை' என்ற தலைப்பின் கீழ் புத்திக் கூர்மையை பரீட்சிக்கும் வகையிலான கேள்வியொன்று கேட்கப்படும். அதற்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கும் அனைத்து மாணவர்களின் பெயர்களும் முகவரியுடன் மறுவாரம் வெளியாகும். அந்தப் பட்டியலில் எங்கள் இருவரின் பெயர்களும் தவறாது இடம்பெறும். நாங்கள் எழுதும் விஷயங்களைப் பற்றிய அபிப்பிராயங்கள், கருத்துக்கள், விமர்சனங்களை, அதே மாணவர் மலர் ஊடாக நாங்கள் இருவரும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வோம். எங்கள் இருவருக்கும் இடையில் முகம்பார்க்காத வகையில், ஒரு நெருங்கிய தொடர்பு நிலை அன்றைய நாளிலிருந்து 'ஈழநாடு' ஊடாக ஆரம்பித்தது. எங்கள் இருவரினதும் எழுத்துக்கள் சில வருடங்கள் தொடர்ந்தன.

திரு.நீலகண்டன் யாழ்பாணத்தில் கல்வியை முடித்துக்கொண்டு கொழும்பு சென்று சட்டப்படிப்பை தொடர்ந்த காலத்தில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி வந்த இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகளில் நேரடியாகக் கலந்துகொண்டு வந்தார். அதேவேளையில் நானும் யாழ்ப்பாணத்திலிருந்து பிரதிகள் மூலமாக இலங்கை வானொலியின் இளைஞர் நிகழ்ச்சிகளுக்கு விஷயங்களை எழுதிவந்த நிலையில், எங்கள் இருவரினதும் பங்களிப்பு சில வருடங்கள் வானொலி ஊடாகவும் தொடர்ந்தன.

இந்த நினைவலைகள் திரு.நீலகண்டன் அவர்களது இதயத்தில் நீண்டகாலமாகவே ஆழமாகப் பதிந்திருந்தன என்பதை, 1997ஆம் ஆண்டு மே மாத இறுதி வாரத்தில் என்னை சந்தித்த வேளையில் கேட்ட முதலாவது கேள்வியிலிருந்து



வெளிப்பட்டதையிட்டு உண்மையிலேயே பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். இது அவரது நல்ல உள்ளத்தின் வெளிப்பாடாகவே எனக்குத் தெரிந்தது.

இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராகவிருந்த திரு.நீலகண்டன் அவர்களது நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுவதற்கு எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பேறாகவே கருதினேன். நான் மாமன்றத்துடன் இணைந்து கொண்டபோது, எனக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளுள் முதன்மையானதாக இந்து ஒளி வெளியீடு தொடர்பானதாகவே அமைந்திருந்தது. ஏற்கனவே இரு இதழ்கள் வெளிவந்த நிலையில் எனது பங்களிப்பை முன்னெடுத்தேன். அப்போது மாமன்ற வெளியீடுகள் குழுவின் தலைவராக பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களும்,செயலாளராக திரு.நீலகண்டன் அவர்களும் செயற்பட்டுக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இருவருடன், மாமன்ற கல்விக் குழுவின் செயலாளர் திரு.த.ம்னோகரன் அவர்களும் இணைந்திருந்து சஞ்சிகை வெளியீட்டுக்கு பெரிதும் உதவியது.

திரு.நீலகண்டன், மாமன்ற நிர்வாக உதவியாளராக இணைந்து கொண்ட என்னை, சில வருடங்களில் தகவல் அலுவலராக பதவி மாற்றம் செய்தார். அதே வேளையில் இந்து ஒளி வெளியீட்டின் பத்துவருட நிறைவும் வந்தது. இதனையொட்டி ஒரு சிறப்பிதழ் வெளியிடுவதற்கு திரு.நீலகண்டன் அவர்கள் தீர்மானித்தார். 2006 அக்டோபர் 16ஆம் திகதியன்று மலர்ந்த பத்தாண்டு நினைவுச் சிறப்பிதழில் திரு.நீலகண்டன் "இந்து ஒளி வெளியீட்டில் கடந்த பத்து ஆண்டுகாலம் ஈடுபாடு கொண்டிருந்தவன் என்ற உரிமையில் மூவரை நான் தனியே இனம் கண்டு மனதாரப் பாராட்டுகிறேன்." என்று குறிப்பிட்டு தனது நினைவுகளைப் பகிர்ந்திருந்தார்.

இந்து ஒளி சஞ்சிகை தோற்றம் பெறுவதற்குரிய காரணகர்த்தா மட்டுமல்ல, இருபத்தொரு வருடங்கள் சஞ்சிகையுடன் நெருக்கமாக இணைந்திருந்தவர் என்ற வகையில் திரு.நீலகண்டன் சொல்வதைப் பார்ப்போம்.

"...மாமன்ற தலைமையகப் பூர்த்தியுடன் இரண்டு முக்கிய முடிவுகளை எடுத்திருந்தாரகள். ஒன்று மாமன்றம் காலாண்டிதழ் ஒன்றை வெளியிடவேண்டும். இரண்டாவது மாமன்றம் மக்கள் பணியில் ஈடுபடவேண்டும், இரண்டு முடிவுகளையும் எம்மாலான மட்டும் நிறைவேற்றி வந்திருக்கிறோம். அந்தவகையில் கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஒழுங்காக, ஒவ்வொரு காலாண்டும் 'இந்து ஒளி' யை வெளியிட்டு வைத்திருக்கிறோம். நினைத்துப் பார்க்கும்போது நிம்மதி. காலாண்டிதழ் வெளியிடத் தீர்மானித்தபோது, இதழுக்கு என்ன பெயர் வைக்கலாம்? என குழு அமைத்து ஆலோசித்தோம். பல கருத்துக்கள் - எமது பிரதித் தலைவர் திரு. மா.தவயோகராஜா 'இந்து ஒளி' எனும் பெயரைச் சூட்டவேண்டும் என வலியுறுத்தினார். அவரின் கருத்தே இறுதியாக ஒலித்தது. அதுவே முகாமைப் பேரவையின் முடிவாகியது. இந்தப் பத்து ஆண்டுகள் 'இந்து ஒளி' சஞ்சிகை தடங்கலின்றி வெளிவருவதற்கு காரணமாக இருந்தவர்கள் பலர். அவர்கள் செய்த தியாகங்கள் ஏராளமானவை...."

இவ்வாறு இந்து ஒளி — பத்தாண்டு நிறைவுச் சிறப்பிதழில் (அக்டோபர் 2006) எடுத்துச் சொன்ன திரு.நீலகண்டன் அவர்கள், இந்து ஒளி - இருபதாண்டுப் பூர்த்தி சிறப்பிதழில் பின்வருமாறு தெரிவிக்கிறார்,

"...இருபது ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்து, இந்நாட்டு இந்து வெளியீடுகளின் வரலாற்றில் மாமன்ற ஆன்மீக சஞ்சிகையான 'இந்து ஒளி' வரலாறு படைத்திருக்கின்றது. அந்தத் திருப்தியுடன் 'இந்து ஒளி' இருபதாண்டு நிறைவுமலர் வெளியிடுவதற்கு ஆண்டவனின் திருவருள் கிடைத்திருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக ஒவ்வொரு மலரிலும் தன் மடல் மூலம் எமக்கு அருளுரை தந்துவரும் ஆன்மீகச் சுடரின் ஆசி தொடர்ந்து எங்களுக்கு கிடைத்து வருவது நாங்கள் செய்த புண்ணியம். இந்து ஒளிக்கு ஆசிரியத் தலையங்கங்களை வரைவதுடன் பலவகையிலும் வழிகாட்டி நிற்கும் சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தரும் பக்கபலம் 'இந்து ஒளி' க்கு மேலும் மெருகூட்டும் வகையிலுள்ளது. ஆரம்பகாலத்திலிருந்து கல்விக் குழுச் செயலாளர் த.மனோகரன் போன்ற பலர் பல வழிகளிலும் இந்த ஆன்மீக சஞ்சிகையை வளர்த்தெடுத்திருக்கிறார்கள். இன்னும் இளைய சமுதாயம் இப்பணியில் ஈடுபடவேண்டும் என்பது எங்களின் அவா."

திரு.நீலகண்டன் 21ஆவது இந்து ஒளி ஆண்டு நிறைவுச் சிறப்பிதழில் "உங்கள் கைக்கு வரும் ஆன்மீக இதழான இந்து ஒளி 21ஆம் ஆண்டு நிறைவு மலராக மலர்கின்றது. இந்நாட்டு இந்து மக்களின் வரலாற்றில் இது ஒரு சாதனை. இச்சாதனையை ஏற்படுத்தத் திருவருள் என்றும் எங்களுக்கு வழிவகுத்தது. இந்த இதழை தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு அர்ப்பணிக்கின்றோம். அவரின் சிந்தனையும் செயற்பாடும் எமது மக்களிடையே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், அவர் காட்டிய வழியில் மக்கள் சேவையே இறைபணி என தொண்டாற்றி எங்களையும் ஊக்குவித்தது...." என்றும் குறிப்பிட்டார்.

'இந்து ஒளி'யின் வரலாற்றுப் பாதையில் இதுவரையில் (மகா சிவராத்திரி சிறப்பிதழ் - தீபம்22, சுடர்-01வரை) 104 சுடர்கள் பிரகாசித்திருக்கின்றன. 22 தீபங்களின் ஊடாக 104அகல்விளக்குகளை ஏற்றி வைத்த பெருமைக்குரிய பெருமகன் அமரர்



நீலகண்டன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 105ஆவது அகல்விளக்கை மாமன்றம் ஏற்றி வைக்கிறது.

கடந்த காலத்தில் வெளியாகிய இந்து ஒளி 104 இதழ்களையும் தனது நேரடி கண்காணிப்பிலும், மேலான ஆலோசனையுடனும், பெருமளவு பங்களிப்புடனும் வெளியிட்டு உதவியவர் திரு.நீலகண்டன் அவர்கள். 'இந்து ஒளி' இந்து மக்கள் மத்தியில் பேரபிமானமும் பெருமதிப்பும் பெற்றுத் திகழுவதற்கும், காலந்தவறாது கிரமமாக வெளிவந்து இருபத்தொரு ஆண்டுகளை சிறப்பான வளர்ச்சியுடன் வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கும் மாமன்ற முகாமையுடன் இணைந்து திரு. நீலகண்டன் வழிசமைத்தார். இந்து ஒளி உரிய காலத்தில் தவறாது வெளிவரவேண்டும் என்பதில் இவர் கொண்டிருந்த ஆர்வமும் உறுதிப்பாடும் என்றென்றும் போற்றுதற்குரியது.

## இந்துவின் காவலன்
## "உயர்திரு கந்தையா நீலகண்டன்"

– **குணரட்ணம் பார்த்தீபன்** (அவுஸ்திரேலியா)

நீலகண்டன் - இயற்பெயரில் அவன் நாமம்
பொழுதெல்லாம் அவன் சிந்தை
இந்துவின் அச்சாணி இலங்கையெல்லாம் உன் பணி
இப்படியொரு மனிதனா என்று வியந்தவர்களில் நீங்களும் ஒருவர்

மாமன்றத்தில் வெள்ளிமதிய பூசையா அங்கும் காணலாம்
மாலை சரஸ்வதி மண்டபத்தில் கூட்டமா அங்கும் காணலாம்
பதுளையில் சிவத்தொண்டர் அணியா அங்கும் நிற்பீர்கள்
ரத்மலானை சிறுவர் இல்லமா அங்கும் நிற்பீர்கள்

திருகேதீச்சரத்தில் சிவராத்திரியா அங்கும் நீங்கள் தான்
வவுனியாவில் மாமன்ற கட்டிடம் நிறுவுவதா அங்கும் நீங்கள் தான்
யாழ்ப்பாணத்தில் மாமன்றமா அங்கும் நீங்கள் தான்
மட்டக்களப்பில் குருபூசையா அங்கும் நீங்கள் தான்

தூங்க முடியவில்லை ஐயா - நீலகண்டா
கண்ணை மூடினால் உங்கள் ஞாபகங்கள்
செயலாளர் என்பதன் பொருளை செவ்வனே கற்றுக்கொடேன் உங்களிடம்
எவ்வளவு செயலாற்றல் வியந்துபோனேன் விம்மி அழுகிறேன்

வயதிற்கு விஞ்சிய உந்தன் வேகம்
அளவுக்கு விஞ்சிய உந்தன் ஆற்றல்
ஆயிரம் பேருக்கு நிகராகும் ஒரு தனிமனிதன்
வியந்துபோனேன் - அடிமையானேன் உந்தன் சேவையில்

இலங்கைத் தலைநகரில் இந்துக்கள் தலைநிமிர
தான்வாழ தன்மதம் வாழ தன்னையே அர்ப்பணித்து
தலைமைகள் பலவேற்று கடமைகள் பலபுரிந்து
ஓடி ஓடி உழைத்த உன்னத மாமனிதன்

ஓய்ந்து போனார் என்றசேதி உலுப்பியது ஒருநிமிடம்
உண்மையை அழுதேன் அங்கலாய்த்தேன்
தேடியும் ஒருமனிதர் கிடையார் உனைப்போல் இனி
வாடித் துடிக்கின்றோம் வானிறங்கி வாராயோ?



## அமுதமேந்தும் கலசம் அழிந்தது.... அட்சய பாத்திரம் தீயினில் வெந்தது...

பிறந்தன வெல்லாம் இறக்குமென்றால் , இறந்தனவெல்லாம் பிறக்குமென்பது இந்து தர்மம்.இதற்கமைய அகில இலங்கை இந்து மாமன்ற தலைவராக இருந்து அமரத்துவமடைந்த உயர்திரு கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு மறுபிறப்பு உண்டென்றால் அவர் மீண்டும் தமிழ் - இந்துவாகப் பிறந்து தமிழுக்கும் இந்து மதத்திற்கும் தொண்டாற்ற வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

தீர்மானமெடுத்தல், திட்டமிடல் , ஒழுங்கமைத்தல் , நடைமுறைப்படுத்தல் , நோக்கத்தையடைதல் என்னும் முகாமைப்படிகளில் ஆளுமை மிகுந்த சிறந்த தலைவனை இந்து மாமன்றம் இன்று இழந்து நிற்கின்றது. இப்பேற்பட்ட ஒரு சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் நாம் பணியாற்றக் கிடைத்தமையை ஒரு பேறாகப் கருதுகின்றோம். தனது அளவுக்கதிகமான வேலைப்பழுவுக்கு மத்தியிலும் எம்மை ஊக்குவிப்பது , எமக்கான ஆலோசனைகளை வழுங்குவது , எல்லாவற்றையும் தனது நினைவில் வைத்திருந்து சரியான வழிகளை காட்டுவது என்பன அவரின் இயல்பான குணம்சங்களாகும். தன்னால் வழங்கப்பட்ட பணிகளை நிறைவேற்றாதுவிடின் அல்லது கால தாமதமாகின் அது தொடர்பில் கோபப்பட்டு கண்டிப்பது அவரின் வழக்கம். எனினும் மற்றையோர்போலன்றி அடுத்த நிமிடமே திரும்ப தொடர்பு கொண்டு தோளில் கைபோட்டு வாஞ்சையுடன் வேறு விடயங்களை கதைப்பார்.அங்குதான் ஔவையாரின்

"நீர் கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்" என்பதனை உணர்ந்தேன்.

அமரர் நீலகண்டன் ஒர் "சீரொழுகு சான்றோர" என்பதுதான் எனது முடிவாகும்.

எமது மத்தியில் ஒருவர் அமரத்துவமடைந்தால் " எமது சமுதாயத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு" என அவரை வர்ணிப்பது இயல்பு. அது ஒரு சம்பிரதாயமும் கூட. ஆனால் அமரர் நீலகண்டனின் இழப்பென்பது சம்பிரதாயத்திற்கு அப்பால் எமக்கு எவ்வகையிலும் ஈடு செய்ய முடியாத இழப்பென்றால் அது மிகையல்ல.

அவர் தலைவராக இருந்த காலத்தில் அலுவலக நடவடிக்கைகளுக்கப்பால் எமது சுக துக்கங்களிலும் பங்கெடுப்பார்.

நாம் நோய் வாய்ப்பட்டால் அது பற்றி அதிக அக்கறை கொள்வார்.இது தொடர்பில் எனக்கேற்பட்ட சம்பவமொன்றை நினைவு கூருவது கட்டாயமாகும். கடந்த 2017 நல்லூர் உற்சவ காலத்தில் கடமையின் நிமித்தம் யாழ் சென்ற நான் எதிர்பாராத விதமாக ஒரு விபத்தில் சிக்கி விட்டேன். அது பற்றி அறிவித்ததும் உடனடியாக கொழும்புக்கு திரும்பும் படி கேட்டுக் கொண்டதோடு அன்று இரவு நான் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது 4 அல்லது 5 தடவையாவது எனது நிலைபற்றி தொலைபேசியில் தொடர்பு கொண்டு சுகம் விசாரித்த வண்ணம் இருந்தார். நான் வீடு வந்து சேர்ந்த பின்னர் ஒரு நாளைக்கு குறைந்தது இரு தடவையாவது தொலைபேசியில் தொடர்பு கொண்டு சுகம் விசாரித்ததுடன் பணம் ஏதும் தேவையாயின் உடன் சொல்லுமாறும் வலியுறுத்தியிருந்தார்.இவ்வாறான ஒரு பன்முக ஆளுமையும் , மனிதநேயமும் , உயர்பண்பும் , மிக்க தலைவனை இந்து மாமன்றம் இனி எக்காலத்திலும் பெற முடியாது என்பது எனது திடமான நிலைப்பாடாகும்.

இப்பேற்பட்ட உத்தமர்களை ஆண்டவன் இவ்வளவு சீக்கிரம் தன்னிடம் அழைத்திருக்கக் கூடாது . என்றாலும் அதனை யாரலும் மாற்றவும் முடியாது என்பதே யாதார்த்தமாகிறது.

"வல்லவனை போரில் தெரியும்.
நல்லவனை சாவில் தெரியும."

என்ற வாக்கிற்கிணங்க அமரர் நீலகண்டன் சாவும் அமைந்தது. அவரின் மரணத்தை நினைக்கும் போது எனக்கு கவியரசரின் பாடலொன்றே நினைவில் வருகிறது.

வேண்டிய பலபேர் எம்மை
மிகச்சிறு வயதில் விட்டு
மாண்டனர் ! அப்போ தொல்லாம்
மனத்துயர் அதிக மில்லை !
ஈண்டு நின் மரணச் சேதி
இழைத்ததோர் துயரந்தன்னை
மீண்டொரு முறை நீ வந்தால்
விளங்குவாய் ! நீலகண்டா !
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**க.பாலசுந்தரம்,** நிர்வாக உத்தியோகத்தர்.
அகில இலங்கை இந்து மாமன்றம்



# “இவர்போல் ஒருவர் வரப்போவதுமில்லை:
# இவர்போல் எவரு மாகிவிடவும் முடியாது”

எனது உயர்தரக் கல்வி முடிவடைந்தபின்பு எனது தொழிலை கணணி சார்பாகவும் பின்பு நிர்வாகப் பதவிகளிலும் பணியாற்றி சலித்துப் போய் பணிகள் எல்வாவற்றையும் 2015ல் துறந்துவிட்டு இருந்த அப்பொல்லாத காலத்தில் வண்ணை வேங்கடவனும் நல்லைக்கந்தனும் தம்முடன் அருகிருத்தி சிலமாதங்கள் என்னைக் காத்துக்கொண்டார்கள். அவ்வாறிருக்கையில் எனக்கு இந்து மாமன்றத்தில் திட்ட அலுவலர் பதவிக்கான பணிநிலை வேண்டுகை வந்திருப்பதாக எனது மனைவி அறியத்தந்த போது எனது மனமும் “எனது சமயத்திற்கும் என்னாலான பணிகளை ஆற்ற வேண்டும்” என்ற எண்ணம் வலிந்துந்தித்தள்ள விண்ணப்பித்தேன். பின்பொருநாளில் நேர்முக அழைப்புக்கிடைக்கப்பெற மாலவன்-மருகன் ஆசியுடன் கொழும்புக்கு வந்து மாமன்ற அலுவலகத்தினுள் காலடி வைத்தேன். அன்று வெள்ளிக்கிழமை என்பதால் மாமன்ற நிர்வாகத்தினர் அங்கு பூசை வழிபாடுகளுக்காக வந்திருந்தனர். அதிலே திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் என்னை அழைத்தார். அவருடன் திரு. வே.கந்தசாமி மற்றும் திரு. மா.தவயோகராஜா ஆகியோர் உடனிருந்தனர். “உமது பெயரைப்பார்த்தே நாம் உம்மைத் தெரிவுசெய்துவிட்டோம். உமது சுயவிபரத்திலுள்ளதையும் பார்த்தோம். உமது திறமைகளையும் உத்திகளையும் இந்து மாமன்றத்திற்கு பெற்றுக்கொள்ள எங்களுக்கு மிகவும் விருப்பம். இளைஞர்கள் எமக்கு மிகவும் தேவை” என்று கூறியது இன்றும் என மனதில் பதிந்துள்ளது.

2015 நவெம்பர் மாதம் பணியில் இணைந்தபின்பு முதல் பணியாக இந்து சகோதரத்துவ மாநாட்டை ஒழுங்கு செய்வதிலும் 2016-17ம் ஆண்டக்கான கையடக்கப் பஞ்சாங்கத்தை முதன் முதலில் பதிப்பிப்பதுமாக இருந்தது. ஆரம்பத்தில் அவரது வேகத்துக்கு ஈடுகொடுக்கவும் அவரது பாணியை புரிந்து கொள்வதிலும் சிறிது சிக்கலிருந்தாலும் பின்னாளில் அது வசமாகிப்போயிற்று. பிழைகள் விட்டபோது கடிந்துகொண்டாலும் அடுத்த நொடியே அதனை மறந்து நம்மை ஊக்குவிப்பது அவரின் கைவந்தகலை. அதனாலேயே நானும் என் முழு ஆதரவையும் அவருக்கு வழங்கினேன். பின்னாளில் உரைகளையும் பத்திரிகை அறிக்கைகள், கண்டனங்கள், இந்து ஒளிக்கான ஆக்கங்களை தேர்ந்தெடுத்தல் அட்டைப்படங்களை வடிவமைத்தல், நிகழ்வுகளின் ஒழுங்குகளை அமைத்தல், அழைப்பிதழ்களை வரைவுசெய்தல், என்று என்னிலிருந்த அனைத்து திறன்களையும் வெளிக்கொணர்ந்த திருத்தி ஊக்கப்படுத்திய ஓர் மானசீக குருவென்றே சொல்லலாம்.

இந்து மாமன்றப் பணிகளை முகநூல், இணையத்தளம், கீச்சகம், Linkedin போன்ற நவீன உலகின் தொழிநுட்ப தளங்களுக்கு விரிவுசெய்வதற்கான பணிகளையும் மேம்படுத்த ஊக்குவித்தார். மாமன்றத்தின் இணையத்தளத்தை மறுசீரமைக்கும் தேவையை எடுத்துரைத்தபோது அதனை ஏற்று அதற்கான பணிகளை உடன் ஆரம்பிக்க அனுமதியளித்தார்.

மாமன்றத்தின் பணிகளில் எனக்கு மிகவும் பிடித்த ஒரு பணி இந்து ஒளி ஆன்மீக சஞ்சிகை வெளியீடு. இந்து ஒளிக்காக கட்டுரைகளை அவர் தேர்ந்தெடுக்கும் விதம், அவற்றை கோர்த்து ஒரு நூலாக வெளியிடும் விதம் என்பவற்றை அவதானித்தபோது அச்செயலொழுங்கானது மிகவும் நேர்தியாகவும் எனக்கு பிரமிப்பையும் ஏற்படுத்தியதுடன் சூட்சுமமானதாகவும் அதனை கற்றுக்கொள்ள சிறிது காலமும் பிடித்துக் கொண்டது. ஆனாலும் இந்து ஒளியை வடிவமைப்பதிலிருந்த சூட்சுமத்தை புரிந்துகொண்டு பிற்காலத்தில் அவரது எண்ண ஓட்டத்திற்கேற்ப வடிவமைப்பதில் நான் வெற்றிபெற்றதை அவர் வழங்கிய அங்கீகாரம் எனக்கு மோதிரக்கைக் குட்டாகவே இருந்தது.

நீலகண்டன் ஐயாவில் எனக்குப்பிடித்த ஒரே குணம், அதர்மமாக, அடுத்துக்கெடுக்கும் எந்த ஒரு நபரையும் அருகில் சேர்க்கமாட்டார் முகத்துக்குநேரே பேசிவிடுவார். அந்த ஒரு நேர்மையான குணமே அவரை இத்துணைப் பெரிய தெயவக்காரியங்களில் தலைமையேற்கும் வாய்ப்பைக் கொடுத்தது. அதன் பயனாக திருக்கேதீச்சர பணிகளிலும் கணணிசார் சில உதவிகளை செய்துவழங்கும் சந்தர்ப்பமும் எனக்குக் கிட்டியது. மாமன்றத்தில் நான் பணியாற்றத்தொடங்கியது முதல் பல்வேறு பணிகளிலும் என்னை ஈடுபடுத்தி ஊக்குவித்ததை என்றும் என்நெஞ்சு மறக்காது.



நீலகண்டன் அவர்கள் சுகவீனமுற்று 2017 இறுதிப்பகுதியில் வைத்திய கண்காணிப்பில் இருந்தவேளையில் தீபாவளிச்சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. அதன்பின்பு அவர் வீடுதிரும்பியதும் அவர் மனதில் என்ன தோன்றியதோ தெரியவில்லை, வழமைபோல காலை என்னை தொலைபேசியில் அழைத்து பேசியவர் திடீரென்று 21வது ஆண்டு சிறப்பு மலரொன்றினை வெளியிட வேண்டும். அதற்கான பணிகளை ஆரம்பிக்கச் சொன்னார். "அடுத்து 25வது ஆண்டுக்குத்தானே ...." என்ற என்னை, "பரவாயில்லை 21ற்கும் ஒன்று வெளியிடுவோம்" என்றார். அதன்பணிகளை ஆரம்பித்து என் முழுக்கவனத்தையும் செலுத்தி அவரது பாணியில் அந்த 21வது ஆண்டு சிறப்பிதழையும் வெளியிட அவருடன் பணியாற்றியது என்றும் மறக்குமுடியாததாகும்.

அந்த 21வது ஆண்டு சிறப்பிதழ் வெளியிட்ட பின்பு ஒரு வெள்ளிக்கிழமை மாமன்றத்திற்கு பூசைக்கென வந்திருந்த தலைவர் அவர்கள், "அடுத்த இந்து ஒளி சிவராத்திரிக்கு வெளியிடுவோமா?" என்றார். 2016 ஜூலை மாதம் திருக்கேதீச்சர மண்டலாபிடேக மலர், திருக்குட திருமஞ்சன மலர் என்பவற்றிலிருந்து சில முத்தான 20ற்கு மேற்பட்ட கட்டுரைகளை தேர்ந்தெடுத்து அவற்றை தயார்படுத்தத் தந்தமையையும் அக்கட்டுரைகள் வாளாவிருக்கின்றன அவற்றை சிவராத்திரி மலரில் இடம்பெறச்செய்து "மகாசிவராத்திரி சிறப்பிதழாக" திருக்கேதீச்சர பெருமானுக்கு அர்ப்பணிக்கலாமென கூறியதும் அவருக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. உடனே அவற்றை தனக்குக் காட்டும்படி கூறியவர் இரண்டு நாட்களில் அவ்விருபது கட்டுரைகளிலிருந்து மேலும் வடிகட்டி சில கட்டுரைகளை தேரந்தெடுத்துத் தந்தார். அவற்றைக் கொண்டு இந்து ஒளி தயாரிக்கும் பணியை ஆரம்பித்தேன். வழமைபோல எனது தைப்பூச உபயம் காரணமாக திருக்கேதீச்சர பெருமானிடம் செல்லவேண்டும் என்பதைக் கூறியபோது "அன்றுதான் சம்பந்தர்-சுந்தரர் மடம் திறப்பு விழா. அதனையும் படம்பிடித்து, ஆலயத்தின் கருங்கற்றிருப்பணிகளையும் படம்பிடித்து வரமுடியுமா? அதனை ஒரு assignment ஆக செய்யுங்கோ" என்றார். அதற்கு நானும் சம்மதித்தேன். அவ்வாறு எடுத்த புகைப்படங்களையும் உள்ளடக்கி மகாசிவராத்திரி சிறப்புமலரும் தயாரானது. அச்சிறப்பிதழ் அவருக்கு மிகுந்த மனநிறைவையும் கொடுத்ததை "இந்து ஒளி அருமையாக நிறைவாக இருக்கு" என்ற கூற்று வெளிப்படுத்தியது.

வழமையில் சிவாரத்திரிக்கு மாமன்றத்தில் நிற்கும்படி கோரும் நீலகண்டன் ஐயா அவர்கள் இந்தமுறை மட்டும் "சிவராத்திரிக்கு எங்க நிப்பியள்?" என்று கேட்டது எனது மனதில் உடன் ஒருவித கிலேசத்தை ஏற்படுத்தியது. சிவராத்திரிக்கு திருக்கேதீச்சரம், நகுலேச்சரம் ஆகிய பதிகளில் என் வழிபாடுகளை முடித்து மாமன்றம் திரும்பியதும் நகுலேச்சரத்தில் இந்திய துணைத்தூதரகம் ஏற்பாடுசெய்திருந்த "பட்டிமன்ற பேச்சுக்கள் எப்படி இருந்தது? யார் என்ன சாரப்பட பேசினார்கள்?" என்றும் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

18-02-2018 அன்று மாமன்றத்தினால் அமெரிக்க ஹாவாய் ஆதீன சுவாமிகளுக்கான வரவேற்பு நிகழ்விற்கான ஒழுங்குகளை சரஸ்வதி மண்டபத்தில் செய்துகொண்டிருந்தவேளை நீலகண்டன் ஐயா அவர்கள் எனக்கு அழைப்பினை ஏற்படுத்தி "நீங்கள் அங்க நில்லுங்கோ, நானும் வாறன்" என்றவரை நான் "கயிலாசபிள்ளை அம்மாவும் வருவா, நாங்கள் பார்க்கிறோம், நீங்கள் ஓய்வெடுங்கள், செய்து முடிந்ததும் உங்களுக்கு படங்களை அனுப்புகிறேன்." என்றேன். ஆனால் அவரது 'ஒவ்வொரு விடயத்தைய் தானே நேரில் நின்று பாரத்து செய்யும் சீர்மிகு பண்பினால்' அந்த இயலாமையிலும் தானே நேரில் வந்து எம்முடன் தனது வாழ்நாளின் கடைசி நிமிடங்களைச் செலவிட்டார். மேசையில் அமர்ந்திருந்த நீலகண்டன் அவர்கள் சரஸ்வதி மண்டபத்திலிருந்து புறப்படுமுன்பாக "அடுத்த நிகழ்வு மார்ச் 11 பிரணவன், என்ன செய்வம்" என்றவரை "எல்லாம் நல்லா நடக்கும், நிகழ்வு ஒழுங்கினை வரைவுசெய்து திங்கட்கிழமை உங்களுக்கு மின்னஞ்சல் செய்கிறேன்" என்றதும் நிம்மதியாக தலையாட்டிவிட்டு சென்றார் - சென்றவர் நம்மையும் விட்டு சிவனிடமே சென்று விட்டார்.

அவரின் இறுதி மணித்தியாலங்களில் அவருடன் அவருக்குப்பிடித்தவர்கள் மட்டுமே இருந்தோம் கதைத்தோம் பணிபுரிந்தோம் என்று நினைக்கும்போது எம் மனது அமைதிபெறுகின்றது.

"இவர்போல் ஒருவர் வரப்போவதுமில்லை: இவர்போல் எவரு மாகிவிட முடியாது"

**முருகையா பிரணவன்,** திட்ட அலுவலர்
அகில இலங்கை இந்து மாமன்றம்



### யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் நினைவுப்பகிர்வு

# 'சட்டத்தரணி நீலகண்டன்' அவர்கள் 'அச்சுக்கலை வித்தகர்'

18.02.2018...அன்று ஞாயிற்றுக்கிழமை, மாலை 3 மணி இருக்கும். எங்கள் தந்தை சரஸ்வதி மண்டபத்தில் நடக்கவிருக்கும் விழாவிற்கு செல்வதற்காக ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தார். அப்போது தொலைபேசி மணி அடித்தது. அதைஎடுத்த மறு வினாடி எமது இதயத் துடிப்பு நின்றுவிட்டதைப் போல் ஒரு உணர்வு. மூளை செயற்பட மறுக்க பயந்து போய்விட்டோம். எம் பதட்டத்தைப் பார்த்த எம் தந்தை 'என்ன விடயம் எனக் கேட்டார். அவரிடம் சொல்ல நா வரவில்லை. தொலைபேசியை அவரிடம் கொடுத்துவிட்டோம். 'இப்போ.. இப்போ எங்களிடம் கதைத்தாரே...சரஸ்வதி மண்டபத்தில் நிற்கிறேன். வீட்டிற்குப் போகப் போகிறேன். Banner எல்லாவற்றையும் நேரத்துடன் அனுப்பிவிடுங்கோ. - இப்படி இப்போ கதைத்தாரே! (அடுத்த நிமிடம் நடப்பது நம் கையில் இல்லை என்ற வரிகள் நினைவுக்கு வந்தது). நம்ப முடியாமல் எம் தந்தை, பிரணவன் அண்ணாவைத் தொடர்பு கொண்டு அதை ஊர்ஜிதப்படுத்தியபோது தந்தையின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

மறுநாள் அவர் இல்லம் சென்று அவரைப் பார்த்தபோது துக்கத்தை எம்மால் அடக்கமுடியவில்லை. எப்படி இப்படி கண் அயர்ந்து நித்திரை கொள்கிறார். அவர் நித்திரை கொள்ளும் நேரம் மிகக்குறைவு. அந்த நித்திரை எல்லாம் சேர்த்து வைத்து நித்திரையாகிவிட்டாரா! களைப்பின்றி எத்தனை வேலைகள் செய்திருப்பார். கடவுள் இது போதும் என்று ஓய்வெடுக்க வைத்துள்ளாரா என எண்ணத் தோன்றியது.

நீலகண்டன் Uncle ஐ நாம் Uncle என்றே அழைப்போம்! அவர் எங்கள் தாத்தா காலத்திலிருந்து குடும்ப நண்பராக இருந்துள்ளார். சி.வி. விவேகானந்தன் மாமாவும் அவரும் ஒன்றாக Hulftsdorp இல் இருந்தபோது குடும்பத்தோடு ஏற்பட்ட நட்பு இன்றும் எம்முடன் தொடர்கிறது.

எமது யுனி ஆர்ட்ஸ் அச்சகநிறுவனத்தில் 30 வருட காலம் கடைசி நாள்வரை இணைந்திருந்தவர் அவர். யுனி ஆர்ட்ஸ் நிறுவனம், நாம் எம் ஊழியர்கள் அனைவரையுமே தன் குடும்பமாகப் பார்த்த ஒரு அற்புதமான மனிதர்! குடும்ப அங்கத்தவர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதைப் போல சில சமயம் கருத்து வேறுபாடுகள் வருவதுண்டு. ஆனால் எம்மை விலக்கிவைத்து ஒதுக்க மாட்டார். Uncle எம்முடன் உரிமையோடு கண்டிப்பார். பேசுவார்! ஆனால் எதையுமே மனதில் வைத்து சாதிப்பது இல்லை. ஒரு தொலைபேசி அழைப்பில் அருணி, லக்ஷி, என்று அன்போடு சாந்தமாக அழைக்கும்போது எல்லாமே பறந்து போய்விடும். இப்படி இனி யார் உரிமையோடு பழகப்போகிறார்கள்.

1993 ஆம் ஆண்டு முதல் மாமன்றத்திற்கான அச்சகவேலைகளை நீலகண்டன் Uncle எம்மிடம் செய்திருந்தபோதும், மாமன்றத்திற்காக எம் அச்சகத்தில் அச்சிட்ட முதல் மலர் கட்டட பூர்த்தி மலரே. எம் தந்தை அதனை அச்சிட்டு வழங்கியதற்கு பெரும் பாராட்டும் வழங்கியவர். அதன்பின் இந்து ஒளி ஆரம்பிக்கப்பட்டு 21 ஆண்டுகளாக எம் அச்சகத்தில் அச்சுப்பதிவு செய்யப்படுகிறது. சஞ்சிகை தரமாக இருக்கவேண்டும். நல்ல கட்டுரைகள் பிரசுரிக்க வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருப்பார். தன்னிடமுள்ள புதிய புதிய வடிவமைப்புக்களைக் கொண்ட வெளிநாடுகளில் அச்சிடப்பட்ட புத்தகங்களை எல்லாம் எடுத்துவந்து தந்து அதைப்பற்றியெல்லாம் எங்கள் மூவருக்கும் விளக்கமளித்து தன் கருத்துக்களையெல்லாம் கூறுவார். எங்கள் அச்சக தரத்தை உயர்த்திய பெருமை Uncle ஐயே சாரும்.

நாம் அச்சகத்துறையில் முன்னேற வேண்டும் என்று மனதார நினைத்தவர் அவர்! அச்சகத்துறையில் பெண்கள் ஈடுபடுவது குறைவு, அதையே கூறிக் கூறி நீங்கள் இருவரும் இந்த துறையில் நன்றாக வரவேண்டும். பெண்களாலும் சாதிக்க முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும் என்று கூறி எம்மை எப்போதும் ஊக்கப்படுத்துவார். எந்தப் பிரசுரமானாலும் அவருடைய கண்காணிப்பில்தான் வெளியில் வரும். அதற்காக எப்படியெல்லாம் பாடுபடுவார்! இரவு 1 மணி 2 மணிக்குக் கூட நாம் வீட்டிலிருந்து கட்டுரைகளை மின்னஞ்சலில் அனுப்புவோம், விழித்ததும் பார்ப்பார் என்று. அடுத்த நிமிடம் அவரிடமிருந்து பதில் வரும்! ஏன் Uncle விழித்திருக்கிறீர்கள் என்று கேட்டால் நீங்கள் விழித்திருந்து அக்கறையோடு அனுப்பும்போது நான் நித்திரைக்கொள்வேனா எனக் கேட்பார்!

இந்துஒளி அட்டைப்படம் வடிவமைப்பதில் எம்முடன் அருகிலிருந்து தானே அழகுற அமைக்க ஆலோசனைகள் தருவார். எமது அச்சகத்தில் குங்கும நிறத்தில் பளிச்சென்று தெரியக்கூடியதாக பெரியதொரு பிள்ளையார் படம் இருக்கின்றது. அது அவருக்கு மிகவும் பிடிக்கும். அதன்பின் அவருடைய மனதில் அந்த குங்கும நிறம் நன்றாக பதிந்துவிட்டது. இந்துஒளி அட்டைப்படமெல்லாம் பெரும்பாலும் குங்கும நிறம் சேர்ந்தே இருக்கும். எம்முடன் இருந்து அட்டைப்படங்களை வடிவமைக்கும்போது சட்டத்தரணியான அவரிடம் இத்தனை கலைத்திறமை இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இந்துஒளி பொன்விழா மலர், வைரவிழா மலர் அச்சிடும்போது எவ்வளவு ஆர்வமாக அதனைத் தொகுத்திருப்பார்! எத்தனை எத்தனைக் கட்டுரைகள்! எல்லாவற்றையும் தன் இதர வேலைகளின் மத்தியிலும் பொறுமையாக வாசித்து திருத்தம் செய்து அச்சுக்கு அனுப்புவார். வைரவிழா மலர் அச்சிடும்போது



எமது நிறுவனத்தில் நீண்ட நேரத்தை செலவழித்தார். நள்ளிரவு 12, 1மணிவரை கூட எம்முடன் இருந்து எம்மை உற்சாகப்படுத்தி கதைத்து "நித்திரை வராதா.. களைத்துப் போய்விட்டீர்களா் இன்னும் கொஞ்சம்தான் இருக்கு" எனக் கூறி கூறி அதை செய்து முடித்திருக்கிறார்.

இறுதியாக அவர் வெளியிட்ட இந்து ஒளி திருக்கேச்சர சிறப்பிதழுக்கு கட்டுரைகளை தேர்ந்தெடுத்து தந்தபோது அதன் மிகுதி கட்டுரைகளை திருக்கேச்சர மண்டலாபிஷேக சிறப்பிதழில் போடுவோம் வைத்திருங்கள் எனக் கூறினார். இத்தனை சிறபிதழ்களை வெளியிட்டவர் அவர் மிகவும் விரும்பிய திருக்கேச்சர மண்டலாபிஷேக பூர்த்தி மலரை வெளியிடமுன்பு கேதீச்சரப்பெருமான் தம் திருவடியில் சேர்த்துப் கொண்டமை மிகவும் கவலையளிக்கிறது. இதற்குத்தானோ அவர் அச்சிறப்பிதழுக்கான கட்டுரைகளை ஏற்கனவே எம்மிடம் கையளித்திருந்தார் போலும்.

இந்து ஒளி சஞ்சிகையை இந்திய சஞ்சிகைகளைப்போல் அனைத்துப்பக்கங்களும் வர்ணப்படங்களுடன் அச்சிடவேண்டும் என்பது அவரது மிகப்பெரிய கனவு! அவா! ஆனால் பொருளாதார பற்றாக்குறை காரணமாக கறுப்பு வெள்ளை நிறத்தில் அதனை அச்சேற்றுவார். எனினும் அவரின் ஆவலை நிறைவேற்றுவதற்காக நாம் அச்சஞ்சிகையை முழுவர்ணத்தில் அவர் ஆசைப்படி மின்நூலாக (Ebook) செய்து கொடுப்போம். அதைபெருமிதத்துடன் இணையத்தில் பதிவேற்றம் செய்வார். பணத்தைக் கொடுத்து ஒரு புத்தகத்தை அச்சில் எடுக்கலாம்! ஆனால் எழுத்தில் உள்ளதை அச்சுப்பதிவாக்கி ஒரு தரமான பிரதியாக வெளியே கொண்டுவரும் பணி எவ்வளவு கடினமானது என்பதை எம்முடன் இருந்து நன்கு உணர்ந்தவா அவர். அதனால்தான் எந்த வேலையை நாம் செய்தாலும் மனதாரப் பாராட்டுவார்! சபைகளில் கூட அதைக்கூறி எம்மை ஊக்கப்படுத்த அவர் என்றும் தயங்குவது கிடையாது.

புத்தகங்கள் அவரது உயிர்! புத்தகங்களை வெளியிடுவதில் அவருக்கு அலாதிப் பிரியம்! வருங்காலத்தில் மக்கள் எல்லாம் அறிந்திருக்கவேண்டும் என்பதை மனதில் வைத்து வரலாற்று நூல்கள், ஆன்மீக நூல்களை தேடித் தேடி எடுத்து எங்கள் தந்தையுடன் கலந்தாலோசித்து பதிவாக்கி எடுப்பார். அச்சுப்பதிவு சம்பந்தமாக அனைத்து விடயங்களும் அவருக்கு அத்துப்படி! பக்கங்கள் ஒதுக்குவது, Planning முதல் வடிவமைப்பு அனைத்துமே அவருக்குத் தெரியும்! எந்த அச்சு வேலையாக இருந்தாலும் அதன் அளவு, பிரதிகள், கடதாசியின் தரம், colour pages அனைத்துமே முதலில் எம் தந்தையுடன் கலந்தாலோசித்தே அதற்குரிய நிதியையும் திட்டமிட்டுத் தொடங்குவார். மக்களின் தற்காலத் தேவைகளை அறிந்து புத்தங்கள் வெளியிடுவதில் அவருக்கு நிகர் அவர்தான்!

**இந்து மக்களுக்கு ஓர் கையேடு**.... இந்த புத்தகத்தைப் பற்றி அறியாதவர்கள் யார்! ஆயிரக்கணக்கில் (லட்சத்தையும் தாண்டியிருக்கும்) பிரதிகள் வெளியே வந்துள்ளன. இந்து மக்களுக்கு தேவையான அனைத்து சமய சடங்குகளையும் அறியத்தந்ததற்கு முழுப்பொறுப்பும் நீலகண்டன் Uncle தான். அனைத்து மக்களுக்கும் சேரவேண்டும் என்பதற்காக மிகவும் குறைந்த விலையில் வழங்கியதோடு மட்டுமல்லாது, யார் கேட்டாலும் அதனை அச்சிட்டு வழங்க யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி தந்தவர், காரணம் அது அனைவரிடமும் போய்ச்சேர வேண்டும் என்பதே! அதனையே "Compendium for Hindus" என வெளிநாடுகளில் வாழும் இந்து இளைஞர்களுக்கும் அடுத்த தலைமுறையினரையும் எண்ணி ஆங்கிலத்தில் வெளியிட்ட பெருமை அவரையே சாரும்.

அது மட்டுமா... **கையடக்கப் பஞ்சாங்கம்**.. இவையெல்லாம் அவருடைய கனவுகள். இந்தியாவில் இருந்து மாதிரிப்பிரதியைக் கண்டு அதுபோல நம் நாட்டிலும் வாக்கியம் மற்றும் திருக்கணிதம் என இரண்டு துருவங்களாக இருந்த இரண்டு ப்ஞ்சாங்கங்களையும் இணைத்து ஒரே கையடக்கநூலில் அமைத்தது அவர்செய்த மிகப்பெரிய சாதனை.கையடக்கத் தொலைபேசியில் உலகத்தையே அடக்கிவைத்திருப்பது போல இந்த கையடக்கப் பஞ்சாங்கத்தில் அனைத்து கணிப்புக்களும் அடங்கியிருக்கும். இந்தப் பஞ்சாங்கம் எப்போதும் அவரது சட்டைப்பையில் இருக்கும். இதுபோல் அவர் எம்நிறுவனத்தின் மூலம் அச்சிட்ட அனைத்து நூல்களும் அவரை நினைவு கூரும்.

ஒரு தடவை எமது அச்சகம் மழைநீரால் 4 அடிக்கு மேல் நிறைந்துவிட்டது. அச்சு இயந்திரங்கள் கணணிகள் அனைத்தும் தண்ணீரில் மிதந்தது. அப்போது இந்து ஒளி அச்சுக்கு தயாராக முடிவடையும் நிலையில் இருந்தது. அடுத்தவருட நாட்காட்டிகள் அடிக்கும் தருணம், எத்தனையோ புத்தகங்களும் இருந்தன. இந்த இக்கட்டான நிலையில் தமது புத்தகங்கள் எல்லாம் பத்திரமாக இருக்கிறதா எனக் கேட்ட வாடிக்கையாளர்கள் பலர்! ஆனால் நீலகண்டன் Uncle இதை அறிந்து என் தந்தையிடம் **"விமலேந்திரன் இந்து ஒளி வெளியீட்டை தள்ளிப்போடலாம். கவலைப்படவேண்டாம், முதலில் இந்த இக்கட்டிலிருந்து மீண்டு வாருங்கள்"** என்றபோது முதன்முதலாக என் தந்தையின் கண்களில் கண்ணீரைக் கண்டோம்! இன்று இதனை நினைத்துப் பார்த்து கலங்கி நின்கின்றோம்! இவ்வாறு எமக்கு தோள்கொடுத்த உள்ளத்தை எப்போது காண்போம்!

எமது நிறுவனத்துடன் அவருக்கிருந்த தொடர்பை எண்ணிப் பார்க்கும்போது மனதில் கலக்கம் ஏற்படுவதை உணர்கின்றோம்! எத்தனை தடவை எம் மாடிப்படி ஏறி மேலே வந்திருப்பார்! கடந்தவருடம் சுகவீனமாக இருந்து தன்



வேலைகளைத் தொடங்கியபோது இனி எப்படி யுனி ஆர்ட்ஸ்க்கு ஏறி வரப்போகிறேன் என்று கவலைப்பட்டு கூறியபோது எமக்கும் அது உறுத்தியது. Uncle இனி எங்களைப் பார்க்க யுனி ஆர்ட்ஸ் க்கு வரமாட்டாரா என்று ! ஆனால் ஒரு நாள் தொலைபேசியில் "விமலேந்திரன் நான் கீழே நிற்கின்றேன்" என்றார். தொலைபேசியில் தந்தை பதற்றத்துடன் "அங்கேயே நில்லுங்கள் நாங்கள் வருகிறோம்" எனக்கூறிவிட்டு கீழே போனோம். ஆனால் அவரோ நான் மேலே யுனி ஆர்ட்ஸ்க்கு வரவேண்டும் என அடம் பிடித்தார். கடைசியில் நாம் எமது அச்சுப்பேப்பர் ஏற்றும் மின்தூக்கி மூலம் பத்திரமாக ஏற்றி மேலே அழைத்து வந்தோம். உள்ளே வந்த அவர் முகத்தில் நாம் கண்ட சந்தோஷத்தை நினைத்துப் பார்க்கின்றோம். அழுகை வருகிறது. அவரால் எம் அச்சகத்திற்கு வராமல் இருக்க முடியாதே!

பல நேரங்களில் அவர் வரும்போது நேரே எம் தந்தையின் அறைக்குச் சென்று எம் தந்தையின் கதிரையில் அமர்ந்து **யுனி ஆர்ட்ஸ் என்னுடையது... நான் குத்தகைக்கு எடுத்து விட்டேன்** என்பார்! அது மட்டுமல்ல என் தந்தைக்கு வரும் தொலைபேசிகளுக்கும் அவரே மறுமொழியும் தந்தார். Uncleன் குரல் கேட்ட பலர் மாறி எடுத்துவிட்டோமோ என்று தொலைபேசியை வைக்க இவர் அழகாக சிரிப்பார். எம்மையும் சிரிக்க வைப்பார். இன்று எப்படி எங்களை அழ வைக்க அவருக்கு மனம் வந்தது! யுனி ஆர்ட்ஸ் Mobile Service தொடங்குங்கள் நான் ஏறிவரத் தேவையில்லை என்பார்! இப்படி எத்தனை அனுபவங்கள். அவரைப்பற்றி எழுதுவதற்கு இந்துஒளி பக்கங்கள் போதாது....

மாமன்ற வேலைகள் மட்டுமன்றி தனது சொந்த சட்ட நிறுவன வேலைகள், சட்ட நூல்கள் Bar Association Law Journal, Law Asia Conference Books என பலரும் பிரமிக்கவைக்கும் பல நூல்களை எம்மிடம் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். யுனி ஆர்ட்ஸ் நிறுவனத் திறமைகளை சர்வதேச ரீதியில் பலரும் வியக்க வெளிக்கொணர்ந்த பெருமை நீலகண்டன் Uncleஐயே சாரும்.

Uncle- ஒரு நாளாவது எம்முடன் தொலைபேசியில் கதைக்காமல் இருந்திருப்பீர்களா? இரவு பகல் எந்நேரமானாலும் பிரசுரங்களைப்பற்றி எடுத்துக் கதைப்பீர்கள் அல்லவா? உங்கள் அத்தனை தியானங்களும் இந்த பிரசுரங்களிலேயே மூழ்கியிருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும்! இனி உங்களிடமிருந்து தொலைபேசி அழைப்பு வராதா! விமலேந்திரன், அருணி, லக்ஷி என அன்பாகக் கேட்கும் அந்தப் பாசக்குரலை கேட்க முடியாதா!


உங்களிடமிருந்து நாம் கற்றுக்கொண்டவை ஏராளம்! சதாவதானி கதிரவேற்பிள்ளை பற்றி அறிந்திருந்தோம்! சதாவதானம் என்பதன் முழு அர்த்தத்தை Uncle, உங்களிடமிருந்தே கற்றுக்கொண்டோம்! எங்கள் மனதில் சதாவதானி என்றால் நீலகண்டன் Uncle மட்டுமே!

நான் கற்றது பொறியியல் துறை என்றாலும் உங்களுடன் வேலைசெய்ய எமக்கு கிடைத்த அனுபவம் அத்துறையையும் விஞ்சியது. மற்றவர்களுக்கு அவர் சட்ட ஆலோசகர் ஆனால் எம்மைப் பொறுத்தவரை அவர் எமக்கு அச்சுக்கலைவித்தகராகத்தான் திகழ்ந்தார். இது பலரும் அறியாத அவரது இன்னுமோர் திறமை! இப்படி ஒரு ஆசான் எமக்கு கிடைத்தது நாம்செய்த பிறவிப் பயன்.

யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் சார்பாக

**அருண்ணியா விமலேந்திரன், இலக்ஷிணியா விமலேந்திரன்**

# அமரர் திரு கந்தையா நீலகண்டன்
## -நினைவுகளின் மீட்டல்




2016ம் ஆண்டு
செல்லச்சந்திக் கந்தனின்
ஆலய பெருந்திருவிழாவில்
அமரர் தீர்த்தமாடிவிட்டு
ஆனந்தக்களிப்புடன் வரும் காட்சி

புகைப்படம்- முருகையா பிரணவன்

## பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்ற நூலகத் திறப்பு விழா (25.12.2008)





கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் நூலகத்தை திறந்து வைப்பதையும், விருந்தினர் பதிவேட்டில் கையெழுத்திடுவதையும் காணலாம்.



மாமன்ற யாழ் பிராந்தியப் பணிமனை அமைக்க காணியை நன்கொடையாக வழங்கிய திரு. திருமதி பேரம்பலம் தம்பதியினரின் உருவப்படத்துக்கு மாலை அணிவிக்கும் திரு. திருமதி நீலகண்டன் தம்பதியினர்



வவுனியா ஸ்ரீ சிந்தாமணி பிள்ளையார் ஆலய அன்னதான கலாசார மண்டபம் திறப்பு விழாவில் (22.102010) பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு வரவேற்கப்படுவதைக் காணலாம்.



02.12.2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் தலைவராக தெரிவு செய்யப்பட்ட வேளை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் திரு.ச.த.சி. அருளானந்தன்



நல்லை ஆதீன புதிய கட்டடத்திற்கு வாசல் நிலை வைக்கத் தயாராகும் திருவாளர்கள் நீலகண்டன், தேவசகாயம், சிவசுந்தரம், பாலசுந்தரம் ஆகியோருடன் ஆதீன முதல்வர்

## 07.02.2012 அன்று நடந்த நல்லை ஆதீன கட்டிடத் திருப்பணி இரண்டாம் கட்டட வேலை ஆரம்ப நிகழ்வு முடிந்த பின்பு



ஆதீனத்தில் நடந்த கூட்டத்தில் பொதுச் செயலாளர் திரு. க. நீலகண்டன் விளக்க உரை ஆற்றுகிறார்

## யாழ்.இந்து ஆராய்ச்சி நிலையத்தில் 2013 மார்ச் 30 - 31ல் நடந்த நிகழ்வுகள்








## 05.05.2013 அன்று நடந்த சத்திய வித்தகர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களின் சொற்பொழிவுகளின் தொகுப்புகளின் வெளியீட்டு விழா




## வன்னியில் சமூக நலன் குழு



மகாதேவ ஆச்சிரமத்தில் மாமன்றத் தூதுக்குழு



முள்ளியவளை ஸ்ரீ கல்யாண வேலவர் ஆலயத்தில் மாமன்றத் தூதுக்குழு

## மாமன்ற யாழ் பணிமனையில் 22.06.2013 அன்று நடைபெற்ற நிகழ்வு



நல்லை ஆதீன மடாலயத்தை பேணுவதற்கான நம்பிக்கை நிதியம் நிறுவும் உறுதி குருமகாசந்நிதானத்தினால் கைச்சாத்திடப்படும் காட்சி. உடன் மாமன்ற பிரதிநிதிகள்.





கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடம் அமைப்பதற்கென கலாநிதி க.கனக-ஈஸ்வரன் மற்றும் திரு. வே.சிவசுந்தரம் ஆகியோரிடம் நன்கொடை பெற்றவேளையில்



லண்டனைச் சேர்ந்த திரு. சிவா ரமேஷ், பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்காக அன்பளிப்பாக வழங்கிய மடிக்கணினிகளில் ஒன்றை மாமன்றத்தலைவரிடம் கையளிக்கிறார்




"திருக்கோயில்கள் வளர்த்த தெய்வத்தமிழ்" 11ஆவது அனைத்துலக தமிழ் ஆய்வு மாநாடு தமிழ்நாடு காஞ்சிபுரத்தில் 20.07.2013 இல் நடத்தப்பட்டு அதில் திரு. கந்தையா நீலகண்டனுக்கு "திருநாவுக்கரசு" விருது வழங்கப்படுகிறது.



காஞ்சிபுர மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பேராளர்கள்.



திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் 2013 டிசம்பர் 07ஆம் 08ஆம் திகதிகளில் நடந்த நாவலர் மாநாட்டு விழா



தவத்திரு யோகர் சுவாமியின் திருவுருவச்சிலை நல்லூர் வீதியில் திருவுலா. ஆன்மீகச்சுடரும் செஞ்சொற்செல்வரும் மற்ற அடியார்களும் பயபக்தியுடன் திருவுருவச் சிலையை சுமந்து வர பேரணியில் நாயகமாக நீலகண்டன்



6.4.2014 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்ற ஒழுங்கில் நடாத்தப்பட்ட யோகர் சுவாமியின் ஐம்பதாவது குருபூசை நிகழ்வும் 'இந்து ஒளி' சிறப்பிதழ் வெளியீடும்




26.12.2013 அன்று சிட்னி ஸ்ரீ முருகன் திருத்தலத்தில் சிட்னி சைவ மன்றத்தின் ஒழுங்கில் மாமன்றத் தலைவர் திரு. நீலகண்டன் சிறப்புரையாற்றும் காட்சி.





1.4.2014 அன்று சரஸ்வதி மண்டபத்தில் நடந்த இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி விடுதி ஆண்டு விழா மற்றும் மனிதநேய மாமணியின் எண்பதாவது அகவை நிறைவு விழாவில் மாமன்றத்தலைவர் திரு கந்தையா நீலகண்டன் உரையாற்றுகிறார்



17.03.2014 அன்று திருக்கோணேஸ்வரத் திருத்தலத்தில் திருக்கோணேஸ்வர மகோற்சவ இந்து ஒளி சிறப்பிதழ் வெளியிடப்பட்டபோது; உடன் ஆன்மீகச்சுடர்

## கீரிமலையில் இந்து மாமன்றம் கட்டிய சிவபூமிமடம்



மடத்தின் முகப்புத்தோற்றம்




பிரமுகர்கள் நிகழ்வுக்கு வரும் காட்சி




நந்திக்கொடி ஏற்றப்படுகின்றது.



திரு. ஆ. வ. கந்தையா, திருமதி சின்னத்தங்கம் நினைவு அறையை அவர்களின் மகன் திரு. க. நீலகண்டன் திறந்து வைக்கிறார்.



தனது தாய், தந்தையின் உருவப்படங்களுடன் அமரர் நீலகண்டன்



திருக்கேதீஸ்வரத்தில் "இந்து ஒளி" திருக்கேதீச்சர மகோற்சவ சிறப்பிதழ் வெளியீட்டில் (10.06.2014) நல்லை ஆதீன முதல்வர், மாமன்றத்தலைவர் உடன் இந்திய உயர்ஸ்தானிகர் ஆலோசகர் ஸ்ரீ சிவதர்ஷன் சிங்



இந்து நாகரிகம் வெளியீட்டு விழா, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் (25.05.2014) இந்திய தூதரக முதன்மைச் செயலாளர் கௌரவ ஜஸ்ரின் மோகன் நூலை வெளியிட்டு வைக்கிறார்.



சரஸ்வதி மண்டபத்தில் நடந்த நாவலர் விழாவும் நூல்கள் வெளியீடும் (29.11.2014) மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களுக்கு பிரதம விருந்தினர் சிறப்பு மலரை வழங்குகிறார்.



மாமன்ற யாழ் பணிமனையில் சத்குரு போதிநாத வேலன் சுவாமிகள் ஹவாய் சைவ ஆதீன முதல்வர் இந்து ஒளி இதழை வெளியிட்டு வைக்கிறார். அருகே மாமன்றத் தலைவரும், கலாநிதி ஆறு.திருமுருகனும்



மாமன்றப் பொன்விழா நிகழ்வுகளின் போது (2005) ஈகிள் இன்சூரன்ஸ் அதிபர் திரு. சந்திரா ஜெயரத்தினாவை அன்றைய பொதுச் செயலாளர் திரு. க. நீலகண்டன் வரவேற்கிறார். நடுவில் அன்றைய உப செயலாளர் திரு. கு. பார்த்திபன்.



12.02.2015 அன்று பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி (கொழும்பு) நிறுவுனர் தினத்தன்று கல்லூரி பழைய மாணவர் சங்கம் (அவுஸ்திரேலியா - சிட்னி) அனுப்பிய பண அன்பளிப்பை 2014 க.பொ.த (உ.த) பரீட்சையில் மிகச்சிறப்பான முடிவுகளைப்பெற்ற மாணவனுக்கு நிறுவுனர் சங்கமான இந்து வித்தியாவிருத்திச் சங்க உபதலைவர் திரு. வே. கந்தசாமியும் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டனும் வழங்குகிறார்கள்.




30.01.2015 அன்று மாமன்ற இணைய முகத்தளத்தை மாமன்ற தலைவர் ஆரம்பித்து வைக்கிறார். அருகில் திரு. மா. தவயோகராஜா.



All Ceylon Hindu Congress President - Kandiah Neelakandan met Ms. Nisha Biswal - Asst. Secretary of State of the USA and Mr. Atul Keshap - Deputy Assit. Secretary of State of USE for South Asian Affairs at the Inter-faith discussions arranged with the Religious Leaders, by the American Embassy




மன்னார் பெரியகடை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் (01.02.2015) மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் திருக்கதவைத் திறந்து வைக்கின்றார்.



அவுஸ்திரேலியா, சிட்னி முருகன் திருத்தலத்தில் மாமன்ற வெளியீடுகளான "A Compendium for Hindus" ஆங்கில மஞ்சரி, "தெய்வத் திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் - ஓர் ஆய்வு நூல்" 19.04.2015 அன்று வெளியிட்டு வைக்கப்பட்ட போது. திரு. மு. கருணாநிதி சிறப்புப் பிரதி பெறுகிறார்.

## யாழ். மாமன்ற பணிமனையில் மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாடு ஆரம்ப நிகழ்வு - (31.07.2015)





தருமபுரம் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் சத்தியவித்தகர் க. வி. விக்னேஸ்வரன் அவர்களிடமிருந்து 'இந்து ஒளி' சிறப்பிதழைப் பெற்றுக்கொள்கிறார். சத்தியவித்தகர் க. வி. விக்னேஸ்வரன், மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களிடமிருந்து நினைவுச் சின்னம் பெற்றுக்கொள்கிறார்





மேடையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தருமபுர ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீமத் மௌனகுமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள், மாமன்றத்தலைவர் திரு. கந்தையா நீலகண்டன், வடமாகாண முதல்வர் சத்தியவித்தகர் க. வி. விக்னேஸ்வரன், சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள், சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக் குருக்கள், மாமன்ற அறங்காவல் சபைத்தலைவர் மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை.



07.06.2015இல் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இந்திய உதவித் தூதுவர் திரு. ஏ. பி. நடராஜன், மாமன்றத் தலைவரும் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை பிரதித் தலைவருமான திரு. க. நீலகண்டன்




இரத்மலானை கொழும்பு இந்துக்கல்லூரியில் கற்று இன்று வெளிநாட்டில் பதவிவகிக்கும் திருநிறைசெல்வன் மு. யோகேஸ்வரன் திருமண விழாவின்போது (12.07.2015)

## மாத்தளை சிந்தாக்கட்டி குமரமலை குமரப்பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம் (25.10.2015)





ஆலயத் தோற்றம் மற்றும் மாமன்றத்தின் அன்பளிப்பான கண்டாமணி அடிக்கப்படுகிறது.







07.06.2015இல் திருக்கேதீஸ்வரத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் கட்டவிருக்கும் மடத்திற்கு அத்திவாரமிட்டபோது







பழைய பாரளுமன்ற கட்டடத்தொகுதியில் வடகொழும்பு இந்து பரிபாலன சபையும். சேர். பொன் அருணாசலம் நிதியமும் இணைந்து நடாத்திய சேர். பொன் அருணாசலம் நினைவு தின நிகழ்வு (08.01.2016)



திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி நிகழ்வுகள் (07.03.2016)



ஐ.நா வின். சிறுபான்மையினரின் உரிமைகள். பிரச்சனைகளுக்கான விசேட அறிக்கையாளர் திருமதி இஷாக் ரீட்டா அவர்களை மாமனறத் தலைவர். கொழும்பு ஐ.நா. தலைமையகத்தில் (17.10.2016) சந்தித்த போது

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு மற்றும் சைவநெறிப்புரவலர் முத்தையா கதிர்காமநாதன் அரங்கு








மாமன்றத் தலைவருக்கு சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் அருளாசி வழங்கி கௌரவிப்பு.











**அகில இலங்கை இந்து மாமன்றம் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டி 2016, பெப்ரவரி 5 - 7 திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு நிகழ்வு**

மாமன்ற வைரவிழா மலர் வெளியீடு 27-05-2016 அன்று யாழ் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வின் சில நினைவுகள்...












மாமன்றத்தின் வைரவிழா மலர் வெளியீட்டு நிகழ்வு - கொழும்பு (29-05-2016)









அவுஸ்திரேலியாவில் 18-06-2016 அன்று நடைபெற்ற மாமன்றத்தின் வைர விழா மலர் வெளியீட்டு நிகழ்வின் பதிவுகள்






தேவிபுரம், குருதேவர் அறநெறிப் பாடசாலை புதிய கட்டடத் திறப்புவிழாவில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், கலாநிதி ஆறு.திருமுருகன், மாமன்றத்தலைவர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் தமிழ் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்பட்டனர். புதிய கட்டடத்தை ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தாயார் திறந்து வைத்தார்கள்.
தேவிபுரம், குருதேவர் அறநெறிப் பாடசாலை புதிய கட்டடத் திறப்புவிழாவில் கலந்துகொண்ட பிரமுகர்கள்



நயினாதீவில் அமைக்கப்படவிருந்த புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் மாண்புமிகு றெஜினோல்ட் கூரே அவர்களை மாமன்றப் பிரதிநிதிகள் சந்தித்தபோது



மாண்புமிகு அமைச்சர் மனோகணேசனை மாமன்ற தூதுக்குழு நீலகண்டன் தலைமையில் சந்தித்த வேளை



சம்பூர் மீள்குடியேற்ற நிகழ்வில், மீள்குடியேற்ற அமைச்சர் மாண்புமிகு தே.ம.சுவாமிநாதன், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு இரா.சம்பந்தன் ஆகியோருடன் அழைப்பின்பேரில் கலந்துகொண்ட அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் திரு. கந்தையா நீலகண்டன், மற்றும் திரு.வே.கந்தசாமி



அட்டன், கொட்டகலையில் திரு. முத்துசாமி அவர்களினால் மாமன்றத்தின் பணிகளை மலையகத்தில் விரிவுபடுத்துவதற்காக நன்கொடையாக வழங்கப்பட்ட காணிக்கான பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் மாமன்றத் தலைவர் அருகில் மாமன்றப் பிரதிநிதிகள்

## முன்னைநாள் பொதுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் நினைவுப் பேருரை நிகழ்வுகள் (2016)







திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணியின் இரண்டாவது கட்டத்திற்கான நிதி உதவியை, இந்திய உயர்ஸ்தானிகர் மாண்புமிகு வை.கே. சின்கா, சபைத்தலைவர் திரு கந்தையா நீலகண்டனிடம் வழங்கினார். அருகில் உயர்ஸ்தானிகரின் முதன்மைச் செயலர் ஸ்ரீமதி ஈஷா ஸ்ரீவத்ஸவா அவர்கள்



வரணி, சாவகச்சேரியில் சிவதொண்டர் அணியினருக்கான நிகழ்வில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன், திரு. ராஜ்மோகன் ஆகியோரும்.




300 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்ட ரகுபதிசர்மா அவர்களை மன்னிப்பளித்து விடுவிக்கும்படி, சிவாச்சாரியார்கள் மற்றும் மாமன்றத் தலைவர் ஆகியோர் முன்னைநாள் ஜனாதிபதி மாண்புமிகு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.




இரத்மலானை சக்தி இல்ல மாணவ மாணவியரின் பிறந்தநாள் விழா (11-06-2016)








பேரூராதீன
குருமகாசந்நிதானம்
கயிலைக்குருமணி
சீர்வளர்சீர் சாந்தலிங்க
இராமசாமி அடிகளாரின்
அருளாட்சி ஏற்புப் பொன்விழா
நிகழ்வு (08.07.2016 -
10.07.2016) அமரரின்
எண்ணத்திலுதித்த
நினைவுச்சின்னத்தின்
வண்ணம்







மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்றம் நடாத்திய சுவாமி விபுலானந்தர் நினைவு தின நிகழ்வின் பதிவுகள்



முன்னால் தலைவர் அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் 24வது ஆண்டு நினைவுப் பேருரை மற்றும் கலாபூஷணம், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்களின் "நலங்கள் அறுபது" நூல் வெளியீடு நிகழ்ச்சிகளின் பதிவுகள் 23.07.2016



2016 இல் திருக்கேதீச்சர ஆலயத்திற்கு வருகை தந்த அவுஸ்திரேலிய - சிட்னி விஷ்ணு கோயில் தர்மகர்த்தா வைத்தியகலாநிதி பாலசுப்பிரமணியம், பாரியார் திருமதி தேவி ஆகியோரை மாமன்றத் தலைவர் திரு. க. நீலகண்டன் மற்றும் திருமதி அ. கயிலாசபிள்ளை ஆகியோர் வரவேற்கின்றனர்.




வஹாக்க, சனிகிராப்ட் தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு விநாயகர் விக்ரகம் வழங்கப்பட்டது (21-10-2016)



2016ம் ஆண்டு இலங்கைக்கு வருகைதந்த ஹவாய் ஆதீன குருமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளை வரவேற்று கௌரவித்த நிகழ்வில் சுவாமிகளுக்கு நினைவுச்சின்னத்தை மாமன்றத் தலைவருடன் இணைந்து பிரதித்தலைவரும் பொதுச் செயலாளரும் வழங்கியவேளை



2016ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 5,6,7ம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற 'சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாட்டில்" இலண்டனைச் சேர்ந்த திரு. திருமதி சிதம்பரப்பிள்ளை தம்பதியினர், மாமன்றத் தலைவர் திரு திருமதி நீலகண்டன் தம்பதியினரை கௌரவித்தவேளை






தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் உற்சவகால சிவதொண்டர் அணி அங்குரார்ப்பணமும், உற்சவகால நூல் விற்பனைப் பீடமும்



மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகப் பதவியுயர்வு பெற்ற மாண்புமிகு சி.துரைராஜா அவர்களுக்கான மாமன்றத்தின் கௌரவிப்பு நிகழ்வு 14-10-2016 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.






சிவததிரு எஸ்.. சுப்பிரமணியம் செட்டியார் அவர்களுக்கு 18-09-2016 அன்று வழங்கப்பட்ட கௌரவிப்பு நிகழ்வு




ஹட்டனில், 25 - 09 - 2016 அன்று மாமன்றம் நடாத்திய கலந்துரையாடலில் கலந்துகொண்ட மாமன்றத் தலைவர், திரு.வி.சாந்தகுமார் (மத்திய மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்), திரு.பி.ஸ்ரீதரன் (ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர்), ஆசிரிய ஆலோசகர்கள்.



வெள்ளவத்தை சிவயோகசுவாமிகள் நம்பிக்கை நிதியத்தின் பிரார்த்தனை மண்டபத்தின் திறப்புவிழாவில் அமரர் நீலகண்டன்




யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் சிவதொண்டர் அணி அங்குரார்ப்பண நிகழ்வு 19-11-2016 அன்று நடைபெற்றது



பூனாகலை உடஹன டிவிஷன், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு முத்துமாரி அம்மன் எழுந்தருளி விக்கிரகம் 11-11-2016 இல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.




04.12.2016 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய மறைந்த கொழும்பு மாநகர முதல்வர் திரு. க. கணேசலிங்கம் அவர்களின் 10வது ஆண்டு நினைவு நிகழ்வில்..





19 - 11 - 2016 அன்று அகில இலங்கை இந்து மாமன்ற அனுசரணையுடன் இந்து சமய அலுவல்கள் மற்றும் கலாசார திணைக்களம் இணைந்து நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடாத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையும் மாநாடும் - யாழ்ப்பாணம் - 'சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம்' எனும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் நூலினை சீர்வளர்சீர் மருதாசல அடிகள் வெளியிட்டு வைக்க முதற் பிரதியைப் பெறும் திரு.கந்தையா நீலகண்டன், அருகில் கலாநிதி ஆறு.திருமுருகன், சிவஸ்ரீ மனோகரக்குருக்கள், திரு.அ.உமாமகேஸ்வரன்.





தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி அம்மன் ஆலய தெற்குவாயில் கோபுர கும்பாபிடேகமும் 'இந்து ஒளி' சிறப்பிதழ் வெளியீடும் 09-02-2017






மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமாகிய நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் 8வது ஆண்டு நிறைவு "ஆன்மீக எழுச்சி விழா" 28-01-2017 அன்று மாமன்றத்தின் அனுசரணையில் நடைபெற்றது.





மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமாகிய வத்தளை இந்து மன்றத்தின இரண்டாவது ஆண்டு நிறைவு வைபவம் 15-01-2017 அன்று வத்தளை ஹேகித்த முருகன் ஆலயத்தில் நடைபெற்றது.



26-03-2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற. 'மனிதநேயமாமனிதர்' அமரர் திரு. வி.கயிலாசபிள்ளை அவர்களின் அஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும்







திருக்கேதீச்சர ஆலய கருங்கற் திருப்பணிகளின் இரண்டாம் கட்டமாக சிவன் அம்பாள் சந்நிதி விமானங்கள், உட்பிரகார சந்நிதிகள் கருங்கல்லால் அமைப்பதற்கான ஆரம்ப கிரியைகள் 17-04-2017 அன்று நடைபெற்றது.




2017ம் ஆண்டு வெள்ள நிவாரணப் பணிகளுக்கு கனடா வர்த்தகப் பிரமுகர் திரு. மார்க் நந்தகுமார் அவர்களின் DYN Exports Canada Inc, இன் முகவர், Diamond Jubilee Importers ஊடாக வழங்கிய ரூபா 2.5 மில்லியன் பெறுமதியான ஆடைகளை மாமன்றத்திடம் மேல்மாகாண ஆளுநர் கௌரவ கே.சி. லோகேஸ்வரன் முன்னிலையில் கையளித்தவேளை



வட்டவளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு வைரவர் விக்கிரகம் (02 - 06 - 2017) அன்பளிப்புச் செய்யப்பட்டது.







தமிழ்நாடு பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் கலாநிதி தமிழிசை சௌந்தரராஜன் அவர்களுடனான மாமன்றப் பிரதிநிதிகளின் சந்திப்பும் 'இந்து ஒளி' நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் மகோற்சவ சிறப்பிதழ் வெளியீடும் (08-07-2017)




17-07-2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற மாமன்றத்தின் முன்னாள் தலைவரான அமரர் திரு. வே. பாலசுப்பிரமணியம் நினைவு நிகழ்வில் நினைவுப்பேருரையாற்றிய தமிழ்நாட்டின் பேச்சாளர் திரு. கி.சிவகுமார் அவர்களை மாமன்றத் தலைவர் கௌரவிக்கிறார் உடன் மாமன்ற நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைத் தலைவர் கலாநிதி க.கனக-ஈஸ்வரன் அவர்கள்.



சைவ முன்னேற்றச் சங்கம் (UK) தனது 40வருட நிறைவை முன்னிட்டு மாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் இலங்கையில் வறிய மணமக்கள் 40 பேருக்கு நடத்திவைத்த இலவச திருமண நிகழ்வில், மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களை, திரு.இராமநாதன் அவர்கள் கௌரவித்து நினைவுச் சின்னத்தை வழங்குகின்றார் அருகில் சைவ முன்னேற்றச் சங்க (UK) பொதுச் செயலாளர் திரு. இந்துசேகரம் அவர்கள்.



அமரர் இறுதியாகக் கலந்துகொண்ட 2018 மாமன்ற பொங்கல் நிகழ்வு




மாமன்றத் தலைவர் கலந்துகொண்ட மாமன்ற இறுதிநிகழ்வான அமரர் தெ.ஈஸ்வரன் அஞ்சலி நிகழ்வில் (28-01-2018) உரையாற்றியவேளை




அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் அமரத்துவமடைவதற்கு முதல் நாள் மாலை (17-02-2018) பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற சொல்வேந்தர் சுகி. சிவம் அவர்களின் சொற்பொழிவு நிகழ்வில் கலந்து கொண்டவேளையில்

# திருக்கேதீச்சரத் திருப்பணியில்...









21.01.2018 அன்று நடைபெற்ற கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு நிகழ்வும் தெய்வத்திருமகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட 'இந்து ஒளி' 21வது ஆண்டுப்பூர்த்தி சிறப்பிதழ் மற்றும் 2018-19ம் ஆண்டுக்கான கையடக்கப் பஞ்சாங்க வெளியீட்டு நிகழ்வுகளின் பதிவுகள் மற்றும் 2018ற்கான "சிவத்தமிழ்" விருதினை சிவத்திரு சுப்பிரமணியம் செட்டியாரிடம் வழங்குகின்றார் மாமன்றத் தலைவர்

## "நீலகண்டன் - இந்து ஒளி" மைல் கற்கள் சில...




இதழ் -1 ... இதழ் -104

# அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் இறுதி யாத்திரை
## (பொரளை, கனத்தை இந்து மயானத்தில்)




அமரர் ஊர்தியில் யாத்திரை



பிரமுகர்கள் மற்றும் அன்பர்கள்



சிவதொண்டர் அணியின் இறுதி மரியாதை




ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டநாதன், மாண்புமிகு இரா. சம்பந்தன் (பா.உ), மாண்புமிகு அமைச்சர் தே. மே. சுவாமிநாதன் (பா.உ) ஆகியோரின் அஞ்சலி உரைகள்



மாண்புமிகு க. வி. விக்னேஸ்வரன், கலாநிதி ஆறு. திருமுருகன், கலாநிதி க. கனக-ஈஸ்வரன், திரு. வே. கந்தசாமி மற்றும் சிவஸ்ரீ கு. வை. க. வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோரின் அஞ்சலி உரைகள்



HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/37/NEWS/2018



அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகக் கட்டடம் மற்றும் யாழ் பிராந்திய பணிமனை
ஆகியவற்றின் தோற்றத்துக்கு பாடுபட்ட காரணகர்த்தாக்களில் ஒருவராக...

இவ்விதழ் இல. 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.